தாரும் ஒன்றாக இணைந்து பலமான ஒரு வல்லரசு சிருஷ்டிக்கப்படும். பிறகு பாண்டிய நாட்டவர் சக்தியை எதிர்த்து நிற்கச் சோழனால்கூட முடியாது. உன் மகன் வீரனாயிருந்தால் சோழனையும் வெற்றிகொண்டு தமிழர்களின் பேரரசனாகக்கூட வாழலாம்'' என்று பேசிக்கொண்டே போன மழவராயன் தான் பூவுலகில் இருக்கிறோமென்பதை மறந்து கனவுலகில் சஞ்சரிக்க ஆரம்பித்தான்.

தன் உணர்ச்சிகளை ஒரு பொருட்டாக மதிக்காமல் தன்னை ராஜ்யத்துக்காகக் கை மாற்றப்படும் பொருளைப் போல் தகப்பன் நினைப்பதைக் கண்ட கார்குழலி, கோபத்தால் தொண்டையடைக்கக் கம்மிய குரலில் தகப்பனாரை நோக்கிச் சீறினாள். ''அப்பா! நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாயிருக்கலாம். ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் நான் வீரபாண்டியனை மணக்க முடியாது. அவனை நான் மனதார வெறுக்கிறேன்'' என்றாள்.

''காலம் வெறுப்பை விருப்பாக மாற்றிவிடும். கசப்பைக் காதலாக்கும்'' என்றான் மழவராயன்.

''வீரபாண்டியனை மணப்பதை விட வைகையில் விழுந்து பிராணனை விடுவேன்.''

''வைகை வெகுதூரம் இருக்கிறது. வைகையை நீ அடுத்த முறை பார்க்கும்போது வீரபாண்டியன் மனைவியாகவும், பாண்டிய ராணியாகவுமே பார்ப்பாய், சந்தேகமே வேண்டாம், கார்குழலி!'' என்று சாந்தத்தை உதறிக் கொண்டு சீறி விழுந்த மழவராயன் தன் மகளை நோக்கி மேலும் கூறினான்:

''மகளே! என் பொறுமையை அதிகமாகச் சோதிக்காதே. மன்னர் மகளாக நடந்துகொள். உணர்ச்சியை அடக்கிக் கடமையில் கவனத்தைச் செலுத்து. எத்தனை அபாயங்கள் நமது மக்களைச் சூழ்ந்திருக்கின்றன என்பது உனக்குத் தெரியாது. உன் ஒருத்தி பிடிவாதத்துக்காக நான் லட்சக்கணக்கான மக்களைப்பலி கொடுக்கத் தயாராயில்லை. இப்பொழுது பாண்டியனைக் காண இலங்காபுரன்

ஒரு தூதனை அனுப்பியிருக்கிறான்'' என்று பேசிக்கொண்டே போன மழவராயன் சற்று நின்று மகளை நோக்கி, ''ஏன் தெரியுமா?'' என்று வினவினான்.

''ஏன்'' என்று பதிலுக்குக் கேட்டாள் கார்குழலி.

''சோழ நாட்டிலிருந்து அவசர தூதன் ஒருவன் வந்து மதுரையில் தங்கியிருக்கிறான். அவன் யார் தெரியுமா?'' என்று உதடுகளில் கோபங் கலந்த புன்முறுவல் தவழ மீண்டும் ஒரு கேள்வியை வீசினான் மழவராயன்.

''யார்?'' என வினவினாள் கார்குழலி.

மழவராயன் வார்த்தைகளை மிகுந்த மரியாதையுடனும் ஓரளவு பயத்துடனும் உச்சரித்தான்: ''அண்ணன் பல்லவராயன்.''

இரு சொற்களைக் கொண்ட அந்த வார்த்தை கார்குழலியைக்கூட அதிரச் செய்யவே சட்டென்று தலை நிமிர்ந்து தகப்பனை நோக்கி ''யார் சின்னப்பல்லவராயரா?'' என்றாள்.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்தான் மழவராயன். இந்தப் பதில் கார்குழலிக்கு மட்டுமல்ல, அதுவரை சாளரத்தருகில் மழவராயன் தன் பக்கம் வாதிப்பதை மகிழ்ச்சியுடன் கேட்டு நின்ற வீரபாண்டியனுக்கும் பேரதிர்ச்சியை விளைவிக்கவே, மிக வேகமாக நடந்துதன் அறைக்குச் சென்று அந்தச் செய்தியைத் தன் நாட்டுத் தூதன் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டான் அவன்.

சற்று நேரத்தில், தன் மெய்க்காவலர் படைத்தலைவனை வரவழைத்து, ''நாளைக்கே பாண்டிய நாடு புறப்பட வேண்டும். சகலத்தையும் தயார் செய்'' என உத்திரவிட்டான். பிறகு தன்னுடன் வந்திருந்த இரு அமைச்சர்களையும் கூப்பிட்டுத் திருமண நிச்சயத்தை எப்படி நடத்துவது என்று வினவினான்.

''பாண்டிய நாட்டு மன்னன் திருமண நிச்சயம் கோலாகலத்துடன் நடக்க வேண்டும். அதற்கு இப்பொழுது அவகாசமில்லை'' என்றார் முதலமைச்சர்.

"திருமண நிச்சயத்திற்கு அவகாசமில்லா விட்டாலும் திருமணம் நிச்சயமாகி விட்டதாகப் பறையறைவிக்கச் செய்தால் போதும்" என்றார் மற்றவர்.

"அதனால் என்ன பிரயோசனம்?"

"பறையறைவித்தலே திருமண நிச்சயத்திற்கு ஓர் அத்தாட்சி. பிறகு மழவராயன் மணத் தொடர்பிலிருந்து விலக முடியாது. தவிர, இந்தத் திருமணத் தொடர்பு நிச்சயமாகிவிட்ட செய்தியுடன் மதுரை சென்றால் அண்ணன் பல்லவராயனையும் தைரியமாக எதிர்த்துப் பேசலாம்."

இவர்கள் இப்படித் திருமணத்தை உறுதிப்படுத்த தீர் மானித்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் திருமணத்தை உடைக்க சிவானந்த அடிகளார் வேறோர் ஏற்பாட்டைச் செய்துகொண்டிருந்தார். அந்த ஏற்பாட்டைமுன்னிட்டுச் சுமார் இருபத்தைந்து வயது மதிக்கக்கூடிய வாலிபனொரு வனைக் கார்குழலியின் அந்தப்புரத்துக்கு வெகு ரகசிய மாக அழைத்துச் சென்று கொண்டிருந்தார்.

20. சித்திரமும் சிவனடியாரும்

பாண்டிய மன்னனுக்குத் திருக்குறள் ஓதிவிட்டு, பரபரப்புடன் நந்தவனத்திலிருந்து அந்தப்புரத்தை நோக்கி நடந்த அடிகளார், அந்தப்புரத்தின் கீழ்ப்பாகத் திலிருந்து தனது அறைக்கருகே வந்ததும் உள்ளே நுழைய மனமில்லாமல் தாழ்வாரத்திலேயே நின்று ஏதோ சிந்திக்க லானார். சூழ்நிலையும் சிந்தனைக்கு மிக அனுகூலமா யிருந்தது. எங்கும் நிசப்தம் நிலவிக் கிடந்தது.

நந்தவனத்துப் பக்கமாக அடிகளாரின் அறை அமைந் திருந்ததால் அங்கு காவல் வீரர்கள் கூட யாருமில்லை. கட்டிடத்தின் வெளிப்பக்கத்தில் காவல் புரிந்த வீரர்களின் நடமாட்டம்கூட இடையே தடுத்து நின்ற பெரும் சுவர் களின் காரணமாகக் காதில் விழவில்லை. நேரம் அதிகமாகி

விட்டதால் கார்குழலியைத் தோட்டத்திலிருந்து எதிர் பார்த்துக் கொணடிருந்த ஓரிரு பாங்கியரைத் தவிர மற்றப் பணிப் பெண்களெல்லோரும் உறக்கத்தின் அணைப்பில் பரவசப்பட்டுக் கிடந்ததால் மாடிப் பக்கமிருந்தும் கால்களின் நடமாட்டச் சத்தமோ, மெட்டிகளின் கிண்கிணி என்ற ஓசையோ, சிலம்புகளின் சலசலப்புச் சத்தமோ எதுவும் கேட்காமல் அமைதி பரிபூரணமாக இருந்தது. கூண்டுகளில் உறங்காத ஏதோ ஓரிரு பறவைகளின் கிலா கிலா சப்தம் ஒவ்வொரு முறை கேட்டது.

நந்தவனத்தில் ஏதோ ஒரு பாகத்திலிருந்த மயிலொன்று ஒரு முறை தனது அபஸ்வரக் குரலைக் காட்டி அகவியது. இந்தச் சில்லறைச் சப்தங்களைத் தவிர எந்த விதமான இடைஞ்சலுமில்லாத சூழ்நிலையில் சிந்தனையில் ஆழ்ந்துவிட்ட அடிகளார் அன்று நடந்த சம்பவங்களையும் அவற்றால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் பற்றி ஆராயத் தொடங்கினார்.

அன்றுவரை வீரபாண்டியனை அடிகளார் பார்த்ததே இல்லை. பார்க்காததற்கு முன்பே அவருக்கு அவனிடம் மிகுந்த அருவருப்பு இருந்து வந்தது. பார்த்தபின்பு அந்த அருவருப்பு ஆயிரம் மடங்கு அதிகமாகியதோடு, இப்பேர்ப்பட்டவனுக்கா கார்குழலியை மணம் முடித்துக் கொடுக்க மழவராயன் நினைத்திருக்கிறான் என்பதை எண்ணி எல்லையற்ற வியப்பில் மூழ்கினார். இலங்காபுரனின் தயவில் காலங்கழிக்கும் மன்னனும் ஒரு மன்னனா என்று அவனை வெறுத்து வந்த அடிகளார், அவனைத் தோட்டத்தில் நேரில் சந்தித்ததோடு அவன் கார்குழலியிடம் நடந்து கொண்ட மாதிரியையும் கவனித்த பின்பு, 'இப்பேர்ப்பட்ட ஒரு மூர்க்கனிடம் தன் வளர்ப்புக் குழந்தையை ஒப்படைக்கக் கூடாது,என்ற முடிவுக்கு வந்தார்.

இதை எப்படியும் நிறுத்தியாக வேண்டும் என்று தீர்மானித்து அதற்கான மார்க்கம் என்ன என்பதைப்பற்றி

யோசனையிலும் ஆழ்ந்தார். தாழ்வாரத்தில் இந்த மாதிரி சிந்தனையில் ஆழ்ந்த அந்த நேரத்திலும் வீரபாண்டியனின் உருவம் அவர் புத்தியில் எழுந்து நின்றது குடியால் நிதானமிழந்த அவன் நடை, வெறியும் குழப்பமும் நிறைந்த அவன் கண்கள், ஊதிய அவன் சரீரம், விஷமும் அறிவீனமும் கலந்த அயோக்கியச்சிரிப்பு அத்தனையும் அவர் கண் முன்பாக எழுந்து தாண்டவமாடின. இத்தனை அழகில் அவன் இலக்கியம் பேசிய லட்சணத்தை நினைத்ததும் அடிகளார் உள்ளத்தில் எரிச்சலோடு உதட்டில் சற்றுப் புன்முறுவலும் தவழ்ந்தது. நாட்டை ஆள்வதில் அசட்டையும், காம வேட்டையாடுவதில் கருத்தும் கொண்ட அந்த கசடனுக்குக் கண்ணின் கருமணி போன்ற கார்குழலியைக் கட்டிக் கொடுக்க மழவராயன் ஏன் ஒப்புக் கொண்டான் என்பதும் அடிகளாருக்கு நன்றாகத் தெரிந்தேயிருந்தது. நாட்டின் நன்மையை உத்தேசித்து குலசேகர பாண்டியன் மகன் விக்கிரம பாண்டியனுக்கோ அல்லது மதுரையை ஆண்டுவரும் வீரபாணடியனுக்கோ மகளைப் பலியிடுவதை மழவராயன் முன்பே தீர்மானித்து விட்டானென்பதை அடிகளார் அறிவார்.

இந்த இரண்டு பேர்களில் யாருக்குக் கார்குழலி கிடைப்பாள் என்பதில்தான் சந்தேகமிருந்தது. சோழ மன்னனின் படை பலத்தைக்கொண்டு மதுரையைக் கைப்பற்றிப் பின்னால் அரசாளக்கூடிய குலசேகர பாண்டியன் மகனுக்கா அன்றி இப்பொழுது அரசாளும் வீரபாண்டியனுக்காக என்பதிலிருந்தசந்தேகத்தைக் கருணாகரத்தேவன் வந்து உடைத்துவிட்ட பின்பே இந்தத் திருமணம் நிச்சயமாயிற்று. இந்தத் திருமணத்தால் இலங்காபுரனை அடக்கி எப்படிச் சோழ நாட்டுப் படையெடுப்பைத் தடுத்து மக்களைக் கோரமான யுத்தத்திலிருந்து காப்பாற்றலாம் என்பதைக் கருணாகரத்தேவன் எடுத்துச் சொன்னபோது அடிகளாரும் கூடத்தானிருந்தார். ஓரிரு சமயங்களில் குறுக்கிட்டும் பேசிப் பார்த்தார்.

ஆனால் கருணாகரத்தேவன் வீராவேசம் கலந்த பேச்சுக்கு முன்பு அடிகளார் நாசூக்காகக் குத்திக் குத்திப் பேசிய பேச்சும் கேட்ட கேள்விகளும் பயனற்றுப் போயின. தேவன் சொன்னதில் அரசியல் உண்மை புதைந்து கிடந்ததை மழவராயன் கண்டான். அடிகளார் குறுக்கிட்ட சமயங்களிலெல்லாம் அவரை உஷ்ணமாகப் பார்த்து அடக்கினான். அப்படியும் அடங்காமல்தான் அடிகளார் தம் சாமர்த்தியத்தைக் காட்டினார். ஆனால், அது பலிக்கவில்லை. வீரபாண்டியனுக்குப் பெண்ணை மணம் முடித்துத் தருகிறேனென்று உறுதி கூறிவிட்டான் மழவராயன். அன்று முதல் வீரபாண்டியனை நேரில் ஒரு முறை பார்த்து விட வேண்டுமென்று முடிவுக்கு வந்தார் அடிகளார். ஆனால் இத்தனை விபரீதமான சந்தர்ப்பத்தில் அவனைத் தான் பார்க்க நேரிடும் என்பதை மாத்திரம் அவர் அப்பொழுது உணரவில்லை. அவனைத் தான் சந்திக்க நேர்ந்த முறையை நினைத்த அடிகளார் தமக்குள்ளேயே நகைத்துக் கொண்டதோடு நில்லாமல் வீரபாண்டியனால் பாண்டிய நாட்டைக் காப்பாற்ற முடியாது என்ற முடிவுக்கும் வந்தார். பார்த்த மாத்திரத்தில் யாரையும் எடை போடக்கூடிய அடிகளார், பாண்டிய நாடு அதிகநாட்கள் வீரபாண்டியன் கையிலிருக்காது என்று சந்தேகமறத் தெரிந்துகொண்டார். நாடற்ற ராணியாகக் கார்குழலி வாழ்வதிலும் இஷ்டமில்லை.

அப்படி நாடற்ற ராணியாய் வாழ்வதால் அவனுக்கு ஏன் அவள் மணமாலை சூடவேண்டும் என்று யோசித்துப் பார்த்தார். அபராஜிதனைக் காட்டில் சந்தித்த நாளாய்க் கார்குழலியின் போக்கைக் கவனித்த அவர், அவள் மனம் அவனிடம் பூரணமாக ஒன்றிவிட்டதை உணர்ந்து கொண்டிருந்தார். ஆகவே எப்படியாவது கார்குழலியைக் காப்பாற்ற வேண்டுமென்று திடசித்தம் கொண்டு அதை அமுல் நடத்து முன்பு கார்குழலியை ஆசுவாசப்படுத்தி விட்டுச் செல்வோமென அவள் அறையை நோக்கி நடந்தார்.

அடிகளார் கார்குழலியின் அறையை அடைந்த போதுதான் கார்குழலியும் தந்தையுடன் வாதாடிவிட்டுத் திரும்பியிருந்தாள். மழவராயனுடன் வாதாடியதால் மனம் சுக்கல் சுக்கலாக வெடிக்கத் தன் அறைக்குத் திரும்பிய கார்குழலி பஞ்சணையில் படுக்காமல் பலகணியில் சாய்ந்து நின்று நந்தவனத்தில் கண்களை ஓட்டிக் கொண்டிருந்தாள். நந்தவனத்தில் எத்தனை எத்தனையோ புஷ்பச் செடிகளும் மரங்களும் இருந்தாலும் ஒன்றுகூட அவள் கண்களுக்குப் படவேயில்லை. எல்லாம்சர்வ சூன்யமாகத் தெரிந்தன அவளுக்கு. பார்வை நினைப்பைப் பொறுத்தது. நினைப்பு நிலைகுலையும்போது பார்வையும் நிலைகுலைந்து போகிறது. மனம் சூன்யமானால் பார்வையும் சூன்யந்தான். உலகமே இருண்டு விட்டதுபோல் அவள் உள்ளம் நினைத்ததால் அவள் சம்பந்தப்பட்டவரை உலகம் இருண்டுதான் கிடந்தது. அவளுக்கு அடிகளார் உள்ளே வந்ததுகூடத் தெரியவில்லை. முதல்முறை ''குழலி'' என்று அவர் மெள்ள அழைத்ததுகூடக் காதில் விழவில்லை. இரண்டாம் முறை அவர் குரல் கொடுத்த பிறகுதான் அவள் திரும்பிப் பார்த்தாள்.

அந்த முகத்தைப் பார்த்த அடிகளாரின் பார்வையில் பரிதாபம் கலந்து நின்றது. மன்னர் மரபில் பிறந்த கார்குழலி உரமான குணம் படைத்திருந்தவளாதலால் உள்ளம் வெடித்துக்கொண்டிருந்த அந்தச் சமயத்தில் கூடக் கண்ணீர் பெருக்கவில்லை. கண்ணீர் பெருக்கா விட்டாலும் அவள் கண்கள் கலங்கி நின்றதை அடிகளார் கவனித்தார். சோகத்தின் காரணமாக முகமும் வெளுத்திருந்தது. மயிர் சிறிது கலைந்தால் கூடத் தலையைக் கோதிவிட்டுக் கொள்ளும் பெண்மைக் குணத்தைக்கூட அவள் அந்தச் சமயத்தில் கைவிட்டிருந்ததால் முன்னுச்சி மயிர் பத்துப் பதினைந்து சேர்ந்து முகத்தின் பக்கத்தில் பட்டையாகத் தொங்கிக் கொண்டிருந்தன. கழுத்தில் நேராகப் பதியாமல் பக்கத்தில் சிக்கியிருந்த ஓரிரண்டு ஆபரணங்களைக்கூடச் சரிப்படுத்தாமல் விட்டிருந்தாள்

கார்குழலி. நிமிஷ நேரத்தில் இதையெல்லாம் கவனித்து, அவள் உள்ளப்போக்கை உணர்ந்து பரிதாபத்தால் மனம் கரைந்த அடிகளார், ''குழலி! எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசனை செய்துகொண்டிருக்கிறாய்? பணிப் பெண்களெல்லாம் எங்கே? எதற்காகத் தனியாக நின்று கொண்டிருக்கிறாய்?'' என்று வினவினார்.

கார்குழலி பலவந்தமாக ஒரு புன்முறுவலை வரவழைத்துக் கொண்டாள். ஒரு முறை அடிகளாரை ஏறெடுத்துப் பார்த்துவிட்டு மீண்டும் கண்களைத் தரையில் சாய்த்துக் கொண்டே, ''நேரமாகிவிட்டதென்று பணிப்பெண்களைப் படுக்க அனுப்பிவிட்டேன். எனக்குத் தூக்கம் வரவில்லை'' என்றாள்.

''தூக்கம் வராததற்குக் காரணம்?'' என்று வினவினார் அடிகளார். எந்தக் காரணத்தைச் சொல்லுவாள்? வீரபாண்டியனிடம் அவதிப்பட்டதைச் சொல்லுவாளா? மழவராயன் பிடிவாதத்தைப் பற்றிச் சொல்லுவாளா? மனத்தில் புதைந்துக்கொண்டு தன்னைச் சதா அழைக்கும் அபராஜிதனின் அழகிய உருவத்தைப் பற்றிச் சொல்லுவளா? எதைப்பற்றிச் சொல்லுவாள்? ஆனாலும் எதையோ சொல்ல வேண்டுமென்பதற்காக, ''காரணம் எதுவுமில்லை. அடிகளாரே!'' என்றாள்.

அவள் பேச்சை அடிகளார் அடியோடு நம்பவில்லை என்பதை அவர் முகம் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியது. அத்துடன் அடிகளார் தன் சுயுக்தியையும் சற்று எடுத்துக்காட்டத் தொடங்கி, ''குழலி! உனக்குத் தூக்கம் வராத காரணம் எனக்குத் தெரியும்'' என்றார்.

கார்குழலி அவரை ஏறெடுத்துப் பார்த்தாள் ''எனக்குத் தூக்கம் வராத காரணம் உங்களுக்குத் தெரியுமா?'' என்று ஆச்சரியத்துடன் வினவினாள்,

''நன்றாகத் தெரியும்'' என்றார் அடிகளார்.

''சொல்லுங்களேன் பார்ப்போம்'' என்று கேட்டாள் கார்குழலி.

அடிகளாரின் அடுத்த சொல் அவளை ஓர் உலுக்கு உலுக்கியது. உடலில் ஒரு நடுக்கமும் ஓடியது.

"இலக்கியம்" என்று பதில் சொன்னார் அடிகளார்.

"இலக்கியமா?" எதுவும் புரியாததுபோல் வினவினாள் கார்குழலி

"ஆமாம், இலக்கியந்தான்!"

"எந்த இலக்கியம்?"

"வீரபாண்டியன் இலக்கியம்."

தூக்கிவாரிப் போட்டது கார்குழலிக்கு. கேள்வி நிரம்பிய பார்வையொன்றை அடிகளார்மீது வீசினாள். அடிகளார் விவரிக்கத் தொடங்கி "நான் தோட்டத்துக்கு வந்தபோதுதான் வீரபாண்டியன் உன்னுடன் இலக்கியம் பேசிக்கொண்டிருந்தான். தமிழ் இலக்கியமாயிற்றே என்று ஆசையுடன் கேட்டேன். இலக்கியச் சர்ச்சை அத்தனை விபரீதத்தில் கொண்டுபோய் விடுமென்று முன்கூட்டி எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் சற்று முன்பாகவே தடுத்திருப்பேன். திடீரென நிகழ்ச்சிகள் ஏற்பட்டு வீரபாண்டியனைத் தள்ளிவிட்டு நீ ஓடிவிட்டாய் அல்லவா?" என்று வினவினார்.

"ஆம்."

"பாண்டியன் அத்துடன் விடவில்லை. எழுந்திருந்து உன்னைத் தொடர முயன்றான்; முடியவில்லை"

'ஏன்?"

"நான் அவனை அணைந்துகொண்டேன்."

புரிந்துகொண்டாள் கார்குழலி. தான் தப்பியதற்கு அடிகளாரே காரணம் என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டாள். புரிந்துகொண்டதும் நன்றி ததும்பும் கண்களை அவருக்காக உயர்த்தினாள். அத்துடன் இன்னொரு சந்தேகமும் கேட்டாள். "நீங்கள் எதற்காகத் தோட்டத்திற்கு வந்தீர்கள்?"

தான் தோட்டத்துக்கு வர நேர்ந்த காரணத்தை விளக்கிய அடிகளார், "கார்குழலி, பயப்படாதே. அந்த

வீரபாண்டியனுக்கு உன்னை மணம் முடிக்க நான் ஒருநாளும் சம்மதிக்கமாட்டேன்!"

கார்குழலி துக்கம் நிரம்பிய புன்முறுவலொன்றை அவர்மீது வீசி, "தந்தை தீர்மானித்துவிட்டார், அடிகளாரே" என்றாள்.

"தந்தையின் தீர்மானத்தை நான் மாற்றுகிறேன். வீரபாண்டியன் குணாதிசயங்களை எடுத்துச் சொல்லுகிறேன்?"

"நான் சொல்லியாகிவிட்டது!"

இந்தப் பதிலைக் கேட்ட அடிகளார் திகைத்துப்போய் "என்ன, நந்தவனத்தில் நடந்ததைச் சொல்லிவிட்டாயா?" என்று வினவினார்.

"அது மாத்திரமல்ல, விவாக சம்பந்தமாகச் சகலத்தையும்பற்றி விவாதித்துவிட்டேன்."

"தந்தை என்னசொல்கிறார்?"

"விவாகம் என்னையும் வீரபாண்டியனையும் பொறுத்ததல்லவாம்."

"பின் யாரைப் பொறுத்ததாம்?"

"மழவ நாட்டையும் பாண்டிய நாட்டையும் பொறுத்ததாம்."

"ஓகோ!"

"ஆமாம், அடிகளாரே! இப்பொழுது திருமணம் மதுரைக்கும் மேலைமங்கலத்துக்குந்தான்."

வேதனை ததும்பும் அவள் மதிவதனத்தைப் பார்த்த அடிகளார் நீண்ட நேரம் ஏதோ யோசனை செய்தார். சற்று நேரம் அறையில் உலாவினார். அறைக் கோடிக்குச் சென்று பலகணி வழியாக வெளியே தோட்டத்தை நோக்கினார். பிறகு திரும்பி அறைச் சுவர்களைக் கவனித்தார். திடீரென ஓர் இடத்தில் ஸ்தம்பித்து நின்றார். சுவரின் ஒரு பகுதியை நெருங்கிப் பார்த்தார். பிறகு "கார்குழ

அறைக் கோடியிலிருக்கும் விளக்கை எடுத்து வா!'' என்றார் அடிகளார். கார்குழலி தலையை நிமிர்த்தி அடிகளாரைப் பார்த்தாள். அவர் சுவரில் எதையோ பார்த்து மலைத்து நிற்பதைக் கண்டு அது என்னவென்பதைக் கவனிக்க ஆவல் கொண்டு அவர் கூறியபடியே தீபத்தை எடுத்து வந்தாள். அந்தத் தீபத்தைக் கையில் வாங்கிக்கொண்டு சுவரிலிருந்த சித்திரத்தை நன்றாக ஆராய்ந்தார். ''குழலி! இதைப் பார்த்தாயா?'' என்று வினவினார் முடிவில்.

'பார்த்தேன். ஆனால், இதில் என்ன இருக்கிறது?'' என்று கேட்டாள் கார்குழலி, ஏதும் புரியாமலே.

''உன் விடுதலைக்கு வழி இருக்கிறது'' என்றார் அடிகளார்.

''இந்தச் சித்திரத்தின் மூலமா?''

''ஆம்.''

கார்குழலிக்கு ஏதுமே புரியவில்லை அவர் முகத்தில் தன் கண்களைப் பதியவிட்டாள். அந்தக் கண்களில் எழுந்த கேள்விக்கு அடிகளார் உடனே பதில் சொல்லவில்லை. தீபத்தைப் பழைய இடத்தில் கொண்டுபோய் வைக்கச் சொல்லித் தாம் எதிரே நின்றுகொண்டு பேசலானார்.

''குழலி! நான் துறவியென்பது உனக்குத் தெரியும்'' என்று ஆரம்பித்தார்.

''தெரியும்'' என்றாள் குழலி.

''ஆனால் சகலத்தையும் துறந்த என்னை இரு பாசங்கள் பிடித்து வாட்டுகின்றன....''

குழலி பதிலேதும் சொல்லவில்லை. அடிகளாரே தொடர்ந்து சொன்னார்: ''ஒன்று, தமிழ்நாட்டின் பிற்கால நன்மை, இரண்டு உன் நன்மை. குடும்பத்தை உதறிய எனக்குத் தமிழ்நாடு என்ற பெரிய குடும்பம் வாய்த்தது பெண் முறைக்கு நீயும் வாய்த்தாய். அந்தப் பந்தங்களிலிருந்து என்னால் விடுபட முடியவில்லை. வீரபாண்டியனால் தமிழ்நாட்டுக்கு நன்மை உண்டென்று

எனக்குத் தெரிந்தால் உன் நன்மையை நான் தியாகம் செய்வேன். ஆனால், வீரபாண்டியனிடம் எனக்கு நம்பிக்கையில்லை. ஆகவே உன் திருமணத்தை உடைக்கத் தீர்மானித்துவிட்டேன். தீர்மானித்தவன் வழி தெரியாமல் திண்டாடினேன். கடவுள் ஒரு வழியையும் காட்டிவிட்டார். அதோ, அந்தச் சித்திரம்! அதில் இருக்கிறது உனது விமோசனம்!'' என்றார் அடிகளார்.

''அது எப்படி என்னைக் காப்பாற்றும்?'' என்று வினவினாள் கார்குழலி.

''குழலி! நீ தமிழ்நாட்டுப் பெண். இந்த நாட்டில் எத்தனையோ வீர ஸ்திரீகள் பிறந்திருக்கிறார்கள். அவர்கள் நிலைக்கு நீ உயர்ந்தால் காரியத்தைச் சாதிக்கலாம்.''

கார்குழலி ஏதோ யோசித்தாள்

''எதற்கும் தயாராக இருக்கிறேன், அடிகளாரே'' என்றாள் இறுதியில்.

''எந்தத் தியாகத்திற்கும் தயாரா?''

''தயார்.''

''தந்தையை உதறக்கூட?'

''அவசியமானால் அதற்கும் தயார்.''

''சரி. அப்படியானால் உன் அந்த புரத்துத் திட்டி வாசல் சாவியைக்கொடு.''

தலையணையின் கீழிருந்து சாவியை எடுத்துக்கொடுத்தாள் கார்குழலி. அதைப் பெற்றுக்கொண்டு நேராகத் தன் அறைக்குச் சென்ற அடிகளார் பெரிய காவித் துப்பட்டியை எடுத்துத் தலை முதல் கால் வரை போர்த்திக்கொண்டு சப்தம் போடாமல் திட்டி வாசலை நோக்கி நடந்தார், திட்டிவாசலை வெகு ஜாக்கிரதையாகத் திறந்து வெளியே வந்து மேலைமங்கலத் தெருக்களில் பல வற்றைக் கடந்து வேகமாகச் சென்று மறவர் குடிசைகள் இருக்குமிடத்திற்கு வந்து ஒரு குடிசையின் கதவைத் தட்டினார். கதவைத் திறந்த வாலிபனை நோக்கி, ''உ

சீக்கிரம் மேலே போர்வையையணிந்துகொண்டு கிளம்பு." என்றார். வாலிபனும் கிளம்பினான். அவனை அழைத்துக் கொண்டு திட்டிவாசல் வழியாக மீண்டும் உள்ளே நுழைந்த அடிகளார் கார்குழலியின் அறையை நோக்கிச் சென்றார். போர்த்திக்கொண்டு இருட்டுத்தலையாகச் சென்ற அந்த இருவரும் அந்தப்புரத்துக்குள் நுழைந்ததைத் திட்டிவாசல் பக்கத்தில் மறைந்திருந்த மற்றொரு உருவம் கவனித்ததோடு நில்லாமல் அவர்களைச் சற்று தூரத்தில் பின் தொடர்ந்தும் சென்றது.

21. அடிகளார் ஒன்று நினைக்க...

அந்தப்புரத்து விடிவிளக்குகளின் மங்கலான வெளிச் சத்திற்கூடத் தலையைக் காட்டாமல், இருட்டடித்த சுவர்களின் ஓரமாகவே நடந்து மிகுந்த எச்சரிக்கையுடன் கார்குழலியின் அறையை அடைந்தார் அடிகளார். கூட வந்த வாலிபனும் அப்புறமோ இப்புறமோ சற்றும் அகலாமலும் அவர் காட்டிய ஜாக்கிரதைக்குச் சற்றும் குறையாமலும் மனிதனைத் தொடரும் நிழல்போல் அவரைத் தொடர்ந்து வந்தான். அறையின் வாயிலை அடைந்த அடிகளார் வாலிபனை வெளியிலேயே இருக்கச் சொல்லி விட்டுத் தான் மட்டும் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றார். வெளியே நின்ற வாலிபன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நின்றான். இரவோ இரண்டாம் ஜாமத்தை எட்டிக்கொண்டிருந்தது. ஊரடங்கி எங்கும் நிசப்தம் நிலவிக்கொண்டிருந்தது. அரசகுமாரியின் அறைக்கு வெளியிலேயேயிருந்த பிரும்மாண்டமான தாழ்வாரத்தின் பெரிய தூண்கள்கூட அந்த நிசப்தத்தில் பெரிய பிசாசுகள்போல் நின்று கொண்டிருந்தன. தாழ்வாரத்தின் ஒரு கோடியிலிருந்த விடிவிளக்கின் வெளிச்சத்தைக்கூட ஓரிரு பெரிய தூண்கள் தடுத்துச் சில பகுதிகளில் இருட்டை வீசியிருந்ததால் பாதி இருட்டும் பாதி மங்கலான வெளிச்சமும் சேர்ந்து தாழ்வாரத்தை

மிகப் பயங்கரமாக அடித்துக்கொண்டிருந்தன. பயத்தையும் நிர்பயத்தையும் மனம்தான் சிருஷ்டிக்கிறது. எந்த நிமிஷத்திலும் எது நேர்ந்துவிடுமோ என்கிற திகில் மனத்தில் இருக்கும்போது மனிதனைச் சூழ்ந்திருக்கும் எதுவும் பயங்கரமாகவே தோற்றமளிக்கும். அடிகளாரைத் தொடர்ந்து வந்த வாலிபன் மனமும் அந்தச் சமயத்தில் சொல்லவொண்ணாத திகிலில் ஆழ்ந்திருந்ததால் அடிகளார் அறைக்குள் சென்றிருந்த சில விநாடிகள் கூட அநேக யுகங்களாகவே அவனுக்குத் தோன்றின. சாதாரண நிலையில் கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் பயக்கக் கூடிய தாழ்வாரத்துத் தூண்களும் தூண்களிலிருந்த பெரிய பெரிய சித்திரங்களும் அவன் கண்களுக்குத் தன்னை விழுங்கக் காத்திருக்கும் பிரும்மாண்டமான பூதங்களைப் போலக் காட்சியளித்தன. அர்த்த ராத்திரியில், அந்தப்புரத்தில், அதுவும் அரசகுமாரியின் அறைவாசலில் தான் நின்று கொண்டிருப்பதைக் காவலர்கள் கண்டுவிட்டால் தன் கதி என்னவாகுமென்பதை அந்த வாலிபன் சந்தேகமறத் தெரிந்து கொண்டிருந்ததால், அவன் இதயம் பயத்தால் டக்டக் என்று அவன் உடல் அதிரும்படி அடித்துக்கொண்டிருந்ததோடு உள்ளத்தின் போக்குக்கு ஏற்ப முகத்தில் வியர்வைத் துளிகளும் அரும்பின. அதிகநேரம் அவனை அங்கு நிற்க விட்டிருந்தால் அவன் பயத்தாலேயே பிராணனை விட்டிருப்பான் ஆனால், அவ்வளவு எளிதில் அவனுக்கு விடுதலையளிக்க விரும்பாத அடிகளார் சில விநாடிகளுக்குள்ளாகவே வாயிற்படிக்கு வெளியே தலையை நீட்டி உள்ளே வரும்படியாக அவனுக்கு சமிக்ஞை செய்தார். வாலிபன் உள்ளே நுழைந்ததும் மிகுந்த ஜாக்கிரதையுடன் கதவைச் சாத்தித்தாழ்ப்பாள் போட்டுக்கொண்ட அடிகளார் அவனை நோக்கி, "இனி மேல் போர்வைக்கு அவசியமில்லை, எடுத்துவிடலாம்" என்றார். வாலிபனும் உடலை மறைத்துச் சுற்றியிருந்த போர்வையை எடுத்துப் பக்கத்திலிருந்த மஞ்சமொன்றில் எறிந்துவிட்டு அறையைச் சுற்றும்முற்றும் நோக்கினான்

அப்படி அறையைத் துழாவிய அவன் கண்கள் பலகையிப் பக்கமாகச் சென்றதும் அங்கிருந்த கார்குழலியின் எழில்வரு வத்தில் நிலைத்துப் பிரமித்துப் பரவசமடைந்து நின்றன. கார்குழலியின் கரிய விழிகளும் அவனை ஏறெடுத்து நோக்கின.

வந்திருந்த வாலிபனுக்கு வயது இருபத்தைந்துக்கு மேலிருந்தாலும் அவயங்களோ அறிவோ முதிர்ச்சியடை யாத காரணத்தால் அவன் சிறுபையனைப் போலவே காணப்பட்டான். கச்சலான சரீரம் கலக்கமான பயம் நிறைந்த கண்கள், நீண்ட மெல்லிய ஆனால் வலுவற்ற கரங்கள், அந்தச் சிறிய சரீரத்தைக்கூடத் தாங்க சக்தியற்ற கால்கள், இவற்றுடனிருந்த வாலிபனின் தலை மயிர் அடர்த்தியாகவும் சுருண்டும் இருந்தது. தலை நடுவே வகிடு எடுக்கப்பட்டு, காக்கையின் இறகுகளைப்போல வெட்டப்பட்டுத் தொங்கிய சுருட்டை மயிரிழைகளுக் கிடையே இருந்த முகம் வெளிறிட்டுக் கிடந்தது. லேசாக மீசை அரும்பி கட்டியிருந்தாலும் குழந்தையின் முகம் போலவேயிருந்த அவன் வதனமும் பொதுத் தோற்றமும் பெரிய காரியங்களைச் சாதிக்கக்கூடிய வன்மை அவனுக் கில்லையென்பதைச் சந்தேகமற எடுத்துக்காட்டின. அத்துடன் அவன் பார்வையும் அவனிடம் மற்றவர்களுக்கு நம்பிக்கையளிக்கக் கூடிய பார்வையாயில்லை. இவனை நம்புவது மண் குதிரையை நம்புவதற்குச் சமானம் என்று பார்த்தவுடனேயே கார்குழலி புரிந்துகொண்டாள். ஆனால் அடிகளாரும் அவனைச் சரியாகவே எடைப் போட்டிருப்பாரென்ற நம்பிக்கையாலும், காரணமாகவே அவனை அழைத்து வந்திருக்கிறாரென்ற எண்ணத்தாலும் உள்ளே எழுந்த அபிப்ராயங்களை அடக்கிக் கொண்டு அடிகளார் அடுத்தபடி என்ன செய்யப் போகிறா ரென்பதை ஆவலுடன் நோக்கிக் கொண்டிருந்தாள்.

அடிகளார் அனாவசியமான பேச்சுக்கு இடம் வைத் துக்கொள்ளாமலும் வாலிபனைக் கார்குழலிக்கு அறிமுகப்

படுத்தாமலும் முதலில் வந்த வேலையைக் கவனிக்கத் தொடங்கி, அறைக் கோடியிலிருந்த விளக்கை எடுத்துக் கொண்டு வந்து சுவரிலிருந்த சித்திரத்தைச் சிறிது நேரம் ஆராய்ந்தார். பிறகு வாலிபனையும் கார்குழலியையும் தனக்கு அருகில் வரும்படி அழைத்தார். இருவரும் வந்ததும் விளக்கைச் சித்திரத்துக்காகத் தூக்கிப் பிடித்துக் கொண்டு வாலிபனை உற்று நோக்கி, "இதோ பார்! இது என்ன என்று தெரிகிறதா?" என்று வினவினார்.

"தெரிகிறது; கோட்டை" என்று பட்டென்று சிறிது கூட யோசிக்காமல் பதில் சொன்னான் வாலிபன்.

அடிகளாருக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்ததால் மிக உஷ்ணமாக அவனைப் பார்த்தார். "கோட்டை என்று கண்டு பிடித்துவிட்டாயா! பிரமாதம்! பிரமாதம்! இதைக் கண்டுபிடிப்பதற்கு உன்னைப் போன்ற வீரன் தேவை யில்லை. குழந்தை கூடச் சொல்லும்!" என்று எரிந்து விழுந்த அடிகளார் வாலிபன் முகத்திலும் கோபம் ஏறு வதைக் கண்டு தன்னை அடக்கிக் கொண்டு மேலும் சொன்னார்: "இது கோட்டைதான் நன்றாகக் கவனித்துப் பார். இந்தக் கோட்டையில் சில விசேஷங்களும் இருக் கின்றன."

வாலிபன் மீண்டும் பார்த்தான். எத்தனை நேரம் பார்த்தும் எதும் புரியாததால் அடிகளாரையே கேட்டான், "என்ன விசேஷங்கள் இருக்கின்றன? எனக்குப் புரிய வில்லையே" என்று.

"இதோ பார், இந்தக் கோட்டையைச் சுற்றிலும் சைத்ரிகன் என்ன வரைந்திருக்கிறான்?"

"காடுகளை எழுதியிருக்கிறான்."

"எங்காவது கிராமம் அருகிலிருக்கிறதா?"

"இல்லை."

"சுற்றிலும் கிராமங்களே இல்லாத காட்டுப்பிரதேசத் தில் ஒரு பழங்கோட்டை. ஆனால் அதில் பழுதே இல்லை இதிலிருந்து என்ன தெரிகிறது."

ஏதும் தெரியவில்லை வாலிபனுக்கு. அடிகளார் அவன் கட்டைப் புத்தியை நினைத்து உள்ளூற வெகுண்டாலும் வெளிக்குச் சாந்தமாகவே நடித்து விஷயத்தை விளக்க லானார். "இது ஒரு பழைய கோட்டை. யாரும் உப யோகப்படுத்தாததால் வெகுகாலம் பாழடைந்துவிட்டது. ஆனால் இந்தக் கோட்டையை மழவராயன் சமீபத்தில் தான் புதுப்பித்தான். அகழியைச்சூட அழகுபடுத்தியிருக் கிறான். அகழியில் ஜலம் இன்னும் நிரம்பியிருக்கிறது. கோட்டைச் சுவர்கள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. உள்ளேயிருந்த கட்டிடங்களும் நன்றாகச் செப்பனிடப் பட்டிருக்கின்றன...." என்று பேசிக் கொண்டுபோன அடி களார் சற்றுப் பேச்சை நிறுத்தி வாலிபனைப் பார்த்தார்.

"ஏன் நிறுத்திவிட்டீர்கள்? வார்த்தையை முடியுங்கள். இதுதான்...?" என்று கேட்டான் வாலிபன்.

"கார்குழலியின் கன்னி மாடம்!" என்று முடித்தார் அடிகளார்.

வாலிபன் வியப்பினால் பிரமித்து நின்றான். கார் குழலிக்குத் தன் கன்னி மாடமோ, அதன் சித்திரமோ புதி தல்ல வாகையால் எத்தகைய வியப்பையும் காட்டாமல் அடிகளார் எதற்காக இதையெல்லாம் விவரிக்கிறார் என்று யோசித்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். வாலிபன் மட்டும் அடிகளாரை நோக்கி, "கன்னி மாடமா! இந்தக் கோட்டையா கன்னி மாடம்?" என்றான்.

"ஆம்" என்றார் அடிகளார்.

"இந்த வனாந்திரத்தில் இதை ஏன் கட்டினார்கள்" என்று வாலிபன் வினவினான்.

"கட்டின காலத்தில் இது வனாந்தரமில்லை"

"இப்பொழுது தான் வனாந்தரமாகிவிட்டதே. இதை எதற்காகப் புதுப்பிக்க வேண்டும்?"

"அப்படிக் கேள்! இதோ இந்த இடத்தைக் கவ . . . என்ன தெரியுமா?"

"தெரியாமலென்ன? நீலமலை."

"நீலமலைக்குச் சற்று கீழே பார். ஒரு வாய்க்கால்."

"ஆமாம்; இருக்கிறது."

"இந்த வாய்க்கால் மேலைமங்கலச் சிற்றரசைப் பாண்டிய நாட்டிலிருந்து பிரிக்கிறது."

வாலிபன் கண்கள் சற்று அகன்று அடிகளாரை நோக் கின. அத்துடன், "பாண்டிய நாட்டு எல்லையில் ஒரு பழங் கோட்டை. அதுவும் நன்றாகப் புதுபிக்கப்பட்டிருக்கிறது. கோட்டைக்காக வளர்ந்திருந்த காட்டுடன் காலம் வேறு சுற்றுப்பிரதேசம் பூராவையும் காடாக அடித்திருக்கிறது" என்று அவன் உதடுகளும் முணுமுணுத்தன. அப்பொழுது தான் வாலிபனுக்கு உண்மை புலப்படுவதைக் கண்ட அடிகளார் அந்தக் களிமண் மண்டையிலேயே தன் விஷ யத்தை விளக்க வைத்துவிட்டதை நினைத்து உள்ளூற உவகை கொண்டதோடு லேசாகப் புன்முறுவலும் செய் தார். வாலிபன் அவர் புன்முறுவலைச் சிறிதும் லட்சியம் செய்யாமல், "இந்தக் கோட்டை எதற்காகப் புதுப்பிக்கப் பட்டது? ஏன் இவ்வளவு பலப்படுத்தப்பட்டது?" என்று வினவினான்.

"காரணங்கள் இரண்டு" என்றார் அடிகளார்.

"சொல்லுங்கள்" என்றான் வாலிபன்.

"இப்பொழுதிருக்கும் ராஜீய நிலையில் மேலைமங்கலத் துக்கும் பாண்டிய நாட்டுக்கும் போர் மூண்டால் இந்த எல்லைக் கோட்டையில் படைகளை வைத்துப் பாண்டியப் படைகளின் முன்னேற்றத்தை ஓரளவு தடை செய்யலாம். இது முதல் காரணம்."

"இரண்டாவது?"

"இரண்டு, பாண்டியர்கள் கார்குழலியை அடைய ஆசைப்படுவதால், அவர்களிடமிருந்து... காப்பாற்ற இந்தக் கோட்டை உபயோகப்படும்."

"எப்படி?"

"இந்தக் கோட்டையில் கார்குழலி வைக்கப்படுவாள் அவளைக் காக்கப் படையும் நிறுத்தப்படும். இந்தக் கோட்டை சரியாகப் பாதுகாக்கப்பட்டால் எப்பேர்ப் பட்ட பெரும்படை இதைச் சூழ்ந்தாலும் இதைப் பிடிக்க ஒரு மாத காலமாவது ஆகும்."

"உண்மைதான். ஆனால், ஒரு மாதத்திற்குப் பிறகு அரசகுமாரியின் நிலை எப்படி மாறும்?"

"ஒரு மாதத்திற்குள் ராஜீய நிலை எப்படி மாறுமோ அப்படி மாறும். அது கிடக்கட்டும். அதல்ல இப்பொழுது வேண்டிய யோசனை. சரியான படை திரட்டினால் இந்தக் கோட்டையை ஒரு மாத காலம் பாதுகாக்கலாம் என்ப நிலேயே நம் கருத்தைச் செலுத்தவேண்டும்" என்றார் அடிகளார்.

அடிகளாரின் மனம் எப்படி ஓடுகிறது என்பதைப் புரிந்துகொள்ளச் சக்தியற்ற வாலிபன் அவரை ஏறெடுத்துப் பார்த்தான். அடிகளார் பதிலேதும் சொல்லாமல் அவனை உற்றுப் பார்த்தார். பிறகு சரேலெனத் திரும்பி அறைக் கோடிக்குச் சென்று கையிலிருந்த விளக்கை வைத்துவிட்டுத் திரும்பினார்.. வாலிபன் தீவிர யோசனையிலிறங்கிவிட்டான். அடிகளார் தன்னை எங்கு இழுத்துச் செல்கிறாரோ என்பதை அறியாமல் கலங்கியதால் மிதமிஞ்சிய பீதிக்கும் உள்ளானான். அடிகளாரின் போக்கு கார்குழலிக்குப்புரிந்துவிட்டதால் கலங்காத அவள் உள்ளம் கூடச் சிறிது கலங்கியது. சுவர்ப் பக்கத்திலிருந்து திரும்பிச் சற்று நடந்து அறையின் நடுவுக்கு வந்தாள். வாலிபன் மட்டும் வெறிபிடித்தவன்போல் சித்திரத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான். அறைக் கோடியில் விளக்கை வைத்துவிட்டுத் திருப்பிய அடிகளார், வாலிபனை அருகில் அழைத்து, "இந்தக் கோட்டையைக் காக்கும் பொறுப்பை ஏற்கவேண்டும். அதற்கு வேண்டிய படையை ரகசியமாகத் திரட்டவேண்டும்" என்று உத்தரவிட்டார்.

வாலிபன் உடல் ஒருமுறை நடுங்கியது. "இதை நான் எதறகாகக் காக்கவேண்டும்?" என்று கேட்டபோது உடலின் நடுக்கம் அவன் குரலிலும் தெரிந்தது.

அடிகளாரின் முகத்தில் கோபக்குறி தோன்றலாயிற்று. "உன் தகப்பனார் உன்னை இங்கு அனுப்பியபோது என்ன சொல்லியனுப்பினார்?" என்று காரமாகக் கேட்டார்.

"நீங்கள் சொல்கிறபடி நடக்க வேண்டுமென்றார்."

"அதன்படிதான் இப்பொழுது நடக்கிறாயா?"

"முடியாத காரியத்தைச் சொன்னால் எப்படிச் செய்வேன்?"

"எது முடியாத காரியம்? வீரனாயிருப்பவனுக்குப் படை திரட்டுவது முடியாத காரியமா? ஒரு கோட்டையைக் காப்பது முடியாத காரியமா?"

"படை திரட்டப் பணம் வேண்டும்..."

"பணம் நான் தருகிறேன்."

"ஏற்கனவே கோட்டையிலிருக்கும் வீரர்களைத் தாக்கிக் கோட்டையைப் பிடித்த பின்புதானே உள்ளே நுழைய முடியும்? கோட்டையை நாம் பிடிக்கும்முன்பு மழவராயன் வேறொரு படையை அனுப்பி நம்மைப் பின்புறம் தாக்கினால் கதி என்ன? கோட்டை வீரர்கள் முன்புறம்; உதவிப்படை பின்புறம். இரண்டுக்குமிடையில் நமது படை துவையல் செய்யப்படுமே!"

"இதையெல்லாம் நான் யோசிக்காதிருப்பேனா?

"யோசித்துமா கோட்டையைப் பிடிக்கவும் அதற்காகப் படை திரட்டவும் தீர்மானித்தீர்கள்."

"கோட்டையைப் பிடிக்க நான் எண்ணவில்லை. காக்கவே படை திரட்டச் சொன்னேன்."

"பிடிக்காமல் எப்படிக் காப்பது?"

"கோட்டையைப் பிடிக்க வேண்டிய அவசியமில்லை. கோட்டை வீரர்கள் அனைவரும் நான் சொல்கிறபடி கே

பார்கள். தவிர, அவர்களுக்கு மழவராயன் மகளிடத்தில் அளவற்ற அன்பு. அவளுக்காக உயிரையும் விடுவார்கள்."

''அந்த அன்புக்கும் நாம் படை திரட்டுவதற்கும் என்ன சம்பந்தம்?''

''மிகுந்த சம்பந்தமிருக்கிறது. அந்த அன்பினால்தான் எனக்கே இந்தத் துணிச்சல் வந்தது.''

''நீங்கள் சொல்வதொன்றும் எனக்குப் புரியவில்லை அடிகளாரே.''

''இதில் புரியாதது எதுவுமேயில்லையே! கார்குழலிக்காகக் கோட்டை வீரர்கள் எதையும் செய்வார்கள். ஆகவே கோட்டையைத் திறந்துவிடுவார்கள். கோட்டையைக் காக்க அங்கிருக்கும் வீரர்களே போதும். ஆனால் அங்கு கார்குழலியைக் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இடையில் சண்டை ஏற்பட்டால் சமாளிக்கவும் சிறு படையாவது வேண்டாமா?'' என்று கேட்டார் அடிகளார்.

அடிகளாரின் கேள்வி காதில் விழுந்ததும் விநாடி நேரம் அசைவற்று நின்றுவிட்டான் வாலிபன். கார்குழலியைத் தந்திரமாக அந்தப்புரத்திலிருந்து கடத்திக்கொண்டு போய்க் கன்னிமாடக் கோட்டையில் காவல் வைக்கவே அடிகளார் யோசிக்கிறார் என்பதை அறிந்துகொண்ட வாலிபனுக்கு அதைச் செய்து முடிப்பது எத்தனை அபாயம் என்பது சந்தேகமறப் புரிந்துவிட்டதால் அவன் பதிலேதும் பேசாமல் அறையில் சற்று நேரம் உலாவினான். அடிகளாரின் யோசனையை ஏற்கனவே புரிந்துகொண்டுவிட்ட கார்குழலிகூட அந்தத் துறவியின் துணிச்சலைக் கண்டு அவரை ஏறெடுத்துப் பார்த்தாள். அந்த அரண்மனைச் சந்நியாசியின் முகத்தில் மட்டும் அச்சமோ வேறெவ்வித உணர்ச்சியோ இல்லாமல் முகம் கல்லாயிருந்தது.

வாலிபன் சம்பாஷணையைத் தொடங்கினான். ''நீங்கள் என்னிடம் எதை எதிர்பார்க்கிறீர்களென்பது புரிந்து விட்டது'' என்றான் கோபம் குரலில் தொனிக்க.

''சந்தோஷம்'' என்றார் அடிகளார்.

''இதில் சந்தோஷத்திற்கு என்ன இருக்கிறது? நீங்கள் சொல்கிற யோசனையில் அபாயம் தான் இருக்கிறது'' என்றான் வாலிபன்.

''அபாயமில்லாமல் அரிய பொருள்கள் கிட்டுவதில்லை'' என்றார் அடிகளார்.

கார்குழலியின் மனத்தில் அடிகளாரின் பதில் சந்தேகத்தைக் கிளறிவிடவே அவளும் சம்பாஷணையில் புகுந்து, ''எந்த அரிய பொருள் அடிகளாரே!'' என்று கேட்டாள்.

அடிகளார் கண் இமைக்கும் நேரம் யோசித்து விட்டு, ''உன்னைப்போன்ற அரிய பொருள் குழலி'' என்றார்.

கார்குழலியின் வதனத்தில் சந்தேகச் சாயை தீவிரமாகப் படரலாயிற்று. ''அடிகளாரே! இவர் யாரென்று நீங்கள் சொல்லவில்லையே!'' என்று வினவினாள்.

கார்குழலியே அதிரும்படியாகச் சொற்களை உதிர்த்தார் அடிகளார். ''இவன்தான் குலசேகர பாண்டியனின் மகன் விக்ரம பாண்டியன்'' என்றார் மிக நிதானமாக.

அதிர்ச்சியினால் ஸ்தம்பித்து நின்றாள், மழவராயனின் மகள். இந்தப் பச்சைக்குழந்தைக்காக குலசேகர பாண்டியன் தன்னைக் கேட்டான் என்று நினைத்துப் பார்த்து ஏக்கம் கலந்த பெருமூச்சொன்றையும் விட்டாள். ஆனால் குலசேகர பாண்டியன் மகனுக்குத் தன்னைக் கேட்டதும், வீரபாண்டியனுக்குத் தன்னைக் கொடுக்கத் தகப்பனார் ஒப்புக் கொண்டதும் எல்லாமே அரசியல் காரணமென்பதை நினைத்துப் பார்த்து, ''யாரும் என்னை உணர்ச்சியுள்ள ஒரு பெண்ணாகக் கருதவில்லையே!'' என்று உள்ளூறச் சொல்லிக்கொண்டாள். தன்னைத் தன் அந்தப்புரத்திலிருந்து கடத்திச் செல்ல அனுபவமோ சக்தியோ இல்லாத விக்ரம பாண்டியனை அழைத்து வந்திருக்கிறாரே அடிகளார் என்று நினைத்து ஆச்சரியமும் பட்டாள். தகப்பனார் தன்னை ஒருவனுக்குப் பலியிட நினைத்தார். வேறோர் இடத்தில் பலியிட அடிகளார் நினைக்கிறாரே என்று நினைத்து உள்ளூற உருகினாள்.

அடிகளார் விக்ரம பாண்டியனுடன் பேசலானார், "விக்ரமா! உன் தாயாதியான வீரபாண்டியன் நீ உட்கார வேண்டிய சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறான். உன் தகப்பன் நாடு கடத்தப்பட்டு அனாதையாகத் திரிகிறான். இப்பொழுதுதான் அவனுக்கு உதவச் சோழ மன்னன் தயாராக இருக்கிறான். இந்தச் சமயத்தை நீ நழுவவிட்டால், பிறகு வீரபாண்டியன்மீது வெற்றிகொள்ள மீண்டும் சந்தர்ப்பம் கிடைப்பது கஷ்டம். மழவராயன் கார்குழலியை வீரபாண்டியனுக்கு மணமுடிக்கத் தீர்மானித்துவிட்டான். பாண்டிய நாடும் மேலைமங்கலமும் இணைந்துவிட்டால் சோழ மன்னனல்ல, அவன் பாட்டனாலும் வீரபாண்டியனை வெற்றி கொள்ள முடியாது. கார்குழலியின் கல்யாண ஏற்பாட்டை உடைத்தால்தான் உன் தாயாதிமேல் நீ வெற்றி கொள்ளலாம். உன் தகப்பன் கனவும் அப்பொழுதுதான் பலிக்கும். உங்கள் பரம்பரை மீண்டும் மதுரை ஆட்சி பீடத்தில் அமர்வது கார்குழலியின் கதியைப் பொறுத்திருக்கிறது" என்றார்.

"கார்குழலியைக் கன்னிமாடத்துக்குக் கொண்டு போய்விட்டால்....?"

"மழவராயன் மனம் மாறலாம். மழவராயனுக்குக் கார்குழலி ஒரே மகள்."

"பாண்டியன் வெகுண்டு படையெடுத்தால்...."

"கன்னிமாடச் சுவர்கள் அவளைக் காப்பாற்றும். கோட்டையைக் காக்கப் போர் அனுபவமுள்ள வீரன் ஒருவன் தேவை. அதற்குத்தான் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். என்ன இஷ்டமா சொல். இல்லையேல் நீ இல்லாமலே இந்தக் காரியத்தை என்னால் சாதிக்க முடியும்" என்றார் அடிகளார்.

விக்ரமன் வெகுநேரம் யோசித்துவிட்டுச் சற்றுத் தயங்கியே சொன்னான், "உங்கள் இஷ்டம் அடிகளாரே!" என்று.

அடிகளார் மேற்கொண்டு துரிதமாக வேலைசெய்தார். "குழலி! உன் கையிலிருக்கும் அந்த முத்து வளையல்களைக் கழற்றிக் கொடு" என்று கழற்றி வாங்கி அவற்றை விக்கிரமனிடம் கொடுத்து, "விக்கிரமா! யவனச் சந்தையில் இவற்றை விற்றால் குறைந்த பட்சம் ஐயாயிரம் பொற்காசுகளாவது கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு நீ ரகசியமாக வீரர்களைத் திரட்டு. திரட்டிய பிறகு நீ செய்தி அனுப்பினால் கார்குழலி இரவோடு இரவாகச் சில பணிப் பெண்களுடன் புறப்படுவாள். எல்லோரையும் குதிரைகளில் ஏற்றி வேகமாகக் கன்னிமாடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர். அங்கு நான் வந்து சேருகிறேன்" என்றார். விக்ரமன் தன்னையும் அறியாமலே தலையை ஆட்டினான். "குழலி! இவனை அனுப்பிவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அடிகளார் விக்ரமனை அழைத்துக் கொண்டு திட்டி வாசலுக்கு வந்தார். அங்கு அவனிடம் திட்டிவாசல் சாவியையும் கொடுத்து, "விக்கிரமா! துணிச்சலுடன் காரியத்தை முடி. கார்குழலி உனக்குக் கிடைப்பதோடல்லாமல் பாண்டிய வல்லரசும் உனக்குக் கிட்டும்" என்று போதித்து விட்டு மீண்டும் கார்குழலியின் அறைக்கு வந்தார்.

கார்குழலி தலையை இருகையாலும் பிடித்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவள் முதுகை ஆர்வத்துடன் தடவிக் கொடுத்த அடிகளார், 'மகளே! இந்த மடையனிடம் உன்னை ஒப்படைப்பேனென்று ஒருகாலும் நினைக்காதே. இந்தச் சமயத்துக்கு இவன் ஒரு கருவி அவ்வளவுதான். என்னை நம்பு! தமிழ் மகளான உனக்கு அச்சம் உதவாது. அதைரியத்தை விட்டு வீரன் மகளாக நடந்துகொள். எதற்கும்தான் நானிருக்கிறேனே! உன்னை விட்டு எங்கே போகப் போகிறேன்?" என்று ஆறுதல் சொன்னார். ஆனால் அவர் சொன்ன கடைசி வார்த்தைகள் அடுத்த சில விநாடிகளில் உடைந்துபோகும் என்பதை அடிகளார் எப்படி அறிவார்? அறையைவிட்டு வெளியே வந்து படிகளில் இறங்கித் தம் அறையைச் சமீபித்த அடிகளார்மீது திடீரென்று ஒரு பெரும் போர்வை வீசப்பட்டது. தாம் இறுகக் கயிற்றால் பிணைக்கப்படுவ

தையும் உணர்ந்தார். தன்னை மூட்டையாகக் கட்டுமுன்பு கூச்சலிட எத்தனித்த அவர் பிரயத்தனமும் வீணாயிற்று. அவர் மண்டையில் பலமான அடியொன்றும் விழுந்தது. அடுத்த விநாடி அடிகளாருக்கு ஸ்மரணை தப்பியது.

22. திருவடி நிழல்

இறைவன் திருவடி நிழலை அடைய விரும்புவதாக அநேகப்பேர் சொல்கிறார்கள். வாழ்க்கையில் அலுப்புத் தட்டும் சமயங்களில், ‘ஆண்டவா என்னை ஏன் இன்னும் இந்த உலகத்தில் வைத்திருக்கிறாய்? உன் திருவடிகளில் சேர்த்துக் கொள்ளக் கூடாதா?’’ என்று இறைஞ்சுகிறார்கள். ஆண்டவன் உண்மையாகவே அவர்களிடம் கருணை கூர்ந்து அவர்களைத் தன்னிடம் சேர்த்துக்கொள்ள இஷ்டப்பட்டு மரணத்துக்குக் காரணமாக உடல் உபாதையைக் கொடுக்க ஆரம்பித்தானானால் வேண்டுகோளின் தன்மை அடியோடு மாறிவிடுகிறது. கொஞ்சம் உடல்நலம் மெலிந்து தள்ளாட்டம் ஏற்பட்டு, இறைவன் திருவடியின் கட்டைவிரல் கண்ணுக்குத் தெரிந்தவுடனேயே தங்களை எப்படியாவது அந்தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றிவிட இறைவனை வேண்டுகிறார்கள். இறைவன் திருவடிகளிலிருந்து தப்பிச் சில காலமாவது இந்த உலகில் வசிப்பதற்காக அவனிடமே சரணமடைகிறார்கள். இறைவனுக்கு அபிஷேகம், அஷ்டோத்திர, சகஸ்ரநாம அர்ச்சனைகள் நடக்கின்றன. தாங்கள் தப்புவதற்காகத் தாயையும், தாரத்தையும் உபவாசமிருக்கச் சொல்பவர்களும் உண்டு. ஏனென்றால், இறைவன் திருவடிக்கு மனிதன் ஆசைப்படுவதெல்லாம் வெறும் பாசாங்கே தவிர வேறில்லை. யாரும் மரணத்தை விரும்புவதில்லை. இந்த உலகம் வெறும் நரகம் என்று உபன்னியாசம் செய்பவர்களும் கேட்பவர்களும் சகலபேருமே இந்த நரகத்தில் எத்தனை நாள் ஜீவிக்க முடியுமோ அத்தனை நாள் ஜீவிக்கவே இஷ்டப்படுகிறார்கள். மனிதனுக்கு உயிர் வெல்லம். அதைக் கொடுத்த ஆண்ட

வனிடம் திருப்பிக் கொடுக்க உண்மையில் எந்த மனிதனுக்கும் இஷ்டம் கிடையாது; இது சம்பந்தப்பட்ட வரையில் சாதாரண மனிதனும் துறவியும் ஒரே ரகம் தான். இந்த உலகம் அநித்தியம் என்று துறவறத்தை மேற்கொள்பவர்கள்கூட மடங்கள், சிஷ்யர்கள் போன்ற உலக பந்தங்களை ஏராளமாகச் சிருஷ்டித்துக்கொண்டு சுகமாகவே வாழப் பிரயத்தனப்படுகிறார்கள். மரண பயம் வரும்போது எப்பேர்ப்பட்ட துறவியும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஆசைப்பட்டு அதற்காக எந்தத் தியாகத்துக்கும் தயாராவது இயற்கை. அந்த இயற்கைக்குத் தாமும் மாறுபட்டவரல்ல என்பதை அடிகளார் அடுத்து நேர்ந்த நிகழ்ச்சிகளில் நிருபித்துக்கொண்டார்.

அடிகளாருக்கு ஸ்மரணை வந்தபோது தாம் எங்கிருக்கிறோம் என்பதை உடனே அறியமுடியாத ஸ்திதியில் இருந்தார். தலையில் பலமாகக் கொடுக்கப்பட்ட அடியினால் ஏற்பட்ட காயம் அப்பொழுது சற்று வலியைக் கொடுத்துக் கொண்டிருந்தது. தம்மைச் சுற்றிப் பெரிய துப்பட்டிப் போர்த்தப்பட்டுத் தாம் பலமாகக் கட்டப்பட்டிருப்பதையும் கை கால்களைக் கூட நீட்ட முடியாமல் பிணைக்கப்பட்டிருந்ததால் முட்டியிலும் அதற்குக் கீழும் பெரும் வலி எடுத்துக் கொண்டிருந்தது. தலையையும் மூடி துப்பட்டி கட்டப்பட்டிருந்தாலும் மூக்குக்கு நேரே துவாரம் செய்யப்பட்டிருந்தாலும் தம்மைக் கொல்லும் நோக்கம் அந்த அரக்கர்களுக்கு இல்லையெனத் தீர்மானித்துக் கொண்டார். அடிக்கடி கேட்ட ‘கடக்கடக்’ என்ற சப்தத்தினாலும், தாம் மூட்டைப்போல் ஆடிப் பக்கத்திலிருந்த ஏதேதோ மூட்டைகள் பேரில் மோதியதாலும் தம்மைச் சாமான் வண்டியில், கட்டிப் போட்டிருக்கிறார்கள் என்பதையும் ஊகித்துக் கொண்டார் அடிகளார். ஆனால் எங்கு கொண்டு போகிறார்கள், எதற்காகக் கொண்டு போகிறார்கள் என்ற விவரங்களை மட்டும் என்ன யோசித்துப் பார்த்தும் அவரால் ஊகிக்கமுடியவில்லை. அந்தப்புரத்தில் தாம் கார்குழலியிடம் பேசியதோ

அவன் அறையில் தாம் செய்த ஏற்பாடுகளை யாருக்கும் தெரியக் காரணமில்லை என்பதை அடிகளார் சந்தேகமற அறிந்திருந்தார். ஆகையால் அது சம்பந்தமாகத் தம்மை யாரும் பிடித்திருக்க மாட்டார்கள் என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டார். ஒருவேளை திட்டி வாசல் வழியாகச் சென்று விக்ரமனை அழைத்து வந்ததை யாராவது பார்த்திருப்பார்களோ என்று சிந்தித்தார். 'அப்படிப் பார்த்திருந்தால் அந்தப்புரத்து காவலாளிகள் பார்த்திருக்கலாம். அவர்கள் பார்த்திருந்தால் உடனே கைது; பிறகு மரணதண்டனை. ஒரே முடிவுதானே தவிர இந்த மாதிரி இரண்டுங்கெட்டானாக எதுவும் நடக்காது' என்று தமக்குள்ளேயே விவாதித்துப் பார்த்து, அந்தப்புரக் காவலுக்கும் தாம் மூட்டை கட்டப்பட்டதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையெனத் தீர்மானித்துக் கொண்டார். ஒன்று மட்டுமே அவருக்குச் சந்தேகமறப் புரிந்தது. யார் தம்மை இந்த ஸ்திதிக்குக் கொண்டு வந்திருந்தாலும் அவன் அன்றிரவு தமது நடவடிக்கைகளை ஊன்றிக் கவனித்திருப்பதோடு தம்மை நிழல்போலவும் தொடர்ந்திருக்கிறான் என்பதைத் தீர்மானித்துக் கொண்டார் அடிகளார். அப்படித் தொடர்ந்தவன் விக்ரமனையும் பார்த்திருப்பானா? விக்ரமன் யார் என்பதை அறிந்திருப்பானா? என்று யோசித்துப் பார்த்தார் யார் என்று அறிந்திருந்தால் அவனும் தம்மோடு இன்னொரு மூட்டையாக வண்டியில் இருப்பானென்றும், அப்படி அவன் சவகாசம் இல்லாதிருக்கவே அவனை யாரும் பிடித்திருக்க மாட்டார்கள் என்று முடிவுசெய்து கொண்டார். தவிர, தாம் பிடிபட்டது விக்ரமனைத் திட்டி வாசலை விட்டு அனுப்பிய ஒரு நேரத்துக்கு பின்பே என்பதையும் சிந்தித்துப் பார்த்ததும் அவர் மனம் அந்த விஷயத்தில் ஆறுதல் அடைந்தது. தாம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கார்குழலி வீரபாண்டியனிடமிருந்து தப்பி விடுவாள் என்ற நிம்மதியில் மூட்டைகளோடு மூட்டையாக ஆடிய படியே பிரயாணம் செய்தார் சிவானந்த அடிகளார்.

ஆனால் அவர் நிம்மதி அதிக நேரம் நீடிக்கவில்லை. விடிய ஒரு ஜாமம் இருக்கையிலேயே வண்டி ஏதோ ஓரிடத்தில் நின்றது. அதற்கு முன்னேயிருந்த பல வண்டிகள் பூட்டவிழ்க்கப்பட்டதால் திமிறி விலகிய காளைகளின் கழுத்து மணிச் சத்தம் காதில் மிக இன்பமாக விழுந்தது. வேகமாக வைக்கப்பட்ட நுகத்தடிகள் தரையில் உராய்ந்ததால் ஏற்பட்ட சர்ரென்று சப்தத்தாலும், 'காளைகளைப் பிடித்துக் கட்டு, சாமான்களை மாளிகைக்குக் கொண்டு போ' என்ற கூச்சலாலும் சேரவேண்டிய இடத்தை அடைந்து விட்டதாக அடிகளார் எண்ணினார். அவர் எண்ணியதும் சரிதான். அடுத்த வினாடி மூன்று நான்கு முரட்டு ஆட்கள் அடிகளாரை அப்படியே அலாக்காகத் தூக்கிக் கொண்டு போனார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் தாம் ஒரு பெரிய மஞ்சத்தின் மீது பலமாக எறியப்பட்டதை அறிந்த அடிகளார், தமது கண்களைத் திறந்து உலகத்தைப் பார்க்கும் விநாடியை எதிர்பார்த்து ஏங்கினார். அந்த விநாடியும் சீக்கிரமே வந்தது.

நன்றாக அவிழ்த்துவிடப்பட்டதும் அதுவரை முடக்கப்பட்டுக் கிடந்த அவயங்களைச் சுவாதீனப்படுத்திக் கொள்ள அப்படியும் இப்படியும் கைகால்களை நீட்டி மடக்கியும், முதுகை ஒருபுறமாகத் திருப்பி முறுக்கிச் சதைத் திமிரை முறித்தும், விரல்களையும் மணிக்கட்டுகளையும் சொடுக்கி விட்டுக் கொண்டும் ஒருவாறு நிதானத்துக்கு வந்த அடிகளார் தாமிருந்த அறையைச் சுற்றும் முற்றும் நோக்கினார். அறையின் தன்மையையும் மஞ்சத்திலிருந்த பஞ்சணையையும் பார்த்த அடிகளார், அது பெரிய மாளிகையின் அறையென்பதையும், தம்மைக் கொண்டு வந்தவர்கள் தமது அந்தஸ்துக்கு சரியாகவே தம்மை நடத்துவார்களென்பதையும் உணர்ந்து கொண்டார். தம்மை அவிழ்த்துவிட்ட பிறகு தம் எதிரே நின்றிருந்த முரட்டு வீரர்களைப் பார்த்ததும், தாம் சிறை வைக்கப்பட்டிருந்த இடம் அந்தஸ்தாயிருந்தாலும்

கொண்டு வந்த மனிதர்கள் அவ்வளவு சாத்வீகப் பிராணிகளல்ல என்பதையும் புரிந்து கொண்டார். நின்றிருந்த வீரர்கள் அணிந்து கொண்டிருந்த உடைகளிலிருந்தும் அவர்கள் எந்த ஊர்க்காரர்கள் என்பதை அறிவது சாத்தியமில்லாது போயிற்று. இடையிலிருந்த வாளைத் தவிர வேறு ராணுவ உடை எதையும் அவர்கள் அணியாததால் அவர்கள் யாரென்பதை ஊகிக்கசக்தியற்றவரானார் அடிகளார். இருந்தாலும் அவர்களுடன் பேச்சுக் கொடுத்துப் பார்ப்போமென்று மெள்ள ஆரம்பித்து, "நீங்கள் இந்த ஊர்தானா?" என்று விசாரித்தார்.

வீரர்கள் உடனே பதில் சொல்லாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். கடைசியில் ஒருவன் மட்டும் அடிகளாரை நோக்கி, "இல்லை" என்றான்.

"எந்த ஊரோ?" என்றார் அடிகளார். குழைந்த குரலில்.

'தங்களிடம் சொல்ல உத்தரவிலலை. உஷ்ணமாகக் கிடைத்தது பதில்.

"யாரிடமிருந்து உத்தரவில்லை?" என்றார் அடிகளார் அத்தனை இக்கட்டிலும் தமது ஹாஸ்யத்தை விடாமல்.

ஆனால் வீரர்கள மசிபவர்களாகக் காணோம். "அதை இன்றிரவு புரிந்து கொள்வீர்கள்!" என்றான் முதலில் பேசிய வீரன்.

"இரவு வரை...." என்று இழுத்தார் அடிகளார்,

"தாங்கள் இந்த அறையிலேயே இருக்க வேண்டியது தான்!" என்று அடிகளாரின் பேச்சைப் பாதியில்வெட்டிப் பதில் சொன்னான் வீரன். மேலும் நிலைமையைப் படபடவென்று சில வார்த்தைகளில் விளக்கத் தொடங்கி "பொழுது புலர்ந்ததும் உங்களைக் கவனிக்க வைத்தியர் வருவார்...." என்று ஏதோ சொல்லப் போனான்.

"வைத்தியரா! எதற்காக?" என்று அடிகளார் இடைமறித்துக் கேட்டார்.

"உங்கள் தலையிலுள்ள காயத்துக்குப் பச்சிலை வைத்துக்கட்ட" என்று விளக்கினான் வீரன்.

"முதலில், அடிப்பானேன்? பிறகு பச்சிலை வைத்துக் கட்டுவானேன்? ஏன் இந்த சிரமமெல்லாம் உங்களுக்கு?" என்று சற்று விஷமமாக வினவினார் அடிகளார்.

"இன்றிரவு புரிந்துகொள்வீர்கள்."

"எல்லாம் இரவில் தான் புரியுமா?"

"ஆமாம்."

"ஏன் அப்படி? பகலில் புரியவைத்தால் என்ன?"

"அதைப்பற்றியும் இரவில் புரிந்து கொள்ளலாம்"

அந்த வீரனிடம் தனது ஜம்பம் ஏதும் பலிக்காதென்பதைச் சந்தேகமறத் தெரிந்துகொண்ட அடிகளார், மேற்கொண்டு ஏதும் பேசாமல் மௌனம் சாதித்து மெத்தென்று பஞ்சணையிலிருந்த திண்டில் சாய்ந்து கொண்டார். வீரனே மேலே பேசினான்: "வைத்தியர் வந்து உம்மைக் கவனிப்பார். போஜன வசதிகள் எல்லாம் இந்த அறையிலேயே கிடைக்கும். தங்களுக்கு எது வேண்டுமானாலும் இங்குள்ள வீரர்களிடம் கூறினால் உடனே கொண்டுவந்து கொடுப்பார்கள். தங்களுக்கு எந்தவிதச் சௌகரிய குறைச்சலும் இருக்காதபடி பார்த்துக்கொள்ள எங்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆனால் வீரர்களிடம் அனாவசியமாகப் பேச்சுக் கொடுக்க வேண்டாம். தப்பிவிடவும் முயலவேண்டாம். அதுவும் எந்தவிதப் பலனையும் அளிக்காது!"

அடிகளார் அவனுக்குப் பதில் ஏதும் சொல்லவில்லை அவனும் அவரிடமிருந்து பதில் எதையும் எதிர்பார்க்காமலேயே தன் பேச்சை முடித்ததும், மற்ற வீரர்களுக்காகத் திரும்பி, "இவர் தப்பினால் உங்கள் உயிரும் உடலிலிருந்து தப்பிவிடும். ஜாக்கிரதை!" என்று உத்தரவிட்டு வெளியே சென்றான். மற்ற வீரர்களும் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே சென்றுவிட்டார்கள். அவர்கள் சென்றதும்

வெகுநேரம் ஏதேதோ யோசித்தவண்ணம் திண்டில் சாய்ந்து கிடந்தார் அடிகளார்.

மனத்தில் கவலை அதிகமாயிருந்ததால் மிக அவஸ்தையுடன் அந்தப் பிரயாணத்திற்குப் பின்கூடக் கண்கள் மூட மறுத்தன. தனிமையான நிலையிலிருந்தும், மெத்தென்ற பஞ்சணையும் திண்டுமிருந்தும், தூக்கம் அடிகளாரை அணுகவும் மறுத்தது. பொழுது விடிந்த பின்பு பலகணிகள் வழியாக வெளியே பார்த்தால் தாமிருக்கும் ஊர் எது என்பதை அறிந்து கொள்ளலாம் என மனப்பால் குடித்த அடிகளார், அந்த எண்ணமும் பலிக்காது என்பதை விடிந்ததும் தெரிந்து கொண்டார். சூரியோதயமான வெகு நேரத்துக்குப் பின்பும் பலகணிகள் திறக்கப்படவில்லை. சாதாரண அறைகளைப் போலல்லாமல் அந்த அறையின் பலகணிகள் மிக உயரத்தில் காற்று வாரிகளைப்போல் அமைக்கப்பட்டிருந்ததைக் கவனித்த அடிகளார், அந்த அறை ராஜாங்கக் கைதிகளுக்காக ஏற்பட்ட அறை என்பதையும், சாளரத்தின் மூலம் யாரும் தப்பி ஓடாமலிருப்பதற்காக உயரத்தில் சிறு பலகணிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் புரிந்து கொண்டார். வெளியிலிருந்து கேட்ட குதிரைகளின் கனைப்பிலிருந்தும், வயலுக்குச் செல்லும் மாடுகளின் கழுத்து மணியோசையிலிருந்தும், தாம் காவல் வைக்கப்பட்டிருப்பது கிராம எல்லையிலுள்ள பழைய மாளிகையொன்றில் என்பதை அடிகளார் உணர்ந்தார். அதற்கு மேல் எதையும் அறிந்துகொள்ள அவரால் இயலாமல் போயிற்று. ஆகவே பகல் செல்லட்டும் என்று காத்திருந்தார்.

கவலை காலத்தை நீட்டுகிறது. ஆகவே கவலை நிறைந்த உள்ளத்துடன் இரவை எதிர்நோக்கியிருந்த அடிகளாரைத் துன்புறுத்தவேண்டும் என்ற எண்ணத்தால்தானோ என்னவோ பகல் மிக மெதுவாக நகர்ந்தது. பகலில் அரசர்கள் அருந்தும் அறுசுவை உண்டி அளிக்கப்பட்டதையோ, இதர உபசாரங்களையோ சிறிதும் ரசிக்காமலே அந்தி நேரத்தை

நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார் அடிகளார். அடிகளாரிடம் பரிதாபத்தினால் அடுத்துவர இருந்த நிகழ்ச்சிகளைக் காண விரும்பாததாலும் ஆதவனும் மெல்ல மெல்ல மலைவாயிலில் மறைந்தான்.

தன்னைச் சிறைப் பிடித்தவனைக் காணும் நேரத்தை எண்ணி ஏங்கிக் கொண்டிருந்த அடிகளாருக்கும் கடைசியாக விமோசனம் வந்தது. காலையில் அவருக்குப் பதில் சொன்ன வீரன் இரவின் முதல் ஜாம இறுதியில் அடிகளாரின் அறைக்கு வந்து தன்னுடன் வரும்படி சைகை செய்யவே அவரும் அவனைத் தொடர்ந்து சென்றார். முன்னே அவ்வீரன் விளக்குக் காட்டிச் செல்ல, பின்னே அடிகளார் வர அவரை இருவீரர்கள் பின்தொடர பவனி போல் இந்தக் கோஷ்டி மாளிகையின் மாடிப்படிகளில் ஏறிச் சென்றது. மாடியிலிருந்த பிரும்மாண்டமான ஓர் அறைக்குள் அடிகளாரை நுழையச் சொல்லிவிட்டு வீரர்கள் வாயிற் படியிலேயே நின்று விட்டனர்.

நெஞ்சு திக்குத் திக்கென்று அடிக்க அடிகளார் அந்த அறைக்குள் நுழைந்தார். அறையில் விளக்குகள் அவ்வளவாக இல்லை இருந்த ஓரிரண்டு விளக்குகள் ஒவ்வொரு மூலையில் வைக்கப்பட்டிருந்தமையால் அறையின் பாதி பாகம் இருட்டடித்துக் கிடந்தது. அடிமேல் அடி வைத்து உள்ளே நுழைந்த அடிகளார், சுற்றும் முற்றும் கண்களை ஓட்டி அங்குகூட யாரும் இல்லாததைக் கண்டு திகைத்துக் கொண்டிருந்த சமயத்தில், "அறையின் இந்தக் கோடிக்கு வாரும்!" என்று ஒரு குரல் கிளம்பியது, மாளிகை பழைய மாளிகையாதலாலும், சுவர்களும் பிரும்மாண்டமாயிருந்த படியாலும், "அறையின் இந்தக் கோடிக்கு வாரும்! இந்தக் கோடிக்கு வாரும்!" என்று நாலாபக்கத்திலிருந்தும் எதிரொலிகள் கிளம்பி அடிகளாரின் திகிலை ஆயிரம் மடங்கு அதிகமாக்கின. தன்னை அழைத்த குரலை நிமிஷ நேரத்தில் அடையாளம் கண்டுகொண்ட அடிகளார், "சிவ சிவ! இவனிடமா அகப்பட்டுக் கொண்டோம்!" என்று திக்பிரமை பிடித்து நின்றார்.

அடுத்த விநாடி வெளியே இருந்த வீரர்கள் கொண்டு வந்த பெரிய விளக்குகளின் ஒளி அறையின் நடுவே உட்கார்ந்திருந்தவன் மீது பட்டதும், தமது ஊகம் சரியானதென்பதை அடிகளார் சந்தேகமறப் புரிந்து கொண்டதோடு, தம் கதி எப்படி இருக்கப் போகிறதென்பதைப் பற்றியும் ஒரு முடிவுக்கு வந்தார் சிவனைத் தவிர தம்மைத் தப்பவைக்கக் கூடியவர் உலகத்தில் யாருமில்லை என்பதை நினைத்த அடிகளார் அவனை நினைத்துக் கண்களை மூடிக் கொண்டார்: அறை நடுவிலிருந்த மஞ்சத்தில் சாய்ந்து கொண்டிருந்த வீரப்பாண்டியன் அவர் முகத்தில் பிரதிபலித்த திகிலையும் அவர் கண்களை மூடியதையும் கண்டு கட்டிடமே அதிரும்படியாகப் பயங்கரமாகச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பினால் பய நிஷ்டை கலைந்த அடிகளார் மெள்ளச் சமாளித்துக்கொண்டு, ''யார் பாண்டிய மன்னனா?'' என்று வியப்பும் திகிலும் கலந்து தொனித்த குரலில் பேசினார்.

''ஆம் அடிகளாரே! பிரயாணம் உமக்குச் சற்று சிரமமாய் இருந்திருக்கும்!'' என்றான் வீரபாண்டியன் நகைத்துக் கொண்டே.

''தாங்கள் என்னை அழைத்திருந்தாலே வந்திருப்பேனே தாங்களும் இத்தனை சிரமப்பட்டு என்னையும் இத்தனை சிரமத்துக்கு உள்ளாக்கவேண்டாமே!'' என்றார் அடிகளார் ஓரளவு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு.

''அடிகளாரே! போன தடவை சந்தித்திருந்ததைவிட இப்போது உமக்குப் பேச்சிலும் தோரணையிலும் அதிகப் பணிவு இருப்பதைப் பார்க்க மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று எதிரே ஒடுங்கி குனிந்து நின்ற அடிகளாரைப் பார்த்து சொன்னான் வீரபாண்டியன்.

இந்தக் கேள்வி அடிகளாரின் இயற்கையாக விஷம புத்தியைத் தூண்டிவிடவே, அவர் தமது சொரூபத்தைக் காட்டத் தொடங்கி, ''மன்னவா! எதுவும் சூழ்நிலையையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்தது. சென்ற தடவை நாம்

சந்தித்தபோது இருந்த சந்தர்ப்பமும் சூழ்நிலையும் வேறு'' என்றார்.

வீரபாண்டியன் இதழ்களில் புன்முறுவல் மறைந்து கண்களில் கோபம் துளிர்க்கத் தொடங்கியது. தாம் அவர் கைகளில் அகப்பட்டுத் தத்தளித்ததையே துறவி மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறார் என்பதை அறிந்து கொண்ட வீரப்பாண்டியன், உள்ளே குரூரமும் உதட்டில் இனிப்பும் கொண்டு சம்பாஷணையைத் தொடர்ந்தான்: ''அடிகளாரே! நீர் சொல்லுவது முற்றிலும் உண்மை. அன்றையச் சூழ்நிலை வேறு; இன்றையச் சூழ்நிலை வேறு. அன்று என் உடலைக் கட்டிப்பிடித்தீர்கள். வேறொருவன் அந்தக் காரியத்தைச் செய்திருந்தால் அவன் கரங்களை வெட்டிக் கழுகுகளுக்குப் போட்டிருப்பேன்! ஆனால் உமது விஷயத்தில் அப்படி நடந்துகொள்ள இஷ்டப்படவில்லை'' என்றான்.

''என்னிடம் ஏன் இவ்வளவு கருணையோ?''

''முதலில் நீர் என் பிற்கால மனைவியின் குரு.

''ஓகோ!''

''இரண்டாவதாக, சிவனடியார்.''

''மன்னருடைய பத்தினி பக்தியாலும் சிவபக்தியாலும் அடியேன் உயிர் தப்பியது.''

''இன்னும் தப்பவில்லை.''

அடிகளார் பிரமித்துப் பார்த்தார் வீரபாண்டியனை. வீரபாண்டியன் மஞ்சத்திலிருந்து எழுந்து அவருக்கு வெகு அருகில் வந்து சற்று நேரம் அவரை உற்றுப் பார்த்தான். பிறகு கேட்டான்: ''அடிகளாரே, அன்று நந்தவனத்தில் சொன்ன சொற்கள் நினைவிருக்கிறதா உமக்கு?''

''எந்தச் சொற்கள் மன்னவா?''

''பெண்களின் குணத்தைப்பற்றிய சொற்கள்.''

''நீங்கள் சொல்வது புரியவில்லையே!''

''பெண்கள் ஒருவனைக் காதலித்துவிட்டால், அடுத்து வருபவன் அரசனாயிருந்தாலும் அசட்டை செய்கிறார்கள் என்று சொல்லவில்லையா நீர்?''

''சொன்னேன்.''

''பிறகு நான் என்ன கேட்டேன்?''

''கார்குழலி யாரைக் காதலிக்கிறாள் என்று கேட்டீர்கள்?

''என்ன பதில் சொன்னீர்.''

''எனக்குத் தெரியாது என்று சொன்னேன்.''

அடுத்த விநாடி இடிபோல் முழங்கினான் வீரபாண்டியன். ''அது சுத்தப் பொய்!'' என்று கர்ஜித்த அவன் குரலைத் தொடர்ந்து அவன் விழிகள் நெருப்பைக் கக்கின. ''உமக்கு நிச்சயமாகத் தெரியும்! அவன்பெயரைச் சொல்லிவிட்டுத் தப்பித்துச் செல்லும். இல்லையேல்...'' என்று பயமுறுத்தலை முடிக்காமல் சிறிது நிறுத்தினான் வீரபாண்டியன்.

அடிகளார் முகத்தில் பயத்தின் சாயை பலமாகப் படர்ந்தது. ''மன்னவா மன்னிக்க வேண்டும். வீணாக என்னைத் துன்புறுத்தாதே. அவன் பெயரை நான் சொல்ல முடியாது!'' என்று கெஞ்சினார் அடிகளார்.

''ஏன்?''

''சொல்வதில்லையென ஆணையிட்டிருக்கிறேன்.''

''எங்கு ஆணையிட்டீர்?''

''கன்னிமாடத்துக்கு அருகில்.''

''எந்தக் கன்னிமாடம்?''

''நீலமலைக்கருகில் இருக்கும் கார்குழலியின் கன்னிமாடம்.''

நீலமலையின் பெயரைக் கேட்டதும் ஸ்தம்பித்து நின்ற, வீரபாண்டியன் மனத்தில் சந்தேகம் பலமாகப் படர்ந்தது உள்ளேயிருந்த சந்தேகம் கண்களில் வீச ''கார்குழலிக்கு அவனை எப்படித் தெரியும்?'' என்று வினவினான்.

''அவன் காயப்பட்டிருந்தான்'' என்றார் அடிகளார்.

''போர்க் காயமா?''

''ஆம்''

வீரபாண்டியன் சற்று நேரம் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டே அறையில் உலாவினான். 'அந்தப் பிராந்தியத்தில் நடந்த ஒரே போர் சதிகாரர்களுக்கும் சிங்கள வீரர்களுக்கும் நடந்திருக்கிறது. அந்தச் சதியில் இருவர் தப்பியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்ட வீரபாண்டியன் ''அடிகளாரே! யார் அவன்'' என்றான் மீண்டும்.

அடிகளார் மௌனம் சாதித்தார். ''பேசமாட்டீரா? இதோ உம்மைப் பேச வைக்கிறேன்'' என்று கூறிவிட்டு, ''யாரங்கே?'' என்று கூவினான். மறு நிமிடம் மணிக்கயிறுகளுடனும், பந்தங்களுடனும் யமகிங்கரர்கள் போல் உள்ளே நுழைந்த நான்கு வீரர்களை நோக்கி, ''அதோ அந்தத் தூணில் இந்தச் சாமியாரைப் பிடித்துக் கட்டுங்கள்!'' என்று வீரபாண்டியன் பயங்கரமாக இரைந்தான். இனித் தமது உயிர் அரைக்காசு பெறாதென்பதை உணர்ந்த அடிகளார், மிதமிஞ்சிய திகிலால் கண்களை இறுக மூடிக் கொண்டு சிவத்தியானத்தில் ஆழ்ந்தார்.

23. மதுரையின் எல்லையில்

பாண்டிய மன்னன் இட்ட பணியை முன்னிட்டுப் பந்தங்களுடனும் மணிக்கயிறுகளுடனும் உள்ளே நுழைந்த வீரர்கள் தங்கள் வேலையைக் கனகச்சிதமாக நிறைவேற்றத் தொடங்கி, கடவுளை நினைத்துக் கண்களை மூடி நின்ற சிவனடியாரின் இரு கரங்களையும் முரட்டுத்தனமாகப் பிடித்துத் தரதரவென்று இழுத்துச் சென்று அறை நடுவே இருந்த தூணோடு தூணாகச் சாத்தி; அவர் வயிற்றுக்குக் குறுக்கே ஒரு வலுவான கயிற்றைப் பாய்ச்சி அவரையும் தூணையும் இரண்டு மூன்று பிரதட்சிணங்கள் வந்து மார்பிலிருந்து வயிறு வரை வரிவரியாகத் தெரியும்படி நன்றாக இறுகப் பிணைத்தார்கள் பிறகு சிலர் பந்தங்களால் வெளிச்சம் காட்ட மற்றும் சிலர் அறையின் ,சாள

ரங்களையெல்லாம் இழுத்து மூடிக் கொண்டு வந்தார்கள். கம்பத்தில் சரேலென மோதப்பட்டதாலும் கயிற்றை இறுகக்கட்டியிருந்ததால் வயிறு பல இடங்களில் அழுந்தியும், பிதுங்கியும் மூச்சுவிட முடியாமல் திணறியதாலும் கடவுளின் நினைப்பைப் பறக்கவிட்டுக் கண்களைத் திறந்த அடிகளார், அறையில் நடக்கும் ஏற்பாடுகளைப் பார்த்ததும் தம்மைச் சட்டென்று சிவபதம் அனுப்பும் யோசனை வீர பாண்டியனுக்கு இல்லையென்பதையும் சித்திரவதை செய்வதே உத்தேசமென்பதையும் தெரிந்து கொண்டார். தாம் சப்தம் போட்டால் வெளியே கேட்காதிருக்கவேண்டுமென்பதற்காகவே சாளரங்கள் சாத்தப்படுகின்றன வென்பதையும் சந்தேகமறத் தெரிந்து கொண்ட அடிகளாருக்குத் தம்மைச் சித்திரவதைச் செய்வதில் வீரபாண்டியன் இத்தனை ரகசியத்தை எதற்காகக் கையாள வேண்டும் என்பது மட்டும் புரியாத புதிராயிருந்தது. ஆனால் அந்தப் புதிருக்கு விடை கண்டுபிடிக்கவோ அவருடைய சிந்தனைகளை வேறு பிராந்தியங்களில் சஞ்சரிக்க விடவோ அவகாசம் கொடுக்காமலே வீரபாண்டியன், "உம், சீக்கிரம் ஆகட்டும்" என்று வீரர்களைத் துரிதப்படுத்தவே, அவர்களும் சாளரங்களை சீக்கிரமாக மூடிவிட்டுக் கதவையும் அழுத்தித் தாளிட்டார்கள். அடிகளாரைக் கட்டியிருந்த தூணுக்கு எதிரேயிருந்த தூணிலும் பக்கவாட்டிலிருந்த தூணிலும் பொருத்தப்பட்டிருந்த இரும்புப்பூண்களில் இரண்டு பந்தங்கள் செருகப்பட்டன. அறைக் கோடிக்கு ஒரு வீரன் பந்தம் காட்டிச் செல்ல இரு வீரர்கள் பின்னே சென்று அங்கிருந்த கிட்டிகளைக் கொண்டு வந்தார்கள். காலில் தனக்குக் கிட்டி கட்டி அடிக்கப் போகிறார்கள் என்பதை அறிந்து கொண்ட அடிகளாரின் உடல் பூராவிலும் பயம் மின்னல் வேகத்தில் ஊடுருவிச் சென்று அவரை ஓர் ஆட்டு ஆட்டியது. ஆனால் வீரபாண்டியனிடம் இந்த அலுவலைப் பன்முறை செய்திருக்கும் வீரர்கள் மட்டும் தங்கள் பணியில் எந்தவித அருவருப்பையும் காட்டாமல் திட்டமாகக் காரியத்தில் இறங்கி

னார்கள். இரண்டு வீரர்கள் அடிகளின் பாதங்களில் உட்கார்ந்து இரு கால்களையும் ஒன்று சேர்த்து கணுக்கால்களுக்கு முன்பும் பின்பும் வளைவான இரு மரக்கட்டைகளைக் கொடுத்து விலங்குபோல் மாட்டினார்கள். வளைந்திருந்த மரக்கட்டைகளைப் பொருத்தி இடையே கால் இறுக அகப்பட்டுக்கொண்டதும் மரப்பகுதிகளின் நுனிப் பாகங்களிலிருந்த துவாரங்களுக்குள் மர ஆப்புகள் லேசாக அடிக்கப்பட்டன. சுத்திகளைக் கொண்டு அந்த ஆப்புகள் இறுக்கப்பட்டால், கால்கள் இறுகி, நரம்புகள் புடைத்து வெடிக்கும் ஸ்திதிக்கு வந்துவிடுமென்பதை அறிந்து அடிகளாரின் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது. வீரர்கள் அத்துடன் விடவில்லை. ஒவ்வொரு கையின் மணிக்கட்டிலும் ஒவ்வொரு வீரன் ஒவ்வொரு கயிற்றைச் சுற்றி, கயிற்றின் முனைகளில் கிட்டிப்புள்களைப் பிணைத்து முறுக்கிக்கொண்டான். கிட்டிகள் சுழற்றப்பட்டால் கயிறு முறுக்கேறி மணிக்கட்டுகளை முறிக்கும். இத்தனை ஏற்பாடுகளுக்குப் பிறகும் திருப்தியடையாத வீரபாண்டியன், "அடிகளார் மண்டையிலும் ஒரு கயிற்றைப்போடு" என்றான். அடுத்த வினாடி அவர் தலையை சுற்றியிருந்த ருத்திராட்ச மாலை அப்புறப்படுத்தப்பட்டு, நெற்றியின் நடுமத்தியில் மணிக்கயிறு குறுக்கே போடப்பட்டது. அந்தக் கயிற்றின் இரு முனைகளையும் தூணுக்கு பின்னால் பிடித்து நின்ற வீரன் அதிலும் முனையை மாட்டிக் கயிற்றை நன்றாக முறுக்கிக் கொண்டான்.

தம்முடைய உயிர்நிலைகள் அனைத்தையும் பிணைத்துவிட்டுக் குரூரமான புன்முறுவலுடன் எதிரே நின்ற வீரபாண்டியனை ஒருமுறை நோக்கினார் அடிகளார். அவருடைய பார்வை தரையிலிருந்து தன்னை நோக்கி எழுந்ததைக் கவனித்த வீரபாண்டியனும், "என்ன அடிகளாரே, என்ன பார்க்கிறீர்?" என்று வினவினான்.

கிட்டி கட்டி நிறுத்தப்பட்டு, சித்ரவதைக்கு ஆளாக இருந்த அந்த நேரத்திலும் இடக்குப் புத்திமட்டும் போகா

ததால் ''தங்களுடைய ஏற்பாடுகளைத்தான் பார்க்கிறேன்'' என்றார் அடிகளார்.

''எப்படி இருக்கின்றன ஏற்பாடுகள்?'' என்று புன்முறுவலுடன் கேட்டான் வீரபாண்டியன்.

''இந்த வேலையை இதைவிடச் சிறப்பாகச் செய்யத் தங்களைத்தவிர வேறு யாராலும் முடியாது'' என்று அடிகளார் பதில் சொன்னார்.

பதிலிருந்த விஷமத்தைப் புரிந்துகொண்ட வீரபாண்டியனும் நிதானத்தைச் சற்றும் இழக்காமல், ''அந்த உண்மையை நீர் புரிந்துகொண்டது பற்றி மகிழ்ச்சி, ஆனால அடுத்து வர இருக்கும் நிகழ்ச்சி என்ன என்பதை அறிந்து கொண்டீரா?'' என்று வினவினான்.

''அறிந்துகொண்டேன் மன்னவா! ஆனால் இது உனக்குத் தருமா என்று யோசித்துப்பார்.''

''எது தருமா?''

''நிரபராதியான ஒருவனை, இட்ட ஆணையின் பயலாக ஒரு ஆள் பெயரை சொல்ல முடியாத ஒரு பரதேசியைச் சித்ரவதைச் செய்வது பாண்டிய மன்னனான உனக்குத் தருமா என்று யோசித்துப் பார். மன்னர்கள் செய்யும் காரியங்கள் அன்றன்றோடு மடிவதில்லை மன்னவா! சரித்திரத்தின் ஏடுகளில் அவை பதியப்படும். சைவத்திலே பிறந்து சைவத்திலே தழைத்த பாண்டிய வம்ச பரம்பரையில் வந்த வீரபாண்டியன் ஒரு சிவனடியாரைச் சித்ரவதை செய்தான் என்ற அபக்கியாதி உன் சரித்திரத்தில் எழுதப்படவேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார். வேண்டாம். பாவத்தையும் அழியாப் பழிச் சொல்லையும் அள்ளித்தரும் இந்த பணியில் இறங்காதே! என் வார்த்தையைக் கேள்'' என்ற அடிகளார் உணர்ச்சித் ததும்பும் குரலில் கெஞ்சினார்.

பதிலுக்கு வீரபாண்டியன் அறையே அதிரும்படி நகைத்தான். ''அடிகளாரே! கிட்டி கட்டியதும் உமக்குச் சரித்திரம் கற்பனையில் தோன்றுகிறது. நீதி நினைவுக்கு வருகிறது என்னுடைய பிற்காலத்தைப் பற்றி அக்கறையும் ஏற்படுகிறது. இந்த மாதிரி சமயத்தில் உம்மைப் போல என்னிடம் பலபேர் உளறியிருக்கிறார்கள் ஆனால் பலன் மட்டும் எல்லோருக்கும் ஒன்றுதான். வீரபாண்டியனுக்கு வேண்டிய தகவலை இந்தக் கிட்டிகளும் மணிக் கயிறுகளும் தரத் தவறியதே கிடையாது. சிவனடியார் என்று கூறுகின்றீர் சிவ பரம்பரையிலும் சித்ரவதை அனுமதிக்கப்பட்டிருப்பது தங்களுக்கு நினைவில்லை போலிருக்கிறது. கடந்த காலத்தைச் சற்றுக் கருத்தில் செலுத்திப் பாரும்'' என்றான்.

அடிகளாருக்கு அத்தனை வேதனையிலும் கடந்த காலத்தைப் பற்றி வீரபாண்டியன் நினைவூட்டியது ஆச்சரியத்தையே அளித்ததால், ''கடந்த காலமா, மன்னவா?'' என்று வினவினார்.

'ஆம்! கடந்த காலந்தான். அன்பே சிவம் என்று போதித்த சிவனடியார்கள் சமணர்களைக் கழுவில் ஏற்றி வேடிக்கை பார்க்கவில்லையா? அதிலிருந்தே சித்ரவதை சிவனடியார்க்குக் கைக்கண்ட மருந்து என்பது புலனாகவில்லையா?'' என்றான் வீரபாண்டியன்.

''மன்னவா! கடந்த காலத்தைப்பற்றிச் சர்ச்சை செய்ய நமக்கு யோக்கியதையில்லை. எத்தனையோ தலைமுறைகளுக்கு முன்பாக நடந்த சம்பவங்கள், அவற்றில் எத்தனை உண்மையோ எத்தனை பொய்யோ? அரனை நாடிய அடிகளார் அத்தனை தீச்செயலில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். காலத்தின் ஏடுகளில் களங்கம் நிரம்ப உண்டு. இலக்கியத்திலும் இடைச் செருகல் உண்டே மன்னவா! சரித்திரத்தில் கேட்கவா வேண்டும்? ஆகையால் கழுவேற்றிய கதையை வைத்துக்கொண்டு சிவனடியாரை தூற்றாதே அடியார்களுக்குச் செய்யப்படும் அபவாதம் அவனுக்கே செய்யப்படுவதாகும்.''

இந்தப் பதிலைக் கேட்ட வீரபாண்டியன் மீண்டும் ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்து, ''அடிகளாரே, சரித்திரம்கூட சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி மாறும் போலிருக்கிறது. சிவனடியார்களைப்பற்றி சமய புராணங்களில் கூறப்படும் மற்றத் தகவல்கள் சரி. கழுவேற்றிய படலம் மட்டும்கட்டுக் கதை போலிருக்கிறது. நம்பினால் முழுவதையும் நம்ப வேண்டும். இல்லையேல் நம்பவே கூடாது. அரைகுறை நம்பிக்கை எப்போதும் ஆபத்தில்தான் கொண்டுவிடும்'' என்று கூறிவிட்டு, ''கடைசி முறையாகக் கேட்கிறேன்'' கார்குழலியின் மனத்தைக் கவர்ந்து நிற்கும் கயவனின் பெயரைச் சொல்லும். இல்லையேல் நான் என் கடமையைச் செய்ய நேரிடும்'' என்றான்

''கடமையா? என்ன கடமை மன்னவா? என்னைச் சித்ரவதை செய்வது ஒரு கடமையா?''

''ஆம்.''

''எனக்குப் புரியவில்லையே!''

''தமிழகத்தில் போரைத் தவிர்க்கப் பாண்டிய நாட்டுடன் மழவநாடு இணைய வேண்டியிருக்கிறது. அதற்காக எனக்கும் கார்குழலிக்கும் திருமணம் அவசியம். நாட்டைக் காக்கும் கடமையைச் செலுத்தவே இந்தத்திருமணத்திற்கு ஒப்புக் கொண்டேன். ஆனால் அதற்குக் குறுக்கே நிற்கிறான் ஒருவன். அவனை அகற்ற வேண்டியது என் கடமையாகிறது. அவன் பெயர் உமக்குத்தான் தெரியும். நீர் சொல்ல மறுக்கிறீர். ஆகையால் அதை உம்மிடமிருந்து வரவழைப்பதும் என் கடமையாகிறது'' என்று விளக்கிய வீரபாண்டியனின் கடமை உணர்ச்சியைக் கண்டு வியந்த அடிகளார், 'அடடா! இந்தப் பிசாசும், கடமையைப் பேசுகிறதே' என்று நினைத்தாரேயொழிய அதற்குப் பதிலேதும் சொல்ல மாட்டாமல் திணறினார்.

மேற்கொண்டு அனாவசியமாகச் சம்பாஷணையை வளர்த்த இஷ்டப்படாத வீரபாண்டியன், ''உம், நேரமாகிறது. யார் அவன்? சொல்லப் போகிறீரா இல்லையா?'' என்று உக்கிரமாகக் கேட்டான்.

''முடியாது மன்னவா, என்னைக் கொன்றுபோட்டாலும் சொல்லமாட்டேன். என் ஆணையை மீறமாட்டேன்'' என்று அடிகளார் மறுத்ததும் வீரபாண்டியன் அவரை நோக்கி மிக்க குரூரமாக புன்முறுவல் செய்து, ''உமது திமிர் எவ்வளவு தூரம்தான் போகிறதோ பார்ப்போம்'' என்று கூறிவிட்டு அவன் கட்டளையை எதிர்நோக்கி நின்ற வீரர்களுக்காக கண்களைச் செலுத்தி, ''மயிலே மயிலே என்றால் இறகு போடாது. உம்... ஆகட்டும்'' என்றான்.

வீரர்கள் பணியைத் தொடங்கினார்கள். அடிகளாரின் பாதங்களில் உட்கார்ந்த இருவரும் இரு சுத்திகளால் கிட்டியின் முனைகளை ஓங்கி ஒரு முறை அடிக்கவே கால்கள் விரிந்து போகும்படியாக இறுகி நரம்புகள் புடைத்து உடல் முழுதும் மரணவலி எடுத்தது. அதே சமயத்தில் பக்கவாட்டுகளில் மணிகட்டுக் கயிறுகளை முறுக்கி நின்றவர்கள் புள்களைச் சுற்றவே கயிறு இறுகி மணிகட்டுகள் உடைந்து போலவது போன்ற வேதனையை அளித்தது. அந்த வினாடியிலேயே தூணுக்குப் பின்னால் அடிகளார் நெற்றிக் கட்டு கயிற்றின் நுனிகளை முறுக்கி நின்றவனும் கையிலிருந்த கிட்டியைச் சுழற்றினான். அடிகளாரின் நெற்றியின் நரம்புகள் புடைத்தன. மேலும் மேலும் சுழற்றப்பட்ட கிட்டியால் நரம்புகள் கண்ணுக்குத் தெரியும்படி நன்றாக எழுந்து நின்ற அடிகளாரின் வெள்ளை நிறத்தைக் குங்குமச் சிவப்பாக அடித்ததோடு ஓரிரு இடங்களில் கருரத்தமும் தோய ஆரம்பித்தது. மூளை நரம்புகள் வெடித்துவிடும் நிலைக்கு வந்துவிட்ட ஏக காலத்தில் கால்களிலும், கைகளிலும், நெற்றியிலும் புடைத்துவிட்ட நரம்புகள் வரவர இறுக்கப்பட்டதால் மரணவலியை உடல்பூராவும் பாய்ச்சவே ''ஐயோ! சிவ சிவா!'' என்று அலறினார் அடிகளார்.

இந்த சந்தர்ப்பத்தில் சித்ரவதையை ஒரு நிமிடம் நிறுத்தும்படி உத்தரவிட்ட வீரபாண்டியன், ''அடிகளாரே!

சிவனை அழைத்துப் பயனில்லை. நீர் சரண் புகவேண்டியது தற்சமயம் வீரபாண்டியனை! வீணாக வேதனைப்பட்டுச் சாகவேண்டாம். உண்மையைச் சொல்லிவிடும்'' என்றான்.

சொல்லவொண்ணா வேதனையால் திணறிக்கொண்டிருந்த அடிகளார், ''அட பாதகனே! என்னைக் கொன்றாலும் என்வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வராது. இந்த யமகிங்கரர்களைக்கொண்டு உன்னாலானதைச் செய். சிவனடியார் பாவம் உன்னை விடாது. இதைவிட பத்துமடங்கு அதிக வேதனையை நீ நரகத்தில் அடையப்போகிறாய்'' என்று விக்கலுக்கும் திணறலுக்கும் இடையே கூவினார் அடிகளார்.

''டேய் சாமியாரே! நரகத்தைப்பற்றி நீ ஏடுகளில் படித்திருப்பாய்; ஆனால் அனுபவித்திருக்கமாட்டாய். உன்னைவிட நரகவேதனை எப்படியிருக்குமென்று எனக்குத் தெரியும். நரகவேதனையை சிருஷ்டித்திருப்பதே நான்தான். நரகத்தில் ஒரு பகுதியை இதோ காட்டுகிறேன் பார்'' என்று கோபத்துடன் இரைந்து வீரர்களுக்கு கண்ணைக் காட்டினான்.

இந்த இரண்டாம் முறை கிட்டி முனைகள் இன்னும் ஆழமாகவும் பலமாகவும் அடிக்கப்பட்டன கயிறுகள் நன்றாக முறுக்கேற்றப்பட்டன. வலி தாளாமல் கதறினார் அடிகளார். நெற்றிக்கட்டு மிக அதிகமாக இறுக்கப்பட்டதால் ரத்தக்குழாயொன்று உடைந்து மூக்கின் வழியாக ரத்தமும் பிரவகித்தது. மீண்டும் சித்ரவதையை நிறுத்திய வீரபாண்டியன், ''டேய்! வீணாகப் பிராணனை விடாதே! சொல்லிவிடு. யாரவன்?!'' என்றான். அடிகளார் பேசவில்லை. அவர் தலை மயக்கம் போட்டுத் தொங்கிக்கொண்டிருந்தது. ''கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்'' என்று ஆக்ஞாபித்தான் பாண்டிய மன்னன். வீரனொருவன் அறைக்கோடியிலிருந்து குவளையில் கொண்டு வந்து கொடுத்த நீரைப் பருகியதால் சிறிது சுரணை வந்து அடிகளார் கண்களைத் திறந்தார். அப்பொழுதும் அவருக்கு

அரை மயக்கமாகவே இருந்தது. பந்தங்களுக்கருகே நின்ற ஓரிரு வீரர்களின் நிழல்கள் தரையில் படுத்திருக்கும் பிசாசுகளைப்போல விழுந்தன. எதிரே குரூரச் சிரிப்புடன் நின்றுகொண்டிருந்த வீரபாண்டியன் யமன் போலவும் பக்கத்திலிருந்த வீரர்கள் யமகிங்கரர்கள் போலவும் தோன்றியது அடிகளாருக்கு. தாம் உண்மையாக நரகத்துக்கு வந்துவிட்டதாகவே அடிகளார் நினைத்தார் அந்தச் சமயத்தில் எங்கோ ஒரு காதத்துக்கு அப்பாலிருந்து எழுவதுபோல் அவர் காதில் வீரபாண்டியன் கேள்வி ஒலித்தது. ''சொல்லப் போகிறாயா இல்லையா?'' என்று அப்பொழுதுதான் இன்னும் இகலோகத்திலிருக்கிறோமென்ற உணர்வு வந்தது அடிகளாருக்கு. பதிலேதும் சொல்லச் சக்தியில்லாததால், 'முடியாது' என்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டினார் அடிகளார்.

மூன்றாம் முறை கிட்டிகள் அடிக்கப்பட்டு கயிறுகள் முறுக்கப்பட்டன. மணிகட்டுகளும், கால்களும் சுரணையற்றுவிட்டன. மூக்கில் ரத்தம் ஆறாக ஓடியது. மூளை வெடித்து விடும் ஸ்திதிக்கு வந்துவிட்டது. ஒரு வினாடியிருந்தால் அடிகளார் சிவபதம் எய்தியிருப்பார். அதற்குமேல் தாங்க முடியாத அடிகளார் ஏதோ முணுமுணுத்தார். வீரபாண்டியன் அவருக்கு வெகு அருகில் வந்ததும், ''உம்! சொல்லிவிடு'' என்றான்.

''அபராஜிதன்'' என்ற வார்த்தை மிக பலஹீனமாக உதிர்ந்தது அடிகளாரின் உதடுகளிலிருந்து.

''யார், என் சேனாதிபதியா!'' என்று காதுக்கருகே இரைந்தான் வீரபாண்டியன். ஆமென்பதற்கு அறிகுறியாக அசைந்த அடிகளாரின் தலை அடுத்த வினாடி தொங்கி விட்டது.

அதற்குமேல் அடிகளாரைத் திரும்பிப் பார்க்காத வீரபாண்டியன் ஏதோ யோசனைகள் சிந்தனையில் அலைமோத நின்ற இடத்திலேயே ஸ்தம்பித்து நின்றான். சில விஷயங்கள் அவனுக்குப் புரிந்தன. சில விஷயங்கள் புரிய

வில்லை. "அபராஜிதன் நீலமலைக்குப் போனதை ஒப்புக் கொண்டிருக்கிறான். ஆனால் சதிகாரரைப் பிடிக்கப் போனதாகச் சொன்னான். காயம் பட்டதையோ கார்குழலியைச் சந்தித்ததையோ சொல்லவில்லை. அவன் சொல்லாதது இயற்கை. ஆனால் அதை மாதவி ஏன் மறைத்தாள்? இலங்காபுரன் ஏன் மறைத்தான்?" என்று தன்னைத்தானே கேள்விகள் கேட்டுக் கொண்டான். மாதவிகூடத் தனக்கெதிராகச் 'சதி செய்கிறாளா என்று கூட எண்ணினான் ஆனால் அவளிடமிருந்த மையலால் அப்படியிருக்காது என்று அந்த யோசனையை ஒரு வினாடி உதறினான்.

'ஒருவேளை மாதவி அபராஜிதன் மேல் மையல் கொண்டு அவனைக் காப்பாற்ற எண்ணுகிறாளா?' என்று மீண்டும் யோசித்துப் பார்த்தான். சில நாட்களுக்கு முன்பு, தான் அரண்மனை அறையில் நுழைந்தபோது மாதவியும் அபராஜிதனும் இருந்த நிலையையும் அதற்கு அவள் சொன்ன போலிச்சமாதானத்தையும் எண்ணி எண்ணி இதயம் பொங்கி, தான் எவ்வளவு முட்டாளென்பதை நினைத்துப் பொருமினான். அபராஜிதன் தனக்குக் கிட்டிய உறவினனென்பதையும் தனக்குப்பதில்சிம்மாசனத்தில் யாராவது உட்கார வேண்டுமென்றால் அவன் தான் உட்கார முடியுமென்பதையும் யோசித்துப் பார்த்து அவனை அரியணை ஏற்றவே நீலமலையில் சதி நடந்திருக்கிறது என்ற முடிவுக்கும் வந்தான். இப்படித் தன் சிம்மாசனத்துக்கும், தான் விரும்பும் இரு பெண்களுக்கும் இடையே எழுந்து நின்ற அபராஜிதனை ஒழித்துக் கட்டத் தீர்மானித்துத் தன் வீரர்கள் பக்கம் திரும்பி "அந்த சாமியாரை அவிழ்த்து கீழே தள்ளிவிட்டு சீக்கிரம் போய் பிரயாணத்துக்குச் சித்தம் செய்யுங்கள்!" என்று உத்தரவிட்டான்.

"எப்பொழுது பயணம்?" என்றுகேட்டான் ஒருவீரன்.

"முட்டாள்! இப்பொழுதுதான்" என்று கர்ஜித்தான் வீரபாண்டியன்.

அதற்குமேல் தாமதிக்கத் துணிவில்லாத வீரர்கள் அடிகளாரின் கிட்டிகளை நீக்கிக் கயிறுகளையும் அவிழ்த்து அவரைக் குற்றுயிரும் குலையுயிருமாகக் கீழே தள்ளிவிட்டு வீரர்கள் பின்தொடர வீரபாண்டியன் கீழே சென்றான்.

அடுத்த ஒரு நாழிகைக்குள் மதுரையை நோக்கி வாகனங்கள் உருண்டோடின. வண்டிகளின் கடகட சத்தமும் குதிரைகளின் குளம்படிகளும் நிசப்தமான அந்த இரவில் பெரியதாகச் சப்தித்தன. வீரபாண்டியன் யாருடனும் பேசாமலே நான்கு வெண்ணிறக்குதிரைகளால் இழுக்கப்பட்ட வாகனத்தில் சென்றான். அமைச்சர்கள் கேட்ட ஓரிரு கேள்விகளுக்குக்கூட அவன் பதில் சொல்லவில்லை. சீக்கிரம் மதுரையை அடைந்து அபராஜிதன் தலையைத் துண்டித்துக் கோட்டை வாயிலில் நாட்டவேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் சென்ற வீரபாண்டியனுக்கு மதுரையில் பேரதிர்ச்சி காத்திருந்தது. மதுரைக் கோட்டை வாயிலுக்குச் சற்று முன்பாகவே சிங்கள வீரர்கள் படையொன்று அவனை எதிர்கொண்டது. படைத் தலைவன் மன்னன் வாகனத்தை அடைந்து தலைதாழ்த்தி, "மன்னவா! தாங்கள் இன்று மதுரைக்குள் பிரவேசிக்கக் கூடாது" என்றான்.

"புகக் கூடாதா?"

"ஆம், மகராஜா."

"ஏன் புகக்கூடாது?"

"தலைவர் உத்தரவு" என்றான் வீரன்.

"யார் அந்தத் தலைவன்?" என்று கர்ஜித்தான் வீரபாண்டியன்.

"இலங்காபுரத் தண்டநாயகன்!" என்று கிடைத்தது பதில், மரியாதையுடன் ஆனால் சற்று அழுத்தமாக.

24. மக்கள் எழுச்சி

இலங்காபுரத் தண்டநாயகனின் சிங்களப் படைத் தலைவனால் மதுரையின் எல்லையிலேயே மடக்கி நிறுத்தப்பட்ட மன்னன் வீரபாண்டியனின் மனோநிலை வெடிக்கத் தயாராயிருக்கும் எரிமலையின் நிலையை

ஒத்திருந்தது. அபராஜிதன் தனக்கெதிராகச் சதிசெய்து தனது அரியணையில் அமர முடன்றான் என்ற நினைப்பும், மாதவியும் கார்குழலியும் தன்னைப் புறக்கணித்து அபராஜிதனிடம் ஆட்பட்டுக் கிடக்கிறார்களென்ற ஆக்ரோஷமும் கிளப்பிவிட்ட அக்னி ஜ்வாலை அப்பொழுது அவன் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்தது. அடிகளார் அபராஜிதன் பெயரை உச்சரித்த வினாடியிலிருந்து மதுரையின் எல்லையை அடையும்வரை, தனக்குக் குழிதோண்டக்கூடிய உறவினைத் தன் சிம்மாசனத்துக்குப் பக்கத்தில் வைத்துக் கொண்டிருந்த தன் முட்டாள்தனத்தை எண்ணி எண்ணி மனம்உடைந்து கொண்டிருந்த வீரபாண்டியனுக்கு இலங்காபுரத் தண்டநாயகனின் உத்தரவு விவரிக்க இயலாத ஆத்திரத்தையும் கோபத்தையும் உண்டாக்கவே, அவன் சிங்களத்துப் படைத் தலைவன்மீது சீறிவிழுந்தான். உள்ளேயிருந்த குமுறலுக்கு ஒன்றரை நாள் பிரயாண அலுப்பும் சற்று தூரத்தில் 'வா வா' என்று அழைப்பது போல் கம்பீரமாக எழுந்து நின்ற மதுரையின் கோட்டை வாசல்களும் தூபம் போடவே, சிங்களத்துப் படைத் தலைவன் மீது எரிமலை படீரென வெடித்து நெருப்புப் பொறிகளை வாரி இறைப்பது போல் வார்த்தைகளை உதிர்க்கத் தொடங்கிய வீரபாண்டியன், "டேய் மடையா! உனக்காவது அந்த இலங்காபுரனுக்காவது தலையில் மூளை ஏதாவதிருக்கிறதா?" என்று இரைந்தான்

அவன் பேசிய தோரணையையும் உபயோகித்த வார்த்தைகளையும் கண்ட சிங்களத்துப் படைத்தலைவனின் புருவங்கள் ஆச்சரியத்தால் சற்றே உயர்ந்தன. இலங்காபுரனின் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே நடுங்கக்கூடிய வீரபாண்டியன், சிங்களத்துச் சேனாதிபதியின் கைப் பொம்மையென மதிக்கப்படும் மதுரை மன்னன், இவனா இப்படிப் பேசுகிறான் எனப் பக்கத்திலிருந்த அமைச்சர்கள் கூட ஆச்சரியப்பட்டார்கள். இந்த வார்த்தைகள்

இலங்காபுரனின் காதுகளில் விழுந்தால் வீரபாண்டியனின் நிலை என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்ற அச்சத்தால், சுற்றிலுமிருந்த வீரர்கள் பயத்துடன் மூச்சுவிடாமல் நின்றார்கள்!

இத்தனைக்கும் சிங்களத்துப் படைத்தலைவன் மட்டும் சற்றும் அசையாமலே பதில் சொல்லத் தொடங்கி, "மகாராஜா என்னைப்பற்றி நீங்கள் எப்படிப் பேசினாலும் பாதகமில்லை. ஆனால் எங்கள் சேனாதிபதியைப்பற்றி மரியாதையாகப் பேசுவதே நல்லது' என்றான். அவன் சொன்ன பதிலில் அதிக வேகமில்லையென்றாலும், வார்த்தைகளை உச்சரித்த மாதிரியில் சற்று எச்சரிக்கை கலந்திருந்தது.

அவன் பதிலையோ பேச்சின் தொனியையோ அதில் தொக்கி நின்ற எச்சரிக்கையையோ வீரபாண்டியன் கவனிக்கத் தவறவில்லையென்றாலும் தன் கோபத்தைச் சற்றும் குறைத்துக் கொள்ளாமலே, "இலங்காபுரத் தண்டநாயகன் எப்பொழுது மதுரையின் மன்னனானான்?" என்று வினவினான்.

"அந்த உன்னத பதவிக்கு அவர் வர ஆசைப்படவில்லை அரசே" என்றான் சிங்கள வீரன் இதழ்களில் இகழ்ச்சி கலந்த புன்முறுவல் பிரதிபலிக்க. மதுரை மன்னன் பதவி எத்தனை மட்டமானது என்பது அவன் சொற்களில் திட்டமாக விளங்கியது. சொற்களை அர்த்தம் செய்துகொள்ள முடியாத பேர்களுக்கு அவன் முகபாவமும், இதழ்களில் தோன்றிய சிரிப்பும், கண்களில் சொட்டிய விஷமும் விஷயத்தை உள்ளபடி விளக்கியிருக்கும். ஆனால் மனத்தில் வேறு மனிதர்களைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருந்த வீரபாண்டியன் புத்திக்கு மட்டும் இந்தப் பதிலின் உள்ளர்த்தம் புரியாதிருக்கவே அவன் பழைய உஷ்ணத்துடனேயே கேட்டான்: "அப்படியானால் மன்னனை மதுரைக்குள் பிரவேசிக்கக்கூடாதுஎன்று உத்தரவிட இலங்காபுரனுக்கு அதிகாரமளித்தது யார்?"

''தாங்கள்தான் மகாராஜா'' என்றான் சிங்களத்துப் படைத்தலைவன்.

''தானா!'' வீரபாண்டியன் கேள்வியில் ஆச்சரியம் பிரதிபலித்தது.

''ஆம், தாங்கள்தான். தங்கள் உத்தரவின் மேல்தான் அவர் மதுரையையும் பாண்டிய நாட்டையும் பாதுகாத்து வருகிறார். தங்களைப் பாதுகாக்க வேண்டியதும் அவர் கடமையாகஇருக்கிறது.'' உள்ள நிலைமையைச் சாமர்த்தியமாகச் சுட்டிக் காட்டினான் சிங்களப் படைத் தலைவன்.

''ஆமாம்...அதற்காக...?'' என்று ஏதும் புரியாமல் கேட்டான் பாண்டிய மன்னன்.

''இன்றிரவு தாங்கள் மதுரைக்குள் பிரவேசிக்க வேண்டாமென உத்தரவிட்டிருக்கிறார்.'' திட்டமாகக் கிடைத்தது பதில்.

''ஏன்? மதுரையில் இப்போது எனக்கென்ன ஆபத்து காத்திருக்கிறது?''

''பெரிய ஆபத்து மகாராஜா! தங்கள் உயிருக்கே ஆபத்து நேரிடலாம்.''

சிங்களப் படைத்தலைவனின் இந்தப் பதிலைக் கேட்ட வீரபாண்டியன் தனது வாகனத்திலிருந்து தரையில் குதித்தான். மற்ற அமைச்சர்களும் வீரர்களும் தரையில் இறங்கினர். கீழே குதித்த வீரபாண்டியன் ஏதோ ஆழ்ந்த யோசனையுடன் சற்று நேரம் குறுக்கும் நெடுக்குமாக நடந்த பின் சிங்களப் படைத்தலைவனை நோக்கி ''என்ன! என் உயிருக்கு ஆபத்தா! எனக்கொன்றும் விளங்க வில்லலயே!'' என்றான்.

'மகாராஜா! நாம் சற்றுத் தனிமையில் பேசலாமா?'' என்றான் சிங்களப் படைத்தலைவன். தனது வீரர்களுக்கோ அமைச்சர்களுக்கோ தெரியாமல் அவன் ஏதோ சொல்ல முயல்கிறானென்பதை உணர்ந்துகொண்ட வீர பாண்டியன் தன் வீரர்களை விட்டுச்சற்று தூரம் சிங்களப் படைத்தலைவனுடன் நடந்துசென்றான். இருவரும்தங்கள்

படைகளை விட்டுத் தனித்து வந்ததும் சிங்களப் படைத் தலைவன் விஷயத்தைச் சொல்லத் தொடங்கி, ''மகா ராஜா! தாங்கள் மழவராயன் ஊருக்குப் போயிருந்த சமயத்தில் மதுரையில் இருமுறை புரட்சி ஏற்பட்டு விட்டது'' என்று மெள்ள ஆரம்பித்தான்.

''என்ன, புரட்சியா! நமது படைகளா!'' என்று திகி லும் வியப்பும் தாண்டவமாடக் கேட்டான் வீர பாண்டியன்.

''படைகளல்ல மகாராஜா! படைகளாயிருந்தால் நொடிப் பொழுதில் சமாளித்து விடலாமே, தவிர படை களை அபராஜிதன் மிகத்திறமையுடன் அடக்கி வைத்திருந் தார்'' என்றான் சிங்களப் படைத் தலைவன்.

வீரபாண்டியன் தன் விழிகளைச் சிங்களப்படைத் தலைவனுக்காக உயர்த்தி ஆச்சரியத்துடன் கேட்டான், ''அபராஜிதன் படைகளை அடக்கி வைத்திருந்தானா?'' என்று.

''ஆம் ம்காராஜா! அவர் உதவியில்லாமல் மக்களை அடக்கியிருக்க முடியாது.''

''மக்களா புரட்சி செய்தார்கள்?''

''ஆம், மகாராஜா!''

''எதற்காக?''

''சொன்னால் தங்களுக்கு மனவருத்தமாயிருக்கும்.''

''பாதகமில்லை, சொல்.''

''தங்களை ஆட்சி பீடத்திலிருந்து நீக்க வேண்டும் என்பதற்காக.''

வீரபாண்டியன் பிரமை பிடித்து நின்றான். தன் மீது மக்களுக்கிருக்கும் வெறுப்பை அவன் உணர்ந்தேயிருந் தான். அவர்கள் மீது அவனுக்கும் வெறுப்பு பூரணமாயி ருந்தது. மக்கள் உண்மையில் மாக்கள் என்பதும் அவர் களை மிருகங்களைப் போல் அடக்கி ஆள்வதே முறை என்பதும் அவன் சித்தாந்தமாயிருந்தது. ஆகவே அவர்

கள் புரட்சி செய்வதில் அவனுக்கு வியப்பில்லை. அவர்களை அடக்க அபராஜிதன் ஏன் உதவி புரிந்தான் என்பது மட்டும் அவனுக்கு விளங்காத பெரும் புதிராயிருந்தது. ஆகவே மேற்கொண்டு புரட்சியின் பூரணத்தகவலை அறிவதற்காக வினவினான். ''பிறகு என்ன நடந்தது?'' என்று.

சிங்களத்துப் படைத்தலைவன் விளக்கிச் சொன்னான்: ''மகாராஜா!'' மக்கள் புரட்சிக்குக் காரணம் யுத்த பயம் தான். இருமுறை மக்கள் எழுச்சி ஏற்பட்டது. மறவர்களும் மற்றோரும் தமது படைகளுடன் இருமுறை கைகலந்தார்கள். இரு தரப்புக்கும் நஷ்டம் அதிகம்தான். சிங்கள வீரர் பலர் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள். இரண்டு முறைகளிலும் அபராஜிதன் கலகக்கூட்டங்களின் நடுவே சென்று புரட்சிக்காரரை அடக்காதிருந்தால் மதுரையிலுள்ள சிங்களப்படைப் பகுதி அடியோடு அழிந்திருக்கும்.''

''அபராஜிதன் பாண்டிய வீரர்களைக் கொண்டுபுரட்சியை அடக்கினான்?''

''இல்லை மன்னவா! பேசி அடக்கினான்.''

''என்ன! பேசி அடக்கினானா?''

''ஆம் மகாராஜா! சிங்களப் படைகளின் வாளுக்குப் பயப்படாத கலகக் கூட்டம், அவன் சொல்லுக்குத்தான் அடங்கியது.''

வீரபாண்டியன் மூளை மிகத் துரிதமாகவேலைசெய்யத் தொடங்கியது. அபராஜிதனுக்கும் மக்களுக்கும் அத்தனை பிரியமிருந்தால் மதுரையின் ஆட்சிபீடம் தனக்குச் சாசுவதமில்லை என்று நினைத்தான். ஆகவே அவனைமுதல்ல் ஒழித்துக் கட்டுவதைத் தவிர வழி வேறில்லை எனத் தீர்மானித்துக் கொண்ட வீரபாண்டியன் ''இப்பொழுது புரட்சி அடங்கி விட்டதல்லவா?'' என்றான்.

''அடங்கிவிட்டது மகாராஜா. ஆனால் மீண்டும் கனம்பும் போலிருக்கிறது.''

''ஏன்?''

''தாங்கள் வரும் செய்தி முன்னதாக ஊரில் பரவிவிட்டது.''

''செய்தியைப் பரப்பியது யார்?''

''யாரென்று தெரியவில்லை.''

''எனக்குத் தெரியும்.''

மன்னன் பதிலைக்கேட்ட படைத்தலைவன் மலைத்து ''என்ன! தங்களுக்குத் தெரியுமா! யாரது மகாராஜா?'' என்று வினவினான்.

வீரபாண்டியன் அதற்குப் பதில் சொல்லவில்லை. இத்தனையும் அபராஜிதன் வேலையாகத்தானிருக்கும் என்று அவன் தீர்மானித்துக் கொண்டான். மக்களை அடக்குவது போல் அடக்கி, சமயத்தில் தூண்டிவிட்டுத் தன்னை ஒழித்துவிடப் பாண்டிய சேனாதிபதி திட்டம் போட்டிருக்கிறான் என்று ஊர்ஜிதம் செய்துகொண்ட வீரபாண்டியன் சிங்களப் படைத் தலைவனை நோக்கி, ''எப்படியும் இப்பொழுதே மதுரையில் நுழையத் தீர்மானித்து விட்டேன். உன்து வீரர்களை மதுரையை நோக்கித் திருப்பிக்கொள்'' என்றான்.

''வேண்டாம் மகாராஜா! நிலைமை மிக அபாயமாயிருக்கிறது. சோழ மன்னன் படைத்தலைவனும் தூதுவனுமான அண்ணன் பல்லவராயன் மதுரைக்கு வந்த நாளாக ஊர் அமளிப்படுகிறது. எங்கும் யுத்தத்தின் பேச்சாக இருக்கிறது. எப்படியும் தங்களுக்கு மழவராயன் பெண்ணோ படைத்துணையோ கொடுக்கமாட்டானென்றும், உங்களால் நாட்டைப் பாதுகாக்க முடியாதென்றும் மக்கள் பகிரங்கமாக வீதிகளில் பேசுகிறார்கள். சோழ நாட்டுக்கும் பாண்டிய நாட்டுக்கும் யுத்தம் நிச்சயம் என்கிற உறுதி மக்களிடம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைக்கே நீங்கள்தான் காரணமென்று மக்கள் கருதுகிறார்கள். நீங்கள் வருவதை அறிந்ததும் கோட்டை வாசல் தாரைகள் ஊதப்பட்டால் மக்கள் மீண்டும் எழுந்து விடுவார்கள்'' என்றான் சிங்களத்துப் படைத் தலைவன்.

"எழுந்தாலென்ன? உன்னிடம் எத்தனை வீரர்கள் இருக்கிறார்கள்?"

"இருபது வீரர்கள்."

"ஒருவனை முன்னதாக அனுப்பி நூறு சிங்கள வீரர்களைக் கோட்டை வாசலில் நம்மைச் சந்திக்கச் சொல்."

"சந்தித்தால்?"

"சிங்களப்படை புடை சூழ நாம் பட்டணப் பிரவேசம் செய்வோம்."

"மக்கள் மறுத்தால்?"

"குதிரைகளின் குளம்புகள் அவர்கள் தலைகளை மிதித்தோடும்."

எந்தக் குரூரமான உத்தரவையும் சாதாரணமாக வரவேற்கக்கூடிய சிங்களப் படைத் தலைவன்கூட இந்த மிருகத்தனமான உத்தரவைக்கேட்டதும் பிரமித்து ஒரு கணம் நின்றான்.

"என்ன யோசிக்கிறாய்?" என்று வீரபாண்டியன் வினவினான்.

"ஒன்றுமில்லை மகாராஜா! தங்களிஷ்டம்" என்று கூறிவிட்டுத் தன் வீரரில் ஒருவனை அழைத்து மன்னர் கட்டளையை அவனுக்குத் தெரிவித்தான்.

மதுரை மாநகர் வாயிலை மன்னன் நெருங்கியதும் தாரைகள் பலமாக சப்தித்தன. அவன் உத்தரவுப்படி நூறு வீரர்கள் கொண்ட சிங்களப் படையொன்று வெகு வேகமாக வந்து அவனைக் காவல்செய்யச் சூழ்ந்து நின்றது. அதே சமயத்தில் கோட்டைக்குள் பலமான கூச்சலும்எழுந்தது. இரவுநெருங்கி விட்டதால்எங்கும்விளக்குகள் கொளுத்தப்பட்டிருந்தன. சாதாரணமாக மதுரைக்குப் பொலிவை அளிக்கும் அந்த விளக்குகள் கூட அன்று அழகுக்குப் பதில் பயங்கரத்தையே அளித்தன. தாரை ஊதப்பட்டதுமே மன்னன் வரவை உணர்ந்துகொண்ட மக்கள் ஆங்காங்கு கூட்டம் கூட்டமாகச் சேர்ந்துவிட்டனர்.

சிலர் பந்தங்களைத் தூக்கிக்கொண்டு அப்புறமும் இப்புறமும் ஓடினர் மக்களின் கூட்டங்களை மறித்துக் குதிரைப் படையும் யானைப்படையும் அணிவகுத்து நின்றன. நாலாதிக்கிலிருந்தும் மறவர்களும், குறவர்களும், தேவரும், மீனவரும், கொல்லரும், குயவரும் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தார்கள். பலர் பந்தங்களை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். பலர் சின்னஞ்சிறு கத்திகளை இடையில் செருகியிருந்தார்கள்.

மன்னனைக் கண்டதும் மக்களிடையே கூச்சல் பலமாக எழுந்தது. "மன்னனே, திரும்பிப் போ! மகா பாதகனே திரும்பிப் போ! ஏன் மீண்டும் மதுரைக்கு வருகிறாய்?" என்ற கூச்சல் பல இடங்களிலிருந்து எழுந்தது. கூட்டமும் பவனியை இருப்பக்கத்திலும் நெருக்கலாயிற்று. ஓரிரு சிறு கத்திகளும் மன்னன்மீது வீசப்பட்டன. அவற்றிலொன்று வந்து வாகனத்தின் மீது விழுந்தது. வீரபாண்டியனுக்கு நிதானம் அடியோடு காற்றில் பறந்தது. பெண்கள் சிலர் மாடிப் பலகணிகள் வழியாகத் தலையை நீட்டிச் சிரித்தார்கள். "மழவராயன் மகளெங்கே?" என்று ஒரு பக்கத்திலிருந்து யாரோ கேட்டதும் மற்றப்பெண்கள் கொல்லென்று சிரித்தார்கள். "மன்னனுக்கு மணாட்டியாகத்தான் பைங்கிளியிருக்கிறாளே!" என்றாள் ஒருத்தி.

மன்னன் அடியோடு நிதானத்தை இழந்தான். இரு பக்கத்திலுமிருந்த கூட்டம் போதாதென்று எதிரேயிருந்தும் ஒரு கூட்டம் பந்தங்களுடன் வந்துகொண்டிருந்தது. "அக்கம்பக்கத்திலோ எதிரேயிருப்பவர்களோ யாராயிருந்தாலும் வெட்டித் தள்ளி வேகமாகச் செல்லுங்கள்" என்று கூவினான் வீரபாண்டியன். வாகனத்தில் எழுந்து நின்று. அடுத்த கணம் சிங்களப் படைவீரர்கள், உருவிய கத்தியும் கையுமாக எழுந்து மதுரை மாநகர் மக்களின்மேல் பாய்ந்தார்கள். தலைக்ள் பல உருண்டவுடன் சற்றுத் தேங்கி நின்ற மக்கள் கும்பல் பீரிட்டு எழுந்த ஆவேசத்துடன் மீண்டும் மன்னன் வாகனத்தின்மீது பாய்ந்தது. வெட்டப்பட்டமக்களின் தலைகள்மீதும் பிரவகித்தரத்தத்தின்மீதும்

உருண்டோடிய வாகனத்தில் மிகக் கம்பீரமாக அமர்ந்து அரண்மனையை எட்டிய வீரபாண்டியன் நேராக நீதிஸ்தலத்துக்குச் சென்றான். அரண்மனை வாயிலிலேயே அவனைச் சந்தித்த இலங்காபுரனும் அபராஜிதனும் மன்னனைத் தொடர்ந்து சென்றார்கள். நீதி மண்டபத்தின் மத்தியிலிருந்த அரியணையில் அமர்ந்துகொண்ட வீரபாண்டியன் வெகுநேரம் மௌனம் சாதித்தான். கடைசியாக தலையை நிமிர்த்தி நின்றிருந்த இருபடைத் தலைவர்களை நோக்கினான். மன்னன் குறிப்பை உணர்ந்த அவ்விருவரும் அரியாசனத்தை அணுகியதும் சட்டென்று எழுந்து உட்கார்ந்த மன்னன் அபராஜிதனுக்காக சுட்டிக்காட்டி, ''அதோ அந்த அயோக்கியனைக் கைது செய்யுங்கள்'' என்று நீதி மண்டபமே அதிரும்படியாகக் கூவினான். சற்று நேரம் பயங்கரமான அமைதியொன்று நீதிமண்டபத்தில் நிலவியது. சேனாதிபதிமீது கையை வைக்க யாருக்கும் துணிவு வரவில்லை.

''ஏன் நான் சொல்வது காதில் விழவில்லையா?'' என்று மீண்டும் சீறினான் மன்னன். அதற்குமேல் தயங்கினால் தங்கள் தலைக்கு ஆபத்து வரும் என்று அஞ்சிய படைத்தலைவர் இருவரும் உருவிய வாட்களுடன் அபராஜிதனை நெருங்கினார்கள். அவர்கள் அவன்மீது கைவைக்கப் போன தருணத்தில் நீதி மண்டபத்தின் ஒரு மூலையிலிருந்து மிகப் பயங்கரமாக எழுந்த ஒரு சிரிப்பு கோடையிடிபோல் திரும்பத்திரும்பச் சப்தித்தது. அந்தச் சிரிப்பு வந்த திசையை நோக்கிய வீரபாண்டியன் முகம் சவேலென வெளுத்தது.

25. மண்டபம் சிரித்தது

தூலங்களிலிருந்து ஆங்காங்கு தொங்கிக் கொண்டிருந்த சரவிளக்குகளாலும் தூண்களில் இணைக்கப்பட்டிருந்த பனை விளக்குகளாலும் மகோன்னதமாக ஜ்வலித்துக் கொண்டிருந்த அந்த மாபெரும் மண்டபத்தில் எழுந்த

அந்தச் சிரிப்பொலி, மண்டபத்தின் விசாலமான சுவர்களிலும் பிரும்மாண்டமான தூண்களிலும் தாக்கி எதிரொலி செய்யவே மண்டபமே நாலாபக்கத்திலிருந்தும் மன்னனைப் பார்த்துச் சிரிப்பதுபோன்ற பயங்கரத்தை விளைவித்தது. காவலரும் பாவலரும் நீதி வல்லுனரும் சூழ்ந்து நின்ற அந்த நீதிமன்றத்திலே, அப்படி அத்துமீறித் துணிச்சலாக சிரித்தவன் யாராயிருக்குமென்பதை அறிய அபராஜிதனும் இலங்காபுரனும்கூடச் சிரிப்பு வந்த திசையை நோக்கிக் கண்களைத் திருப்பினர். அத்திசையிலிருந்த மனிதனைக் கண்டதும் ராட்சதனைப் போல் பெரிய சரீரத்துடனிருந்த இலங்காபுரன் கண்களில் கூட ஓரளவு அச்சம் உதயமாயிற்று. அந்த மனிதன் எப்பொழுது அந்த மண்டபத்திற்குள் வந்தான் என்பதை அறிவதில் முனைந்தது அபராஜிதன் சித்தம். மண்டபத்தில் இருந்த மற்றவர் எண்ணங்கள் திகிலால் பீடிக்கப்பட்டிருந்ததால் எந்தவித யோசனையோ முணுமுணுப்போ கூட இல்லாமல் மண்டபத்தில் மௌனமே தாண்டவமாடியது. நீதி ஸ்தலத்தில் இருந்த அத்தனைபேர் கண்களும் பதிந்து நின்ற அந்த மனிதன் மட்டும் எதற்கும் அஞ்சாமலும் நின்ற இடத்திலிருந்தும் அசையாமலும் சிரிப்பை ஓரளவு அடக்கிக் கொண்டு எதிரேயிருந்த பாண்டிய சபைமீது கண்களைச் சுழலவிட்டான்.

மண்டபத்தின் தெற்கு மூலையிலிருந்த தூணொன்றில் சாய்ந்து நின்ற அந்த மனிதன் நடுத்தரப் பருவத்தைத் தாண்டிச் சில வருஷங்களே ஆகியிருக்கும் என்பதற்கு அறிகுறியாக ஒரிரு திரைகள் முகத்தில் ஓடிக்கொண்டிருந்தன. ஆஜானுபாகுவான சரீரத்துடனும் விசாலமான நெற்றியுடன் நின்ற அவன் முகத்திலிருந்த போர் வடுக்கள் அவன் எத்தனையோ யுத்தங்களைப் பார்த்திருக்கிறான் என்பதை அறிவுறுத்தின. அவன் பார்வையில் ஒரு திடம் மட்டுமன்றி, யாரையும் ஊடுருவிப் பார்த்து அசைக்கக்கூடிய ஒருவிதக் கூர்மையும் இருந்தது. மேல் உதட்டில் அடர்த்தியாக வளர்ந்து இருபுறங்களிலும் வில்போல் மேல் நோக்கி

விருந்த பயங்கர மீசையுடன் தலையிலிருந்து தொங்கிய மயிரிழைகள் சில சல்லாபம் செய்து கொண்டிருந்தன. இடையில் அகலமும் நீளமுமாகத் தொங்கிய பட்டாக்கத்தி எல்லாவற்றையும் விடப் பெரிய பயங்கரமாகக் காட்சியளித்தது. அவன் நின்ற தோரணையையும் பார்வையையும் கண்டவர்கள் அவனுக்கும் பயம் என்ற உணர்ச்சிக்கும் ஸ்னானப் பிராப்திகூட கிடையாதென்பதைப் புரிந்துகொண்டார்கள். அவன் பார்வையில் பிறருக்கு அச்சம் விளைவிக்கும் அம்சம் கலந்திருந்தது. இந்தக் கதை நிகழ்ந்த காலத்தில் அவன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நடுங்கிய பேர்கள் அனந்தம். தமிழ் நாட்டின் மாற்றார்களுக்கெல்லாம் குலை நடுக்கம் கொடுத்து வந்த சோழநாட்டுச் சேனாதிபதி அண்ணன் பல்லவராயன்— ராஜதந்திரத்தில் இணையற்று விளங்கிய சோழநாட்டு முதலமைச்சர் திருச்சிற்றம்பலமுடையான் பல்லவராயனின் இளையோனான அண்ணன் பல்லவராயன்— அன்று அந்தப் பேரவையில் அப்படிப் பயங்கரமாகச் சிரித்தது யாருக்கு வியப்பாயிருந்தாலும் வீரபாண்டியனுக்கு மட்டும் வியப்பாயில்லை. வீரபாண்டியன் உலகத்தில் யாரிடமாவது பயந்தானென்றால் அது அண்ணன் பல்லவராயனிடம் தான். இலங்காபுரனை விரட்டி, சோழ சாம்ராஜ்யத்தைப் பாண்டிய நாட்டின் மீது நிலைநாட்டுவேன் என்று பகிரங்கமாகப் பறையறைவித்தவன் தமிழ்நாட்டிலேயே அண்ணன் பல்லவராயன் ஒருவன்தான். அப்பேர்பட்ட அண்ணன் பல்லவராயன் சோழ நாட்டிலிருந்து தூதுவனாக வந்திருக்கிறான் என்ற செய்தியை கேட்ட தினத்திலிருந்தே திகிலடைந்திருந்தான் வீரபாண்டியன். அந்தத் தூதுவன் மிக இக்கட்டான நிலையில் தன் நீதி மண்டபத்தில் முன்னறிவிப்பின்றி நுழைந்தது மாத்திரமல்லாமல் சிரித்து அவமானப்படுத்தியதையும் நினைத்த வீரபாண்டியன் உள்ளத்தில் முதலிலிருந்த அச்சத்துடன் ஓரளவு கோபமும் கலந்து கொண்டது.

அப்படி அச்சமும் கோபமும் கலந்து தொனித்த குரலில் வீரபாண்டியன், அண்ணன் பல்லவராயனை நோக்கி, ''பல்லவராயரே! முன்னறிவிப்பின்றி நீதிஸ்தலத்தில் நுழைவதும் அடக்கமின்றி அவமரியாதையாகச் சிரிப்பதுந்தான் சோழ நாட்டவர் கற்ற தூது முறையோ?'' என்று கேட்டான்.

தடங்கல் ஏதுமின்றி கணீரென்று எழுந்தது பல்லவராயனின் பதில். ''இடத்திற்குத் தகுந்த முறையைக் கையாளுவதுதான் தூதுவர் லட்சணம் மகாராஜா!''

''இடத்திற்குத் தகுந்த முறையா?'' ஆச்சரியத்துடன் வினவினான் வீரபாண்டியன்.

''தங்கள் நீதிமுறைக்குத் தகுந்த தூதுமுறை'' என்ற பல்லவராயனின் பதிலில் ஓரளவு ஏளனமும் கலந்திருந்தது.

வீரபாண்டியன் கண்களில் கோபம் மெள்ள மெள்ள உதயமாகத் தொடங்கவே புருவங்களும் சற்று உயர எழும்பின. ''என் நீதி முறையில் என்ன இழுக்கைக் கண்டு விட்டீர்?''

''நீர் செலுத்தும் நீதியில் நியாயமிருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது ஆனால் அசந்தர்ப்பமானது என்பது மட்டும் தெரியும்.''

''எப்படி அசந்தர்ப்பமானது?''

''சென்ற சில நாட்களில் தங்கள் தலைநகரில் இரண்டு முறை மக்கள் எழுச்சி ஏற்பட்டிருக்கிறது அந்த இரண்டு எழுச்சியையும் அடக்கியவர் தங்கள் சேனாதிபதி. அவரைக் கைது செய்ய மகாராஜா உத்தரவு போடுகிறீர்கள்....'' என்று மேலும் ஏதோ சொல்லப்போன பல்லவராயன் வேண்டுமென்றே வாசகத்தை முடிக்காமல் நிறுத்தி மெல்ல சிரித்தான்.

''உத்தரவு செய்தாலென்ன?'' கடுமையாக எழுந்தது மன்னன் கேள்வி.

''தங்களுக்குப் புரியாவிட்டாலும் தங்களைச் சூழ்ந்துள்ள எல்லோருக்கும் புரிந்திருக்கிறது. தங்களை இன்று

தங்கள் மக்களிடமிருந்து காத்து நிற்பது தங்கள் சேனாதிபதியின் கரம் அந்தப் பாதுகாப்பையும் நீங்கள் உதறிவிட்டால்....''

''உதறி விட்டால்?''

''எங்கள் வேலை சுலபம்.''

''என்ன உங்கள் வேலை?''

அண்ணன் பல்லவராயன் சொன்ன பதில் அவையினரையும் திக்பிரமையில் ஆழ்த்தியது. மன்னனை ஏறெடுத்துப் பார்த்த பல்லவராயன், ''பாண்டிய நாட்டை வெற்றி கொள்ளும் வேலை'' என்றான் அழுத்தம் திருத்தமாக.

அதுவரை கூடியவரை அமைதியைக் கையாண்ட வீரபாண்டியன் தன் சுயரூபத்தை எடுத்துக்கொண்டான். பல்லவராயன் பதிலுக்குப் பின்பு மன்னன் ஏதாவது உளறிவிடப்போகிறானோ என்று பயந்த இலங்காபுரன் எச்சரிக்கை ததும்பிய தன் விழிகளை வீரபாண்டியன் மீது நிலைக்க விட்டான். நிதானத்தை அடியோடு இழந்துவிட்ட வீரபாண்டியன் எந்த எச்சரிக்கையாலும் பயனடையக்கூடிய நிலையை தாண்டிவிட்டதால் உக்கிரத்துடன் சோழநாட்டுத் தூதுவனை நோக்கி வார்த்தைகளைக் கொட்டினான்.

''பல்லவராயரே! உம்மைத் தவிர வேறு யாராவது இந்தப் பேச்சை இந்தச் சபா மண்டபத்தில் பேசியிருந்தால் பற்களை உடைக்க ஆணையிட்டிருப்பேன் நீர் தூது வராதலால் தப்பினீர். இந்தப் பாண்டிய நாட்டை வெற்றி கொள்வதற்கு நீரல்ல உமது அண்ணன் இருக்கின்றானே அந்தக் கிழப்பல்லவராயனல்ல, உமது மன்னனிருக்கின்றானே ராஜாதிராஜன் அவனே வந்தாலும் முடியாது. இங்குள்ள படைபலத்தின் வன்மையைச் சமயம் வரும்போது உணர்த்துவோம்'' என்று மண்டபமே அதிரும்படியாக இரைந்தான் வீரபாண்டியன்.

பதிலுக்குப் புன்முறுவல் செய்தான் பல்லவராயன். ''சமயம் வரும்போது தாங்கள் சிம்மாசனத்திலிருந்தால் உணர்த்தலாம். ஆனால் மதுரை இருக்கிற நிலையைப்

பார்த்தால் தங்களை வெற்றி கொள்ளும் பாக்கியம் சோழ வீரர்களுக்குக் கிடைக்காது போலிருக்கிறதே'' என்று பதிலும் சொன்னான்.

பல்லவராயன் போக்கை வீரபாண்டியன் உணரவில்லையேதவிர இலங்காபுரனும் அபராஜிதனும் நொடிப் பொழுதில் உணர்ந்து கொண்டார்கள். எப்படியாவது பாண்டிய மன்னனைச் சண்டைக்கு இழுத்து அவன் செய்யக்கூடிய அநீதியைக் காரணமாக வைத்துப்பாண்டிய நாட்டின்மீது படையெடுக்கவே அண்ணன் பல்லவராயன் முயல்கிறான் என்பதையும், அதற்காகவே பாண்டியநாடு வந்திருக்கிறானென்பதையும், தூதராக வந்திருப்பது வெறும் புரட்டு என்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்ட அபராஜிதன் நிலைமையை ஓரளவு சீர்படுத்த முயன்று இருவர் சம்பாஷணைக்குப் இடையே புகுந்து, ''பல்லவராயரே! பாண்டிய அவையில் நீர் பேசும் முறை சோழ மன்னர்கள் கௌரவத்துக்கு உகந்ததாகாது'' என்றான். நல்லவேளை, இந்தச் சமயத்தில் அபராஜிதன் கைகொடுக்க வந்தானே என்று இலங்காபுரன், சந்தோஷப்பட்ட சமயத்தில் கோபவெறியால் கவரப்பட்டிருந்த வீரபாண்டியன் சமாதானத்துக்க இடமே இல்லாதிருக்கும்படியான மார்க்கத்தில் நுழைந்தான்.

''எங்கள் சம்பாஷணையில் நுழைய உனக்கு யார் அனுமதி கொடுத்தது?'' என்று அபராஜிதனை அடக்கிவிட்டுப் பல்லவராயனைநோக்கி, ''பல்லவராயரே! என்னை வெற்றி கொள்ளும் பாக்கியம் சோழ வீரர்களுக்குக் கிடைக்காதென்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் பாண்டிய நாட்டு வீரரும் சிங்கள வீரர்களுமாகச் சேர்ந்து சோழ நாட்டைச் சிதைக்கச் சித்தமாயிருக்கிறார்கள். பேச்சில் வீரம் காட்டமாட்டார்கள் பாண்டிய நாட்டவர். காலம் வரும்போது போர் அரங்கில் வேல்களாலும் வாட்களாலும் பேசிக்கொள்வோம். அது கிடக்கட்டும். இப்போது எதற்காகப் பாண்டியநாடு வந்தீர்? சொல்லும்'' என்றான்.

''சோழ மன்னர் ஆணையை நிறைவேற்ற'' என்றான் பல்லவராயன்.

''என்ன ஆணை?''

''பாண்டிய மன்னனே கேள்! சிங்களத்துடன் நீ கொண்டிருக்கும் உறவு தமிழ்நாட்டின் நன்மைக்கும் கௌரவத்துக்கும் பாதகமானது என்று சோழமன்னர் கருதுகின்றார். இந்தச் சிம்மாசனத்தில் நீண்ட நாட்கள் உட்காரத் தங்களுக்கு ஆசையிருக்கும் பட்சததில் இலங்காபுரனையும் தமிழ் மககளைக் காலடியில் வைத்துத் துவைத்துக் கொண்டிருக்கும் சிங்களப் படைகளையும் மீண்டும் சிங்களம் அனுப்பி விடவேண்டும். இன்னும் ஒரே ஒரு நிபந்தனை.''

''என்ன அது?''

''இலங்காபுரன் படைக்குப் பதில் சோழநாட்டுப் படையின ஒரு பகுதி உமது தலைநகரைக் காத்து நிற்கும்''

இந்தப் பதிலைக் கேட்டதும், ''என்ன சொன்னீர் பல்லவராயரே! உமது மன்னனுக்கு மதி கெட்டு விட்டதா?'' என்று சொல்லிக்கொண்டே மிதமிஞ்சிய சினத்துடன் ஆசனத்திலிருந்து சரேலென எழுந்தான் வீரபாண்டியன்.

அவன் ஆத்திரத்தை இன்னும் அதிகமாகக் கிளறிவிட இஷ்டப்பட்ட பல்லவராயன், ''மன்னவா! இதில் ஆத்திரத்திறகு என்ன இருக்கிறது? இப்பொழுது உங்கள் நாட்டிலிருப்பது சிங்கள ஆதிக்கம். அதற்குப் பதிலாகச் சோழர் ஆதிக்கம் கிடைக்கும் வேறு நாட்டவர் ஆதிக்கத்துக்கு, உள்நாட்டு மன்னர்—அதுவும் தூய தமிழர்—ஆதிக்கம் கிடைப்பது பெரும் பாக்கியமல்லவா?'' என்றான்.

ஆசனத்தருகேயிருந்த படிகளில் இரண்டைத் தாண்டிக் கீழே காலை வைத்தான் வீரபாண்டியன். ஏதோ விபரீதம் நேரிடப் போகிறதென்ற அச்சததால் இலங்காபுரன் தானிருந்த இடத்தை விட்டு இரண்டே

எட்டில் மன்னனெதிரே வந்து, ''மகாராஜா! ஆத்திரம் வேண்டாம். தூதுவனை ஏதும் செய்யாதீர்கள்'' என்று கெஞ்சினார் காதுக்கருகில். ஆனால், இலங்காபுரன்வார்த்தைகள் பல்லவராயன் காதிலும் விழுந்திருக்க வேண்டும். ஆகவே பல்லவராயன் புன்முறுவலுடனேயே பேசத் தொடங்கி இலங்காபுரனை நோக்கி ''தண்ட நாயகரே! மன்னனை எச்சரிக்க வேண்டாம். இவர் என்னை எது வேண்டுமானாலும் செய்யட்டும் வேறு நாட்டு வீரர்களைக் கொண்டு குடிகளின் தலைகளை வெட்டிப் போட்டு அவர்கள் குருதியில் வாகன சக்கரங்கள் உருண்டோட மதுரையின் தெருக்களில் மக்கள் ரத்தச்சுவட்டைப் போட்டிருக்கும் பாண்டிய மன்னன், தூதுவனைக் கொன்றானென்றால் அதுவும் தற்சமயம் பாண்டிய நாடுஅடைந்திருக்கும் பண்பையே குறிக்கும். எங்கள் நாட்டுக் கதை வேறு'' என்றான்.

''என்ன உங்கள் நாட்டுக் கதை:'' என்று உக்கிரத்துடன் கூறினான் வீரபாண்டியன்.

''பன்னன் ஆட்சிக்காக மக்கள் தலை உருண்டது சோழ நாட்டுக் கதையல்ல மகாராஜா' மனு நீதிக்காக, தேரடியில் மன்னன் மகன் தலை உருண்டதுதான் எங்கள் நாட்டின் கதை'' என்று இகழ்ச்சியுடன் கூறிய பல்லவராயன், ''மகாராஜா! உங்கள் மனம் இப்பொழுது ஆத்திரத்தில் கட்டுண்டிருப்பதால் எதையும் செய்யத் துணியலாம். ஆனால், துணிவதெல்லாவற்றையும் செய்ய உங்களால் முடியாது என்னைக் கைது செய்ய நீங்கள் துணியலாம். ஆனால், அதுவும் முடியாது. சந்தேகமிருந்தால் இதோ பாருங்கள்'' என்று கையைத் தட்டினான். அடுத்த வினாடி பாண்டிய நீதி மண்டபப் பெருங்கதவுகள் பேரிரைச்சலுடன் திறந்தன. ஏராளமான சோழ வீரர்கள் எந்த நிலையையும் சமாளிக்கச் சித்தமாய் உருவிய வாட்களுடன் வாயிலை அடைத்து நின்று கொணடிருந்தார்கள். ''பார்த்தீர்களா மகாராஜா! நீதி தவறும்

தலத்துக்கு வரும் அண்ணன் பல்லவராயன் பைத்தியக்காரத்தனமாக வரமாட்டான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். முன்னறிவிப்புடன் உங்களைப் பேட்டி கண்டிருந்தால் நீங்கள் தூதனென்றும் பாராமல் என்னைக் கொலை செய்ய ஆட்களை ஏவியிருக்கலாம். ஆகையால் தான் யாருமறியாமல் உங்கள் கூட்டத்துடனேயே உள்ளே வந்தேன். வெளியிலும் காவல் வைத்தேன். இப்போ சொல்லுங்கள், சோழ மன்னருக்குத் தாங்கள் அளிக்கும் பதில் என்ன?'' என்று வினவினான்.

வீரபாண்டியன் உடனே பதிலேதும் சொல்லவில்லை. கோபத்தால் நடுக்கம் கொடுக்கச் சற்று நேரம் நின்ற இடத்திலேயே நின்றான். பிறகு மரியாதையைக் காற்றில் பறக்க விட்டு, ''டேய் பல்லவராயா! சோழநாடு என்னிடம் வாலை ஆட்டினால் அதன் வாலைத் துண்டித்து விடுவேனென்று சொல். அவன் உள்நாட்டில் படை திரட்டினால் நான் சிங்களத்திலிருந்து இன்னும் அதிகப் படைகளைக் கொண்டு வரமுடியுமென்று சொல். சோழ மன்னன் அரசுக தந்திர அரசாக நிலைக்கவேண்டுமானால் பாண்டிய நாட்டுக்கு உடனே பணிய வேண்டுமென்று சொல். பலம் மிக்க பாண்டிய நாட்டுடன் நல்லுறவு வேண்டுமென்றால் உன்னைப் போன்ற வெறியர்களை அமைச்சர்களாகவும் சேனாதிபதியாகவும் வைத்துக் கொள்ள வேண்டாமென்று சொல். சிங்களத்துத் தண்டநாயகரை என் நாட்டைவிட்டு அனுப்புமுன்பு என் உயிரை விட்டு விடுவேன் என்று சொல்....'' என்று விடுவிடு என்று பேசிக் கொண்டு போன வீரபாண்டியனை இடைமறித்த பல்லவராயன், ''தாங்கள் உயிரைத் தங்களிஷ்டப்படி எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் நாட்டை?'' என்று வினவினான்.

''அதையும் என்னிஷ்டப்படி செய்து கொள்வேன்.''

''அப்படியானால்?''

''உன் மன்னன் நிபந்தனைகள் எதையும் ஏற்க முடியாது.''

''அப்படியானால் போர்தான் மகாராஜா!''

''சித்தமாயிருக்கிறேன்.'' அழுத்தமாகப் பதில் கூறினான் வீரபாண்டியன்.

26. மாயவலை

முன் கோபத்தாலும் பதட்டத்தாலும், மந்தபுத்தியுள்ளவர்களுக்குள்ள இயற்கையான அசட்டுத் தைரியத்தாலும், போருக்கு சித்தமாயிருப்பதாக வீரபாண்டியன் பதிலிறுத்த மாத்திரத்தில் தான் வந்த காரியம் முடிந்ததென்ற காரணத்தால் இதழ்களில் தவழ்ந்த புன்சிரிப்புடன், ''தங்கள் சித்தம் மன்னவா. மீண்டும் நாம் போர் அரங்கில் சந்திப்போம்'' என்று கூறிவிட்டுச் சுற்றுமுற்றுமிருந்தோரை இகழ்ச்சியாகப் பார்த்துவிட்டு மரியாதைக்காக அரியணையை நோக்கித் தலை தாழ்த்திவிட்டுக் கம்பீரமாக வெளியே நடந்து சென்றான் பல்லவராயன். அவனுடன் பாண்டிய நாட்டு அமைதியும் வெளியே நடந்து விட்டதென்பதை அறிந்துகொண்ட அபராஜிதன் ஏக்கம் கலந்த பெருமூச்சொன்றை விட்டான்.

பல்லவராயன் வெளியேறிய பின்பு சபை முழுதும் புயலுக்குப்பின் அடையும் அமைதியைப் பெற்றிருந்தது. வீரபாண்டியன் சீற்றம் அடுத்தபடி யார்மீது பாயப் போகிறதோ என்று சபையிலிருந்த அனைவரும் எதிர்பார்த்து நின்றனர். அண்ணன் பல்லவராயன் போன திசையைப் பார்த்துக் கொண்டிருந்த வீரபாண்டியன், சிங்கள வீரர்களை விட்டுப் பல்லவராயனையும் நிர்மூலம் செய்துவிட்டாலென்ன என்று ஒரு கணம் நினைத்தான். அதனால் உண்டாகக்கூடிய ஆபத்து உடனே மனத்தில் எழுந்து நின்றது. அப்படி ஏதாவது செய்யும் பட்சத்தில் மக்களடமிருந்து தன்னைக்காப்பாற்ற யாராலும் முடியாது என்பதை நினைத்துத் தன்னைச்சிறிது அடக்கிக் கொண்ட வீரபாண்டியன், அபராஜிதன் மீது கண்களைத் திருப்பினான். பிறகு தன் வீரர்களை நோக்கி, ''ஏன்

இவனை இன்னும் கைது செய்யவில்லை?'' என்று கர்ஜித்தான்.

அதுவரை நிகழ்ந்த சம்பவங்களால் மெய்மறந்திருந்த வீரர்கள் அரசன் உத்தரவை நிறைவேற்ற அபராஜிதனைக் கைது செய்ய அவன்மீது கையை வைக்கப்போன சமயத்தில், ''சற்றுப் பொறுங்கள் மகாராஜா'' என்று எழுந்தது இலங்காபுரனின் குரல்.

இலங்காபுரன் தனக்காகப் பரிந்து பேச முன்வந்ததைப் பார்த்த அபராஜிதன் விழிகள் ஆச்சரியத்தால் மலர்ந்தன. வீரபாண்டியனும் ஆச்சரியத்துடன் இலங்காபுரனை நோக்கி ''எதற்காகப் பொறுக்க வேண்டும் மாமா?'' என்று வினவினான்.

அத்தனை பேருக்கெதிரில் மன்னன் தன்னை மாமா என்று அழைத்ததை இலங்காபுரன் ரசிக்காவிட்டாலும் மெள்ளத் தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு, ''மகாராஜா! இன்னும் அபராஜிதன் விசாரிக்கப்படவில்லை. அவன் செய்த குற்றம் என்ன என்பதும் தெரியவில்லை'' என்றான்.

வீரபாண்டியன் இதழ்களில் இகழ்ச்சியும் கோபமும் கலந்து தாண்டவமாடின. ''அவன் குற்றம் எனக்குத் தெரியும்'' என்றான் மன்னன்.

''தங்களுக்குத் தெரிந்தால் போதாது மன்னவா! பாண்டிய நாட்டில் நீதி ஸ்தலமிருக்கிறது. நீதி வல்லுநர்கள் இருக்கிறார்கள். அதற்காக மண்டபமும் இருக்கிறது'' என்றான் அபராஜிதன் அச்சம் எள்ளளவும் கலக்காத குரலில்.

''அந்த மண்டபத்தில்தான் நாமிருக்கிறோம் நீதியில் வல்லவரும் இதோ இருக்கிறார்கள், உன் குற்றம் மற்றவருக்கும் தெரிய வேண்டுமானால் இதோ சொல்கிறேன் கேள். நீலமலை சதி நடந்ததே தெரியுமா உனக்கு?''

''நன்றாகத் தெரியும். இதைப்பற்றி நானே தங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன்.''

''அந்தச் சதிகாரர்களில் நீயும் ஒருவன்,''

இந்தப் பதிலைக் கேட்ட அபராஜிதன் முகத்தில் மட்டுமன்றி இலங்காபுரன் முகத்திலும் சற்றுச் சந்தேகச் சாயை படர்ந்தது. ''யார் சொன்னது தங்களுக்கு?'' என்று வினவினான் அபராஜிதன்.

''யார் சொன்னாலென்ன? சதி நடந்தது உண்மை. அதில் நீயும் ஒருவன் என்பது உண்மை. அங்கிருந்து தப்பும்போது நீ சிங்கள வீரர்களால் தாக்கப்பட்டுக் காயமடைந்ததும் உண்மை'' என்றான் வீரபாண்டியன். இந்தத் தகவல்கள் மன்னனுக்கு எப்படிக் கிடைத்ததென்பதை அறியாவிட்டாலும் ஓரளவு மன்னன் விஷயத்தை அறிந்திருக்கிறானென்ற காரணத்தால் அபராஜிதன் திட்டமாகவே பேசலானான்: ''மன்னவா! சதி நடந்தது உண்மை. நான் அங்கே போனதும் உண்மை. ஆனால், சதியில் கலக்க நான் செல்லவில்லை. சதியைக் குலைக்கச் சென்றேன்.''

''அதற்கு ருசு?''

''ருசு நான் அளிக்க வேண்டுமா?''

''அளிக்காமல் நீ சொல்வது உண்மையென்று எனக்கு எப்படித் தெரியும்?''

''மதுரையின் தெருக்களில் தெரியவில்லையா உங்களுக்கு? ஆட்டம் கொடுத்திருக்கும் அச்சிம்மாசனத்தை நான் அடைய விரும்பினால் சதி செய்யவேண்டிய அவசியமில்லை மகாராஜா. மதுரையின் வீதிகளில் சென்று மக்களை அழைத்தாலே போதும் மறுவிநாடி மன்னனாகிவிடுவேன். அது உண்மையென்பது உங்கள் மாமாவுக்கும் தெரியும் ஏன், சற்றுமுன் உங்களுக்கே தெரிந்திருக்க வேண்டும். மக்கள் குரலிலிருந்து தெரிந்திருக்கவேண்டும். இந்தச் சிம்மாசனத்தை அடைய நான் ஆசைப்பட்டால் மக்கள் எழுச்சியை இருமுறை அடக்குவானேன்! இவையெல்லாம் ருசு அல்லவா?'' என்று உணர்ச்சி ததும்பும் குரலில் கணீரெனப் பேசினான் பாண்டிய சேனாதிபதி.

ஆனால், களங்கப்பட்ட வீரபாண்டியன் உள்ளம் உன்னதை உணர இஷ்டப்படவில்லை. "அபராஜிதா! நீ சொல்வது உண்மையே என்று வைத்துக்கொண்டாலும் உன்னை உயிருடன் விடுவது பிசகு. ஓர் உறையில் எப்படி இரண்டு வாட்கள் இருக்கமுடியாதோ அப்படியே ஒரு நாட்டில் அரசாளத் தகுந்த இரு உறவினர் இருக்க முடியாது. அப்படி இருந்தால் நாடு இரண்டுபடும். ஆகவே பாண்டிய நாட்டின் நன்மையை உத்தேசித்தும் உன்னை ஒழிப்பதுதான் முறை" என்று கூறிவிட்டு, "டேய்! இவனை வெளியே கொண்டுபோய் வைத்திருங்கள். நீதி வல்லுநரைக் கலந்து கொண்டு முடிவைச் சொல்லுகிறேன்" என்று வீரர்களுக்கு உத்தரவிட்டான் வீரபாண்டியன். இரு வீரர்கள் பக்கங்களில் ஈட்டி தாங்கிவர அலட்சியமான பார்வையுடன் வெளியே சென்றான் அபராஜிதன்.

நீதி எப்படி போகுமென்பது நீதி வல்லுநருக்கு மட்டுமன்றி மண்டபத்திலிருந்த மற்ற வீரர்களுக்கும் புரிந்துதானிருந்தது. மண்டபத்தின் கதவுகள் சாத்தப்பட்டவுடன் வீரபாண்டியன் மீண்டும் அரியணையில் அமர்ந்து, "மாயா! நீதி வல்லுநரும் நான் சொன்னதைத்தானே சொல்ல முடியும்?" என்று இலங்காபுரனை நோக்கி வினவினான்.

இலங்காபுரன் சிறிதுநேரம் ஆழ்ந்த யோசனையிலிறங்கி விட்டுப் பிறகு சொன்னான்: "மன்னவா, இவனைக் கொல்வதில் ஆபத்திருக்கிறது."

"என்ன ஆபத்து?"

"மக்கள் மீண்டும் கொதித்து எழுந்தால் சமாளிக்க நமது சைனியத்தால் முடியாது."

"ஏன் முடியாது?"

"தங்கள் சைனியமும் மக்களுடன் சேர்ந்துவிடும். மீதியிருக்கும் சொற்ப சிங்கள படையினர் இரவில் எந்த நேரத்திலும் வெட்டப்படுவார்கள்."

வீரபாண்டியனும் நீண்டநேரம் யோசித்தான். பிறகு கேட்டான். "வேறு என்ன செயயலாம் மாமா?" என்று

"ஆபத்தை அருகில் வைத்துக்கொள்ளக்கூடாது"

"அப்படியென்றால்?"

"தூர அனுப்பிவிடவேண்டும்"

"நீங்கள் சொல்வது புரியவில்லையே."

"நாடு கடத்திவிடுங்கள் பாண்டிய எல்லைக்குள் மீண்டும் காலை வைத்தால் ஒழித்துவிடுவதாக உத்தரவிடுங்கள். அவன் மக்கள் கண்களிலிருந்து நீண்டகாலம் மறைந்து விட்டால் மக்கள் அவனை மறந்து விடுவார்கள். மக்களுக்கு மறதி அதிகம் மன்னவா!"

இலங்காபுரன் யோசனையை ஏற்க முதலில் வீரபாண்டியன் இஷ்டப்படாவிட்டாலும் இறுதியில் ஒப்புக் கொண்டான். அந்த உத்தரவை நிறைவேற்றச் சென்ற இலங்காபுரன் வெளியே நின்ற அபராஜிதனை அணுகி, "அபராஜிதா! உன் உயிர் தப்பியது. நீ இன்றிரவே மதுரையை விட்டுப் புறப்பட வேண்டும். இரண்டு நாட்களுக்குள் பாண்டிய எல்லையைத் தாண்டியாக வேண்டும்" என்றான்.

"என்ன! நாடு கடத்தும் உத்தரவா!"

"ஆம்."

அபராஜிதன் பதிலேதும் சொல்லாமல் மிகுந்த துக்கத்துடன் தனது மாளிகையை நோக்கி நடந்தான். அரண்மனை வாசலில் குதிரையைப் பிடித்துக்கொண்டு அவன் வரவுக்காகக் காத்திருந்த பையனைக் கூடக் கவனிக்காமல் நடந்தே சென்றான். பாண்டிய நாட்டைவிட்டுப் போக வேண்டுமே என்ற துக்கம் நெஞ்சை அழுத்தத் தன் மாளிகையை அடைந்த அபராஜிதன் நேராகத் தன் படுக்கையறைக்குச் சென்று வாளை கழற்றி ஒரு பக்கமாக எறிந்து விட்டு மஞ்சத்தில் தொப்பென விழுந்து வெகு நேரம் யோசித்த வண்ணம் படுத்திருந்தான். இரவு ஏறத் தொடங்கியது. இருளும் நன்றாக சூழ்ந்துவிட்டது. கண்ணை மூடி மஞ்சத்தில் படுத்துக்கொண்ட அபராஜிதன்

மனத்தில் என்னென்ன எண்ணங்களோ அலைமோதின. உள்ளே எழுந்துகொண்டிருந்த உணர்ச்சிகளின் காரணமாகப் பெருமூச்சொன்றை உள்ளே இழுத்தான். திடீரென எழும்பிய ஜாதிமல்லிகையின் வாசனை அவனைக் கம்மென்று சூழ்ந்து கொண்டது. இதேது இத்தனை வாசனை என்று கண்களைத் திறந்தான் அபராஜிதன். அவன் படுக்கையில் அவனை மிகநெருங்கி அப்சரஸ்போல் அபாரமான எழிலுடன் உட்கார்ந்திருந்தாள் சிங்களத்துப் பைங்கிளி.

மனோநிலை அத்தனை கலவரப்பட்ட அந்தச்சமயத்தில் கூட மாதவியின் மனோகர எழிலைக் கண்டு மயங்காமலிருக்க அபராஜிதனால் முடியவில்லை. அமைதியை நாடிய தன் காரணமாக அறை விளக்குகளை ஏற்றாமலே படுத்திருந்தால் அறையில் நிலவிய இருட்டு அவன் நிதானத்தைக் குலைப்பதற்குக் காரணமாயிருந்தது. மாதவி மஞ்சத்தின் ஓரத்தில் உட்காராமல் அவனை, நன்றாக நெருங்கி தன் இடையுடன் அவன் இடுப்பு லேசாக உராயும்படி உட்கார்ந்திருந்தாள். தோளுக்காக வளைந்து எடுப்பான அவள் மார்பின்மேல் சற்று தவழ்ந்து தொங்கிய நீண்ட அவள் பின்னல்கூட அபராஜிதன் பக்கவாட்டில் பட்டு அவள் அசையும் போதெல்லாம் அவன் உடலைத் தொட்டு ஏதோ ரகசியத்தைச் சொல்லிக் கொண்டிருந்தது. உடலை அரைகுறையாகச் சுற்றிப் பாதி இடங்களில் பட்டும் பாதிஇடங்களில் நெகிழ்ந்தும் கிடந்த அவள் சேலை முந்தானைப் பாகம் மஞ்சத்தில் கிடந்த அவன் வலதுகையில் புரண்டுகொண்டிருந்தது. அறையில் விளக்குகள் இல்லாவிட்டாலும் தாழ்வாரத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்கு ஒன்றன் வெளிச்சம் பாதி திறந்திருந்த ஒரு சாளரத்தின் வழியாகப் பட்டையாக அவள்மீது பாய்ந்து. அவள் உடலில் இடது பாகத்துக்கு மட்டும் ஒளி பாய்ச்சியிருந்தால், பாதி இருளும் பாதி ஒளியுமாய், பாதி தேவாம்சமும் பாதி அசுர அம்சமும் கலந்து, பிரளயகாலப் பதுமைபோல் காட்சியளித்தாள்

மாதவி. அவள்மேல் விழுந்திருந்த அந்த அரை வெளிச்சம் கூட ஒரே நிலையில் இல்லாமல் தாழ்வாரத்துக்குள் தலை நீட்டிக்கொண்டிருந்த ஒரு வேப்பங்கிளையின் அசைவால் அவ்வப்பொழுது மறைந்து பிரகாசித்ததால் மாதவியின் உடல் வனப்பு அபராஜிதன் கண்ணுக்குத் தோன்றித் தோன்றி மறைந்து அவன் சித்தத்தைப் பெரிதும் கலக்கிக் கொண்டிருந்தது. அவள் பார்வையிலிருந்த மயக்கத்தை, அவள் செவ்விய பெருத்த இதழ்கள் உதிர்த்துக்கொண்டிருந்த உன்மத்தச் சிரிப்பு ஒன்று அதிகப்படுத்தியது. இத்தனைக்கும் தூபம் போடுவது போலிருந்தது ஜாதி மல்லிகையின் வாசனை.

மல்லிகைக்குத்தான் இத்தனை வாசனையா அல்லது மாதவி வைத்திருப்பதால் அதற்கு இத்தனை வாசனை ஏற்பட்டிருக்கிறதா என்று ஆராய்ந்தான் அபராஜிதன். திறந்த கண்களை அவள் முகத்திலிருந்து வாங்காமலே, கண்களும் நீண்ட நேரம் நிலைத்து நிற்கவில்லை. அவன் உள்ளத்தைப் போலவே சலனமடைந்து அவள் உடலெங்கும் பாய்ந்து அவளை ஆராயத் தொடங்கின. மேன்மேலும் அவளது எழிலின் ஒவ்வோர் அம்சத்தையும் அலசின. பூவின் மதுவை சாப்பிடு முன்பாக, பூவைச் சுற்றிச் சுற்றி வரும் வண்டுகளைப் போல அவன் இரு கருவிழிகளும் தன் முகத்தையும் உடலையும் வலம் வந்ததைக் கண்ட மாதவி வழக்கம்போல் களுக்கென்று மெல்லச் சிரித்தாள்.

அந்த சிரிப்புக்கூட அவன் சிந்தனை அலைகளைக் கலைக்க முடியவில்லை. அவன் மனம் பூராவும் மதுரையையும் பாண்டிய நாட்டையும் காற்றில் பறக்கவிட்டு அந்த மோகனாங்கியின் வசீகர எழிலிலேயே சிக்கிக்கிடந்தது. வாளைப் பிடிப்பதிலோ மனிதர்களைக் கொல்வதிலோ சிறிதும் கூச்சம் காட்டாத அவன் கை, அவள் சேலை முந்தானையைப் பிடித்துக்கொண்டு அந்தச் செய்கையில் கூட ஒரளவு கூச்சத்தை அடைந்து நின்றது. பின்பு அந்தக்

கையே மெள்ளத் துணிவுடன் எழுந்து அவள் முகத்தருகில் முத்துச்சரத்தோடு தொங்கிக்கொண்டிருந்த சுட்டியை சரிப்படுத்திவிட்டது.

மாதவி இன்னும் சற்று நெருங்கி உட்கார்ந்து தன் கைகளிலொன்றை அவன் உடலுக்கு அப்புறத்தில் வைத்துக் கொண்டாள். இப்படி அவள் இரு கரங்களுக் கிடையே கிடந்த அபராஜிதன் ஒருமுறை தன்னை உதறிக் கொண்டு எழுந்திருக்க முயன்றான். அப்படி முயன்றதன் காரணமாக அவன் உடலுடன் தன் உடல் உராயும் ஸ்திதிக்கு வந்து விடவே மீண்டும் மஞ்சத்தில் விழுந்து, ''மாதவி! வேண்டாம் மாதவி!'' என்றான்.

''எது வேண்டாம்?'' என்று சொல்லிக்கொண்டே மாதவி அவன் மார்புக்காகத் தாழ்ந்து தன இரு கைகளை யும் இரு புஷ்ப மாலைகள்போல் அவன் கழுத்தைச் சுற்ற விட்டாள். அவள் பூக்கரங்களும் பூவுடலும் மார்பில் துவண்டதால், மாய வலைக்குள் பூரணமாகச் சிக்கி நெறியை அறவே கைவிடும் நிலைக்கு வந்துவிட்டான் அபராஜிதன். அவனை மீளா நரகத்திற்கு இழுக்க இச்சைக்கொண்ட மாதவி அவன் கன்னத்தோடு தன் கன்னத்தைப் பதிய வைத்துக்கொண்டு காதுக்கருகில் தன் இதழ்களைத் திருப்பி அந்தரங்க எண்ணங்கள் ஒலியிலேயே அலைபாய, ''அபராஜிதா!'' என்று மிக மெதுவாக அழைத்தாள்.

27. உன்னையே மன்னனாக்குவேன்!

உணர்ச்சி, நெறி, அறிவு இம்மூன்றையும் விளக்கின் சுடர், திரி, எண்ணெய் ஆகிய மூன்றுக்கும் ஒப்பிடலாம். எண்ணெய் போதிய அளவு இருக்கும் வரையில்தான் சுடர் விளக்கின் முகப்பிலேயே அடங்கிநின்று தன் பணியை ஒழுங்காகச் செய்கிறது. உணர்ச்சிகளின் தன்மையும் இப் படித்தான். அறிவாகிற எண்ணெய் நெறியாகிற திரியின்

டே பாய்ந்து நிற்கும் வரையில்தான் உணர்ச்சியாகிற சுடரும் கட்டுக்கடங்கி நிற்கிறது. மனிதஎண்ண விளக்கில் அறிவு மட்டும் வற்றிவிட்டால் உணர்ச்சிச் சுடர் பெரி தாகக் கிளம்பிக் கட்டுமீறிப் பின் நோக்கிப் பாய்ந்து படர்ந்து எரிந்து நெறியென்னும் திரியைச் சுட்டுச் சாம்ப லாக்கி விடுகிறது. ஆகவே, எந்தச் சந்தர்ப்பத்திலும் நெறி யுள்ளவர்கள் அறிவுப்பக்கமாகத் திரும்பி அதை அடியோடு வற்றவிடாமல் பார்த்துக் கொள்கிறார்கள். உணர்ச்சி களுக்கு இடங்கொடுப்பவன் அறிவை அடியோடு வற்ற விட்டு நெறியையும் உணர்ச்சிகளுக்குப் பலி கொடுத்துவிடுகிறான். இந்தக் காரணத்தினால்தான் பழைய கிரந்தங்களில் நெறியுள்ளவர்களைத் தூங்கா விளக்குக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். மேலிருந்து சதாசர்வ காலம் எண்ணெய் பாய்ந்து கொண்டிருக்கும் தூங்கா விளக் கைப்போலவே நெறியுள்ளவர்களும் எப்பேர்ப்பட்ட இக்கட்டான சமயத்திலும் அறிவை பயன்படுத்தி நெறியைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள். இது பெரிய விசித்திரம் தான் ஆனால் அத்தகைய விசித்திரம் மனித சரித்திரத்தில் எண்ணற்ற முறைகள் ஏற்பட்டிருக்கின்றன.

அத்தகையதொரு விசித்திரத்தாலும் சமயத்தில் கை கொடுத்த அறிவின் பலத்தாலும்தான் அன்று அபராஜி தனும் தப்பினான்.

எல்லையற்ற மயக்கம் தரும் மாதவி பேரெழில் பெரும் மாயப் போர்வையாக எழுந்து அவன் அறிவைக் கவர்ந்து கொண்டதாலும். கிள்ளையிலும் இனிய சொற்கள் அவன் காதுக்கு வெகு அருகில் ஒலித்ததாலும், புஷ்பத்திலும் மெல்லிய இரு இதழ்கள் அவன் கன்னத்தில் புதைந்து கிடந்ததாலும், அவள் கரங்களிரண்டும், இரண்டு சர்ப்பங் கள் போல் வழவழப்புடன் அவன் உடலைத் தழுவி நின்ற தாலும், அபராஜிதனுடைய உணர்ச்சிகள் பெரிதாகச் சுடர்விட்டு அவன் உடலைப் பலவிதமாகச் சித்திரவதை செய்துகொண்டிருந்தன. அந்த மாயக்கன்னியின் சாகசத்

தாலும் அவனது அங்க விசேஷங்களின் இணையற்ற சக்தியினாலும், அபராஜிதனின் அறிவு சுக்கல் சுக்கலாகத் தெறித்துவிடும் நிலைக்கு வந்ததன்றி, மௌனமான நிசப்தமான அந்தச் சூழ்நிலையில் அவன் உணர்ச்சிகளும் பேரிரைச்சலாக உள்ளத்தே கிளம்பி சொர்க்கமா நரகமா என்று சொல்லமுடியாத ஒரு சொப்பன உலகத்துக்கு அவனை வெகுவேகமாக இழுத்துச சென்றுகொண்டிருந்தன.

காமுகனையும் ஞானியையும் பெரியோர்கள் ஒன்றாகத்தான் கருதுகிறார்கள் இருவரும் தன்னிலை மறந்து. நின்ற காரணத்தால், மாதவி அழைத்த அழைப்புக்கு அபராஜிதன் பதிலேதும் சொல்லவில்லை. அவன் புத்தி ஒருநிலையில் இல்லாமல் எங்கெங்கோ சென்றுகொண்டிருந்தது. கொந்தளிக்கும் கடலில் அகப்படும் சில மரக்கலங்களுக்கு அதிர்ஷ்டவசமாகத் தரை தட்டுப்படுவது போல் கொந்தளித்து நின்ற அவன் உணர்ச்சியில் மெள்ள மெள்ள உதயமாகத் தொடங்கியது கார்குழலியின் எழிலுருவம். அந்த உருவம் எழுந்ததும் அபராஜிதன் உணர்ச்சிகள் வேறுபுறமாக இழுக்கப்படவே மார்மேல் துவண்டு கிடந்த மாதவியை விட்டு அவன் மனம் கன்னிமாடத்தின் காட்டிலும் கட்டிடத்திலும் நடந்த நிகழ்ச்சிகளுக்காகத் தாவத் தொடங்கியது.

உடல் வளைந்து தலை தாழ்த்தி தன் முகத்துக்கு எத்தனை அருகில் வந்து கார்குழலி தன் காயத்தைப் பரிசோதித்தாள் என்பதை அபராஜிதன் நினைத்துப் பார்த்தான். மஞ்சள் தீட்டி தன் கண்களுக்கு எதிரே நின்ற கழுத்து, சற்றுக் கீழே துலங்கிய வளைப்புப் பிரதேசம், இத்தனையிலும் எத்தனை கவர்ச்சி இருந்தது என்ற எண்ணங்கள் அவன் சித்தத்தே எழுந்தன. தான் விழித்த சற்று நேரத்திற்கெல்லாம் அன்பு பாய்ந்து நின்ற அவள் அம்புஜ விழிகள் தன் விழிகளை எத்தனை காந்தசக்தியுடன் கவர்ந்து நின்றன என்பதையும் அபராஜிதன் எண்ணிப் பார்த்தான். கருணை சொட்டிய அந்த விழிகளெங்கே?

மயக்கம் தரும் மாதவியின் விழிகளெங்கே? உறுதி காட்டிய அந்த உதடுகளெங்கே? உன்மத்தம் அளிக்கும் இந்த உதடுகளெங்கே? பால்வடியும் அந்தக் குழந்தை முகமெங்கே? காமம் சொட்டும் இந்த சாகசக் காரியின் வதனமெங்கே? கருத்தை உருக்கி ஒரே நிலையில் இருக்கும் கார்குழலியின் தெய்வீக உருவம் எங்கே, கருத்தைக் குலைத்து நாலா பக்கத்திலும் சிதறவிடும் மாதவியின் காமச்சிலை எங்கே?

இப்படியாகத் திரும்பத் திரும்பத் தன் வாழ்க்கையில் மோதிய இரு பெண்மணிகளின் உருவங்களையும் குணாதிசயங்களையும் ஒப்பிடத் தொடங்கியதன் காரணமாக அபராஜிதன் அறிவும் ஓரளவு சுயநிலைக்கு வரத்தொடங்கியது. காட்டாற்று வெள்ளத்தில் துரும்பென அடித்துச் சென்றுகொணடிருந்த தன் ஆத்மாவைக் காப்பாற்றுவதற்காகவே தேவதையான கார்குழலியைத் தன் சித்தத்தில் விதி மிதிக்கவிட்டதோ என்று அந்தச் சமயத்தில் அபராஜிதன் நினைக்கலானான் அப்படிச் சூழ்நிலை திரும்பத் திரும்ப, அவன் கைகளும் மாதவியின் பக்கவாட்டிலிருந்து மெள்ள அகன்று மெத்தைமேல் தொப்பென விழுந்தன.

உணர்ச்சி வெள்ளத்தில் துவண்டுகிடந்த அவன் உடல் சற்று சரிப்படுவதிலிருந்தும், கண்ணைத் திறந்து பார்த்த அவன் பார்வையில் பழைய மயக்கம் மறைந்து நிதானம் துலங்கியதிலிருந்தும் அவன் அறிவு தன்னைவிட்டு வேறு ஏதோ மார்க்கத்தில் சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டதென்பதை அறிந்துகொண்ட பைங்கிளி, அவன் மேலிருந்த கைகளை அகற்றாமலும் தன் கன்னத்திலிருந்து அவன் கன்னத்தை விடுவிக்காமலும் கேட்டாள், ''என்ன யோசிக்கிறாய் அபராஜிதா?'' என்று.

அபராஜிதன் இதழ்களில் துக்கமான புன்முறுவல் ஒன்று படர்ந்தது. ''நாமிருக்கும் நிலையைப்பற்றி யோசிக்கிறேன் மாதவி'' என்று மெள்ள பதில் சொன்னதோடு அவளை லேசாக விலக்கி கொண்டு எழுந்திருக்கவும் முயன்றான்

மாதவி அவனை விடவில்லை. மெல்ல அவன் கரங்களைத் தன் கரங்களால் அழுத்திப் பிடித்து, ''நாமிருக்கும் நிலையில் என்ன தவறு இருக்கிறது'' என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

''எது தவறு, எது தவறல்ல என்பது அவரவர் நோக்கத்தைப் பொறுத்தது மாதவி.''

''நீ சொல்வது புரியவில்லை.''

''அப்படிப் புதிர் ஒன்றும் நான் போடவில்லையே. எனக்குத் தவறாகத் தோன்றுவது உனக்குத் தவறாகத் தோன்றாதிருக்கலாம். நம்மிருவருக்கும் சரியென்று தோன்றுவது உலகத்துக்குத் தவறாகத் தோன்றலாம்.''

பைங்கிளி அவன் சொன்ன பதிலின் முதற்பகுதியை விட்டுவிட்டுப் பிற்பகுதியை எடுத்துக்கொண்டு, ''உலகத்தைப்பற்றி நாம் கவலைப் படுவானேன்?'' என்று கேட்டாள்.

''நாம் உலகத்தில் இருப்பதால்'' எனறு பதில் சொன்னான். அபராஜிதன்.

''நம் உலகம் வேறு. நம்மைப் பழிக்கக் கூடிய உலகம் வேறல்லவா?''

அபராஜிதன் படுத்த நிலையிலிருந்தே அவளைக் கூர்ந்து நோக்கினான். பைங்கிளி சிரித்துக்கொண்டே சொன்னாள். ''அபராஜிதா! காதல் உலகம் தனி, மனிதர் நிரம்பிய இந்த பூவுலகம் தனி. காதலர் ஒன்று படும்போது தங்களுக்குக்கென ஒரு தனி உலகத்தைச் சிருஷ்டித்துக் கொள்கிறார்கள். அந்த உலகத்தில் பிறர் வம்புக்கு இடமில்லை காதல் ஒன்றைத் தவிர இங்கு வேறெதற்குமே இடமில்லை''

அபராஜிதன் சற்று ஏதோ யோசித்துவிட்டுச் சொன்னான்: காமம் வேறு; காதல் வேறு மாதவி.''

இதைக் கேட்டதும் மாதவியின் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. ''என்ன அறிவீனமான பேச்சு அபராஜிதா! காமம் வேறு காதல் வேறு என்பது வெறும் பிரமை. அறிவு மிகுந்த உங்கள் வள்ளுவர் கூடக் காமத்துப்

பால் எழுதினாரே தவிர காதற்பால் எழுதவில்லையே'' என்றாள் மெதுவாக.

தர்க்கம் ஏறஏற மாதவியின் மாயவலையினின்று நன்றாக மீண்டுவிட்ட அபராஜிதன், பதிலுக்கு அவளைத் தன் மீதிருந்து தூக்கிவிட்டு மஞ்சத்தில் எழுந்து உட்கார்ந்தான் பிறகு அவளை நோக்கி, ''மாதவி! வள்ளுவரை விட்டுவிடு. நீயே யோசித்துப் பார். காதல் அறிவைப் பற்றியது. காமம் உணர்ச்சியைப் பற்றியது. உடலைப் பற்றியது'' என்றான்

''உடலில்லாவிட்டால் அறிவில்லை அபராஜிதா! காமமில்லாவிட்டால் காதலுமில்லை'' என்றாள் மாதவி அவன் தோள்மேல் சாய்ந்துகொண்டே.

அவள் உடலை மெள்ளச் சற்று அப்புறமாக நகர்த்தி விட்டுக் கட்டிலிலிருந்து எழுந்த அபராஜிதன் அவள் எதிரே சற்று நேரம் நின்று அவளை உற்றுப் பார்த்தான். இணையற்ற உடலழகும் அறிவும் நிரம்பிய இந்தப் பெண் மட்டும் நெறி படைத்தவளாயிருந்தால் மாதர்குலத் திலகமாக விளங்குவாளே என்று நினைத்துப் பெருமூச்சு விட்ட அபராஜிதன், ''தர்க்கத்தால் என்ன பயன் ஏற்படப் போகிறது மாதவி? என் உள்ளத்தில் தற்சமயம் காதலுக்கோ காமத்துக்கோ இடமில்லை. அப்படியே நான் உன்னைக் காதலித்தாலும் உன் நலனை உத்தேசித்தே இந்தச் சமயத்தில் உன்னைக் கைவிடுவதுதான் நியாயமாகும்.''

''என் நலனா! என்ன அது?'' பைங்கிளியின் கண்களில் ஆச்சரியம் எழுந்து நின்றது.

'நான் அரசனால் அவமதிக்கப்பட்டவன். நாடு கடத்தப்பட்டவன். எங்கு போவேனோ எங்கு அலைவேனோ சொல்ல முடியாது. அந்த வாழ்க்கைக்கு உன்னை இழுப்பது தவறாகும். மன்னனால் நான் வெறுக்கப்பட்டவன்; நீ விரும்பப்பட்டவள். மன்னனுக்காக மதுரையை அரசாளும் இலங்காபுரன் மருமகள். அப்பேர்ப்பட்ட நீ அரண்மனையின் போக போக்கியங்

களை விட்டு நாடோடியாகத் திரியப்போகும் என்னை நாடுவதில் அர்த்தமென்ன இருக்கிறது?'' என்று சொல்லி முடித்துவிட்டு வெளித் தாழ்வாரத்துக்காக நகர்ந்தான் அபராஜிதன். வெளித் தாழ்வார விளக்கு அவனையும் அவனைத் தொடர்ந்து பின்னால் வந்துகொண்டிருந்த மாதவியையும் பார்த்து வெட்கப்படுவதுபோல் சற்று மங்கி எரிந்தது. அதை லேசாக மறைத்து நின்ற வேப்பங்கிளைகூட வெப்பத்துடன் வெளியே வரும் அபராஜிதனுக்கு விசிறுவதுபோல் காற்றில் லேசாக அசைந்தது.

காற்றில் அசைந்த அந்த வேப்பங்கிளையைப் பிடித்துக் கொணடு வெளியே வெறித்து நோக்கினான் அபராஜிதன். தூரத்தே தெரிந்த மலைகளுக்கு அப்பாலுள்ள மேலைமங்கலத்தில் கார்குழலி இருக்கிறாளென்ற நினைப்பு பின்னால் தன் தோளை தழுவி நின்ற மாதவியை அறவே மறக்கச் செய்தது. கார்குழலியின் பிற்கால கதியையும் அவன் வீரபாண்டியன் மனைவியானால் படக்கூடிய அவதியையும் நினைத்து மனம் புழுங்கவே ஏக்கமான பெருமூச்சு ஒன்றும் அவனிடமிருந்து வெளிபட்டது.

அந்த நிலையிலிருந்த அவனைச் சற்று அசைத்த பைங்கிளி, ''அபராஜிதா! உன் பேச்சில் தவறுகள் இருக்கின்றன'' என்று சுட்டிக் காட்டினாள்.

ஒரு கையால் வேப்பங்கிளையைப் பிடித்துக்கொண்டு அவனை நோக்கித் திரும்பிய அபராஜிதன், ''என்ன! என் பேச்சில் தவறா? எது தவறு மாதவி?'' என்று வினவினான்.

''நீ நாடோடி என்பது தவறு.''

''நாடு கடத்தப்பட்டவன் நாடோடியில்லாமல் வேறு எப்படியிருக்க முடியும்?''

''நாடு கடத்தும் உத்தரவு மன்னனிட்டது தானே?''

''ஆமாம்.''

''அதை மாற்றிவிட்டால் போகிறது.''

''உன் சிபாரிசினாலா!''

''சிபாரிசு எதற்கு?''

''மன்னனிடம் நீ சொல்லித்தானே உத்தரவை மாற்ற முடியும்?''

''மன்னனிடம் சொல்ல வேண்டிய அவசியமென்ன?''

''உன் எழிலுக்கு மன்னன் அடிமையல்லவா?''

''உண்மை. அவன் எழிலுக்கோ வீரத்துக்கோ நான் அடிமையல்லவே.''

''அதை மன்னன் உணர்ந்தால் உனக்கு ஆபத்து தானே?''

மாதவி இகழ்ச்சியாகச் சிரித்தாள். ''இவன் ஒரு மன்னன்! இவனால் எனக்கு ஆபத்து! நான் இஷ்டப்பட்டால் நாளையே இந்த மன்னன் முடி துறப்பானென்பது உனக்குத் தெரியாதா அபராஜிதா!''

''தெரியும் மாதவி! உங்கள் பிடியில பாண்டியநாடு சிக்கிக் கிடப்பது யாருக்குத்தான் தெரியாது.''

''தெரிநதுமா மன்னன் தயவு எனக்கு வேண்டுமென்கிறாய்?''

''மன்னன் என்று ஒப்புக்கு ஒருவன் தேவையாயிருக்கு மட்டும் அவன் தயவும் சிங்களத்துக்குத் தேவைதான் வேண்டுமானால் உன் மாமாவே நாளைக்கு வீரபாண்டியனை அகற்றி மதுரையை ஆளலொம். ஆனால் அந்தஆட்சி நான்கு நாளைக்குக்கூட நிலைக்காது. மக்கள் ஒருபுறமும், சோழன் ஒருபுறமும் உங்கள் ஆட்சியைப் பறித்து சிங்களத்துக்கு ஓட்டிவிடுவார்கள். ஆகையால் பெயருக்கு ஒரு பாண்டியன் அரியணையில் அவசியம். அந்த அவசியமிருக்குமட்டும் அவன் ஆணைக்கும் பலம் உண்டு.''

மாதவி அபராஜிதனை ஏற இறங்க நோக்கிவிட்டுப் பிறகு கேட்டாள்: ''அந்த அவசியமில்லாவிட்டால்?''

''அவசியம் எப்படி இல்லாது போகும்?''

மாதவி அவனை மிக நெருங்கி நின்று தன் கையிலொன்றை அவன் கையுடன் இணைய விட்டாள். ''கேள்

அபராஜிதா! இந்த மன்னனை மக்கள் வெறுக்கிறார்கள் நானும் வெறுக்கிறேன். பேடிகளைக் கண்டால் என் மாமனுக்குப் பிடிக்காது. உன்னை மக்கள் விரும்புகிறார்கள். நானும் விரும்புகிறேன். வீரனான உன்னை ஒரு நிபந்தனைக்குட்பட்டு மாமாவும் விரும்புவார்...'' என்று சொல்லிக் கொண்டு போன மாதவியை இதழ்களில் இகழ்ச்சிக்குறி தோன்றப் பார்த்த அபராஜிதன், அவள் பேச்சை இடையிலேயே வெட்டி, ''அது என்ன நிபந்தனை மாதவி?'' என்று கேட்டான்.

''சிங்களத்துடன் தொடர்பு' என்றாள் மாதவி.

அபராஜிதன் கண்களில் கோபம் மெள்ள ஏறத் தொடங்கியது ''சிங்களத்துக்கு அடிமையாக வேண்டும் என்று சொல்'' என்று கடுமை ததும்பும்குரலில் கூறினான். ''சிங்களத்தின் அடிகளில் பாண்டிய நாடு தத்தளிக்கும் போது நட்புக்கு இடம் ஏது?'' என்றும் கேட்டான்.

''என் ஏற்பாட்டுக்கு நீ இணங்கினால் அடிமைத்தனம் நீங்கி நட்பு நிலவும்''

''என்ன உன் ஏற்பாடு?''

''உன்னை அரியணையில ஏற்றுவது வீரபாண்டியனை அகற்றி உன்னையே மன்னனாக்குவேன் பிறகு...''

''உனக்கு அடிமையாக காலம் கழிப்பது...'' என்று சொல்லிய அவனை மிக நெருங்கி அவன் மேல் நன்றாகச் சாய்ந்த மாதவி, ''அபராஜிதா! நான் சொல்வதைக் கேள் உன் நாடோடி வாழ்க்கையை மாற்றி ஒரு கணத்தில்நான் சொர்க்கப் பாதைக்கு இழுத்துச் செல்கிறேன்'' என்று சொல்லி அவன் கையையும் பிடித்து அறைக்காக இழுத்தாள்.

பழைய மயக்கத்தை அடியோடு துறந்துவிட்ட அபராஜிதன் உள்ளத்தில் கோபம் பீரிட்டெழுந்ததால் அவள் கையைத் தன் கையிலிருந்து உதறி அவளை தன்னிடமிருந்து விலக்கி, ''மாதவி! நீ இன்னும் அபராஜிதனைச்சரியாக அறியவில்லை பாண்டிய நாட்டை ஆள எனக்குச்

சிங்கள ஈட்டிகளோ பைங்கிளியின் சூழ்ச்சியோ தேவையில்லை. மதுரையின் மக்களுக்கு ஒரு குரல் கொடுத்தால் போதும். அடுத்த விநாடி மன்னனாகி விடுவேன். வீர பாண்டியன் வீரமற்றவனானாலும் பாண்டிய மரபில் பிறந்தவன். எனக்கும் அவனுக்கும் ரத்த பந்தமிருக்கிறது. சிங்களத்துச் சீமாட்டிக்காக அதை வெட்டித் தள்ள நான் விரும்பவில்லை. ஆகையால் பயனற்ற இந்தப் பேச்சை விட்டுவிடு நான் நாடோடி தான், இருந்தாலும் சுதந்திர புருஷன்'' என்றான்.

அவன் பேசப் பேச அவன் முகத்தில் ஜொலித்த வீரத்தைக் கண்ட சிங்களத்துப் பைங்கிளியின் உள்ளத்தில் காமாக்கினி கொழுந்து விட்டெரியவே அவள் அவனை நெருங்கி, ''அபராஜிதா! வேண்டாம். சொல்வதைக் கேள் நீயும் நானும் சேர்ந்தால் தமிழ்நாட்டுக்கே புதியதொரு சகாப்தத்தைச் சிருஷ்டிக்கலாம்'' என்று சொல்லிக் கொண்டே அவனை இரு கைகளாலும் அணைத்தாள்.

''மாதவி! உன் ஏற்பாடுகளைச் சுயமரியாதையுள்ள எந்தத் தமிழனும் ஏற்க முடியாது சிங்களத்துப் பெண்ணால் அபராஜிதன் சிங்காதனம் பெற்றான் என்ற அவச்சொல்லுக்கு ஆளாக நான் இஷ்டப்படவில்லை. பல்லவ மரபில் பிறந்தவன் பைங்கிளிக்காக நாட்டின் சுதந்திரத்தைக் காற்றில் பறக்கவிட்டான் என்ற வெட்கக் கேடு எனக்கு வேண்டாம், விடு என்னை'' என்று திமிறி அவள் கைகளைப் பலவந்தமாகத் தன் மீதிருந்து அகற்றினான்.

மாதவியின் முகத்தில் கடுங்கோபம் எழுந்தது. "அபராஜிதா! என் விரோதத்தைச் சம்பாதித்துக்கொண்டு அழிந்து போகாதே'' என்று கூறிக்கொண்டே அவனை மீண்டும் நெருங்கினாள்.

அவள் இரு கைகளையம் இரும்புப் பிடியில் சிறைப் படுத்திக்கொண்ட அபராஜிதன், ''உளறாதே மாதவி! இப்படி வா, உன்னை அரண்மனைக்கு அனுப்புகிறேன்'' என்று சொல்லி அவளைச் சரசரவென்று இழுத்துச்

சென்று வெளியே செல்லும் தாழ்வாரத்தின் மூலையில் கொண்டு வந்துவிட்டு. "டேய், யாரங்கே!" என்று இரைந்தான்

மங்கலான வெளிச்சத்தில் அவளை நோக்கிவந்த வீரனிடம், "இந்தா, இவளைக்கொண்டுபோய் அரண்மனையில் சேர்த்து விடு" என்று உத்தரவிட்டான்.

"மாட்டேன். இந்த இடத்தைவிட்டு நகரமாட்டேன்" என்று அபராஜிதனிடம் ஒன்றினாள் மாதவி.

அபராஜிதன் அளவுக்கு மீறிய வெறுப்புடன், "இந்தா இவளைப் பிடி" என்று வீரனை நோக்கி அவளைத் தள்ளினான். மாதவி கீழே விழ இருந்தாள். அந்த வீரன் வெகு லாகவமாக அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான். குனிந்த அவளைத் தாங்கிய அந்த வீரன் எழுந்ததும் அவன் முகத்தில் தாழ்வாரத்தின் விளக்கு பிரகாசித்ததைக் கண்ட அபராஜிதன் மட்டுமல்ல, பைங்கிளியும் சொல்லவொண்ணா பிரமிப்பால் கல்லெனச் சமைந்தார்கள். ஒரு கையில் மருமகளைத் தாங்கியும் இன்னொரு கையை வாளின்மேல் வைத்ததும் பெரிய ராட்சதனைப்போல் எழுந்து நின்றான் சிங்களத்துத் தண்டநாயகனான இலங்காபுரன்.

28. அரச காரியமும் சரச காரியமும்

அகாலத்தில் அன்னிய புருஷன் வீட்டுக்கு வந்து அவனால் முரட்டுத்தனமாகத் தள்ளப்பட்ட தன் மருமகளைத் தாங்கிப் பிடித்துத் தூக்கி நிறுத்திய இலங்காபுரன், அவள் கால்களைத் திடமாக நிலத்தில் ஊன்றிய பிறகு அவளை விட்டு விலகி நின்று, அவளையும் அபராஜிதனையும் மாறி மாறிப் பார்த்தான். வேறுபட்ட உள்ளமுள்ள அந்த இருவர் இதயங்களும் இலங்காபுரன் தங்களை நோக்கிய அந்தச் சில வினாடிகளில் மட்டும் ஒரே விதமான உணர்ச்சிகளைப் பெற்றுத் தத்தளித்துக் கொண்டிருந்தன. ஒரே வேடன் குறிக்கு இலக்கான இருபுறாக்களைப்போல அவர்களிருவரும் அசந்தர்ப்பமான நிலையாலேற்பட்ட அச்சத்தாலும் வெட்கத்தாலும் சங்கடத்தாலும் பீடிக்கப்பட்டு எதுவும் பேசாமலும் திடமாக நிற்காமலும் என்ன செய்வது, என்ன சொல்வது என்று அறியாமலும் இலங்காபுரன் எதிரில் மௌனமாகவே நின்றார்கள். மாமன் கண்களால் ஊடுருவப்பட்ட மாதவி வெட்கமிகுதியாலும் அபராஜிதனிடம் பட்ட அவமானத்தாலும் குன்றிப்போய் மாமனை ஏறெடுத்துப் பார்க்கவும் சக்தியற்றவளாய்த் தாமரைக் கண்களைத் தரைக்காகச் சாய்த்துக்கொண்டாள். மாதவியைப்பிடித்த சமயத்தில் இலங்காபுரனை நன்றாகப் பார்த்த அபராஜிதனும் அவன் நன்றாக எழுந்து நின்று தன்னைப் பார்க்கத் தொடங்கியதும் அவன் கண்களைச் சந்திக்க வல்லமையற்று வேறுபுறமாகப் பார்த்தான். தாழ்வாரத்தில் அடித்துக்கொண்டிருந்த மங்கலான வெளிச்சம் அம்மூவரிடையே நிலவிய மௌனத்தின் பயங்கரத்தைச்சற்று அதிகப்படுத்தியே காட்டியது. பயங்கரமான அம்மௌனத்தை தூரத்தேயிருந்து வந்த மீனாட்சியம்மன் ஆலயத்தின் இரண்டாம் ஜாமத்தின் மணியோசை ஓரளவு கலைக்கத்தான் செய்தது. ஆனால், அதையும்விடச் சக்தியுடன் மௌனத்தைத் துண்டித்தன மிக நிதானமாக உச்சரிக்கப்பட்ட இலங்காபுரன் சொற்கள்.

"உன்னை இங்கு நான் சந்திப்பேனென்று எதிர்பார்க்கவில்லை மாதவி!" என்றான் இலங்காபுரன், ஆத்திரம் சிறிதும் தொனிக்காத குரலில். மாதவி பதிலேதும் சொல்லவில்லை. அந்த நிலையில் ஒரு பெண்ணுக்கு ஏற்படக் கூடிய சங்கடத்தைப் புரிந்துக் கொண்ட அபராஜிதனே அவளுக்காக பேச முற்பட்டு, "தண்டநாயகரே! தாங்கள் மருமகள் மீது கோபிக்கவேண்டாம்...." என்று இழுத்தான்.

இலங்காபுரன் கண்கள் அபராஜிதனை நோக்கித் திரும்பியபோது அவன் இதழ்களிலும் கோபப்புன்முறுவல் ஒன்று தவழ்ந்தது. "என் மருமகள்மீது சேனாதிபதியவர்களுக்கு இத்தனை தயவு எத்தனை நாளாகப் பிறந்திருக்கிறது" என்று வினவினான்.

இந்த இரண்டொரு வார்த்தைகளால் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு ஓரளவு சுயநிலைக்கு வந்த அபராஜிதனும் இலங்காபுரனை தைரியமாக ஏறெடுத்துப் பார்த்து, "தங்கள் மருமகளுக்கு யார் தயவும் தேவையில்லை. மாதவியின் தயவுக்குத்தான் மதுரையம்பதியிலுள்ள மாபெரும் பிரபுக்களெல்லாம் காத்திருக்கிறார்களே!" என்றான்.

"தாங்கள் மட்டும் அந்தப் பிரபுக்களுக்கு விலக்கு போலிருக்கிறது" என்று வினவினான் இலங்காபுரன், குரலில் உஷ்ணம் ஏற.

"விலக்கென்று யார் சொன்னது;"

"யாரும் சொல்லவேண்டிய ஸ்திதியில் நீங்கள் வைக்கவில்லையே?"

மாதவியைத்தான் பிடித்துத் தள்ளியதையே இலங்காபுரன் மறைமுகமாக இப்படிக் குறிப்பிடுகிறானென்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்ட அபராஜிதன், மேற்கொண்டு என்ன பேசுவதென்று அறியாமல் ஒருகணம் வாளா நின்று விட்டுச் சொன்னான்: "இங்கு நடந்ததைத் தாங்கள் தவறாக நினைக்கவேண்டாம்" என்று.

"தவறாக நினைக்கவில்லை சேனாதிபதியவர்களே! சரியாகவே புரிந்துகொண்டிருக்கிறேன்" என்று கோபம் உச்ச நிலையை எட்டவே குரலைக் கடுமையாக உயர்த்தினான் இலங்காபுரன்.

"சம்பவங்களின் உண்மை அர்த்தம் சந்தர்ப்பங்களைப் பொறுத்தது. சந்தர்ப்ப விசேஷத்தால் உண்மை பொய்யாகவும், பொய் உண்மையாகவும் தெரிவதுண்டு" என்றான் அபராஜிதன்.

"இப்பொழுது எந்த உண்மை பொய்யாகத் தெரிந்திருக்கிறது? இந்த அகாலத்திலே மாதவி தங்கள் வீட்டிலிருப்பது பொய்யா? அல்லது நீங்கள் அவளை சற்று முன்பு பலாத்காரமாகத் தள்ளியது பொய்யா!" என்று கேட்டான் இலங்காபுரன்.

"இதெல்லாம் பொய்யல்ல பிரபு. இந்த உண்மைகளுக்குத் தாங்கள் செய்யக்கூடிய வியாக்கியானம் விபரீதமாயிருக்கலாம். தங்கள் மருமகள் இங்கு வந்தது உண்மை. வந்த காரணம் உங்களுக்குத் தெரியாது. நான் அவளைப் பிடித்துத் தள்ளியது உண்மை. தள்ளிய காரணம் உங்களுக்குத் தெரியாது."

"பருவப் பெண் பரபுருஷன் வீட்டுக்கு இரவில் வருவது தவம் செய்வதற்கா? அவளைப் பிடித்து ஒரு புருஷன் மிருகத்தனமாகத் தள்ளுவது அவள் மேலுள்ள அன்பைக் குறிக்கவா? அல்லது மரியாதையைச் சுட்டிக் காட்டவா?"

இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுமுன்பு அபராஜிதன் கண்கள் ஒருமுறை மாதவிக்காக சென்றன. பிறகு, இலங்காபுரனுக்காகத் திரும்பி, "நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது" என்றான்.

"என்ன நினைத்தீர்கள்? எது சரியாகப்போய் விட்டது?" என்று வினவினான் இலங்காபுரன்.

"நீங்கள் விபரீத அர்த்தந்தான் செய்வீர்களென்று நினைத்தேன். அது சரியாகப் போய்விட்டது. சாதாரண மனிதர்கள் இந்த மாதிரி அர்த்தத்தைச் செய்திருந்தால் சிறிதும் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டேன். சிங்களத்துச் சாம்ராஜ்யத்தை இதர நாடுகளில் நிலைநாட்டக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் சிங்களத்துத் தண்டநாயகர் இங்கு நடந்த சம்பவங்களின் ஆழத்தை ஆராய்ந்து பார்க்காமல் எடை போடுவது எனக்கு எல்லையற்ற வியப்பைத்தான் தருகிறது. தண்டநாயகரே! தங்கள் மருமகளைப் பெண் என்ற முறையில்தான் எண்ணுகிறீர்களா?"

"ஏன் அவள் பெண்ணில்லையா!"

"பெண்தான் பிரபு. ஆனால், சாதாரணப் பெண் அல்ல."

"இவளிடம் என்ன அசாதாரணத்தைக் கண்டு விட்டீர்கள்?"

"எப்படி அசாதாரணமென்பது தங்களுக்கு தெரியும்."

"என்னைவிடத் தாங்கள்தான் மாதவியை அதிகமாக அறிந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் விளக்கிச் சொல்லுங்கள்."

"அவள் பெண் மட்டுமல்ல தண்டநாயகரே! அரசியல் சதுரங்கத்தில் முக்கியமான காய். தங்கள் திட்டங்களை நிறைவேற்றும் அற்புதக் கருவி."

அபராஜிதனுடைய கடைசி வார்த்தைகளைக் கேட்ட இலங்காபுரன் கண்கள் ஆச்சரியத்தால் பெரிதாக மலர்ந்தன. மேலுசடு சிறிது அசைந்ததால் மீசை பயங்கரமாக எழுந்து தாழ்ந்தது. இலங்காபுரன் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை நொடிப் பொழுதில் கண்டுகொண்ட அபராஜிதன் தனக்கு அனுகூலமாகத் திரும்பிய அந்த நேரத்தை வீணாக்க விரும்பாமல் மேலும் பேசலானான்: "ஆமாம் தண்டநாயகரே, அவள் ஓர் அற்புத அரசியல் கருவிதான். சிங்களம் சிருஷ்டித்த இந்தப் பேரெழில் வாய்ந்த மாயக் கருவி இங்கு பருவப் பெண் என்ற முறையில் வரவில்லை. சிங்களத்துக்குப் பரிந்து பேச வந்தாள். அபராஜிதனுடன் சரசமாட வரவில்லை. அவள் நாட்டுப்பற்றைத் தன் பிறந்த நாட்டுக்காகத் திருப்ப வந்தாள். அவள் இங்கு வந்தது உமக்காகத்தான், உமது நன்மைக்காகத்தான், உமது நாட்டுக்காகத்தான். அவள் வந்தது அரச காரியம், சரசகாரியமல்ல. உங்கள் நாட்டுக்குப் பெருமையைத் தேட நினைத்தாள். அவள் ஏற்பாட்டுக்குக் ஒப்புக்கொண்டிருந்தால் நான் சிறுமைப்பட்டிருப்பேன்..." என்று சொல்லிக் கொண்டேபோன அபராஜிதனை இடைமறித்த இலங்காபுரன், "அவள் தங்களிடம் எதை நாடி வந்தாள்?" என்று வினவினான்.

"சிங்களத்து சாம்ராஜ்யத்தைத் தமிழ் நாட்டில் நிலை நிறுத்த என் உதவியை நாடி வந்தாள்" என்றான் அபராஜிதன் சிறிதும் தாமதமில்லாமல்.

"எத்தகைய உதவி?"

"என் வாளைச் சிங்களத்துக்கு அர்ப்பணிக்கச் சொன்னாள்."

"அதற்குப் பதிலாக எதைக் கொடுப்பதாகச் சொன்னாள்?" இலங்காபுரனின் கேள்வியில் இகழ்ச்சியுடன் சந்தேகமும் கலந்து தொனித்தது.

"மதுரையின் சிங்காதனத்தை" என்றான் அபராஜிதன். இலங்காபுரன் கண்களைத் தன் கண்களால் சிறிதும் சலனமின்றிச் சந்தித்து.

இலங்காபுரன் கோபத்துடன் பைங்கிளியை நோக்கித் திரும்பி, "இது உண்மைதானா மாதவி? உனக்குச் சகலத்தையும் அர்ப்பணித்திருக்கும் வீரபாண்டியனுக்குத் துரோகமா செய்யத் துணிந்தாய்?" என்று வினவினான்

மாதவி பதிலேதும் சொல்லவில்லை. அபராஜிதனே பதில் சொன்னான்: "நான்தான் அப்பொழுதே சொன்னேனே, மாதவிக்கு மன்னனும் முக்கியமல்ல; நானும் முக்கியமல்ல. வென்று அவளுக்கு வேண்டியது சிங்கள சாம்ராஜ்ய விஸ்தரிப்பு. அதற்கு உதவக்கூடியவர்களைப் பார்க்கிறாள். வீரபாண்டியனை மக்கள்வெறுக்கிறார்கள் என்னை விரும்புகிறார்கள். யார் அரியணையிலிருந்தால் சிங்களத்துக்கு நல்லது? நீங்களே சொல்லுங்கள்" என்றான்.

இலங்காபுரன் சற்று நேரம் பதிலேதும் சொல்லாமல் அப்படியும் இப்படியும் உலாவினான். மிக சாமர்த்தியமாக அபராஜிதன் சம்பவங்களின் ஒரு பகுதியை மட்டும் விளக்கித் தன்னைப் பெரிய அபக்கியாதியினின்றும் மாமன் கோபத்தினின்றும் மீட்டுவிட்டதற்காக நன்றி ததும்பும் கண்களை அவனை நோக்கி ஒரு விநாடி உயர்த்தினாள் மாதவி. அபராஜிதன் அவள் பக்கம் திரும்பவேயில்லை. இலங்காபுரனையே பார்த்துக்கொண்டு நின்றான். ஆழ்ந்த யோசனையுடன் தாழ்வாரத்தில் உலவிக்கொண்டிருந்த இலங்காபுரன் கடைசியாக நின்று அபராஜிதனுக்காகத் திரும்பி "சேனாதிபதியவர்களே! மாதவியைத் தவறாக

அது கிடைக்கட்டும். மாதவிக்கு
தாங்கள் சொன்ன பதிலென்ன?'' என்று கேட்டான்.

''தேசத் துரோகியாக மாற மறுத்துவிட்டேன். இருப்
அரண்மனைக்குச் செல்லும்படி கூறினேன். மாதவி
இணங்கவில்லை. அவன் ஏற்பாட்டுக்கு ஒப்புக்
கொண்டால் தான் போவேனென்று சொன்னாள்.
ஆகையால், கொஞ்சம் முரட்டுத்தனத்தையும்
உபயோகிக்க வேண்டியதாயிற்று!'' என்று விளக்கினான்
அபராஜிதன்.

''சேனாதிபதியவர்களே! மாதவி பெண் என்பதற்காக
அவள் யோசனையை நீங்கள் உதறியிருக்கலாம். ஆனால்
நானே அந்த ஏற்பாட்டுக்கு உடன்பட்டால்...'' என்று
மென்னு இழுத்தான் இலங்காபுரன்.

''தங்களுக்கும் அந்தப் பதில்தான் கிடைக்கும்.''

''ஏன், நாடாளும் வாழ்க்கையைவிட நாடோடி
வாழ்க்கை சிறந்ததென்றா?''

''சந்தேகமென்ன? சிறந்ததுதான்.''

''நாடாளும் வாழ்க்கையில் செல்வம் உண்டு, செல்
வாக்கு உண்டு...''

''நாடோடி வாழ்க்கையில் மன நிம்மதியுண்டு
மகிழ்ச்சியுண்டு.''

''உலகத்துக்கு ஒவ்வாத வார்த்தை.''

''நானே உலகத்துக்கு ஒவ்வாத மனிதன். இல்லாவிட்
டால் மதுரையின் மணிமகுடத்தை இம்முறை புறக்கணித்
திருப்பேனா?''

இலங்காபுரன் அபராஜிதனைப் பரிதாபத்துடன் பார்த்
தான். ''சேனாதிபதியவர்களே, நீர் அதிர்ஷ்டக்கட்டை.
உமது புத்தி இப்படித்தான் போகும் நீர் காலைக்குள்
பிரயாணமாக வேண்டுமே என்பதற்காகப் பார்க்கவே
வந்தேன். வந்த சமயத்தில் இந்தக் கதை சேர்ந்து
கொண்டது. மன்னர் உம்மீது பெரிதும் கோபங்கொண்
டிருக்கிறார். நீர் மதுரையில் தாமதிக்கும் ஒவ்வொரு
வினாடியும் ஆபத்துத்தான். எந்தநிமிஷமும் மன்னர் மனம்

மாறி, தங்கள் தலையை உடலிலிருந்து பிரிக்க உத்தரவிட
லாம். சற்றுநேரத்திற்கு முன்புகூட உங்களைக்
கொல்லாமல் விடுவது அநீதியென்று உறுமிக்கொண்டிருந்
தார். ஆகவே சீக்கிரம் புறப்படுங்கள்'' என்று கூறிவிட்டு
மாதவியை அழைத்துக்கொண்டு புறப்பட்டான்
இலங்காபுரன்.

அவர்கள் சென்றதும் சற்றுநேரம் தாழ்வாரத்திலேயே
நின்ற அபராஜிதன் தன் ஏற்பாடுகளைத் துரிதமாகச்
செய்யத் தொடங்கி வேலையாட்களை அழைத்துப்
பயணத்துக்கு அனைத்தையும் சித்தப்படுத்தச் சொன்னான்.
''சாமான்கள் சொற்பமாக இருக்கட்டும். நான்கு
குதிரைகளுக்கு மேல் வேண்டாம். என்னுடன் இரு
வீரர்கள் வந்தால் போதும்'' என்று உத்தரவிட்டான்.
ஏற்பாடுகள் விடுவிடு என்று நடந்தன. முதல் இரண்டு
ஜாமங்களில் விசாரணையும் விசாரணைக்குப்பின்
காமவலையும் கழுத்தைச் சுற்ற அவதிப்பட்ட அபராஜிதன்
மூன்றாம் ஜாமத்தில் வீரர் இருவர் பின் தொடர
பிரயாணச் சாமான்களை ஒரு குதிரை ஏற்றிவர மதுரை
மாநகரைவிட்டு யாருக்கும் தெரியாமல் ரகசியமாக
வெளியேறினான் கோட்டை வாசலைத் தாண்டிச்
சிறிதுதூரம் சென்றதும் மதுரையை ஒருமுறை திரும்பிப்
பார்த்தான். அஷ்டைசுவரியத்துடன் கூடிய மகா
லக்ஷ்மியை விட்டுப்போவது போலிருந்தது அவனுக்கு.
அந்தப் பிரிவாற்றாமையால் ஏக்கங்கலந்த பெருமூச்
சொன்றும்வெளிப்பட்டது அவனிடமிருந்து. கடைசியாகத்
தலையைக் குனிந்தவண்ணம் குதிரையைத் தட்டி
நடத்தினான்.

இரண்டுநாள் பயணத்தை ஏதேதோ யோசனை
செய்துகொண்டே செய்தான் அபராஜிதன். நீலமலையை
யும் தளைக்குக் காரி காயத்தைக் கழுவிய காட்டு
வாய்க்காலையும் தாண்டிய சமயங்களில் கூட அவன்
சிந்தனை எங்கோ சுழன்று கொண்டிருந்தது. இரண்டு
நாள் பிரயாணத்துக்குப் பிறகு மழவராயன் எல்லைக்கு
வந்ததும் அபராஜிதன் சேவகனான சொக்கப் பெருமான்,

''பிரபு மழவராயன் எல்லையில் நுழைந்துவிட்டோம்,
இனி எந்தப் பக்கம் செல்வது?'' என்று வினவினான்.

அபராஜிதன் சுற்றும்முற்றும் கண்களை ஓட்டிவிட்டுத்
தூரத்தே தெரிந்த ஒரு மாளிகையைக் கண்டு, ''அதோ,
மழவராயன் படைத்தலைவர்களில் ஒருவன் மாளிகை
இருக்கிறது, அங்கே போவோம்'' என்றான்.

மதுரையின் சேனாதிபதிக்கு மாளிகையில்
பெருபசாரம் நடந்தது. மழவராயன் படைத்தலைவன்
அபராஜிதன் குதிரைகளையும் ஆட்களையும் கவனிக்க
ஊழியரை ஏவி விட்டு, தானே அபராஜிதனுக்கு வேண்டிய
சௌகரியங்களைக் கவனிக்கலானான். தங்கத்
தாம்பாளங்களில் இருவருக்கும் உணவு பரிமாறப்பட்டது.
இருவரும் சாப்பிட்டுக் கை கழுவிக்கொண்டிருந்த
சமயத்தில் அந்த மாளிகையே அலறும்படியாகக் கிரீ
என்ற அலறல் கேட்டது.

''அபராஜிதன் கை கழுவுவதைச் சட்டென்று நிறுத்திப்
படைத் தலைவனைப் பார்த்தான். படைத்தலைவன்
சொன்னான்: ''அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்
பிரபு.''

''மனிதன் அலறுகிறான்.''

''அவனைக் கண்டால் நாமே அலறுவோம்.''

''ஏன?''

''வந்து நீங்களே பாருங்கள்'' என்று மாடியிலிருந்
ஓர் அறைக்கு அபராஜிதனை அழைத்துச் சென்றான்
மழவராயன் படைத்தலைவன். அங்கு நெற்றியில் கட்டு
ளும் கண்கள் பிதுங்கியும், கைகால்கள் வீங்கியும் பயங்க
மாகக் காட்சியளித்த மனிதனைக் கண்டதும் சற்று
பிரமித்த அபராஜிதன் இறுதியில், 'அடிகளாரே
இதென்ன கோரம்?'' என்று கூவிக்கொண்டே அவன
அணுகினான். கிட்டே வந்த அபராஜிதனை ஏற இறங்க
பார்த்த அடிகளார், அவனை அடையாளம் புரிந்து
கொண்டு, ''யார், சேனாதிபதியவர்களா!'' என்றா
பலஹீனமான குரலில்.

''ஆமாம், அடிகளாரே!''

''நல்லவேளை வந்தீர்கள்.''

'ஏன்?''

''கொஞ்சம் குனியுங்கள்.''

அபராஜிதன் குனிந்தான். அடிகளார் அவன் காதில் ஏதோ முணுமுணுத்தார். அபராஜிதன் முகத்தில் சொல்ல வொண்ணாக் கிலி பரவத் தொடங்கியது. ''இது உண்மை தானா?'' என்று கேட்ட அவன் குரலும் நடுங்கியது.

29. இரவில் வந்த ரகசியப் படைவீரர்

அந்தரங்கமாகக் காதுக்கருகில் அடிகளார் அளித்த தகவலைக் கேட்ட அபராஜிதன் அகத்தே எழுந்தஉணர்ச்சிகளால் சற்று நேரம் ஏதும் பேசச்சக்தியற்று அசைவற்று நிலைத்து நின்றுவிட்டு, பிறகு யோசனையில் ஆழ்ந்த வண்ணம் அறையில் அங்குமிங்கும் உலாவலானான். ஒரு முறை சாளரத்துக்காகச் சென்று வெளியே எட்டிப் பார்த்து நீண்ட நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தான். அபராஜிதனையே கிலியிலும் குழப்பத்திலும் ஆழ்த்தக்கூடிய அப்பேர்ப்பட்ட என்ன தகவலை அடிகளார் சொல்லியிருப்பார் என்பதை அறிய முயன்ற மழவராயன் படைத்தலைவனும் சொக்கப் பெருமாளும் ஏதுமறியாமல் திகைத்து நின்றனர்.

அப்பொழுது பகல் நேரம். இளவேனிற் காலத்துச் சூரியனின் கிரணங்கள் இருக்க வேண்டிய வெப்பத்துக்கு அதிகமாகவே உறைத்துக் கொண்டிருந்ததால் உஷ்ணம் எல்லார் உடலையும் அளவுக்கு அதிகமாகவே வாட்டிக் கொண்டிருந்தது. தூரத்தேயிருந்த மரங்களில் முதல் நாள் மாலை புஷ்பித்த புஷ்பங்கள் சூரிய கிரணங்களில் வாடி வதங்கிக் கொண்டிருந்தன சாளரத்துக்குச் சற்று தூரத்தில் தெரிந்த தடாகத்தின் நீரில் மிதந்து கொண்டிருந்த நீர்ப்பறவைகள் கூட நீர்மட்டத்தின் உஷ்ணத்தைத் தாங்க மாட்டாமல் கரைக்குத் தாவித் தரையில் தத்தி நடந்து கொண்டிருந்தன. புல்வெளியில் மேய்ச்சலுக்காகக்

கட்டப்பட்டிருந்த மாட்டு மந்தையிலிருந்த சில மாடுகள் வெப்பந்தாங்காமல் மேய்ச்சலைவிட்டுப் புல் வெளியை அடுத்திருந்த பெரிய மரங்களின் நிழல்களில் தங்குவதற்காகத் தங்கள் கழுத்திலிருந்த பெரிய மணிகள் 'டங்டங்' என்று ஒலிபரப்ப நடந்து சென்றன. ஓரிரு கன்றுக்குட்டிகள் மட்டும் கழுத்திலிருந்த பால்மணிகளும், சிறுமணிச் சலங்கைகளும் சப்திக்க வெறிகொண்டு துள்ளி எழுந்து எகிறிக் கொண்டிருந்தன. எங்கும் ஏகதாபம், எல்லாத் தாபத்திற்கு மேல் அபராஜிதன் உள்ளம் தாபத்தால் தவித்துக் கொண்டிருந்தது. என்றும் எல்லா உள்ளங்களையும் கவரக்கூடிய அத்தனை இயற்கைக் காட்சிகளும் அவன் உள்ளத்தைக் கவராதது மட்டுமல்ல, கண்ணுக்கும் தெரியவில்லை. கருத்து எங்கோ நிலைத்திருந்ததால் கண்பார்வை விழந்து கிடந்தது.

இப்படி நீண்ட நேரம் சாளரத்துக்கு வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அபராஜிதன் மீண்டும் அறையின் நடுவுக்கு வந்தபோது அவன் முகத்தைக் கவனித்த அடிகளார் மட்டுமல்ல, மற்ற இருவரும் கூட அந்தச் சில நிமிஷங்களில் அவன் மனம் என்ன பாடுபட்டிருக்கிறதென்பதை அறிந்து கொண்டனர். களையான அவன் முகத்தில் சோகம் நிரம்பப் படர்ந்து நின்றது. ஒளிநிரம்பிய கண்களில் துக்கமும் கவலையும் நிரம்பி நின்றன. யோசனையால் பக்கப்பொறியின் நரம்பு ஒன்றும் புடைத்தெழுந்து நின்றது. அவனைப் பார்த்த சொக்கப் பெருமான்கூட, ''எந்த அபாயத்தையும் திரணமாக மதிக்கக்கூடிய சேனாதிபதியின் உள்ளத்தையே உலுக்கும்படியான அந்தச்சேதி என்னவாயிருக்கும்!'' என்று வியந்தான் நாடு கடத்தும் உத்தரவைக் கேட்ட சமயத்தில் கூட சலிக்காத அபராஜிதன் இந்தச் சாமியார் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அரண்டு போனானே, விஷயம் என்னவாயிருக்கும்?'' என்று ஆராய்ந்தான். ஆராய்ச்சி பயனளிக்காததால் விஷயம்

தானாக வெளிவரட்டும் என்று காத்திருந்தான். ஆனால் அபராஜிதனின் வார்த்தைகள் அவன் எதிர்ப்பார்ப்பைத் தகர்த்தெறிந்தன.

சொக்கப்பெருமாளையும் மழவராயனின் படைத் தலைவனையும் மாறிமாறிப் பார்த்த அபராஜிதன் ''நான் அடிகளாருடன் பேசவேண்டியிருக்கிறது. நீங்களிருவரும் சற்று நேரம் எங்களைத்தனிமையில் விட்டால் சௌகரியமாயிருக்கும்'' என்றான்.

''சேனாதிபதியவர்கள் எப்படி உத்தரவிட்டாலும் சரி, நான் மறுத்தா சொல்லப் போகிறேன்?'' என்று கூறிவிட்டு மழவராயன் படைத் தலைவன் நகர்ந்தான். சொக்கப் பெருமாளும் ஏதும் பேசாமல் அவனைப் பின் தொடர்ந்தான். அவர்கள் சென்ற பிறகு அடிகளாரை நோக்கித் திரும்பிய அபராஜிதன் பொங்கி எழும் கோபம் கண்களில் தாண்டவமாடக் கேட்டான்: ''ஏன் அடிகளாரே! உமக்கு லவலேசமாவது புத்தியிருக்கிறதா?''

கண்கள் புடைத்து மணிக்கட்டுகள் வீங்கிக் கிடந்த அத்தனை அவஸ்தையிலும் அடிகளார் இதழ்களில் விஷமமான புன்முறுவல் தவழ்ந்தது. அபராஜிதனை ஏறெடுத்துப் பார்த்துச் சொன்னார்: ''பாழும் புத்தி மற்றவர்களைவிடக் கொஞ்சம் அதிகமாயிருப்பதால் வந்த ஆபத்துதான் இது.''

அந்தப் பதிலைக் கேட்ட அபராஜிதன் முகத்தில் கோபத்தோடு இகழ்ச்சியும் கலந்துகொள்ளவே கடுமையான குரலிலே மீண்டும் கேட்டான். ''அப்படி புத்தி இருப்பதற்கு இதுதான் அடையாளமாக்கும்'' என்று.

''எது?'' என்று ஏதுமறியாதவர்போல் அடிகளார் கண்களை உயர்த்தினார்.

''கார்குழலியைக் காற்றில் பறக்கவிட்டு இங்கு நீர் கல்லுப்பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருப்பது'' என்றான் அபராஜிதன்

''என் இஷ்டத்தின்மேலா நான் இங்கு உட்கார்ந்திருக்கிறேன்?'' என்று இடக்காக ஒரு கேள்வியை வீசினார் அடிகளார்.

''பின் யார் இஷ்டத்தின்மேல்?''

''வீரபாண்டியன் இஷ்டத்தின்மேல்.''

''வீரபாண்டியன் இஷ்டமா?''

''ஆம். இல்லாவிட்டால் இங்கு ஏன் உட்கார்ந்திருக்கிறேன்? அதுவும் இந்த நிலையில்.''

''நீங்கள் குழலிக்குச் செய்த ஏற்பாடு வீரபாண்டியனுக்குத் தெரிந்துவிட்டதா?''

''தெரியாது.''

''என்ன புதிர் போடுகிறீர் அடிகளாரே?'' என்று கேட்ட அபராஜிதன் குரலில் சலிப்புத் தென்படவே அடிகளார் அவனை மேலும் அந்தகாரத்தில் ஆழ்த்த இஷ்டப்படாமல் ''சேனாதிபதியவர்களே! வீரபாண்டியன் அவசியமானதைத் தெரிந்து கொள்ளவில்லை. அனாவசியமானதை அவனால் சரிப்படுத்த முடியாததைத் தெரிந்து கொண்டான்....'' என்று சம்பாஷணையை மேலே தொடர்ந்தார்

''புதிருக்குமேல் புதிர் போட்டால் புரியவில்லையே அடிகளாரே! எது அவசியம், எது அனாவசியம்? எதை வீரபாண்டியன் தெரிந்துகொண்டான். எதைத் தெரிந்து கொள்ளவில்லை? சரிப்படுத்த முடியாதது என்று சொன்னீர்களே, அது எது?'' என்று அபராஜிதன் கேட்டான்.

''கார்குழலியை வீரபாண்டியனிடமிருந்து தப்புவிக்கச் செய்த ஏற்பாட்டை அவளை மணக்க விரும்பும் அவன் தெரிந்து கொள்வது அவசியம். அதைத் தெரிந்துகொள்ளவில்லை. நான் செய்த ஏற்பாடுகளை அவ்வளவு ரகசியமாகச் செய்தேன் கார்குழலி அவனை ஏன் வெறுக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்வது அனாவசியம். வெறுப்பு இருக்கிறது என்பதை அறிந்த பின்பு விலகுவதுதான் ஆண்மகனுக்கு முறை. அந்த முறையை அனுஷ்டிக்க

வீரபாண்டியன் இஷ்டப்படவில்லை. அவள் வெறுப்புக்கு காரணத்தை அறிய ஆசைப்பட்டான்.''

''ஆசைப்பட்டது நிறைவேறியதா?''

''சந்தேகமென்ன? என் கைகால்களையும் நெற்றிச் கட்டையும் பார்த்தால் தெரியவில்லையா?''

''வீரபாண்டியன் உம்மைக் கிட்டி கட்டி அடித்திருக்கிறானென்பது தெரிகிறது.''

''சாதாரணமாகவா அடித்தான்? கிட்டி கட்டும் கலை இன்று தமிழ்நாட்டில் யாரிடமாவது இருக்கிறதென்றால் அது வீரபாண்டியனிடம்தான் இருக்கிறது. நன்றாக வெளுத்துவிட்டான் என்னை.''

அபராஜிதன் அடிகளாரைப் பரிதாபத்துடன் பார்த்தான். அவன் உள்ளம் நெகிழ்வதைக் கவனித்த அடிகளார் சொன்னார். என்னிடம் பரிதாபப்பட வேண்டாம் பிரபு! என்னுடைய தவறுக்கு நான் செலுத்திய காணிக்கை இது'' என்று கைகால் மீது தமது கண்களை ஓட்டினார் அடிகளார். ''நீங்கள் செய்த தவறுதான் என்ன?''

''நுணலும் தன் வாயாற் கெடும் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''

''ஆகா, கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''நான்தான் நுணல்!''

''என்ன அடிகளாரே இது?''

''உண்மைதான் பிரபு. அந்தப்புரத்து நந்தவனத்தில் கார்குழலியிடம் முறை தவறி நடக்க முயன்ற வீரபாணடியனை நான் தடுத்தேன். தடுத்ததோடு நின்றிருந்தால் இந்த அவஸ்தைக்கு இடமிராது; ஆனால் சிறிது என் நகைச் சுவையையும் காட்டினேன். பெண்கள் மனம் வேறு இடத்தில் லயித்துவிட்டால் அதைத் திருப்புவது பிரும்மப் பிரயத்தனம் என்று சொன்னேன். அது இந்த அவஸ்தையில் கொண்டு வந்துவிட்டது. வீரபாண்டியன் இரவோடு இரவாகக் கட்டி என்னை இங்கு கொண்டு வந்தான்.

உருத்தெரியாமல் அடித்தான். நான் வேதனையைத் தாங்கியிருக்கலாம். முடிந்தவரை தாங்கினேன். ஆனால் நான் வீரனல்ல பிரபு. கேவலம் அடிகள்தானே. இறுதியில் அவன் அறிய முயன்ற அத்தனையையும் கொட்டி விட்டேன்'' என்று விவரித்தார் அடிகளார்.

''அவன் என்ன அறிய முயன்றான்?''

''கார்குழலி யாரை விரும்புகிறாள் என்று அறிய முயன்றான்.''

''நீர் என்ன சொன்னீர்?''

''தெரியாது என்று சொன்னேன்?''

''பிறகு?''

''துன்புறுத்தினான். தாங்க முடியாததால்....'' இங்கு சற்றுப் பேச்சை நிறுத்திய அடிகளார், ''பிரபு! இதற்கு மேல் எதையும் கேட்காதீர்'' என்றார்.

அபராஜிதன் விடவில்லை. ''தாங்க முடியாததால்....?'' என்று வினவினான்.

அடிகளார் சிறிது நேரம் யோசித்துவிட்டு வேண்டுமென்றே பேச்சை மாற்றி, ''கார்குழலி யாரை விரும்புகிறாளென்பது எனக்கு எப்படித் தெரியும்? பெண் உள்ளத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளத் துறவியால் முடியுமா? ஆகையால் தப்புவதற்கு ஓர் உபாயம் கண்டுபிடித்தேன்'' என்றார்

''என்ன உபாயம்?''

''கார்குழலி தங்களைக் கன்னிமாடத்துக்கருகில் சந்தித்தாளல்லவா?''

''ஆமாம்.''

''அந்தச் சம்பவத்தை உபயோகப்படுத்திக் கொண்டேன்''

அடிகளாரை மேற்கொண்டு அபராஜிதன் எதுவும் கேட்கவில்லை. மனத்தைச் சூழ்ந்து நின்ற இருள்

திடீரென அகன்று விட்டதால் என்ன நடந்திருக்கும் என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது அவனுக்கு.

'அடிகளாரை வீரபாண்டியன் கிட்டி கட்டி அடித்திருக்கிறான். அடிகளாருக்கோ கார்குழலி யாரை நாடியிருக்கிறாளென்பது தெரியாது. ஆகையால் தப்புவதற்காக என் பெயரை உளறியிருக்கிறார். நான் காயத்துடன் வந்து கன்னிமாடத்தில் கிடந்ததையும் கார்குழலி எனக்குக் கட்டுக் கட்டி உபசரித்ததையும் கேட்ட வீரபாண்டியன், நீலமலை, அதற்கருகாமையில் கன்னிமாடம், என் காயம், அவள் உபசரிப்பு எல்லாவற்றையும் சேர்த்துக் கோத்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான் அபராஜிதன். மதுரை மாநகருக்கு வந்தவுடன் ஆக்ரோஷத்துடன் வீரபாண்டியன் தன்னைக் கைது செய்ய உத்தரவிட்ட காரணமும் தெள்ளென விளங்கியது அபராஜிதனுக்கு.

''அவன் மனத்தில் ஓடிய எண்ணங்களை ஊகிக்க முயன்ற அடிகளார் பேச்சுக்கொடுத்து அவன் மௌனத்தைக் கலைத்தார். ''பிரபு!, என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் பெயரைச் சொல்வதில்லையென்று கன்னி மாடத்துக் காட்டில் நான் சத்தியம் செய்தது நினைவிருக்கிறது. கார்குழலியிடம் நான் மூச்சுவிடவில்லை. ஆனால் வீரபாண்டியன் கிட்டி, சத்தியத்தை முறித்துவிட்டது. என்ன செய்யட்டும்?''

''என் பெயரைச் சொன்னதைப்பற்றி நான் கவலைப்படவில்லை அடிகளாரே, கார்குழலி ஆபத்திலிருக்கிறாளே என்றுதான் அஞ்சுகிறேன்.''

எந்த நிமிஷத்திலும் அவள் அந்தப்புரத்தை விட்டு வெளியேறலாம். வீரபாண்டியன் திருமணத்தை அவள் வெறுக்கிறாள். தப்பவோ நான் வழி செய்திருக்கிறேன். அத்துடன்....''

''அத்துடன்?''

''விக்கிரம பாண்டியனும் நம்பக்கூடிய மனிதனல்ல.''

''விக்கிரம பாண்டியனா?''

''ஆமாம்; குலசேகர பாண்டியன் மகன்!''

''அவனுக்கு இதில் என்ன சம்பந்தம்?''

''கார்குழலியைத் தப்ப வைக்கும் பொறுப்பை அவனிடம் தான் ஒப்படைத்திருக்கிறேன். அந்தப்புரத்துத் திட்டிவாசல் சாவியும் அவனிடம்தான் இருக்கிறது.''

''இதை ஏன் முன்பே சொல்லவில்லை?''

''எப்படிச் சொல்லுவேன். கார்குழலி ஆபத்திலிருக்கிறாள் என்று காதில் சொன்னவுடனே தான் நீங்கள் அப்படியே மலைத்துவிட்டீர்களே.''

''சரி. நான் வருகிறேன்'' என்று அபராஜிதன் கிளம்பினான். வாயிற்படிக்காகச் சென்ற அபராஜிதனை நோக்கி, ''எங்கு போகிறீர்கள் பிரபு'' என்று சத்தம் போட்டு நிறுத்தினார் அடிகளார்.

''கேட்பானேன்? மேலைமங்கலத்திற்காகத் தான்'' என்றான் அபராஜிதன்.

''நானும் வருகிறேன்'' என்றார் அடிகளார்.

''உங்களால் பிரயாணம் செய்ய முடியாது.''

''முடியும்.''

''இட்டிக் காயங்கள்?''

''இப்பொழுது அவ்வளவு வலியில்லை.''

என்ன சொல்லியும் அடிகளார் கேட்காததால் அவரையும் அழைத்துக் கொண்டே பயணப்பட்டான் அபராஜிதன். அடிகளார் குதிரையில் ஏறக்கூடிய ஸ்திதியில் இல்லாததால் இரண்டு பேராகத் தூக்கிவிட்டு அவரைக் குதிரையின் முதுகில் பிரதிஷ்டை செய்தார்கள். இணறிக் குதிரைமேல் உட்கார்ந்த அடிகளார் லகானைப் பிடித்துக் குதிரையை லேசாக நடத்திச் சென்றார். சன்னியாசி அவ்வளவு திறமையுடன் குதிரைச்சவாரி செய்வதைக் கண்ட சொக்கப்பெருமான், 'அடிகளார் சன்னியாசி ஆகுமுன்பு ஏதாவது சைன்னியத்தில் இருந்திருப்பாரோ''

என்றுகூட வியந்தான். மேலைமங்கலத்துக்கு அருகிலிருந்த காட்டை அவர்கள் அடைந்தபோது நள்ளிரவுக்குமேல் ஆகிவிட்டது. திடீரெனக் குதிரையின் லகானைப் பிடித்திழுத்து நிறுத்திய அடிகளார், ''பிரபு! சற்று நில்லுங்கள்'' என்று கூறிவிட்டு எதையோ உற்றுக் கேட்டார். சற்றுத் தூரத்தில் குதிரைகளின் குளம்படி கேட்டது. ''கள்ளர் கூட்டமாயிருக்குமா?'' என்று அபராஜிதன் கேட்டான். அடிகளார் மீண்டும் உற்றுக்கேட்டுவிட்டு, ''ஏதோ படை வருகிறதுபோல் தெரிகிறது குதிரைகளின் குளம்படிகள் ஒரே சீராகக் கேட்கின்றன'' என்றார்.

''இரவில் படை நடமாட்டம் ஏது? யுத்தமும் மூளவில்லையே'' என்றான் அபராஜிதன்.

''பொறுத்திருந்து பார்ப்போம்'' என்றார் அடிகளார். அவர் மதிப்பிட்டது சரியாகத்தான் முடிந்தது. இருபத்தைந்து பேர் கொண்ட படையொன்றுதான் வந்தது. முந்திக் குதிரைகளிருந்து வீரர்கள் பந்தம் காட்டிச் சென்றார்கள். பின்னால் பூர்ண இரும்புக் கவசம் அணிந்த சிலர் சென்றனர். முதலிலிருந்த குதிரைக்குப் பின்னர் வந்த குதிரையில் ஆஜானுபாகுவாக இருந்த ஒரு வீரனைக் கண்ட அடிகளார் திக்பிரமைப் பிடித்துக் கையிலிருந்த சேணத்தையும் நழுவவிட்டு, ''அட இழவே! இவன் எங்கேயிருந்து முளைத்தான்? எதற்காக இந்தப் படையை அழைத்துப் போகிறான்? எங்கு போகிறான்?'' என்று குளறினார்.

30. விஷ ஓலை

காட்டு முகப்பிலிருந்த மரங்களின் கரும் இருட்டிலேயே அடிகளார் நின்றிருந்தபடியாலும், பாதையும் காட்டை ஒட்டியே அமைந்திருந்ததாலும், படை அணிவகுப்பில் சென்ற ஒவ்வொரு வீரனையும் எடைபோடக்கூடிய ஸ்திதியிலிருந்து உள்ளங்கால்வரை இரும்புக் கவசமணிந்து ஆஜானுபாகுவாகக்குதிரையில் அமர்ந்து சென்ற முதல் வீரனைக் கண்டதுமே மனம் நிதானத்தை இழந்த

தான். அவனுக்குப் பின்னால்சென்ற வீரர்களைப் பார்க்கக் கூட திராணியில்லாதவரானார் அடிகளார். அப்படி அவர் நிலை தடுமாறி, குலைநடுக்கமெடுத்துக் கொட்டியதைக் கண்ட அபராஜிதனும் அந்த வீரனை ஒரு முறை உற்று நோக்கிவிட்டு அடிகளாருக்காகத் திரும்பி, "யாரவன் அடிகளாரே" என்று வினவினான்.

"ஏன், அவனைத் தெரியவில்லையா, உங்களுக்கு? அவனைத் தெரியாதவர் தமிழ் நாட்டிலேயே இருக்க முடியாதே." என்றார் அடிகளார்.

"அவ்வளவு பிரபலஸ்தனா!"

"ஆமாம் பிரபு."

"இவன் பெயர்?"

"நிஜப்பெயர் தெரியாது..."

"பொய்ப்பெயர்தான் என்னவோ?"

"இவனுக்குப் பொய்ப்பெயர் இல்லை. காரணப் பெயர் இருக்கிறது."

"அதைத்தான் சொல்லுங்களேன்."

அடிகளார் உடனே பதில் சொல்லவில்லை. சற்று அபராஜிதனை நோக்கிவிட்டு, "இவன்தான்..." என்று மீண்டும் நிதானித்தார்

"இவன்தான்...." முடுக்கினான் பாண்டிய சேனாதிபதி.

"கள்ளுக்கடைவீரன்" என்றார் அடிகளார் நிதானமாக.

இந்தப் பதிலைக் கேட்டதும் எதற்கும் அசையாத அபராஜிதன் மனமும் சிறிது அசைந்து, எழுந்த கவலைக்கு அடையாளமாக முகத்திலிருந்த புன்முறுவலும் சற்று மறைந்தது. "மார்க்கியனா இவன்!" என்று குரலில் கவலை தொனிக்க வினவினான் அபராஜிதன்.

"ஆமாம் பிரபு! அவனேதான்" என்று அடிகளார் பதில் சொன்னார்.

யவனனான மார்க்கியனை அறியாதவர்கள் அந்தக் காலத்தில் தமிழ்நாட்டிலேயே கிடையாது. எப்பேர்ப்பட்ட கும்பலிலும் அடையாளம் கண்டுபிடிக்கக்கூடிய வகையில் மிக உயர்ந்த சரீரம் படைத்தவன். நிகரற்ற பலமுடையவன் வியாபாரத்துக்காக யவனநாட்டிலிருந்து மேறகுக் கடற்கரையிலுள்ள முசிறி வந்த மார்க்கீஸ், தென் பிரதேசத்திற்குள்ளே புகுந்து தமிழுறையும் நாடுகள் அனைத்திலும் சுற்றினான். இணையற்ற தமிழ்நாட்டு மதுவை உண்டு காலக்கிரமத்தில் அதற்கே அடிமையாகி, சதா கள்ளுக்கடைகள் பக்கத்திலேயே திரிந்து கண்ட பேர்களையெல்லாம் சண்டைக்கிழுத்துக் கொன்று கொண்டிருந்தபடியால் அவனைக் கண்டு மக்கள் அஞ்சினார்கள். கள்ளுக்கடைச் சண்டையாகையால் மன்னர்கள் அதை புறக்கணிததார்கள்.

அவனது தொல்லைகளைத் தாங்கமாட்டாத ஒவ்வொரு அரசாங்கமும் அவனை நாடு கடத்தியது. கடைசியாக அவன் வந்து சேர்ந்த இடம் மழவராயனின் மேலைமங்கலம். இப்படி ஊர் ஊராகத் திரிந்து கள் குடித்துச் சண்டை பிடித்துப் பிறர் மண்டையை உடைத்து வெளியேவிரட்டப் பட்ட மார்க்கீஸுக்கு, 'கள்ளுக்கடை வீரன்' என்ற புனை பெயர் உலவலாயிற்று. மார்க்கீஸ் என்ற இயற்பெயர் மார்க்கீயனாக மருவிலந்த பெயரும் மறைந்துபோய்க் காரணப்பெயர் நாடெங்கும் நிலவலாயிற்று. அவனுக்குக் கெட்ட பெயர் ஆயிரமிருந்த போதிலும் அவனுக்கிணையாகத் தமிழ்நாட்டில் போராடக் கூடியவர் அதிகமில்லை என்ற பெரிய கீர்த்தியும் கிடைத்திருந்தது மார்க்கீஸுக்கு.

கள்ளுக்கடை வீரனுக்கு இத்தகைய கீர்த்திகள் இருந்தாலும் அவனுக்கு ஒரு படை உண்டென்றோ, அவன் அதற்குத் தலைமை வகித்து ஒழுங்காக அழைத்துச் செல்ல முடியுமென்றோ யாரும் நம்பியதேயில்லை. ஆகவே, அவன் ஒரு சிறு படையுடன் சென்றது ஆச்சரியத்தை மட்டுமன்றி வேறு சில எண்ணங்களின் காரணமாக அச்சத்தையும்

விளைவித்தது. ஒருவேளை விக்கிரம பாண்டியன் கார்குழலியைத் தப்பவைக்க இந்த அயோக்கியனை அமர்த்திவிட்டானோ என்று நினைத்தார். ஆனால் அது சாத்தியமில்லை என்ற முடிவுக்கும் இறுதியில் வந்தார். "கார்குழலி தனியே போக மாட்டாள். இரண்டு சேடிகளையாவது அழைத்துச் செல்லுவாள். இரண்டு சேடிகளும் அரச குமாரியும் போகச்சிவிகைகள் வேண்டும். அவற்றையும் காணோம். விக்கிரம பாண்டியனும் படையில் இல்லை. வெகு சின்னப்பையன். படையில் போகிறவர்கள் எல்லாருமே திடகாத்திரசாலிகள்..." என்று ஏதேதோ யோசனையில் ஆழ்ந்த அடிகளாரை அபராஜிதன் எழுப்பினான். "அடிகளாரே! படை போய்விட்டது. நீர் இன்னமும் விழித்துக் கொள்ளவில்லையே!" என்றான்

"படை போய்விட்டது தெரியும். ஆனால் எங்கே போகிறது? அதுவும் இந்த அர்த்த ராத்திரியில், இந்த அயோக்கியன் தலைமையில் மேலைமங்கலத்திலிருந்து...." என்று அடுக்கிக்கொண்டே போன அடிகளாரை இடைமறித்த அபராஜிதன், "மேலைமங்கலத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்று எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"இந்தப் பாதை நேராக மேலைமங்கலக் கோட்டை வாசலிலிருந்து வருகிறது" என்று விளக்கினார் அடிகளார்.

"அப்படியே மேலைமங்கலத்திலிருந்து வந்தால் தானென்ன? உங்கள் மன்னன் ஏதாவது காரியமாக அனுப்பியிருக்கலாம்."

"சாத்தியமில்லை கள்ளுக்கடையானை மன்னர் ஏற்கெனவே இருமுறை சிறைப்படுத்தியிருக்கிறார், இதில் ஏதோ மர்மமிருக்கிறது."

அபராஜிதனுக்கு இதில் எந்த மர்மமும் இருப்பதாகப் புரியவில்லை. சிறைப்படுத்தியவர்களை மீண்டும் உபயோகிப்பது மன்னர்களுக்குச் சாதாரணம். போர்க்களமாகிக் கிடந்த தமிழ்நாட்டில் எந்த வீரனுக்கும் வேலை கிடைத்

துக் கொண்டு தானிருந்தது. ஆகவே அடிகளாரை நோக்கி, "வீணாக மனத்தைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். இதில் மர்மம் ஏதுமிருக்காது அவசியமிருந்தால் எத்தனை அயோக்கியனாயிருந்தாலும் நாங்கள் உபயோகப் படுத்திக் கொள்வது வழக்கம்" என்றான் அபராஜிதன்.

"எங்கள் மன்னர் வேறு தினுசு" என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டுக் குதிரையை நடத்தினார் அடிகளார். கோட்டை வாசலை நெருங்கிய பிறகுதான் அடிகளார் ஊகம் எத்தனை சரியானது என்பதைப் புரிந்து கொண்டான் பாண்டிய சேனாதிபதி. கோட்டை வாசலில் குதிரையைவிட்டு அடிகளார் இறங்கித் தட்டுத் தடுமாறி நடந்து கோட்டைக் காவலன் மாளிகையை நெருங்கி அவனை அவசர அவசரமாக எழுப்பினார். அப்பொழுதுதான் கண்ணயர்ந்த கோட்டைக் காவலன் கோபத்துடன் எழுந்து வந்து, "யாரது?" என்று சீறிக்கொண்டே வார்த்தையை ஆரம்பித்தவன் அடிகளாரைப் பார்த்து ஒரு விநாடி மலைத்து நின்று மிகப் பணிவான குரலில், "அடிகளாரே! இதென்ன தலையில் கட்டு?" என்று பேச்சைத் துவக்கினான்.

"கட்டு இருக்கட்டும். பெரிய இக்கட்டு ஏற்பட்டிருக்கிறது" என்றார் அடிகளார்.

"என்ன இக்கட்டு?" ஏதும் புரியாமல் விழித்தான் கோட்டைக் காவலன்.

"சற்று முன்பு நமது கோட்டையிலிருந்து படை ஏதாவது வெளியே சென்றதா?" என்று அடிகளார் வினவினார். அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமலே.

"படையா? சென்ற ஒரு ஜாமத்தில் ஒரு மனிதன்கூட கோட்டையைவிட்டு வெளியே போகவில்லை."

"நிச்சயமாகத் தெரியுமா?"

"தெரியும்."

"எதற்கும் காவலாளிகளைக் கேட்டுப்பார்."

"கேட்க வேண்டிய அவசியமில்லை. எனக்கே தெரியும்.

''உனக்குத் தெரியாது. கேட்கவேண்டிய அவசியமிருந்தால் விசாரித்துப் பார்'' என்று வற்புறுத்தினார் அடிகளார்.

அடிகளார் பின்தொடர வெளியே வந்த கோட்டைக் காவலன் கோட்டைமீது காவல் புரிந்து நின்ற இருவீரர்களுக்குக் குரல் கொடுத்து, ''டேய்! கடந்த ஒரு ஜாமத்தில் வாசல் வழியாகப் படை ஏதாவது சென்றதா?'' என்று கூச்சலிட்டான்.

கோட்டை மதில் மீது நின்ற வீரரில் ஒருவன் காவலன் காதில் கேட்பதற்காக இரைந்து கூவினான். ''ஈ காக்காய் கூடச் செல்லவில்லை'' என்று.

காவலன் அடிகளாரைப் பெருமிதத்துடன் பார்த்தான். அடிகளார் பதிலுக்கு இகழ்ச்சியாகச் சிரித்து, ''நல்ல காவல் இது! இந்தக் கோட்டையிலிருந்து வந்த இருபத்து ஐந்து வீரர்களை நாங்கள் மூவர் கண்களால் பார்த்தோம். இங்கிருந்து ஈ காக்காய்கூடப் போகவில்லையாமே'' என்றார் அடிகளார்.

''கோட்டை வீரர்கள் கண்களிலிருந்து யாரும் தப்ப முடியாது அடிகளாரே'' என்றான் காவலன் கோபத்துடன்.

''தப்ப முடியும் என்பதற்கு என் கண்கள் சாட்சி.''

''சொப்பனம் கண்டிருப்பீர்.''

''விழித்திருக்கும்போது காண்பதில்லை.''

பளிச் பளிச்சென்ற பதிலால் வாட்டிய அடிகளாரோடு அதுவரை மௌனமாய் நின்றிருந்த அபராஜிதனும் கலந்து கொண்டான். ''காவலரே, அடிகளார் சொல்வது உண்மை. நாங்கள் பார்த்தோம்'' என்றான்.

காவலன் பாண்டிய சேனாதிபதிக்காகக் கண்களைத் திருப்பி அவனையும் சொக்கப்பெருமானையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு, ''இவர்கள் யார்?'' என்று அடிகளாரைக் கேட்டான்.

''இவர் பாண்டிய சேனாதிபதி...'' என்று அடிகளார் உச்சரித்த மாத்திரத்தில் காவலன் கோபம் காற்றில் பறந்தலே அவன் சேனாதிபதியை வணங்கி, ''பிரபு! மன்னிக்க வேண்டும். தங்களை நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை'' என்றான்.

'பாதகமில்லை விஷயத்தைக் கவனிப்போம். நள்ளிரவில் மேலைமங்கலத்தில் படை நடமாட்டத்துக்கு அவசியமில்லை. ஆனால், ஒரு படை சென்றது மட்டும் உண்மை அதற்குத் தலைமை வகித்துச் சென்றவன் கள்ளுக்கடையான்' என்றான் அபராஜிதன்.

காவலன் முகத்தில் பிரமைகுடிகொண்டது. ''கள்ளுக்கடையானா! அவன் கலந்தால் காரியம் மோசமானதாகத் தான் இருக்கவேண்டும். இப்பொழுது என்ன செய்வதென்று புரியவில்லையே. அவர்களை மறிக்க வீரர்களை அனுப்பலாமா?'' என்று வினவினான்.

''அனுப்பிப் பயனில்லை. அவர்கள் தொலைதூரம் போயிருப்பார்கள்'' என்று காவலனுக்குப் பதில் சொல்லிய அடிகளார் அபராஜிதனை நோக்கி, ''வாருங்கள். மன்னனை எழுப்பிச் சேதி சொல்வோம்'' என்று சொல்லி மெள்ளத் தத்தித் தத்திக் குதிரை ஏறினார்.

''மன்னனை இந்த நேரத்தில் எழுப்ப வேண்டுமா?''

''அவசியமிருந்தால் எழுப்பத் தானே வேண்டும்.'' என்ற அடிகளார், மேற்கொண்டு பேச்சுக்கு இடம் வைக்காமல் குதிரையை நடத்தினார். அபராஜிதனும் சொக்கப்பெருமானும் மௌனமாகவே அவரைப் பின்பற்றிச் சென்றனர். நேராக அந்தப்புரத்துத் திட்டி வாசலில் குதிரையை நிறுத்திய அடிகளார் கீழே இறங்கி, திட்டிவாசலைச் சிறிது அழுத்திப்பார்த்தார். மிக சுலபமாகத் திட்டிவாசல் திறந்ததைக்கண்டதும் குதிரை மேலிருந்த அபராஜிதனை நோக்கினார். அவர் கண்களில் மிதமிஞ்சிய திகில் தாண்டவமாடியதைக்கண்ட அபராஜிதன் விஷயத்தை ஓரளவு ஊகித்துக்கொண்டு, ''கார்குழலி....'' என்று ஆரம்பித்தான்.

''ஓடிவிட்டான்'' என்று முடித்தார் அடிகளார்.

"எதற்கும் உள்ளே போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்" என்றான் அபராஜிதன்.

உள்ளே சென்று கண்ணிமைக்கும் நேரத்தில் திரும்பிய அடிகளார், "பிரபு! சந்தேகமில்லை. கார்குழலியையும் காணோம். தோழிகள் அறையும் காலியாயிருக்கிறது. வாருங்கள். மன்னனைப் பார்ப்போம்" என்றார்.

அடிகளாரின் முயற்சியால் அர்த்த ராத்திரியில் எழுப்பப்பட்ட மழவராயன் அவர்களைத் தன் சயன அறையிலேயே சந்தித்தான். அடிகளார் தகவலைப் பயந்து சொன்னார். தகவலைக் கேட்டதும் என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்று திகில்பட்ட அபராஜிதன் கூட மழவராயன் மனோதிடத்தைக் கண்டு மலைத்துப் போனான். மழவராயன் தீர்க்காலோசனையுடன் வெகு நேரம் உட்கார்ந்திருந்துவிட்டு, "அடிகளாரே! இதைப் பற்றிக் காலையில் ஒரு முடிவுக்கு வருவோம். அதுவரை படுத்துப் பிரயாண அலுப்பைத் தீர்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு வேலையாட்களை அழைத்துப் பாண்டிய சேனாதிபதிக்கும் அவன் பணிமகனுக்கும் வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க உத்தரவிட்டான்.

"வேண்டாம் மன்னவா! நாங்கள் அடிகளாரின் அறையிலேயே தங்குகிறோம்" என்று சொல்லிய அபராஜிதன் மழவராயனை வணங்கிவிட்டு அடிகளாரைத் தொடர்ந்து சென்றான். அவர்களை அறையில் படுக்கச் சொல்லிய அடிகளார் சற்று நேரத்திற்கெல்லாம் எழுந்து அடிமேல் அடிவைத்துப் பூனைபோல் மழவராயன் அறையை நெருங்கி, சாளரத்தின் மூலமாக உள்ளே கவனித்தார். அவர் நினைத்தது சரியாகப் போய்விட்டது. மழவராயன் தூங்கவில்லை. அப்பொழுதுதான் ஓர் ஓலையை எழுதி முடித்து முத்திரையை வைத்துக் கொண்டிருந்தான். அதைத் தாங்கிச் செல்ல அவன் பக்கத்தில் ஒரு தூதனும் தயாராக நின்று கொண்டிருந்தான். அடிகளார் வேகமாகத் தமது அறைக்குத் திரும்பி வந்து

அபராஜிதனை எழுப்பி, "பிரபு! குடி முழுகிப் போய்விட்டது..." என்று வேகமாக வந்ததால் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கத் திக்கு முக்காடிச் சொன்னார்.

"என்னய்யா இது?" அபராஜிதன் வினவினான் ஏதும் புரியாமல்.

'வாருங்கள் காட்டுகிறேன்" என்று கூறிய அடிகளார் அவனை அறையிலிருந்து வெளியே அழைத்து வந்தார். அவர்கள் வெளியே வருவதற்கும், தூதுவன் தோட்டத்துப் படிகளின் வழியாக இறங்கி வருவதற்கும் சரியாக இருந்தது. அவனை அபராஜிதனுக்குச் சுட்டிக் காட்டிய அடிகளார், "பிரபு! அவன் மழவராயன் அந்தரங்கத் தூதுவன்" என்றார்.

அபராஜிதன் தூதுவனையும் நோக்கி அடிகளாரையும் நோக்கினான். அவன் பதில் சொல்லு முன்பு அடிகளாரே பேசத்தொடங்கி, "அவனிடம் ஒரு கடிதம் இருக்கிறது" என்றார்.

"என்ன கடிதம்?"

"கார்குழலியின் வாழ்க்கையை நாசம் செய்யக்கூடிய விஷ ஓலை" என்ற அடிகளார் துக்கத்தால் பெருமூச்சு விட்டார்.

அபராஜிதன் ஏதும் புரியாமல் ஸ்தம்பித்து நின்றான். 'அர்த்த ராத்திரியில் ஒரு தூதன்! அவனிடம் ஓர் ஓலை! அதனால் மழவமன்னன் மகளின் வாழ்க்கையே நாசம்! இதென்ன மர்மம்?" என்று யோசித்தான்.

அடுத்த விநாடி அடிகளார் மர்மத்தை உடைத்தபோது மனமே உடைந்துபோகும் நிலையை எய்தினான் அபராஜிதன். மனம் சுக்கல் சுக்கலாக உடையும் அந்த நிலையில் வீரனான அபராஜிதன்கூடச் சுயநிலை இழந்து, "அப்படி ஒருகாலும் இருக்காது அடிகளாரே" என்று கெஞ்சினான்.

"மழவராயனை உமக்குத் தெரியாது." என்று சுருக்கமாகப் பதில் சொன்ன அடிகளாரும் கடிதத்தை நினைத்து நடுங்கினார்.

அதென்ன அப்பேர்ப்பட்ட கடிதம்?

அடிகளார் அப்படிப் பட்டவர்த்தனமாக விஷ ஓலையின் விஷயத்தை விளக்கி உடைத்துச் சொன்ன பிறகும்கூட பாண்டிய சேனாதிபதியான அபராஜிதனுக்கு அதில் பூரணமான நம்பிக்கை ஏற்படவில்லை. வீரனான ஒரு தமிழ் மன்னன் அத்தகைய ஒரு கடிதத்தை எழுதியனுப்புவானென்று நினைக்கக்கூட அவனால் முடியவில்லை. உண்மையில் கடிதம் மட்டும் அடிகளார் சொன்னதுபோல் அமைந்திருந்தால் தமிழ்நாட்டின் சரித்திர ஏடுகளில் மழவராயனைப்பற்றி எழுதப்படும் பகுதிகளில் கரி பூசப்படும் என்பதையும், பிற்கால மக்கள் அவனைப்பற்றிப் படிக்கும்போதெல்லாம் இகழ்ச்சியையும் ஏசலையும் அள்ளிக் கொட்டுவார்கள் என்பதையும் அபராஜிதன் உணர்ந்ததால் எந்தக் காரணத்தை முன்னிட்டும் மழவராயன் அத்தனை கேவலமான வழியில் இறங்க மாட்டான் என்றே தீர்மானித்தான். அப்படி யோசனைகள் சிந்தனைகள் ஊடுருவிச் செல்ல, திக்பிரமை பிடித்தது போல் நின்றிருந்த பாண்டிய சேனாதிபதியை உற்றுப் பார்த்த அடிகளார் அவன் மனத்தில் ஓடிய எண்ணங்களை அரை வினாடியில் புரிந்து கொண்டார். ஆகவே அவனைப் பார்த்து, ''சேனாதிபதியவர்களுக்கு நான் சொல்வதில் நம்பிக்கை ஏற்படவில்லை போலிருக்கிறது'' என்று பாதி கேள்வி தொக்கி நின்ற ஒரு வாசகத்தை வீசினார்.

கவலையால் தாழ்ந்து நின்ற அபராஜிதனின் கண்கள் அடிகளாரை ஏறெடுத்துப் பார்த்தன. சற்று நேரம் நிதானித்துவிட்டு அவன் பதில் சொன்னான்: அடிகளாரே! நீங்கள் ஏதோ ஊகத்தின்மேல் சொல்லிவிட்டீர்கள் என்று நினைக்கிறேன். இத்தகைய ஒரு காரியத்தில் இறங்கினால் மழவராயன் பெயர் மண்டலமெங்கும் சிரிப்பாய் சிரிக்கும் தெரியுமா? இதை மழவராயன் யோசித்திருக்க மாட்டான் என்று நம்புகிறீரா?''

அடிகளார் அரைக்கணம்கூடத் தயங்காமலே சேனாதிபதியை நோக்கி, ''பிரபு மழவராயன் எந்தக் காரியத்

திலும் யோசிக்காமல் இறங்கமாட்டான். ஆனால் எப்பொழுது யோசிக்கிறான் எப்பொழுது யோசிக்கவில்லை என்பது மட்டும் யாருக்கும் தெரியாது. அர்த்த ராத்திரியில் அவனை வந்து எழுப்பினோமே, அவன் எப்படி நடந்து கொண்டான் பார்த்தீர்களா?'' என்று கேட்டார்.

அடிகளார் எதைப்பற்றிக் குறிப்பிடுகிறார் என்பதை அறிந்து கொள்ள முடியாததால் சற்று ஆலோசித்த அபராஜிதன், ''எதைப்பற்றிக் குறிப்பிடுகிறீர்கள் அடிகளாரே? மழவராயன் நடந்து கொண்டதில் எந்த வித்தியாசமும் எனக்குத் தெரியவில்லையே ஒரு மன்னன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படித்தான் நடந்து கொண்டான்'' என்றான்.

''அதைச் சொல்லவில்லை பிரபு. நாம் எந்தக் காரியத்துக்காக அவனை எழுப்பினோம்?'' என்று சற்று எரிச்சலுடன் கேள்வி கேட்டார் அடிகளார்.

''கார்குழலி காணவில்லை என்பதை அறிவிக்க.''

''அதை அறிவித்தோமா?''

''ஆம்.''

''மழவராயன் சிறிதாவது அசைந்தானா பார்த்தீரா?'

''இல்லை.''

''கார்குழலி ஓடி விட்டாள் என்ற தகவலை, தகப்பன் நிலைதடுமாறித் தத்தளிக்கக்கூடிய செய்தியை, நள்ளிரவில் வந்து சொல்கிறோம். அவன் ஏதும் நடக்காதது போல் நம்மைப் படுத்துக் கொள்ளச்சொல்கிறான். அத்தனையையும் கேட்டுக்கொண்டு கல்லுப்பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருந்தான் கவனித்தீரா?''

''கவனித்தேன்.''

''சரி, அதுதான் போகட்டும். நானும்தான் கிட்டத்தட்ட ஒரு வாரமாக ஊரிலில்லையே. மறைந்தே போய் விட்டேனே! எங்கு போனாய் என்று கேட்டானா பார்த்தீர்களா?''

''கேட்கவில்லை.''

"திரும்பி வந்தவன் சாதாரணமாகவா வந்திருக்கிறேன்?"

"வேறு எப்படி வந்திருக்கிறீர்?"

"தலையில் இத்தனை பெரிய கட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறேனே, எதற்காகக் கட்டு என்றாவது விசாரித்தானா? எதையாவது கேட்டானா? அக்கறையாவது காட்டினானா பாரும். தனக்கும் இந்த விவகாரங்களுக்கும் சம்பந்தமில்லாதது மாதிரியும் இவையெல்லாம் தினசரி நடக்கக்கூடிய காரியங்கள் மாதிரியும் கம்மென்று உட்கார்ந்திருந்தான் மழவராயன். அத்தனையும் அழுத்தம். அவனுக்கு நான் முக்கியமில்லை நீர் முக்கியமில்லை, பெண்ணும் முக்கியமில்லை..." என்று எரிச்சல் தாங்க மாட்டாமல் அடுக்கிக் கொண்டு போன அடிகளாரை இடைமறித்த அபராஜிதன் "பின் எதுதான் முக்கியம்?" என்று வினவினான்.

"தமிழ்நாடு ஒன்றுதான் முக்கியம்" என்று குரலில் பூரண உறுதி துலங்கக் கூடிய அடிகளார், "பிரபு! சந்தேகமே வேண்டாம். கடிதம் வீரபாண்டியனுக்குத்தான் போகிறது வீரபாண்டியனுக்குப் பெண்ணைப் பலியிடத் தீர்மானித்துவிட்டான் மழவராயன்" என்றும் தொடர்ந்து அறிவித்தார்.

"வீரபாண்டியனிடம் அப்படியென்ன வீரத்தைக் கண்டுவிட்டான் மழவராயன்?" என்று கேட்டான் அபராஜிதன் கோபம் சற்றுக் குரலில் ஏற.

"வீரபாண்டியன் வீரமற்றவன் என்பது மழவராயனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் குலசேகர பாண்டியன் மகனுக்கு மகளைக்கொடுப்பதைவிட வீரபாண்டியனுடன் ஏற்படக்கூடிய மணத்தொடர்பே தமிழ்நாட்டைக் காப்பாற்றும் என்று மழவராயன் நினைக்கிறான்" என்று அடிகளார் சொன்னார்.

"வீரபாண்டியனுக்குப் பெண்ணைக் கொடுத்தால் தமிழ்நாடு எப்படித் தப்பும்? இலங்காபுரன் தமிழ் நாட்டை விட்டு ஓடிவிடுவானா, இல்லை சோழன்தான் படையெடுப்பை நிறுத்திவிடுவானா?" என்று சேனாதிபதி வினவினான்

"வீரபாண்டியனுக்குப் பெண்ணைக் கொடுத்தால் பாண்டிய நாடும் மழவநாடும் இணையும். கார்குழலி பாண்டிய ராணியானால் வீரபாண்டியன்மீது சிங்களத்துப் பைங்கிளிக்குள்ள ஆதிக்கம் குறையும் அவள் ஆதிக்கம் குறைந்தால் இலங்காபுரன் யோசனையும் வீரபாண்டியன் காதுகளில் ஏறாது. பிறகு தன் போதனை ஏறும் என்று மழவராயன் தீர்மானித்திருக்கிறான்."

"போதனை ஏறினால்?"

"இலங்காபுரன் ஸ்தானத்துக்கு மழவராயன் வருவான்."

"இலங்காபுரனிடமிருக்கும் சிங்களத்துப் படைகளுக்கு யார் பதில் சொல்வது?"

அடிகளார் மெள்ளப் புன்முறுவல் காட்டினார். "மழவராயன் இத்தனை நாள் கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தானென்று நினைக்கிறீர்களா? மழவராயன் படை பலத்தைப். பெருக்கியிருக்கிறான். சிற்றரசான மழவநாடு தனித்து எதுவும் செய்ய முடியாது என்பது மழவராயனுக்குத் தெரியும். ஆனால் பாண்டிய நாட்டுடன் இணைந்தால் தன் படையின் பலத்தால் சிங்களவர்களை விரட்டிவிடலாம் என்று மழவராயன் நினைக்கிறான். அப்படி விரட்டிவிட்டால் சோழன் பாண்டிய நாட்டின்மீது படையெடுப்பதும் அனாவசியமாகிவிடும். சோழர்களிடம் பாண்டியநாடு நட்புக் கொள்ளலாம். தமிழ் மன்னர்கள் ஒற்றுமையால் தமிழ் நாட்டில் அமைதி நிலவும் என்பது மழவராயன் தீர்மானம்" என்று கூறினார்.

அத்தனை கவலையிலும் அபராஜிதன் வாய்விட்டுச் சிரித்தான். அவன் சிரிப்பைக் கண்ட அடிகளாருக்குக் கோபம் எழவே லேசாக உஷ்ணம் ஏறிய குரலில் கேட்டார். "இதில் சிரிப்பதற்கு என்ன கண்டுவிட்டீர்?" என்று.

''சிரிக்காமல் என்ன செய்வது அடிகளாரே! தமிழ் நாட்டின் தலைவிதியை நினைத்தாலே சிரிப்பாகத்தானிருக்கிறது'' என்று சொன்னான் அபராஜிதன்.

''நீங்கள் சொல்வது புரியவில்லை'' என்றார் அடிகளார்.

''மழவராயன் இந்த மணத் தொடர்பால் இலங்காபுரனை விரட்டிச் சோழ நாட்டுடன் தொடர்புகொள்ளத் திட்டம் போடுகின்றானல்லவா?''

'' ஆமாம் ''

''வீரபாண்டியன் திட்டம் வேறு.''

இதைக் கேட்ட அடிகளார் கண்களில் ஆச்சரியம் பொங்கி வழிய அபராஜிதனை நோக்கினார் அவர் முகத்தில் தாண்டவமாடிய ஆச்சரியத்தையும் அதில் தொக்கி நின்ற சந்தேகத்தையும் பார்த்த அபராஜிதன் விளக்கினான். ''ஆமாம் அடிகளாரே! வீரபாண்டியன் திட்டம் இதற்கு நேர்மாறானது. வீரபாண்டியன், அந்த மணத் தொடர்பினால் இலங்காபுரனை விரட்ட இஷ்டப்படவில்லை. சோழ நாட்டுடன் நட்புக் கொள்ளவும் தயாராயில்லை. சோழ நாட்டுடன் போர் செய்ய பறைசாற்றி விட்டான்.''

அடிகளாருக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''என்ன, சோழ நாட்டுக்கும் பாண்டிய நாட்டுக்கும் போர் மூளப் போகிறதா!'' என்று வாயைப் பிளந்து அதிர்ச்சியைப் பொறுக்காமல் தமது வழுக்கைத் தலையையும் ஒருமுறை வலது கையால் தடவிக்கொண்டார்.

''ஆமாம்'' என்று திட்டமாகச் சொன்னான் அபராஜிதன்.

''யார் சொன்னது?''

வீரபாண்டியனே சொன்னான் அதுவும் நடுச் சபா மண்டபத்தில் அமர்ந்து.''

''யாரிடம் சொன்னான்?''

''அண்ணன் பல்லவராயனிடம்.''

''யார்! சோழ நாட்டுச் சேனாதிபதியிடமா?'' மூச்சு நின்று விடும் போலிருந்தது அடிகளாருக்கு. வீரபாண்டியன் முட்டாளென்று அடிகளாருக்குத் தெரியும். ஆனால், சோழப் பேரரசை போருக்கு அழைக்கும் அத்தனை முட்டாள்தனம் அவனிடம் குடி கொண்டிருக்கும் என்று அவர் நினைக்கவேயில்லை. ஆகவே குரலில் பிரமிப்பு பூரணமாகத் தொனிக்கச சொன்னார். ''பிரபு! இருவர் திட்டமும் நேர் விரோதமாக இருக்கிறதே!'' என்று.

ஆமாம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த அபராஜிதன் சற்றுச் சிந்தித்துவிட்டு, ''இப்பொழுது என்ன செய்யலாம்?'' என்று அடிகளாரை நோக்கி வினவினான்.

எதைப்பற்றி?''

''கார்குழலியின் கதியைப் பற்றித்தான்.''

''அதில் நான் என்ன செய்ய முடியும்? மழவராயன் வீரபாண்டியனை உடனே பயணப்பட்டு வரச்சொல்லி அவசர ஓலை எழுதி அனுப்பியிருக்கிறான். கார்குழலி ஓடிவிட்டதையும் அதில் குறிப்பிட்டிருக்கிறான்....'' என்று சொன்ன அடிகளாரின் பேச்சை இடையே வெட்டிய அபராஜிதன். ''எங்கு ஓடி இருக்கிறாள் என்று தெரியுமா?'' என்று வினவினான்.

''நல்ல கேள்வி கேட்டீர்கள்! மழவராயனுக்கா தெரியாது. கார்குழலி போய்விட்டாள் என்றதுமே நீலமலைக் கருகிலுள்ள கன்னி மாடத்துக்குத்தான் என்று நிச்சயமாகத் தெரிந்து கொண்டிருப்பான். தமிழ்நாட்டில் அவளுக்குப் புகலிடமளித்து அவளைப் பாதுகாக்கக்கூடிய கோட்டை அது ஒன்றுதான் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும்'' என்றார் அடிகளார். பின்னர், மேலும் சொன்னார்: ''கருணாகரத்தேவர் வந்து பாண்டிய நாட்டுக்கும் மழவநாட்டுக்கும் திருமணத் தொடர்பைப் பேசி நிச்சயித்தவுடனேயே மழவராயன் நீலமலைக் கன்னி மாடத்திலிருந்த கார்குழலியை மேலைமங்களத்துக்கு வர

வழைத்துவிடான். இங்கு கார்குழலி இருந்தபோது வீர
பாண்டியன் அவளிடம் முறை தவறி நடந்து
கொண்டதைக்கூட மழவராயன் பொருட்படுத்தவில்லை.
மகள் திருமணத்தை எதிர்த்தால் அவளைத் தன் கண்
பார்வையிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்
காகவே திரும்பவும் கன்னிமாடத்துக்கு அனுப்பாமல்
இங்குள்ள அந்தப்புரத்திலேயே வைத்துக் கொண்டான்.
இப்போது அவள் ஓடி விட்டதால் வீரபாண்டியனை
விட்டுக் கன்னிமாடக் கோட்டையை முற்றுகையிட்டு
மகளைப் பிடித்து ராட்சஸ விவாகம் செய்து கொள்ளச்
செய்வதே மழவராயன் நோக்கம். அதைத் தான்
கடிதத்தில் எழுதியிருப்பான்.

"ராட்சஸ விவாகமா!" என்று ஆச்சரியத்துடன்
வினவினான் அபராஜிதன்.

"ஆமாம்" என்று பதிலிறுத்தார் அடிகளார்.

"காதலற்ற விவாகம்...." என்று முணுமுணுத்தன
அபராஜிதன் உதடுகள்.

"ஆனால் சாஸ்திர சம்மதம்" என்றார் அடிகளார்.

"என்ன சாஸ்திரம் அது?" வெறுப்புடன் கேட்டான்
சேனாதிபதி.

"க்ஷத்திரிய தர்மத்தைப் பற்றிய சாஸ்திரம். பலவந்த
மாகப் பெண்களைத் தூக்கிச் சென்று திருமணம் புரியும்
ராட்சஸ விவாகத்தை க்ஷத்திரிய தர்மம் அனுமதிக்கிறது"
என்றார் அடிகளார் மீண்டும்.

"வடநாட்டு தர்மம்." கோபத்துடன் எழுந்தது
அபராஜிதன் குரல்.

"தமிழ் நாட்டுடன் கலந்துவிட்டது" என்று சற்றுத்
தமது சொருபத்தைக் காட்டினார் அடிகளார்.

வெகுண்டு எழுந்த உள்ளத்தால் உக்கிரம் பூரணமாகக்
குரலில் தொனிக்க, "அது எந்த தர்மமாக இருந்தாலும்
சரி அடிகளாரே! அது தமிழ்நாட்டில் உடைக்கப்படும்.
மனிதர்கள் க்ஷேமத்துக்காக வகுக்கப்படுவது தர்மம்.
அறநூல், மகிழ்ச்சியை மண்ணாக்குவதற்காக அல்ல. இந்த

மழவராயனல்ல, வீரபாண்டியனல்ல, உலகமே திரண்டு
வந்தாலும் சரி, என் ஒரு வாள் இருக்கும் வரையில்
கார்குழலியை யாரும் அவள் இஷ்ட விரோதமாக நெருங்க
முடியாது" என்று சீறினான் சேனாதிபதி. "வீர
பாண்டியன் இங்கு வருவதற்குள் நாம் கன்னி மாடத்தை
அடைய வேண்டும்" என்று பேச்சை ஓட்டிய சேனாதிபதி
சட்டென்று ஏதோ ஆலோசித்து, "ஆமாம்! அவள்
கன்னிமாடத்துக்குத்தான் போயிருப்பாளென்பது என்ன
நிச்சயம்?" என்று கேட்டான்.

"வேறெங்கு போக முடியும்?" என்று பதில் கேள்வி
போட்டார் அடிகளார்.

"நாம் காட்டில் சந்தித்த இருபத்தைந்து வீரர்களில்
நீர் சொன்ன விக்ரம பாண்டியனையும் காணோம்,
சிவிகைகளும் இல்லையே."

"அதனாலென்ன? சந்தேகத்தை அகற்றப் படை
இரண்டாகப் பிரிந்து போயிருக்கலாம். காட்டின் பின்
புறமாகச் செல்ல ஓர் ஒற்றையடி குறுக்குப் பாதையிருக்
கிறது. சந்தேகம் வேண்டாம் பிரபு! கார்குழலி முட்டா
ளல்ல. இந்த அடிகளால் வளர்க்கப்பட்டவள். கன்னி
மாடத்து வீரர்களெல்லோரும் அவளுக்காக உயிரைக்
கொடுப்பார்கள். அவள் அவர்களை நம்பித்தான் சென்
றிருக்கிறாள். விக்கிரமபாண்டியனையோ கள்ளுக்கடை
யானையோ அவள் நம்பியிருக்கிறாளென்று நினைக்க
வேண்டாம்."

"அப்படியானால் அவர்களை அமர்த்துவானேன்?"

"அவள் எங்கே அமர்த்தினாள்? விக்கிரம பாண்டிய
னிடம் ஆட்களை அமர்த்தச் சொல்லி நான்தான் ஏற்பாடு
செய்தேன். அதற்காகக் கார்குழலியின் முத்து வளையல்
களைக்கூட வாங்கிக் கொடுத்தேன்."

"உமது வேலைதானா இது? இந்த நல்லகைங்கரியத்தை
எதற்காகச் செய்தீரோ!"

''கார்குழலி கன்னி மாடத்துக்குப் போனால் மழவராயன் அவளை அங்கிருந்து கொண்டுவந்து வீரபாண்டியனுக்கு மணமுடிக்கப் பார்ப்பானென்பது எனக்குத் தெரியும். ஒருவேளை மன்னன் உத்தரவுக்குக் கோட்டை வீரர்கள் பணியத் துணிந்தாலும் அவர்களைச் சமாளிக்க நமக்கென்று சில வீரர்கள் வேண்டாமா? அதற்காகத்தான் இந்த ஏற்பாட்டைச் செய்தேன். ஆனால் அந்த முட்டாள் விக்கிரம பாண்டியன் போயும் போயும் கள்ளுக்கடையானை அமர்த்துவானென்று நான் எதிர்ப்பார்த்தேனா?'' என்று அடிகளார் சலித்துக் கொண்டார்.

''அடுத்தபடி நான் செய்யவேண்டியது என்ன?'' என்று கவலையுடன் விசாரிததான் அபராஜிதன்.

ராஜதந்திரத்திலும் போர்த் தந்திரத்திலும் பிரசித்தி பெற்ற அபராஜிதனே தம்மை யோசனை கேட்டதுபற்றி அடிகளாருக்குச் சற்று பெருமைதான். இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமலே சொன்னார்: ''பிரபு! இரண்டு மூன்று நாட்களில் வீரபாண்டியன் எப்படியும் இங்குவந்து சேருவான். அவனும் மழவராயனும் செய்யும் முடிவுகளை நாம் அறிந்து கொண்ட பின்பே நமது நடவடிக்கையைப் பற்றி முடிவு செய்ய வேண்டும். ஆகையால், இரண்டு நாட்கள் தாங்கள் தலை மறைவாயிருப்பதே நல்லது''

''நான் எப்படித் தலைமறைவாய் இருக்கமுடியும்? நான் வந்திருப்பது உங்கள் மன்னனுக்குத் தெரியுமா!''

''மாறு உடை அணிந்து கொள்ளுங்கள். உங்களை இந்த ஊரிலேயே மறைத்து வைக்க இடமிருக்கிறது. நீங்கள் ஏதோ அவசர அலுவலாக தெற்கு நோக்கிச் சென்று விட்டதாக மன்னனிடம் சொல்லிவிடுகிறேன்.''

''சிவப்பெரும் பழமான தாங்கள் எனக்காகப் பொய் சொல்ல வேண்டுமா?'' என்று சாதுரியமாக வினவினான் அபராஜிதன்.

''ஹோஹோ! அப்பனே, அவன் பெயர் சொன்னால் சகல பாவங்களும் சாம்பலாகும். அவன் பெயர் சொல்லி

இந்த அற்ப பாபத்தை அகற்றிக்கொள்ள இந்த அடிகளால் முடியாதா?'' என்று இன்னும் அதிக சாதுரியத்தைக் காட்டி நகைத்தார் அடிகளார். அபராஜிதனும் சிறிது கவலைகரையவே கலகலவென்று நகைத்தான்.

அத்துடன் அறையில் படுக்கச் சென்ற இருவரும் பாக்கி இரவைத் தூங்காமலே கழித்தனர். விடியற்காலையிலேயே அடிகளார் சேனாதிபதிக்குச் சாதாரண வீரனின் உடையைக் கொடுத்து அவனையும் சொக்கப் பெருமாளையும் மேலைமங்கலத்துக்குத் தெற்குக் கோடியிலிருந்த ஒரு சிவமடத்தில் தங்கவைத்தார். அங்கு அவர்களுக்குச் சகல சௌகரியங்களையும் செய்து கொடுக்கத் தமது சிஷ்யப் பண்டாரங்களையும் நியமித்துவிட்டு காலையில் மழவராயனைச் சந்தித்து அபராஜிதன் அவசர வேலையாகச் சென்றுவிட்ட தகவலையும் தெரிவித்தார். அடிகளார் திட்டப்படியே எல்லாம் நிறைவேறின. மழவராயன் சேனாதிபதியின் வரவையோ போக்கையோ ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை; அடிகளாரும் அவன் போனதைப் பற்றி லட்சியம் செய்யாதது போலும், தனக்கு அதில் எந்த சம்பந்தமும் இல்லாதது போலும் நடமாடிக் கொண்டு அடிக்கடி உதட்டில் சிவநாம ஸ்மரணையுடனும் உள்ளத்தில் கார்குழலியைப்பற்றிய கவலையுடனும் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்.

நாட்கள் மூன்று ஓடின. பெரும்புயல் புகுந்தது போல் மிகுந்த பரபரப்புடனும் கோபத்துடனும் மேலைமங்கலத்துக்குள் நுழைந்த வீரபாண்டியன் நேராக மழவராயன் மாளிகைக்குச் சென்றான். அடுத்த சில வினாடிகளில்பாண்டிய மன்னன் மழவராயன் அந்தரங்கஅறையில் அவனைச் சந்தித்துச்சீறி, கேள்விகளைச் சரமாரியாக வீசினான். அவர்கள் இருவர் பேச்சையும் சாளரத்தின் வெளிப்பாகத்திலிருந்து ஒட்டுக் கேட்ட அடிகளார், பாண்டியன் சீறலைப் பற்றிச் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. ஆனால் மழவராயன் மிக நிதானமாகச் சொன்ன முதல் பதில் அவரை ஓர் உலுக்கு உலுக்கிக் கலங்க வைத்தது.

இரண்டாவது பதிலைக் கேட்டதும் அடிகளார் தலை மிதமிஞ்சிய திகிலால் சுற்ற ஆரம்பித்தது. மூன்றாவது பதில் அவர் திட்டங்களுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கவே மூர்ச்சை போடும் நிலை எய்தினார் சிவானந்த அடிகளார்.

32. வேலும் வேல் விழிகளும்

முழு இருட்டு மேலைமங்கலத்தைக் கவ்வாததால் பளிச்சென்று எரியக்கூடிய விளக்குகள் கூட மங்கலாகத் தெரிந்த அந்திப் பொழுதைச் சற்றே அடுத்து வந்த அந்த ஆரம்ப இரவிலே, அரண்மனையின் அந்தரங்க அறையிலே, வீரபாண்டியன் கேட்ட கேள்விகளுக்கு மழவராயன் பதிலளிக்கும் வரையில் விஷயம் அத்தனை விபரீதத்துக்குப் போகக்கூடும் என்பதைச் சிவானந்த அடிகளார் கனவில் கூட கருதவேயில்லை. வீரபாண்டியனிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக் கார்குழலி முனைந்தால் எத்தகைய நடவடிக்கை எடுப்பாள் என்பதை மழவராயன் ஓரளவு ஊகித்துவிடுவான் என்பதை அடிகளார் அறிந்துதானிருந்தார். ஆனால் அத்தகைய நடவடிக்கையை அவளிடமிருந்து முன்கூட்டியே எதிர்பார்த்து அதை முறியடிக்கக்கூடிய சகல முன்னேற்பாடுகளையும் அவன் செய்து முடித்திருப்பான் என்பதை அவனுடன் ஆயுள் பூராவும் பழகிய தன்னால் கூட அறிய முடியவில்லையே என்பதை நினைத்துப் பாதி ஆச்சரியத்திலும் கார்குழலியின் கதி எப்படிப் போய் முடியுமோ என்ற கவலையால் பாதி துக்கத்திலும் மூழ்கினார் சிவானந்த அடிகளார்.

மங்கலான அறை வெளிச்சத்தில் கற்சிலை போல் உட்கார்ந்திருந்த மழவராயனைச் சலனமான பார்வையோடும் நிதானமற்ற நடையோடும் நெருங்கிய வீரபாண்டியன் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று தெரியாமல் ஒரு நிமிஷம் திணறிய பிறகு ''கடிதம் கிடைத்தது'' என்று கர்ஜித்தான். யோசனை நிரம்பிய மழவராயன் கண்கள் சற்று உயர்ந்து வீரபாண்டியனை நோக்கின. பிறகு பக்கத்திலிருந்த ஆசனத்திற்குச் சென்று லயித்தன. அந்த சமிக்ஞையைப் புரிந்துகொண்டாலும் வீரபாண்டியன் ஆசனத்தில் அமர இஷ்டப்படாமலே, ''இங்கு கையைக் கட்டிக்கொண்டு உட்காருவதற்காக வரவில்லை. உங்கள் புதல்வி எங்கு ஓடிவிட்டாள், எதற்காக ஓடினாள். ஓட எப்படி நீங்கள் அனுமதித்தீர்கள் என்பதை அறியவே வந்தேன்'' என்று சரமழைப்போலச் சொற்களை உதிர்த்தான்.

கார்குழலி ஓடிவிட்டதால் சற்றுக் கவலையுடனிருந்த அந்தச் சந்தர்ப்பத்தில்கூட மழவராயன் உதடுகளில் லேசான புன்முறுவலொன்று தோன்றி மறைந்தது. எதிரே நின்ற வீரபாண்டியனை மீண்டும் துழாவிய அவன் கண்களில் 'இவன் என் மகளுக்குச் சரியான மணாளனா?' என்ற சந்தேகமும் தொக்கி நின்றதாகப் புலப்பட்டது சாளரத்தின் மறைவில் நின்றிருந்த அடிகளாருக்கு. வீரபாண்டியன் ஆத்திரத்தில்கூடச் சிறிதும் அசங்காமல் பதில் சொன்னான் மழவராயன்: ''பாண்டிய மன்னனே! கையைக் கட்டிக்கொண்டு உங்களை இங்கு உட்கார வைக்க நான் கடிதம் எழுதி வரவழைக்கவில்லை. என் புதல்வி கார்குழலி தங்களுக்கு மனையாளாக நிச்சயிக்கப்பட்டிருக்கும் பெண், கன்னிமாடத்துக்கு ஓடிவிட்டாளென்பது நிச்சயம். ஏன் ஓடிவிட்டாள் என்று என்னைக் கேட்க வேண்டிய அவசியமில்லை. உங்களுக்கே தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் சொல்கிறேன். கேளுங்கள். உங்களிடமுள்ள பிரியத்தால்தான் அவள் ஓடியிருக்கவேண்டும். ஓட ஏன் அனுமதித்தேனென்று கேட்கிறீர்கள். நான் அனுமதித்து அவள் போயிருந்தால் அதற்கு ஓடிப் போவது என்று தமிழில் சொல்வதில்லை. அனுப்புவது என்ற சொல்தான் பொருந்தும்.''

மழவராயனின் பதிலில் தொக்கியிருந்த இகழ்ச்சியைக் கவனிக்கும் நிலையிலோ அதற்குப் பதில் கொடுக்கும் நிலையிலோ வீரபாண்டியன் இல்லை. கார்குழலியைப் பற்றிய

சிந்தனையிலேயே அவன் சிந்தை நிலைத்திருந்ததால் மீண்டும் கோபத்துடன் கேட்டான். 'கன்னிமாடத்துக்கு ஓடி விட்டானா! யாருடன் போயிருக்கிறான்?''

''விக்கிரம பாண்டியனுடன் போயிருப்பானென்று தோன்றுகிறது'' என்று பதில்சொன்னான் மழவராயன். இந்தப் பதிலைக் கேட்டதும் வெளியேயிருந்த அடிகளார் மூச்சைப் பிடித்துக்கொண்டு, 'மழவராயன் ஒருவேளை யட்சிணி உபாசகனா' என்று நினைத்தார். ஆனால் அவன் பின்னால் விளக்கம் செய்தபோது மேலைமங்கலத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் அவனுக்கு எப்படித் தெரிந்திருக்கிறது என்பதை நினைத்து வியந்தார்.

வீரபாண்டியன் விழிகள் மழவராயனை நோக்கி ஆச்சரியத்தால் மலர்ந்தன. ''விக்கிரம பாண்டியனா!'' என்ற கேள்வியும் அவன் பார்வையில் தொக்கி நின்றது. அதை நொடிப் பொழுதில் ஊகித்துக்கொண்ட மழவராயன், ''சந்தேகம் வேண்டாம்; குலசேகர பாண்டியன் மகன் தான்; தங்கள் தாயாதிதான். அவன் தான் இந்த வேலையைச் செய்திருக்க வேண்டும்; கார்குழலி ஓடியதற்கு முன்பு ஒரு வாரமாகவே அவன் மேலை மங்கலத்தில் உலாவிக் கொண்டிருக்கிறானென்பதை ஒற்றர்கள் மூலம் அறிந்தேன். அவனைக் காரணமின்றிக் கைது செய்வதற்குமில்லை. சோழ நாடு அவனுக்கு ஆதரவளிக்கத் தயாராயிருக்கிறது. ஆகையால் அவன் நடவடிக்கைகளைக் கவனிக்க உத்தரவிட்டேன். அவன் நடமாட்டம் கன்னிமாடத்தின் பக்கமாகக்கூட இருமுறை இருந்ததாக அறிந்தேன். உள்ளே எக்காரணத்தைக் கொண்டாவது நுழைந்தால் கைது செய்யுமாறு ஒற்றர்களுக்கு உத்தரவிட்டிருந்தேன். அவன் அப்படி எதுவும் செய்யத் துணிந்ததாகத் தெரியவில்லை. திடீரென்று அவனும் கள்ளுக்கடையானும் சேர்ந்து திரிவதாகத் தகவல் கிடைத்தது. ஒரு நாள் இரவு குழலி எப்படியோ தப்பி விட்டான். கள்ளுக்கடையானையும் இருபத்தைந்து வீரர்களையும் கன்னிமாடத்துக்குச் செல்லும்

பாதையில் கண்டதாகத் தகவல் கிடைத்தது. பிறர் ஒற்றர்களைவிட்டு நகரம் பூராவும் விக்ரமப் பாண்டியனைத் தேடச் சொன்னேன். அவனும் மறைந்துவிட்டான். இதிலிருந்து நாம் கொள்ளக்கூடிய ஊகம் ஒன்றுதான். கார்குழலியை விக்ரம பாண்டியன்தான் தப்புவித்திருக்கிறான்.''

''அவனுக்கென்ன இதில் அக்கறை இருக்கிறது?'' என்று குறுக்கிட்டான் வீரபாண்டியன்.

''அக்கறை இருக்கிறது அவன் தகப்பனாரே, அவளைத் தன் மகனுக்குக் கொடுக்கும்படி என்னிடம் கேட்டார் தவிர அரசியல் காரணங்களும் இருக்கின்றன. குலசேகர பாண்டியன் மகனுக்கு என் மகளைக் கொடுத்தால் மேலை மங்கலமும், சோழநாடும் ஒன்றுபடும்! பாண்டிய நாடும் மேலைமங்கலமும் வேறுபடும். ஆனால் ஒரு கேள்வி நீங்கள் கேட்கலாம் கள்ளுக்கடையானே அவளை அழைத்துப் போயிருக்கக்கூடாதா என்று. கள்ளுக்கடையான் தனியாகப் போரிடுவதில் கெட்டிக்காரனே தவிர, இந்தமாதிரித் திட்டம்போட்டு காரியம் நடத்தும் யோக்கியதை அவனிடமில்லை. தவிர கன்னிமாடத்தைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தவன் விக்ரமபாண்டியன்தான்'' என்று மிக அமைதியாக ஏதோ அரசியல் சிக்கலைக் குறித்து வாதாடும் நிபுணனைப் போலத் தன் மகள் ஓடிவிட்ட காரணங்களை அலசினான் மழவராயன்.

சிக்கல் சிறிதும் இல்லாமல் தொடர்ச்சியாகவும் கோவையாகவும் உதிர்ந்த மழவராயன் சொற்களைக் கேட்ட வீரபாண்டியன் உள்ளத்தில் சொல்லவொண்ணாக் கோபமும் வேதனையும் எழுந்து தாண்டவமாடின. விக்ரம பாண்டியனையும் குலசேகர பாண்டியனையும் அந்த க்ஷணத்திலேயே வெட்டிச் சாய்த்துவிட வேண்டும் போலிருந்தது அவனுக்கு கார்குழலி, கேவலம் ஒரு பெண். அவள் ஓடி விட்டதால் தன் திட்டங்கள் சுக்கு நூறாக சிதைந்து போவதை எண்ணிப் பார்த்தான்

வீரபாண்டியன். 'கார்குழலியுடன் திருமணமில்லையேல் மேலைமங்கலத்தின் உதவியில்லை. மேலைமங்கலத்தின் உதவி இல்லையேல் சோழப்பேரரசுடன் போர் அசாத்தியம். ஆனால் போருக்குச் சித்தமாயிருப்பதாக அண்ணன் பல்லவராயனிடம் பகிரங்கமாக என் நீதி மண்டபத்திலேயே அறிவித்திருக்கிறேன்' என்று சிந்தித்து, அந்தச் சிந்தனையால் கோபம் பொங்கித் ததும்பும் குரலில் மழவராயனை நோக்கிக் கேட்டான்: "நீலமலைக் கருகிலுள்ள கன்னி மாடம்தானே? அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இருநூறு வீரர்களை அனுப்பி அதைத் தாக்கிப் பிடித்துக் கார்குழலியை அழைத்து வந்துவிட்டாலென்ன?"

மழவராயன் உதடுகளில் புன்முறுவல் தவழ்ந்தது. "கன்னி மாடத்தைப் பற்றி உங்களுக்குச் சொன்னவர்கள் தகவலைச் சரியாகச் சொல்லவில்லையென்று தெரிகிறது. கன்னிமாடம் ஒரு கோட்டை. அதை இருநூறு வீரர்களல்ல, ஆயிரம் வீரர்கள் தாக்கினால்கூடப் பிடிப்பது சாத்தியமல்ல. ஆனால் அதையும் சாத்தியமாக்கி வைத்திருக்கிறேன். கார்குழலிக்கும் உங்களுக்கும் திருமணம் நிச்சயமானதும் கோட்டையிலிருந்த நூறு வீரர்களில் எழுபத்தைந்து வீரர்களை மேலைமங்கலத்துக்கு வரவழைத்து விட்டேன். மீதி இருப்பவர் இருபத்தைந்து பேர்தான். கள்ளுக் கடையானுடைய இருபத்தி ஐந்து வீரர்களும் அங்கு போய்ச் சேர்ந்தாலும் மொத்தம் ஐம்பது வீரர்கள். ஐம்பது வீரர்களால் கோட்டையைப்பாதுகாக்க முடியாது. நொடிப் பொழுதில் நீங்கள் கோட்டையைப் பிடித்துவிடலாம். என்றான் மழவராயன். இந்தப் பதிலை வெளியிலிருந்து கேட்ட அடிகளார் அடியோடு நிலைகுலைந்து போனார். கன்னி மாடத்திலிருந்து எதற்காக மழவராயன் வீரர்களை வரவழைத்தான் என்று ஏங்கினார் வீரபாண்டியன் வெறியிலிருந்து கன்னி மாடம்கூடக் கார்குழலிக்குப் புகலிடமளிக்க முடியாதே என்று தத்தளித்தார். இப்படி மழவராயன் தன் திட்டங்களிலெல்லாம்

மண்ணை அள்ளிப் போடுவானென்று அவர் நினைக்கவேயில்லை. மழவராயன் சொன்ன அடுத்த பதிலிலிருந்து விதியும் கார்குழலி வாழ்க்கையில் விளையாடியிருக்கிறதென்பதைத் தெரிந்து கொண்டார்.

"கோட்டையிலிருந்த வீரர்களை ஏன் வரவழைத்துவிட்டீர்கள்!" என்று பாண்டிய மன்னன் வினவினான்.

"கன்னிமாடக் கோட்டை பாண்டிய நாட்டிலிருந்து ஏற்படக்கூடிய தாக்குதலைச் சமாளிக்கப் பலப்படுத்தப்பட்டது. பாண்டிய நாட்டுடன் திருமணத் தொடர்பு ஏற்பட்டுவிடுவது நிச்சயமாகிவிட்டதால் அங்கு காவல் அவசியம் இல்லையல்லவா? கோட்டையைச் சீராக வைத்துக் கொள்வதற்கு அவசியமான வீரர்களை மட்டும் விட்டு வைத்தேன்" என்று விளக்கினான் மழவராயன்.

வீரபாண்டியன் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான். ஓரிருமுறை ஏதோ சொல்லத் தொடங்கியபோதும் பேச்சு சரியாக வராமல் இதழ்கள் மட்டும் அசைந்தன. கடைசியாக மெள்ளச் சமாளித்துக்கொண்டு, "கோட்டையைப் பிடிப்பது அவ்வளவு சுலபமானால் என்னை ஏன் வரவழைத்தீர்கள், நீங்களே கோட்டையைத் தாக்கி மகளைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கலாமே" என்று வினவினான்.

மழவராயன் அவனை ஏறெடுத்துப் பார்த்துக் கொண்டே, "இங்குதான் தமிழர் பண்பு வந்து குறுக்கிடுகிறது" என்று சொன்னான்.

வீரபாண்டியன் கண்கள் மழவராயன் மனப்போக்கை அறிய முடியாமல் தவித்தன. கடைசியாக, "இதில் தமிழர் பண்பு எங்கு குறுக்கிடுகிறது?" என்று வினவினான்.

"மனமில்லா மணம் தமிழர் பண்பல்ல" என்றான் மழவராயன்.

"உம்..."

"கார்குழலி பலவந்த விவாகத்திலிருந்து தப்பி ஓடியிருக்கிறாள். நான் கோட்டையை முற்றுகையிட்டால்...."

"முற்றுகையிட்டால்..."

"மழவராயன் என்றொரு மன்னனிருந்தான் பெண்ணைப் பலவந்தப்படுத்தப் போரிட்ட வீரன் அவன் என்று சரித்திரத்தில் எழுதப்படும். அத்தகைய கீர்த்தியைப் பெற எனக்கிஷ்டமில்லை."

"அது எனக்கு மட்டும் பாதகமில்லையோ?"

"அதைத் தீர்மானம் செய்வது தங்கள் பொறுப்பு ஆனால் பாதகமில்லை என்பதுதான் என் அபிப்பிராயம்."

"எப்படி?"

"முதலில் இஷ்டமில்லாத பெண்ணை விவாகம் செய்து கொள்ள நீங்கள் தயாராயிருக்கிறீர்கள். ஆகவே அதன் பலாபலன்களை நீங்கள் அனுபவிப்பது தவறாகாது. தவிர ராட்சஸ விவாகத்தை க்ஷத்திரிய தர்மம் அனுமதிக்கிறது."

"அது தமிழர் தர்மமா?"

"அல்ல. ஆனால் தர்மத்தை மட்டும் பார்த்துக்கொண்டிருந்தால் தங்கள் திட்டங்கள் என்ன ஆவது?"

மழவராயன் தன்னைப் பார்த்து நகைக்கிறானா, நிஜமாகத்தான் பேசுகிறானா என்பது வீரபாண்டியனுக்குப் புரியாததால் சற்று நேரம் பேசாமலே இருந்தான். ஏதோ மனத்தில் சந்தேகம் உதிக்கவே கேட்டான்: "கன்னிமாடத்தை முற்றுகையிட்டுக் கார்குழலியை நான் மீட்டு வருவதில் உங்களுக்கு ஆட்சேபணை ஏதுமில்லலையே?"

"ஆட்சேபணை இருந்தால் உங்களுக்குக் கடிதம் எழுதி வரவழைப்பேனா? அல்லது கன்னிமாடத்தில் வீரர்கள் இல்லாதிருக்கும் தகவலைத்தான் சொல்லுவேனா? நீங்கள் கார்குழலியை மணப்பதில் தான் எனக்குச் சம்மதம். தமிழ் நாட்டின் நன்மை இந்தத் திருமணத்தின் மூலம் தான் உருவாக வேண்டும்" என்றான் மழவராயன்.

மேற்கொண்டு அவர்களுக்குள் நடந்த பேச்சைப்பற்றி அக்கறை கொள்ளாமல் மிக வேகமாகத் தமது அறைக்கு ஓடிய அடிகளார் ஒரு காஷாயத் துணியை எடுத்துப் போர்த்திக் கொண்டு அபராஜிதன் தங்கியிருந்த சிவமடத்துக்கு வந்து சேர்ந்து அபராஜிதனைத் தனியாக ஓர் அறைக்கு அழைத்துச் சென்று அரண்மனையில் தாம் ஒட்டுக் கேட்ட தகவல்களை விவரித்தார்.

நிதானமாக அத்தனை தகவல்களையும் கேட்டுக் கொண்ட அபராஜிதன், "விஷயம் விபரீதமாகத்தானிருக்கிறது அடிகளாரே!" என்றான்.

"ஆம்! ஆனால் இதில் ஒரு சௌகரியமும் இருக்கிறது!" என்றார் அடிகளார்.

"என்ன சௌகரியம்?"

"மழவ நாட்டு வீரர்கள் இதில் பங்கெடுத்துக்கொள்ள மாட்டார்கள். மழவராயன் தனது பெயர் இதில் இணைக்கப் படுவதை விரும்பவில்லை."

"ஆமாம்."

"ஆகவே கோட்டைக்குச் செல்லும் அந்தரங்க வழியை அறிந்துள்ள ஒரே மனிதன் பின்னடைந்து நிற்கிறான்."

"வீரபாண்டியனிடம் மழவராயன் அந்த வழியைக் காட்டிக் கொடுக்கமாட்டான் என்பது என்ன நிச்சயம்?"

"பிரபு! இது கோட்டை ரகசியம். நாளைக்குப் பாண்டிய நாட்டுடன் போர் மூண்டால் என்ன செய்வது? அரசாங்க சம்பந்தமான ரகசியங்களை மழவராயன் எந்தக்காரணத்தை முன்னிட்டும் யாரிடமும் சொல்ல மாட்டான். ஆனால் ஓர் ஆபத்து இருக்கிறது"

"என்ன?"

"என்னைப் பிடித்து வைக்கப் பார்ப்பான்."

"ஏன்?"

"எனக்கு அந்த வழி தெரியுமல்லவா?"

"தெரிந்தாலென்ன?"

"கார்குழலிக்கு உதவி செய்ய அந்த வழியாக வீரர்களை அழைத்துச் சென்றால்?"

"ஓகோ!"

''ஆமாம். ஆகவே என்னைப் பிடித்து வைக்க மழவ
ராயன் முயலுவான். ஆகையால் நான் உடனே கன்னி
மாடம் போகவேண்டும்.''

''நானும் வருகிறேன்!'

''வேண்டாம். இரண்டு நாள் இங்கிருந்து வேறு ஏதா
வது விவரம் நடக்கிறதா என்று பார்த்துக்கொண்டு
வாருங்கள். நான் இன்றிரவே செல்கிறேன்'' என்று திட்ட
மாக அறிவித்த அடிகளார் அவனிடமிருந்து விடை
பெற்றுக் கொண்டு கிளம்பினார்.

அடிகளார் ஊகம் சரியாகவே முடிந்தது. அவருடைய
அறைகள் சோதனையிடப்பட்ட தகவல்களைச் சொக்கப்
பெருமான் அறிந்துவந்து சொன்னான். வீரபாண்டியனும்
வந்த வேகத்தில் புறப்பட்டுப் பாண்டிய நாடு சென்று
விடவே இரண்டாவது நாளில் மேலைமங்கலம் சிறிது
சாந்தியைப் பெற்றது. ஆனால், சாந்தி பெறாத உள்ளத்
துடனிருந்த அபராஜிதன், அடிகளார் சொற்படி இரண்டு
நாட்களைக் கழித்துவிட்டுச் சொக்கப்பெருமாளுடன்
கன்னி மாடத்தை நோக்கிக் கிளம்பினான். ஒன்றரை நாள்
பயணத்திற்குப் பின்பு கன்னிமாடத்தின் கோட்டைக்
கெதிரில் வந்த பாண்டிய சேனாதிபதி, கதவுகளைத்
திறப்பதற்தாக, ''டேய்!' யாரேங்கே!'' என்று உரக்கக்
குரல் கொடுத்தான். கோட்டை வாசலில் இருந்தது இரு
காவல் வீரர்கள் புதிதாக வந்த குதிரை வீரர்களைக்கண்ட
தும் கொம்புகளை எடுத்து ஊதினார்கள். சற்று நேரத்திற்
கெல்லாம் கோட்டைத் தளத்தில் வீரர்கள் நடமாட்டம்
தெரிந்தது. இரண்டுபேர் எட்டிப் பார்த்தார்கள். வீரர்
களில் ஒருவன் கையிலிருந்த வில்லில் அம்பைப் பொருத்தி
நாணை இழுத்து அபராஜிதன் மார்புக்காகக் குறிவைத்
தான். அதே விநாடி அகஸ்மாத்தாக அங்கு வந்த
கார்குழலியும் கோட்டையின் கைப்பிடிச் சுவரிலிருந்து
வெளியே எட்டிப் பார்க்கவே, மனோகரமான அந்த இரவு
நோக்கிலே உள்ளத்தையே அள்ளும் அவள் வேல் விழி

களின் எழிலைப் பருகி நின்ற அபராஜிதன், கார்குழலியின்
பார்வைக்கு எட்டாத கோட்டையின் மற்றொரு கோடியி
லிருந்து பிரும்மாண்டமான ஓர் உருவம் எழுந்ததையோ,
'தன் மார்புக்கு நேராக அது பெரியவேலொன்றை எடுத்து
ஓங்கிக் குறி பார்த்ததையோ கவனிக்கவில்லை.

33. சேனாதிபதிக்கு வரவேற்பு

வாழ்க்கை, ஆற்றுப் பிரவாகத்தைப் போன்றது.
உத்தேசப்படி அது ஓட முடிவதில்லை. சின்னஞ்சிறு அருவி
யாகப் பயணத்தைத் துவங்கும் ஆறு, அடைய உத்தேசிக்
கும் இடம் ஆழ்கடல்தான். ஆனால் நேராக, ஒரே சீராக
ஓடிச்சென்று கடலில் கலந்துவிடப் பிரவாகத்தால் முடிவ
தில்லை. இடையே அதன் பாதையைத் தடைசெய்து
திக்கை மாற்றித் திருப்பி விடும் மலைப்பாறைகள்
எத்தனை! அதன் ஓட்டத்தைக் குறைத்து நீரைத் தேக்கிக்
கொள்ளும் பள்ளங்கள் எத்தனை! அதன் நீருக்குச்
சுவையும் குணமும் ஊட்டும் மூலிகைகள் எத்தனை! அதன்
நீரைப் பாழாக அடிக்கும். துவர் நிலங்கள் எத்தனை;
இப்படியாக இத்தனையிலும் தட்டுத் தடுமாறி
லட்சியத்தை எட்டுமுன் இல்லாத கஷ்டமெல்லாம் பட்டுத்
திசை மாறிமாறி' பலமுறை வளைந்து செல்லும் ஆற்றின்
பிரவாகத்தைப் போன்றதுதான் மனித வாழ்க்கையும்,
இதிலும் எத்தனையோ தடங்கல்கள் உண்டு தெரியாத
திருப்பங்களும் உண்டு. எந்த இடத்தில் நமது வாழ்க்கை
எப்படித் திருப்பப்படும் என்பதை நாம் அறியும் முன்பே
நாம் வேறொரு மார்க்கத்தில் இழுத்துச் செல்லப்
படுவோம். அருவியைத் திருப்ப ஆங்காங்கு கிடக்கும்
சின்னஞ்சிறு பாறைகளைப்போல எத்தனையோ
இடைஞ்சல்களை இறைவன் வாழ்க்கைப் பாதையிலும்
சிருஷ்டித்திருக்கிறான்.

அவையெல்லாம் பௌதிகப் பொருள்கள் அல்லவாத
லால் புறக் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ஆனால் அத்த
கைய இடைஞ்சல் ஏற்படும்பொழுது உள்ளம்உணர்கிறது.

அப்படி உணரும்போது ஆற்றின் படிப்பினையை உணர்ந்து கொண்டு சற்று வளைந்து கொடுத்துச் செல்லும் மனிதன் லட்சிய சித்தி அடைகிறான். அப்படி வளைந்து கொடுக்காத மனிதன் வறண்ட நிலத்தில் பாய்ந்த நீரைப்போல உள்ளே இழுக்கப்பட்டு இருந்த சுவடே தெரியாமல் மறைந்து போகிறான். அறிவாளியான மனிதர்கள் வளைந்து கொடுத்து வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள். பாண்டிய சேனாதிபதியான அபராஜிதனும் அத்தகைய அறிவாளிகளில் ஒருவனாயிருந்தபடியால்தான் கன்னிமாடத்தில் அடுத்து நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளில் அவன் வெற்றி காண முடிந்தது.

மேலைமங்கலத்திலிருந்து புறப்பட்டபோது கன்னி மாடத்தில் எந்தவிதமான எதிர்ப்பையும் அவன் எதிர் பார்க்கவேயில்லை. முன்னே சென்ற அடிகளார் கோட்டைக் காவலுக்கான சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டுத் தன் வருகைக்காகக் காத்திருப்பாரென்றும் தான் வந்ததை அறிவித்ததும் கோட்டைக் கதவுகள் தாமாகவே திறக்கப்படுமென்றும் திட்டமாகக் கருதியிருந்தான். ஆகவே கோட்டைமீது தோன்றிய வீரன் வில்லை வளைத்து நாணை இழுத்து அம்பைக் குறிவைத்தபோதும் அபராஜிதன் சிறிதும் லட்சியம் செய்யாமலே நின்றான். தான் இன்னானென்பதை அறியாததாலேயே அம்பு குறி வைக்கப்படுகிறதென்பதை உணர்ந்த சேனாதிபதி தான் யாரென்பதை அறிவித்ததும் நிலைமை மாறிவிடுமென்ற நிச்சயத்திலிருந்த சமயத்தில் அகஸ்மாத்தாக அங்கு கார்குழலியும் வந்து எட்டிப் பார்க்கவே அவன் நிச்சயம் மேலும் உறுதியாகி அடுத்த இரண்டு கணங்களில் தான் கோட்டைக்குள் இருக்கப்போவதை எண்ணிக் குதூகலித்தான். அந்தக் குதூகலத்தினாலும் தைரியத்தினாலும் எப்பொழுதும் அபாயத்தை எதிர்நோக்கி எச்சரிக்கையுடன் நாலா பக்கத்திலும் வட்டமிடும் சுபாவங்கொண்ட அபராஜிதன் கண்கள்கூட அந்தச் சில வினாடிகளில் வேறெதிலும் நாட்டங் கொள்ளாமல் கார்குழலியின் வேல் விழிகளில் உறவாடி நின்று உலகையே மறந்து கோட்டையின்மற்றொரு கோடியில் பயங்கரமாக உருவாகிக்கொண்டிருந்த பெரிய அபாயத்தைக் கவனிக்கச் சக்தியற்றுக் கிடந்தன. ஆனால் இத்தகைய கவர்ச்சியில் சிக்காத சொக்கப் பெருமாள் கண்கள் மட்டும் கோட்டையின் மேல் தளத்தின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்கு உலாவியதால் மறுபுறத்தில் திடீரென எழுந்த பிரும்மாண்டமான உருவத்தையோ, அது சேனாதிபதிக்காக வேலைக் குறிவைத்து ஓங்கியதையோ கவனிக்கத் தவறவில்லை. அந்த உருவத்தால் எறியப்பட்ட வேல் அபராஜிதனைத் தாக்கு முன்னமே சொக்கப்பெருமாள் சட்டென்று பக்கவாட்டில் பாய்ந்து சேனாதிபதியின் குதிரைக் கடிவாளத்தைப் பிடித்துப் பின்னுக்காகத் தள்ளவே அபராஜிதனைத் தாக்கவிருந்தவேல் அப்புறமாக விழுந்தது.

இத்தகைய வரவேற்பால் கொதித்தெழுந்த சேனாதிபதி குதிரையைச் சற்றுத் திருப்பி வேல் வந்த திசையை நோக்கி, "யாரவன் வேலை எறிந்தது?" என்று கோபமும் ஆத்திரமும் கலந்த குரலில் உரக்கக் கூவினான்.

வேலை எறிந்த அந்தப் பிரும்மாண்டமான உருவமும் மிக வேகமாகக் கோட்டைக் கதவுகளின்மேல் வளைந்தோடிய தளச் சுவருக்காக வந்து நின்று, "நான்தான் எறிந்தேன். யார் நீ? இந்த இரவில் எதற்காக வந்தாய்?" என்று இடி போன்ற குரலில் பதில் கேள்விகளை வீசியது.

ராட்சதன் போல் கோட்டைமீது நின்ற அந்த மனிதனைப் பார்த்த அபராஜிதன், 'இவன்தான் கள்ளுக்கடையானாக இருக்கவேண்டும்'' என்று தீர்மானித்துக் கோட்டை மீதிருக்கும் அவனுடன் பேச்சு வைத்துக் கொள்ளுவதால் லாபமில்லையென்ற முடிவுக்கும் வந்து தன் கண்களை மீண்டும் கார்குழலிக்காகத் திருப்பி, "ராஜகுமாரி! தங்களுக்கு மிக முக்கியமான செய்தியைக்

கொண்டு வந்திருக்கிறேன். கோட்டைக்கதவுகளைத் திறக்க உத்தரவிடுங்கள்'' என்றான்.

கார்குழலி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் அவள் பக்கத்திலிருந்து எழுந்த இன்னொரு குரல், ''சொல்வதை அங்கிருந்தே சொல். உள்ளே வரவேண்டிய அவசியமில்லை'' என்றது. அந்தக் குரல் வந்த திசையில் கண்களை ஓட்டிய அபராஜிதன் கார்குழலிக்குச் சற்று தள்ளி நின்று கொண்டிருந்த இளைஞனைக் கண்டான். ஒற்றை நாடியான அவன் சரீரத்தையும், குழந்தை முகத்தையும் கண்ட சேனாதிபதி, அடிகளார் சொன்னதையும் நினைத்துப் பார்த்து, 'இவன்தான் விக்ரம பாண்டியனாயிருக்கவேண்டும்' என்று தீர்மானத்துக்கு வந்து மீண்டும் அடக்கத்துடனேயே பதில் சொன்னான். ''பிரபு! நீங்கள் யாரென்று எனக்குத் தெரியாது. ஆகவே நான் சொல்வதைத் தங்களிடம் சொல்ல முடியாது. ராஜகுமாரியிடம் தனிமையில் தான் சொல்ல வேண்டும்.''

''இஷ்டமிருந்தால் சொல்லலாம்; இல்லாவிட்டால் செல்லலாம்'' என்றான் கள்ளுக்கடையான்.

''செல்ல உத்தேசமில்லை. இங்கிருந்து கோட்டை மீதுள்ள உங்களை அண்ணாந்து பார்த்துக் கத்தவும் முடியும். எங்கே, அந்த அடிகளாரைக் கூப்பிடுங்கள். நான் யாரென்பது அவருக்குத் தெரியும்'' என்றான் அபராஜிதன் பதிலுக்கு.

கார்குழலிக்குக் கீழேபாய்ந்திருந்த கோட்டைச் சுவரின் நிழலில் குதிரைமீது வீற்றிருந்த அபராஜிதன் முகம் சரியாகத் தெரியவில்லை சற்று எட்டிப் பார்த்து, ''அடிகளார் இங்கில்லை. உங்கள் முகம் சரியாகத் தெரியவில்லை. பெயரையாவது சொல்லுங்களேன்'' என்று கேட்டாள்.

சற்று நேரம் சிந்தித்த சேனாதிபதி அவளை நோக்கி, ''நான்தான் தங்களால் முன்னொரு முறை காப்பாற்றப் பட்டவன்'' என்று சொன்னான். கார்குழலி மகிழ்ச்சியுடன், ''யார் பாண்டிய நாட்டுப் பிரபுவா!'' என்றாள்.

''ஆமாம்.''

''அன்று காயமடைந்து வந்தீர்களே?''

''ஆமாம். இன்று மரணமடைய இருந்தேன்.''

''ஏன்?''

''அதோ. அந்தத்தடியன் என்மீது வேலை எடுத்து இப்பொழுது தானே வீசினான்?''

''யார் மார்க்கீயனா?''

''அப்படித்தான் இருக்க வேண்டும். அப்பேர்பட்ட பெரிய மனிதரை அறிமுகம் செய்து கொள்ளும் பாக்கியம் இதுவரை கிடைக்கவில்லை.''

மேலிருந்து இந்தப் பதிலைக்கேட்ட கார்குழலி திகைத்துப்போய், ''மார்க்கீயா! எனக்கு அவரிருப்பது தெரியவில்லையே. உனக்கெப்படித் தெரிந்தது?'' என்று கேட்டாள்.

''நீங்கள் பந்தத்துக்கு அருகில் நிற்கிறீர்கள். வெளிச்சத்தில் இருப்பவர்களுக்கு இருட்டிலிருப்பவர்கள் தெரியாது. நான் அந்தக் கோடியிலிருந்து வேலை எறிந்தேன். இங்கிருக்கும் பந்தங்களின் வெளிச்சம் நேராக முகத்தில் விழாவிட்டாலும் மார்பில் விழுந்திருக்கிறது. வேண்டுமானால் எட்டிப்பாருங்கள்'' என்றான் மார்கீயன்.

''வேலெறிய உனக்கு யார் உத்தரவு கொடுத்தது?'' என்று எரிந்து விழுந்தாள் கார்குழலி.

''வேலை எறிய எனக்கு யார் உத்தரவும் தேவையில்லை அரசகுமாரி. நான் இந்தக் கோட்டையின் காவலன். இதைக் காப்பது என் பொறுப்பு. எந்த எதிரியையும் கொன்றுபோட எனக்கு உரிமை உண்டு.'' மார்க்கீயன் பதிலைக் கேட்ட கார்குழலியின் கோபம் இன்னும் அதிகமாகவே, ''வந்திருப்பவர் விரோதி என்பது உனக்கெப்படித் தெரியும்?'' என்று வினவினாள்.

''பாண்டியநாட்டு வீரர்களின் உடைகளை அணிந்திருக்கிறார்?''

''இருந்தாலென்ன?''

"இருந்தாலென்னவா!" ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தான் மாரக்கியன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சம்பாஷணைக்குள் புகுந்த விக்கிரமபாண்டியனும், "என்ன அப்படி கேட்கிறாய் அரசகுமாரி. பாண்டிய மன்னனிடமிருந்து தப்பி நீ இங்கு ஓடிவந்திருக்கிறாய்.பாண்டிய வீரர்களை இங்கு அனுமதிப்பது பூனையை மடியில் கட்டிக் கொண்டு சகுனம் பார்க்கிற கதையாகவல்லவா முடியும்? இவர்கள் வீரபாண்டியனின் வேவுக்காரர்கள் அல்லவென்பதை யார் நிரூபிக்க முடியும்?" என்று வினவினான்.

கார்குழலி பதில் கூறுவதற்கு முன்பாகவே கிளம்பியது மற்றொரு குரல். "நான் நிரூபிக்க முடியும்."

"யார், நீரா!" என்று கேட்டான்விக்கிரமபாண்டியன்.

"ஆமாம்!" என்று சொல்லிக் கொண்டே வந்து கைப்பிடிச் சுவருக்காக எட்டிப்பார்த்த அடிகளார், "பிரபு! மன்னிக்கவேண்டும். இரண்டு மூன்று நாள் மும்முரமாக வேலை. அசதியில் சற்றுக் கண்ணை மூடிவிட்டேன்" என்று கூறிவிட்டு, "டேய்! யாரங்கே கதவைத் திறவுங்கள்" என்று ஆக்ஞாபித்தார். அடுத்த சில வ்நாடிகளில் பிரம்மாண்டமான அந்தக்கோட்டைக் கதவுகள் கிரீச்,கிரீச் என்ற சப்தங்களுடனும் கடமுடவென்று மரம் முறிவது போன்ற ஓசைகளுடனும் திறக்கப்பட்டன. பாண்டிய சேனாதிபதி, சொக்கப்பெருமாள் பின் தொடர, குதிரையைக் கோட்டைக்குள் செலுத்தினான்.

அதே கன்னிமாடத்திலிருந்து முன்பொருமுறை தப்பி வந்த காரணத்தால் கோட்டையின் உள் லயனம் ஓரளவு தெரிந்தே இருந்தது அபராஜிதனுக்கு. இருந்தபோதிலும் அவசரத்தில் முன்பு ஓடிவிட்டவனாதலால் உள்ளேசென்றதும் குதிரையிலிருந்து கீழிறங்கிக் கோட்டையை ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்தான். கோட்டைக் கதவை அடுத்திருந்த சுவர்கள் சுமார் பத்தடி அகலமிருந்தபடியால் மேலே சுமார் வளைத்துக் கோட்டையின் இருபுறங்களை

யும் இணைக்கப் பாலம் கட்டியிருந்தார்கள். இதனால் அந்த இடைவழி நன்றாக இருட்டிக் கிடந்தது. இந்த இருட்டை நீக்கச் சுவரில் சொருகப்பட்டிருந்த ஒரே பந்தம் கூட அவ்வப்பொழுது எண்ணெய் வார்க்கப் படாமையால் தன் பணியைச் சரியாகச் செய்யாமல் அவிந்துபோய்ப் பந்தத் துணியில் மட்டும் சிறிது நெருப்பு பொறிபொறியாய்த் தெரிய ஒப்புக்குப் பந்தமாயிருந்தது. கோட்டைக்குள்ளே வந்த ஓடைக் காற்று, பந்தத்தை அடியோடு அணையவிடாமல் பொறிகளை அவ்வப்பொழுது சற்று ஜொலிக்கச் செய்ததேயொழிய எண்ணெயில்லாப் பந்தத்தை முழுதுப் எரிய விடச் சக்தியற்றதாயிற்று. இந்த வாயிலை அடுத்து நின்றது பெரிய இடைவெளி. இடைவெளியைஅடுத்து நின்றது முதலில் வீரர்கூடம், அதற்குப்பின்னால் எட்டிப் பார்த்துக் கொண்டு நின்றது கார்குழலி இருந்த அந்தபபுரக் கட்டிடம்.

அபராஜிதன் விநாடிக்குள் கண்களைச் சுழலவிட்டுக் கோட்டையின் தன்மையை அளவெடுத்துக் கொணடான். சுவர்கள் அகலமாகப் பலமாகக் கட்டப்பட்டிருப்பதையும் சுவர்களைச் சுற்றிக் கைப்பிடியும், கைப்படியை ஒட்டி முன்பாகவே பெரிய தளமும் ஓடுவதைக் கவனித்தான். ஆங்காங்கு தளத்தில் பத்துப பத்து வீரர் ஏறிச் செல்ல படிகளும் கட்டப்பட்டிருந்தன. கைப்பிடிச் சுவரும் நேராக இல்லாமல் ஆங்காங்கு கோட்டையின் அமைப்பை ஒட்டிச் சிறுசிறு வளைவுகளாக வளைந்து நின்றது. ஒவ்வொரு பாகத்திலும் சுமார் இருபது இருபது வீரர்கள் நிற்கலாமென்பதைப் அப்படி நிற்கும் பட்சத்தில் கோட்டையின் முனபுறத்தில் மட்டும் நானூறு வீரர்களை நிறுத்தலாமென்பதையும் சேனாதிபதி கணக்கிட்டுக் கொணடான். கோட்டையின் கைப்பிடிகளில் அங்காங்கு விற்களைப் பொருத்தவும் ஈட்டிகளைச் சாய்த்து வைக்கவும் வசதிகள் செய்யப்பட்டிருந்ததையும் கவனித்த சேனாதிபதி, "இந்தக் கோட்டை மட்டும் சரியாகக் கையாளப் பட்டால் இதைப் பிடிக்கப் பாண்டிய

மன்னனல்ல; அவனுடன் சோழனும் சேர்ந்து வந்தாலும் ஆறுமாத காலமாகும்'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

இப்படி அவன் கோட்டையை ஆராய்வதில் முனைந்திருந்த சமயத்தில் கோட்டைத் தளத்திலிருந்தவர்கள் கீழே இறங்கி வந்ததல்லாமல், அதுவரை குடிபோதையில் மயங்கிக் கிடந்த கள்ளுக்கடையானுடைய இருபத்தைந்து வீரர்களும் கோட்டைக்கதவு திறந்த சப்தத்தால் அரைந்து எழுப்பப்பட்டுத் தள்ளாடித் தள்ளாடி வந்து குவிந்து நின்றார்கள். அவர்களுக்கு நேர் எதிர்ப் பக்கத்தில் கோட்டையைக் காக்க இருந்த அந்த ஐம்பது வீரர்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து நிற்கிறார்கள் என்பதை ஊகித்துக் கொண்டு எல்லோருக்கும் முன்னால் தன்னை வரவேற்க வந்த அடிகளாரை நோக்கி, ''அடிகளாரே! வீரபாண்டியனிடமிருந்து இளவரசியைக் காப்பாற்ற நல்ல ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்'' என்றான் இகழ்ச்சி பூராவாகத் தொனித்த குரலில்.

''பாண்டிய...'' என்று ஆரம்பித்த அடிகளார் பாண்டிய சேனாதிபதி பார்த்த உஷ்ணமான பார்வையால் வார்த்தையை உள்ளே இழுத்துக் கொண்டு ''பிரபு! ஏற்பாடு என்னுடையதல்ல. எல்லாம் பிற்காலப் பாண்டிய மன்னன் சாமர்த்தியம்'' என்று விக்ரம பாண்டியனுக்காகக் கண்களைச் செலுத்தினார்.

''பிற்காலப் பாண்டிய மன்னனைப் பிறகு கவனிப்போம் அடிகளாரே. தற்காலப் பாண்டிய மன்னன் படையுடன் வருகிறானே. அவனை எப்படிச் சமாளிப்பதாக உத்தேசம்? இந்த இருபத்து ஐந்து குடிகாரக் கள்ளர்களைக் கொண்டா?'' என்று வினவினான் சேனாதிபதி.

''இவர்கள் கள்ளர்களல்ல. என் வீரர்கள்'' என்றான் கள்ளுக்கடையான் இடைமறித்து.

''உனைப் போல்தானிருக்கிறார்கள்.''

''ஏன், எனக்கென்ன?''

''ஒன்றுமில்லை. மரம்போல் வளர்ந்திருக்கிறாய். ஆனால்....''

''ஆனாலென்ன?''

''மூளையில்லை.'' சரலென வெளிவந்தது பாண்டிய சேனாதிபதியின் பதில்.

இந்தப் பதிலால் என்ன ஆபத்து விளையுமோ என்று திகைத்து நின்றாள் கார்குழலி. அவள் திகைப்பும் சரியாகவே முடிந்தது. ''என்ன சொன்னாய் மடையா?'' என்று பெரிதாகக் கூச்சலிட்டுக்கொண்டு பூதாகாரமான உடலுடன் ராட்சஸ நடை நடந்து அபராஜிதனை நோக்கி, கண்களில் தீப்பொறி பறக்க நெருங்கியவனான மார்க்கீயன் அடுத்த விநாடி தன் இரு கரங்களையும் ஓங்கிக்கொண்டு ஒரே பாய்ச்சலாகச் சேனாதிபதியின்மீது பாய்ந்து விட்டான். கண்மூடிக்கண்திறக்கும் நேரத்தில் அந்தச் சம்பவம் நடந்தபடியால் யாரும் குறுக்கிடுவதற்குக்கூட அவகாசமில்லாமல் போயிற்று. அபராஜிதன் தொலைந்தான் என்ற உற்சாகத்தில் கள்ளுக்கடையான் குடிகார வீரர்கள்போட்ட கொம்மாளக் கூச்சல் அந்தக் கோட்டைச் சுவர்களில் மோதி பயங்கரமாக எதிரொலி செய்தது. மிதமிஞ்சிய திகிலால் சத்தம் போடக்கூடக் கார்குழலியால் முடியவில்லை. அவள் தலை சுழன்றது. மேலேயிருந்த மார்க்கீயனின் பெரிய உருவத்தின் காரணமாகக் கீழே அகப்பட்டுக்கொண்ட அபராஜிதன் சரியாகக் கண்களுக்குப் புலப்படவில்லை. அடுத்த கணம் எதுவுமே கண்களுக்குப் புலப்படாமல் மயக்கமுற்று அடிகளாரின் தோள்மேல் சாய்ந்தாள். அடிகளார் திகில் வசப்பட்டு, சுரணை கெட்டுப் பார் தன்மேல் சாய்கிறார்களென்பதை அறியமாட்டாமல் மரக்கட்டைபோல் நின்றார். அவரைக் கூட ஓர் உலுக்கு உலுக்கிச் சுயநிலைக்குக் கொண்டு வரும்படியான ருநிகழ்ச்சி அடுத்த விநாடி நடந்தது.

மதுரைச் சேனாதிபதியாயிருந்த மாவீரன்மீது மார்க்கீயன் மூர்க்கத்தனமாகப் பாய்ந்து அவனைக் கீழே தள்ளி மேலே படுத்து ஒற்றை முழங்காலால் அவன் தொடையை நெறித்ததன்றி அவனைக் கொன்று போடவும் இடையிலிருந்த உடைவாளை வலது கையால் எடுத்து ஓங்கவே அபராஜிதன் சகாப்தம் அத்துடன் தீர்ந்ததென்று முடிவு கட்டிய அடிகளார் ஏதும் சொல்லவோ மெல்லவோ மாட்டாமல் ஸ்தம்பித்து நின்றார். அப்படி ஸ்தம்பித்து நின்ற அவரை, அடுத்து நேர்ந்த அதிசய நிகழ்ச்சி ஓர் உலுக்கு உலுக்கி இகலோகத்துக்கு இழுத்து வந்தது. கத்தியை ஓங்கிய மார்க்கீயன் கை ஓங்கியது ஓங்கியபடியே நின்றுவிட்டது மெள்ளச் சேனாதிபதியை தரையிலேயே விட்டுவிட்டு எழுந்திருந்த கள்ளுக்கடையான் உண்மையாக நிரம்பக் கள்ளைக் குடித்தவனைப்போல இரண்டடி பின்னுக்கடைந்து தள்ளாடி நிற்க முயன்று, முடியாமையால் தடாலெனத் தரையில் விழுந்தான். அத்துடன் அவன் கைகால்களும் வலிப்பால் இழுக்கப்படுவனபோல் அசைந்தன. கீழே, சற்று முன்பு மரணத்தின் பிடிகளில் சிக்கிக் கிடந்த அபராஜிதன் மட்டும் ஏதும் நடக்காததுபோல் எழுந்திருந்து சட்டையின் முன் புறத்திலிருந்த தூசிகளைத் துடைத்து விட்டுக் கொண்டு சொக்கப்பெருமானைக் கூப்பிட்டு ''இந்தா, பின்புறத்தைத் துடைத்துவிடு'' என்றான். சொக்கப்பெருமாளுக்கோ இது சாதாரணக் காட்சியாகத்தானிருக்க வேண்டும். அபராஜிதன் கீழே விழுந்ததைக் கண்டும் அவன் உதவிக்குச் செல்லாமல், குதிரையின் சேணத்தைப் பிடித்து நின்றுகொண்டிருந்த சொக்கப்பெருமாள், எசமான் உத்தரவைக்கேட்டதும் சேணத்தைவிட்டு அவன்முதுகைத் தட்டிவிட முற்பட்டான்.

அபராஜிதன் கீழே விழுந்ததும் கொம்மாளமிட்ட கள்ளுக்கடையான் வீரர்கள், கூச்சலை நிறுத்தித் திக்பிரமை பிடித்தவர்களாய்க் கீழே விழுந்து கைகால்களை உதறிக் கொண்டிருந்த தங்கள் தலைவனையும் கம்பீரமான

நல்ல உயரத்துடன் அலட்சியத்துடன் தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்த அபராஜிதனையும் மாறிமாறிப் பார்த்தார்கள். மிதமிஞ்சிய உணர்ச்சி வயப்பட்டு நொடிப் பொழுது ஸ்மரணை இழந்திருந்த மழவராயன் மகளும் மயக்கம் கலைந்து மகிழ்ச்சிக்கும் மட்டற்ற ஆச்சரியத்துக்கும் இலக்காகி, பாண்டிய சேனாதிபதியைப் பார்த்துப் பிரமித்து நின்றாள். பயங்கொள்ளியும் சிறு பிராயத்தால் நிதானம் தெரியாதவனுமான விக்ரம பாண்டியன் மனத்தில் விவரிக்க இயலாத எண்ணங்கள் பல எழுந்து விளையாடின. அவற்றில் மேம்பட்டு நின்றது பொறாமை. அபராஜிதனை முதன் முதலாகப் பார்த்தபோதே அவனிடம் வெறுப்படைந்த விக்ரம பாண்டியன், அவன் உள்ளே நுழைந்ததும் கார்குழலி அவனைப் பார்த்த மாதிரியை கவனித்ததிலிருந்து விஷயத்தை ஓரளவு ஊகித்துக் கொண்டான். உலக அனுபவம் அதிகமில்லாதவனாயிருந்தாலும் இவன் உனக்குப் போட்டியாக வரக்கூடியவன்’ என்று இயற்கை அவனை எச்சரித்தது கார்குழலியின் விழிகள் அந்த எச்சரிக்கைக்குச் சாட்சி கூறின. அத்துடன் அபராஜிதன்மீது கள்ளுக்கடையான் பாய்ந்ததும் கார்குழலி மயக்கமுற்றதைப் பார்த்ததும் விக்ரம பாண்டியன் அடியோடு சந்தேகம் தெளிந்து இவனைக் கோட்டையில் விட்டு வைப்பது மிகவும் பிசகு என்று தீர்மானித்துக் கொண்டான். போதாக்குறைக்கு யவன ராக்ஷஸனான மார்க்கியன் அடைந்த தோல்வி அவன் தீர்மானம் சரியென்பதற்கு மற்றொரு சான்றாக நின்றது. இப்படிப் பலர் பல விதமாக எண்ணமிட்டு நிற்க, மழவராயன் படையைச் சேர்ந்த கன்னிமாடக் கோட்டை வீரர்கள் மட்டும் எதிலும் கலக்காமல் தனித்தே நின்று, மேல் நடக்கப் போவது என்னவென்பதைக் கவனிக்கலானார்கள்.

உடம்பிலிருந்த தூசுகளைத் துடைத்துக் கொண்டே அபராஜிதன் அங்கு எந்தச் சம்பவமுமே நடக்காததுபோல் சொக்கப்பெருமானை நோக்கி, ''நீ இங்கேயே குதிரைகளைப் பார்த்துக் கொண்டிரு. நான் அரசகுமாரியிடம்

அந்தரங்கமாகச் சில விஷயங்களைப் பேசிவிட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு, கள்ளுக்கடையான் வீரர்களுக்காகத் திரும்பி, ''உங்கள் தலைவனுக்கு ஆபத்து ஏதுமில்லை. இன்னும் சில நிமிஷங்களில் எழுந்து விடுவான். எழுந்ததும் நல்ல வெந்நீரில் குளிப்பாட்டுங்கள் அவனை. பழைய ஸ்திதிக்கு வந்து விடுவான்'' என்று சொல்லிவிட்டு அரசகுமாரிக்காகக் கண்களைத் திருப்பினான்.

கார்குழலியின் கண்களில் ஆச்சரியம் ததும்பிக் கொண்டிருந்தது. ஏதோ சொல்ல எண்ணி, முடியாமையால் திறந்த இதழ்களைத் திரும்பவும் மூடி, அடிகளாரை நோக்கினான். அதுவரை தங்களிடம் நிலவிவந்த மௌனத்தைக் கலைக்கும் நோக்கத்துடனும், பழையபடி சௌஜன்யத்தை நிலைநிறுத்தும் உத்தேசத்துடனும் அடிகளார் தமது இயற்கையான பாணியில் சம்பாஷணையைத் துவக்கி அபராஜிதனை நோக்கி, ''பிரபு, தங்களை மாபெரும் வீரனென்றுதான் நினைததிருந்தேன்...'' என்று இழுத்தார்.

புன்சிரிப்புத் தவழும் இதழ்களுடன அவரை நோக்கிய அபராஜிதன், ''என் அடிகளாரே! இப்பொழுதென்ன அதில் சந்தேகம் வந்துவிட்டது தங்களுக்கு?'' என்று வினவினான்.

''அதில் சந்தேகமில்லை. ஆனால் மாந்திரீகமும் தெரியும் போலிருக்கிறதே!'' என்று அடிகளார் மேலும் சொற்களை அடுக்கினார்.

''மாந்திரீகமா!'' ஆச்சரியத்துடன் கேட்டான் அபராஜிதன்.

''ஆமாம். இல்லாவிட்டால் அந்த மகாவீரன் மார்க்கியேனிடமிருந்து இன்று நீங்கள் தப்பியிருக்க முடியாது. ஒரு விருந்தாளியைக் கொன்ற அபவாதம் அரசகுமாரியின் தலையில் வந்து விடிந்திருக்கும்'' என்றார் அடிகளார்.

''ஆமாம் பிரபு; எதிர்பாராமல் திடீரெனப் பாய்ந்து விட்டான் மார்க்கியேன். அவனைத் தடைசெய்ய வீரர்

களை ஏவக்கூட எனக்குத் தோன்றவில்லை'' என்று அடிகளாருடன் சேர்ந்து சமாதானம் சொன்னாள் மழவராயன் மகள்.

''அதனால் பாதகமில்லை அரசகுமாரி. இந்த மாதிரி வெறி பிடித்த யவனர்கள் எத்தனை பேரையோ நான் பார்த்திருக்கிறேன்'' என்று கார்குழலிக்குப் பதில் சொன்ன அபராஜிதன் அடிகளாரை நோக்கி, ''இது மாந்திரீகமல்ல. ஓர் அபூர்வ அடி. நரம்புகளைப் பற்றியது. தமிழர்களிடமிருந்து மறைந்துவரும் பல கலைகளில் இதுவும் ஒன்று. மனிதனுக்குச் சில நரம்பு ஸ்தானங்கள் மிகப் பலவீனமானவை. அங்கு லேசான அடிப்பட்டாலும் உடலில் மின்னல் பாய்வதுபோல் நரம்புகளை உலுக்கிவிடும். அடியால் நரம்புகள் நிலைகுலைந்து போவதால் சில நிமிஷங்கள் வலிப்பும் ஏற்படும். உயிருக்கு ஆபத்தான அடிகளும் உண்டு. ஆனால் அவற்றை நான் உபயோகப்படுத்துவதில்லை'' என்றான்.

''மார்க்கியன் இழுத்துக்கொண்டு கிடந்ததைப் பார்த்தால் காக்கை வலிப்பு மாதிரி இருந்ததே...'' என்று மேலும் சந்தேகம் கேட்ட அடிகளாரின் வார்த்தைகளைக் கோபத்துடன் வெட்டிய விக்ரமப் பாண்டியன், ''வலிப்பு எது மாதிரி இருந்தாலென்ன? இவன் ஏதோ முக்கியசெய்தி கொண்டு வந்திருக்கிறானாமே, அதைக் கேட்போம்'' என்றான்.

பாண்டிய சேனாதிபதியை ஏக வசனத்தில் பேசத் துணிந்த விக்ரமபாண்டியன் அசட்டுத்தனத்தைநினைத்துப் பார்த்த அடிகளார், மிகுந்த இகழ்ச்சி சொட்டும் பார்வையொன்றை அவன் மீது வீசி, ''விக்ரமா! நமது கையால் ஆகாத பெரிய காரியங்களைச் சாதிக்கும் வீரர்களிடம் மரியாதை காட்டுவது நமது உள்ளத்துக்கும் நல்லது உடலுக்கும் நல்லது'' என்று போதித்தார்.

போதனையை ஏற்கும் மனோபாவம் பொறாமையால் மதியிழந்த விக்ரம பாண்டியனுக்கு இல்லாது போகவே அவன் கூறினான், "நான் மன்னவன் மரபில் பிறந்தவன்." முன்னைவிட அதிக இகழ்ச்சியுடன் வெளிவந்தது அடிகளாரின் பதில். "நான் வீரத்தைப் பற்றிப் பேசுகிறேன். நீ அந்தஸ்தைப் பற்றிக் குறிப்பிடுகிறாய்" என்றார்.

"அந்தஸ்து இருக்கிற இடத்தில் வீரமிருக்காதோ?" என்று வினவினான் விக்ரமப் பாண்டியன்.

"இருப்பதை யாரும் தடை செய்வதில்லை. அபூர்வமாக இருப்பதும் உண்டு" என்று சொல்லி அபராஜிதனுக்காகக் கண்களைச் செலுத்திவிட்டு, "ஆனால் நூற்றுக்குத் தொண்ணூறு இடங்களில் அந்தஸ்தும் வீரமுமோ அந்தஸ்தும் அறிவுமோ சேர்ந்து உறைவதில்லை" என்று முடித்தார்.

அடிகளாரும் விக்ரமபாண்டியனும் மெள்ளச் சண்டையிலிறங்குவதைக் கவனித்த கார்குழலி இடையே புகுந்து, "சரி சரி எதற்காக இந்த வீண் தர்க்கம்? வாருங்கள். இவர் சொல்ல வேண்டிய செய்தியைக் கேட்போம்" என்று கூறிவிட்டு விக்ரம பாண்டியனை பார்த்து, 'நீங்கள் மன்னர் மரபில் பிறந்தவராயிருக்கலாம். அதற்காக என்னிடம் அபிமானமுள்ளவர்களை அவமரியாதையாகப்பேச நான் அனுமதிக்க மாட்டேன். நினைவிருக்கட்டும்" என்று எச்சரித்துவிட்டு, திரும்பி எதிரேயிருந்த கட்டிடத்துக்காக நடந்தாள். குமுறும் இதயத்துடனும் கலங்கிய சித்தத்துடனும் விக்ரம பாண்டியன் அவளுக்கு ஒரு புறமும், உவகை பொங்கும் உள்ளத்துடனும் கவலையற்ற பார்வையுடனும் அபராஜிதன் ஒரு புறமும் வர, அடிகளார் அவளுடன் செல்லும் இருவரையும் பார்த்துக்கொண்டே பின்தொடர, கார்குழலி முதல் கட்டிடத்தின் மாடிக்குச் சென்ற பெரும்படிகளில் ஏறிச் சென்றாள் அப்படிச் செல்லும் போதே தனக்கு இருபுறத்திலும் வந்த இரு பேர்வழிகளின் தன்மையையும் எடைபோட்டுக்கொண்டே சென்றாள். சரியாகக் கால் பாவாமலும் நிதானமில்லமையால்

பக்க வாட்டுகளில் சாய்ந்தும் தளர்நடை போட்டும் வந்த விக்ரம பாண்டியனையும் நன்றாக உயர்ந்த கம்பீரமான சரீரத்துடனும் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் சொட்டும் பௌருஷத்துடனும் போருக்குச் செல்பவனைப் போலவே உறுதியான நடையுடனும் பக்கத்திலேறி வந்த பாண்டிய சேனாதிபதியையும் ஒப்பிட்டுப் பார்த்த கார்குழலி, முன்பின் யோசிக்காமல் கன்னி மாடத்துக்கு ஓடி வந்துவிட்ட தன்னைக் காப்பாற்ற ஒரு வீரன் கிடைத்தானே என்ற அமைதியால் பெருமூச்சொன்றும் விட்டாள். உடல் பாரம் மிகுதியால் கால்களை அகல வைத்தும் பெருமூச்சு விட்டும் சிரமப்பட்டாலும் அதைக் காட்டிக் கொள்ளாமலே வேகமாக ஏறி வந்த அடிகளாரும் அந்த இருவருக்குமுள்ள தாரதம்மியத்தைக் கவனிக்கத் தவறவில்லை. கார் குழலியைத் தப்பவைக்கத் தான் செய்த முட்டாள்தனத்துக்குக் கடவுள் மன்னிப்பளித்தே அந்தப் போர் வீரனைத் தங்களுக்குத் துணையாக அனுப்பியிருக்க வேண்டுமென்றுப் நினைத்துப் பார்த்து அரன் இணையற்ற காருண்யத்தை எண்ணி எண்ணி மனமுருகினார்.

இருபது படிகள் ஏறிச்சென்றதும் அந்த மந்திராலோசனை மண்டபத்திற்குள் அந்த நால்வரும் புகுந்ததும், "அடிகளாரே பாண்டிய நாட்டுப் பிரபு நீண்ட தூரம் பிரயாணப்பட்டு வந்திருக்கிறாரே, அவர் தங்குவதற்கான வசதிகள் செய்ய யாராவது வீரனை அனுப்ப வேண்டாமா?" என்று வினவினாள் கார்குழலி.

"அதற்கு இப்பொழுது அவசியமில்லை அரசகுமாரி நான் தங்களிடம் சொல்லவேண்டிய செய்தியைச் சொல்லி விடுகிறேன்" என்று அபராஜிதன் கூறியதும் அங்கிருந்த ஆசனங்களில் மற்ற மூவரும் அமர்ந்து கொண்டார்கள். அபராஜிதன் மட்டும் உட்காராமல் சற்று நேரம் உலாவி விட்டு சாளரத்தின் வெளிப்புறமாகக் கோட்டைமீது கண்களைச் செலுத்திவிட்டு மீண்டும் அறையின் நடுப்பாகத்திற்கு வந்து கார்குழலி, விக்ரம பாண்டியன்,

அடிகளார் மூலர் மீதும் சில விநாடிகள் கண்களை ஓட்டினான். அந்தப் பார்வையை சகிக்காத விக்ரம பாண்டியன், "சொல்ல வேண்டியதைச் சீக்கிரம் சொல்லுங்கள்" என்றான். அவன் அப்படி மரியாதையாகக் கூப்பிட்டபோதிலும் குரலிலிருந்த உதாசீனத்தைக் கவனிக்கத் தவறாத அபராஜிதன், "நான் செய்தி கொண்டு வந்திருப்பது தங்களுக்கல்ல, அரசகுமாரிக்கு. தங்கள் எதிரில் பேசலாமா என்பதற்காகத்தான் தயங்குகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சற்று யோசித்தான்

"நான்தான் அரசகுமாரியை மேலைமங்கல அந்தப்புரத்திலிருந்து தப்புவித்து அழைத்து வந்திருக்கிறேன் தெரியுமா?" என்றான் விக்ரமபாண்டியன்.

"அரசகுமாரியின் வளையல்களை விற்ற பணத்தில் வீரர்களைத் திரட்டி, அடியேன் கொடுத்த திட்டிவாசல் சாவியின் உதவியால்" என்று தமது பாகத்தையும் உணர்த்தினார் அடிகளார்.

கார்குழலி லேசாக நகைத்தாள். விக்ரமபாண்டியன் கோபம் எல்லையை எட்டிக்கொண்டிருந்தாலும் மெள்ளத் தன்னை அடக்கிக்கொண்டு அடிகளாரை நோக்கி, "தங்கள் உதவியை யார் மறுத்தது?" என்று கேட்டான்.

"யாரும் மறுக்கவில்லை. ஆனால் அவரவர் செய்ததை அவரவர் சொல்லிக் கொள்ள வேண்டும் போலிருக்கிறதே என்று பார்த்தேன்" என்றார் அடிகளார் மீண்டும்.

"எதற்காகச் சொல்லிக்கொள்ள வேண்டும்?"

"எனக்கெப்படித் தெரியும்? முதலில் நீ செய்த உதவியை இந்தப் பிரபுவுக்குச் சொல்லிக்காட்டினாய்; எனக்கும் அதில் பங்கு உண்டு என்பதை விளக்க நான் பேசினேன்."

இந்தத் தர்க்கம் கார்குழலியின் தலையீட்டால் தடைப்பட்டது. "எதற்காக இந்த சச்சரவு? அவர் சொல்வதைக் கேட்போம்" என்று அவர்கள் வாயை மூடிய கார்குழலி, "பிரபு, இவர் இருப்பதால் பாதகமில்லை. நீங்கள்

கொண்டுவந்துள்ள சேதியைச் சொல்லுங்கள்" என்று கேட்டாள். அபராஜிதன் ஒரு கேள்வியுடன் தனது செய்தியை விவரிக்கத் தொடங்கி, "தற்சமயம் பாண்டிய நாட்டிலுள்ள அரசியல் நிலைமை தங்களுக்குத் தெரியுமல்லவா?" என்று வினவினான்.

"ஓரளவு தெரியும்" என்றாள் கார்குழலி.

"தெரிந்தாலும் எனக்குத் தெரிந்தவரையில் அதைச் சொல்கிறேன், கேளுங்கள். இதோ இருக்கும் விக்ரம பாண்டியன் தந்தையான குலசேகரபாண்டியனை, பாண்டியநாட்டு அரியணையில் ஏற்றிவிடச் சோழ வல்லரசு முடிவு செய்திருக்கிறது. வீரபாண்டியனைச் சிம்மாசனத்திலேயே இருத்தச் சிங்களப் பேரரசு தீர்மானித்திருக்கிறது. இந்த இரண்டு பேரரசுகளில் யார் எண்ணம் ஈடேறும் என்பது மேலைமங்கலச் சிற்றரசின் கையில்—அதாவது தங்கள் கழுத்தில்—இருக்கிறது..." என்று நிதானித்த அபராஜிதனை இடைமறித்த அடிகளார், "இவள் கழுத்திலா?' என்றார் ஆச்சரியத்துடன்.

"ஆம். மேலைமங்கலத்து அரசகுமாரியின் கழுத்தில் யார் கட்டும் தாலி ஏறுமோ அதைப் பொறுத்திருக்கிறது தமிழ்நாட்டின் தலைவிதி. இது தங்களுக்குப் புதிதல்ல அடிகளாரே! அரசகுமாரிக்கும் புதிதல்ல. ஆனால் நான் அடுத்துச் சொல்லப்போகும் செய்தி புதிது' என்று தன் பேச்சைச் சற்று நிறுத்தினான் அபராஜிதன் கார்குழலி முகத்தில் எந்தவிதச் சலனமுமின்றி, சிலைபோல்உட்கார்ந்திருந்தாள். அபராஜிதன் தொடர்ந்து பேசினான். "கார்குழலியின் கழுத்தில் தான் கட்டும் தாலிதான் ஏறவேண்டுமென்று வீரபாண்டியன் தீர்மானித்துவிட்டான், அடிகளாரே நீங்கள் இங்கு வந்தபின்பு உங்கள் அறைகள் சோதனையிடப்பட்டன. அது அவ்வளவு முக்கியமல்ல. அத்துடன் வேறொரு செய்தியும் அறிந்தேன். இன்னும் இரண்டு நாட்களில் வீரபாண்டியன் பெரும்படையுடன் இந்தக் கோட்டையை முற்றுகையிடப் போகிறான்..."

"வரட்டும் வீரபாண்டியன். அவனைச் சமாளிக்கத் தயாராயிருக்கிறோம்" என்றான் விக்ரம பாண்டியன்.

"தயாராயிருப்பீர்கள் என்று நம்பித்தான் இங்கு வந்தேன்" என்று அவனை நோக்கிச் சொன்ன அபராஜிதன் கார்குழலியை நோக்கி, "ராஜகுமாரி! ஆனால், என் நம்பிக்கையில் மண் விழுந்துவிட்டது. இங்கிருக்கும் படையில் பாதி கள்ளர்கள். பாதிப்பேர் படைவீரர்கள். பிரிந்து நிற்கும் இந்த இரு படைவீரர்களையும் ஒன்றுசேர்ப்பதும் கஷ்டம். நான் வேறு யோசனையுடன் வந்தேன் ராஜகுமாரி...." என்று சற்றுத் தயங்கினான்.

"என்ன யோசனை பிரபு?"

"வீரபாண்டியன் கோட்டையை முற்றுகையிடுமுன்பு உங்களைக் கோட்டையைவிட்டு எங்காவது அனுப்பி மறைத்துவிட்டு இங்கு இருக்கும் வீரர்களைக் கொண்டு அவனுடன் சண்டைபோட்டுக் காலத்தை ஓட்டலாம் என்று நினைத்தேன். அவனுக்கு இருக்கும் அவகாசம் குறைவு. எந்த நேரமும் சோழப் பேரரசின் படையெடுப்பு பாண்டிய நாட்டின்மீது ஏற்படலாம். அண்ணன் பல்லவராயன் ஏற்கனவே போர் முரசு கொட்டிவிட்டான். ஆகையால் தாமதம்தான் வீரபாண்டியனின் எதிரி. அதற்கு வழிசெய்ய ஆசைப்பட்டேன். தாமதித்தால் அவன் நாட்டுக்கே ஆபத்து. அதைக் காப்பாற்ற அவன் திரும்பி ஓடவேண்டும். அப்படியில்லாமல் இதைப் பிடித்தாலும் வெறும் கூட்டைத்தான் பிடிப்பான். கிளி பறந்திருக்கும்" என்று மேலும் ஏதோ சொல்லப் போன அபராஜிதன் திடீரெனக் கீழே பெருங் கூச்சல் இனம்புலவைதக் கேட்டு சாளரத்திற்காகச் சென்று எட்டிப் பார்த்தான். அவன் தலையைக் கீழிருந்தே பார்த்த மழவராயன் வீரர்களில் ஒருவன், "பிரபு! ஆபத்து ஆபத்து! சீக்கிரம் வாருங்கள். உங்கள் வீரனைக் கொல்

கிறார்கள்" என்று கூச்சலிட்டான். பேச்சை அப்படியே பாதியில் விட்ட அபராஜிதன் மிக வேகமாக வாயிற்படியைக் கடந்து படிகளில் இறங்கிஓடினான்

35. சிலம்ப விளையாட்டு

'உங்கள் வீரனைக் கொல்கிறார்கள்' என்று மழவப் படைவீரன் அபராஜிதனை நோக்கிக் கூவியபோது அவன் எதையும் கூட்டியோ குறைத்தோ சொல்லவில்லை. சொக்கப்பெருமாளின் நிலை படுமோசமாகத்தானிருந்தது. அபராஜிதன் அரசிளங்குமரியுடன் மாடியறையில் பேசப் படிகளில் ஏறிச் சென்றவுடனேயே, கள்ளர்கள் சொக்கப்பெருமாளிடம் தங்கள் வேலைகளைக் காட்டத் துவங்கிவிட்டார்கள்.

தங்கள் தலைவனான மார்க்கீயனுக்கு நேர்ந்த கதியால் திக்பிரமை பிடித்துப்போன கள்ளர்கள் அபராஜிதன் தலை மறைந்ததும ஓரளவு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொக்கப் பெருமாளைப் பார்த்து மெள்ளக் கேலி செய்ய ஆரம்பித்தார்கள். பூராவாகக் குடித்துவிட்டிருந்ததால் சிலா அவனை நோக்கித் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தார்கள். இன்னும் சிலர் விநோதமாகக் கூச்சலிட்டார்கள்.

ஒருவன், "டேய்! நீ யார், உன் பெயரென்ன?" என்று கூறினான். கள்ளர்களின் நிலையை நன்றாகப் புரிந்து கொண்ட சொக்கப்பெருமாள் அவர்களிடம் எந்த வம்பையும் வைத்துக்கொள்ள இஷ்டப்படாமல், "டேய், நெருங்காதே! விலகி நில்" என்று மட்டும் எச்சரித்தான்.

ஆனால் அடுத்த விநாடியே பத்து பதினைந்து கள்ளர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள் சிலர் அவனுடைய சட்டையைப் பிடித்திழுத்தார்கள். அதற்குள் களைப்புச் சற்றே நின்றதால் எழுந்து மாடிக் கைப்பிடிச் சுவரில் சாய்ந்து கொண்ட மார்க்கீயனும், "அவனைப் பிடித்து இங்கு இழுத்து வாருங்கள்" என்று உத்தரவிட்டான்.

அதற்குமேல் தாமதிப்பது தகாது என்ற முடிவுக்கு வந்த சொக்கப்பெருமான் தன் வாளை உருவ முயன்றான். வாளின் மேல் கைபோவதைக் கண்ட கள்ளர்களில் நாலைந்து பேர் திடுமென அவன் மீது பாய்ந்து வாளைப் பிடுங்கி எறிந்தார்கள். அடுத்த கணம் சொக்கப் பெருமாளின் மேலங்கிகள் தார்தாராகக் கிழிக்கப்பட்டன. அத்துடன் அவனைக் கீழேயும் தள்ளிக் காலைப் பிடித்துத் தரையில் தரத்தரவென்று இழுத்துச் சென்றார்கள். கள்ளனொருவன் அவன்மீது ஏறி உட்கார்ந்து அவன் தலையைத் தூக்கித் தரையில் மோத ஆரம்பித்தான். சொக்பெருமானும் தன்னலானவரை திமிறிப் பார்த்தான். ஆனால், தனிமனிதன் பல பேர்களிடமிருந்து எப்படித் தன்னைத் தப்புவித்துக் கொள்ள முடியும்? அவன் கைகளைச் சில கள்ளர்கள் அழுத்திப் பிடித்துக் கொண்டார்கள். மார்பில் ஏறி உட்கார்ந்தவன் சொக்கப்பெருமாள் தலையைத் தரையில் இடித்தான். ஒரு முறைதான் அப்படி இடிக்க முடிந்தது.

அடுத்த இடி, இடிக்கு முன்பு சொக்கப்பெருமாளின் மார்மேல் உட்கார்ந்த கள்ளன் அலறி எழுந்தான். மற்றும் பலர், 'ஐயோ ஐயோ' என்று கூச்சலிட்டனர். இதற்குக் காரணம் என்னவாயிருக்குமெனக் கண்களைச் சப்தம்வந்த திசையில் ஓட்டிய மார்க்கியன், படிக்குப் பக்கத்தில் சாத்தப் பட்டிருந்த பெரிய மூங்கிற்கழியைக் கையிலேந்தி அபராஜிதன் நிற்பதைக் கண்டான்.

சேனாதிபதியின் கரத்திலிருந்த அந்த கழிவேகமாகச் சுழன்று கள்ளர்களின் மேல் மிகுந்த பலத்துடன் திரும்பத் திரும்ப இறங்கலாயிற்று. மார்க்கியன் சேனாதிபதியை அணுகாமலே, “விடாதீர்கள், அவனைச் சூழ்ந்து கொள்ளுங்கள்” என்று கரையவே கள்ளர்கள் வாட்களை உருவிக்கொண்டு அபராஜிதனைச் சூழ்ந்துகொண்டார்கள்.

ஆனால், அந்த வாட்கள் அனைத்தும் சிலம்புக்கழி முன்பு பயனற்றுப் போயின. சில வாட்கள் கழியால் வேகமாகத் தட்டப்பட்டுக் காற்றில் பறந்து தரையில் கிளீங்கிளீங்

என்று சப்தமிட்டுக்கொண்டு விழ்ந்தன. அப்படி வாளை யிழந்தவர்கள்மீது மூங்கிற்கழி தயா தாட்சண்யமின்றிச் சரேல் சரேலென இறங்கிக் கொண்டிருந்தது. அபராஜிதன் கழியைச் சுழற்றிய வேகத்தில் அவன் இருக்குமிடம்கூட அந்த சிலம்ப வித்தையைப் பார்த்துக்கொண்டிருந்த மழவ வீரர்களுக்குப் புலப்படவில்லை. மின்னல்போல் பளிச் பளிச்சென்று நாலா பக்கங்களிலும் தெறித்து ஒரு சிலம்ப அரணுக்குள் மனித உருவமொன்று நிற்பது போலத்தான் தோன்றியது. கண்ணிமைக்கும் போதில் ஏழெட்டுக் கள்ளர்கள் தரையில் சாய்ந்துவிடவே மற்றவர்கள் சிலம்பத்தின் எல்லைக்குள் வரப் பயப்பட்டு ஒருபுறமாக ஒதுங்கினார்கள்.

அப்படி அவர்கள் ஒதுங்கியவுடன் சிலம்ப ஆட்டத்தை நிறுத்திய அபராஜிதன், மழவ வீரர்களுக்குத் திரும்பி, “மழவ வீரர்களே! உங்கள் வீரம் நன்றாயிருக்கிறது! உங்களைப் போன்ற ஒரு வீரனை இந்தக் கள்ளர்கள் கொல்லும் போது பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். மழவ நாட்டுக்கு இது பெருமை தரக்கூடியதுதான்” என்றான் குரலில் சற்றே இகழ்ச்சி தொனிக்க.

இதைக்கேட்டதும் மழவர் படைவீரர்களில் தலைவனாயிருந்த வீரன், அபராஜிதனை நெருங்கி, “பிரபு! நீங்கள்சொல்வதுநியாயந்தான். ஆனால்மார்க்கியனுடைய ஆட்களை நாங்கள் தாக்கினால் இக் கோட்டையின் நிலை விபரீதமாகிவிடும். அவனுடைய ஆட்கள் எல்லோரும் போதையிலிருக்கிறார்கள். ஒருவனை எங்கள் வீரன் தொட்டாலும் இரு படைகளும் கை கலக்கும். இப்பொழுதே கோட்டையைக் காக்க ஐம்பது பேர்தானிருக்கிறோம். இதிலும் பாதி மடிந்து விட்டால் எங்கள் அரசகுமாரியின் கதி என்னவாகும்?” என்று வினவினான்.

அவன் சொன்னது முற்றும் உண்மை என்பதை புரிந்து கொண்ட அபராஜிதன், பயத்தால் ஒரு புறமாக ஒதுங்கிக் கூடியிருந்த கள்ளர்களுக்காகப் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு கள்ளர்களில் இருவரை

அழைத்து, "மார்க்கியனைக் கைது செய்து ஏதாவது ஓர் அறையில் பூட்டி வையுங்கள். காலையில் அவனை விசாரித்தேன்" என்று உத்தரவிட்டான்.

அந்த உத்தரவை நிறைவேற்ற எந்தக் கள்ளனும் முனையவில்லை. அபராஜிதன் அழைப்பை ஏற்று முன்னால் வந்த இரு கள்ளர்கள்கூட மீண்டும் பின்னடைந்து விட்டார்கள். அபராஜிதன் முகத்தில் கோபக் குறி லேசாக உதயமாகத் தொடங்கியது. கையிலிருந்த சிலம்பக் கழி உயரும் போல் இருந்தது. மீண்டும் "உத்தரவை நிறைவேற்றப் போகிறீர்களா இல்லையா?" என்று சீறினான் சேனாதிபதி.

"அவர் எங்கள் தலைவர். அவரை எப்படிக் கைது செய்வோம்?" என்றான் ஒரு கள்ளன்.

"உங்களுக்கெல்லாம் சம்பளம் தருவது மார்க்கியனல்ல, மேலைமங்கலத்து அரசகுமாரிதான். உங்கள் தலைவன் இன்று நடந்து கொண்ட மாதிரியிலிருந்து அவன் தலைமைப் பதவிக்கு லாயக்கில்லையென நிரூபித்து விட்டான். அரசகுமாரியைப் பார்க்க வருபவர்களைக் கொல்ல முயல்வது வரம்பு மீறிய செய்கை வேறு ஏதாவது கோட்டையாயிருந்தால் இந்தக் குற்றத்திற்கு மரண தண்டனை அளித்திருப்பார்கள். இவனுக்கு என்ன தண்டனை கொடுப்பதென்பது பற்றிக் காலையில் தீர்மானிப்போம். முதலில் அவனைக் கைது செய்யுங்கள்" என்று அதட்டினான் அபராஜிதன்.

கள்ளர்கள் அதற்கும் இசையாமல் போகவே, கிழிந்த சட்டையுடனும் புழுதி படிந்த முகத்துடனும் நின்றிருந்த சொக்கப்பெருமாளைக் கூப்பிட்டு, "சொக்கா! வல்லும் அம்பறாத் தூணியும் கொண்டு வந்திருக்கிறாயல்லவா?" என்றான்.

"கொண்டு வந்திருக்கிறேன்."

"ஓர் அம்பைத்தொடுத்து மார்க்கியனை ஒழித்துவிடு"

இந்த உத்தரவைக் கேட்ட மார்க்கியன் அயர்ந்து போனான். தலைவன் உத்தரவுப்படி சொக்கப் பெருமாளும் வில்லில் அம்பைப்பூட்டி நாணை இழுத்தான்.

அவன் அம்பைப்பூட்டி எய்யுமுன்பு, "நில்" என்ற சொல்லொன்று மாடிப்படிகளிலிருந்து வந்தது.

குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்த அபராஜிதன், கார்குழலி தன் கருவிழிகளில் கோபம் பொங்கிவழிய நின்றிருப்பதைக் கவனித்தான். அபராஜிதன் மாடியறையிலிருந்து கீழே ஓடிவந்தபோது அவனைத் தொடர்ந்து கார்குழலியும், விக்ரம பாண்டியனும், அடிகளாரும் கீழே நடந்த சிலம்பச் சண்டையைப் பார்த்து, ஆச்சரியத்தில் ஏதும் சொல்லவோ செய்யவோ இயலாமல் ஸ்தம்பித்து நின்று கொண்டிருந்தனர். ஆனால் அந்த ஆச்சரிய நிலையையும் அபராஜிதன் உத்தரவு அறுத்துப் போடவே அம்பை ஏவ வேண்டாமென்று உத்தரவிட்ட கார்குழலி படிகளில் இறங்கி வந்து கள்ளர்களையும் மார்க்கியனையும் மிகுந்த கோபத்துடன் நோக்கினாள். மழவப் படைவீரர் மீதும் அவள் கண்கள் சில விநாடிகள் நிலைத்தன. கடைசியாக இகழ்ச்சியுடன் சொன்னாள்: "உங்களை வைத்துக் கொண்டா நான் இந்தக் கோட்டையைக் காப்பாற்றி விடப் போகிறேன்?"

மழவப் படைத் தலைவன் அரசகுமாரியை நோக்கிப் பதில் சொன்னான்: "நாங்கள் என்ன செய்யலாம் ராஜகுமாரி? இங்குள்ள அத்தனை வீரர்களுக்கும் பொதுத் தலைவன் யாருமில்லை..."

"ஏனில்லை?" என்று கோபத்துடன் கேட்டான் கார்குழலிக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த விக்ரம பாண்டியன்.

"எங்கிருக்கிறான்? மழவப் படைகளுக்கு நான் தலைவன் ..." என்று சொல்லிக்கொண்டுபோன மழவப் படைத் தலைவனை இடைமறித்த அடிகளார், "கோட்டைக்கு விக்ரமபாண்டியன் தலைவன். இங்குள்ள ஆத்மாக்களுக்குச் சாமியாரான நான் தலைவன், அடுப்பங்கரைக்கு...." என்று சொல்லி வாக்கியத்தைப் பாதியிலேயே

திறுத்தி இடி. இடியெனச் சிரித்தார். அத்துடன் நில்லாமல் அபராஜிதனையும் பார்த்து "பார்த்தீர்களா பிரபு! இங்கு தலைவர்களுக்குக் குறைச்சலே இல்லை" என்று கேலியாகச் சுட்டிக்காட்டினார்.

விக்ரமபாண்டியன் அடிகளாரை மிக உஷ்ணமாகப் பார்த்தான். அதைப்பற்றி அடிகளார் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. கள்ளர்களைப் பார்த்து அவரே உத்தரவிட்டார். "டேய் அயோக்கியர்களா! உங்கள் தலைவனை அழைத்துக்கொண்டு வாருங்கள். பின்பக்கமிருக்கும் அறையில் பூட்டிவைப்போம், உம்...வாருங்கள்" என்று அதட்டவே, இரு கள்ளர்கள் மார்க்கியனை அணுகினார்கள். மார்க்கியனும் அதற்குமேல் தகராறு ஏதும் செய்யாமல்அவர்களைப் பின் தொடர்ந்தான். அவனை அழைத்துப் போய்ப் பின்பக்கத்திலிருந்த அறையில் அடைத்துவிட்டு வந்த அடிகளார், கார்குழலி முதலிய சகல பேரும் நின்றுகொண்டிருந்த இடங்களிலேயே மௌனமாக நிற்பதைப் பார்த்து, "குழலி, இரவு முழுவதும் இப்படியே நின்றுகொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. வா, போவோம். உன்னை உன் தோழியிடம் விட்டபிறகு நான் இந்தப் பிரபுவுக்கும் அவர் வீரனுக்கும் இருக்க வசதி செய்துகொடுக்கிறேன். மீதிப் பேசவேண்டியது ஏதாவது இருந்தால் அதைக் காலையில் பேசிக்கொள்வோம்" என்றார்.

கார்குழலி பேசாமல் அவரைப் பின் தொடர்ந்து சென்றாள். சிறிது நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்த அடிகளார் மழவப் படைவீரர்களையும் கள்ளர்களையும் கோட்டைக்காவலுக்கு அனுப்பிவிட்டு, வீரர்கள் தங்கும் முன்கட்டிடத்திலேயே அபராஜிதனுக்கும் ஓர் அறையை ஒழித்துக் கொடுத்தார்.

அங்கிருந்த மஞ்சத்தில் படுத்த அபராஜிதன் இரவு வெகுநேரம் மட்டும் ஏதோ யோசித்தபடியே இருந்தான். அவன் மனம் தமிழ்நாடு ராஜீய வ்யவகாரங்களில் உழன்று

கொண்டிருந்தது. அத்துடன் கார்குழலியின் பரிதாப நிலையையும் எண்ணிப் பார்த்தான். வீரபாண்டியன் மட்டும் இந்த கன்னிமாடத்துக் கோட்டையை முற்றுகையிட்டால் இதைக் காக்க எந்த வழியையும் காணோம் என்று ஏங்கிப் பெருமூச்செறிந்தான். எண்ணங்கள் இப்படிப் பலவிதமாக அலைமோதிக் கொண்டிருந்ததால் தூக்கம் பிடிக்காமல் எழுந்து அறையைவிட்டு வெளியே செல்லவும் முயன்றான்.

தரையில் படுத்திருந்த சொக்கப் பெருமாளும் வாரிச் சுருட்டிக்கொண்டு தலைவனைப் பின்தொடரத் தலைப்பட்டான்.

"நீ வேண்டாம் சொக்கா" என்று அபராஜிதன் அவனைத் தடுத்து நிறுத்திவிட்டான்.

தனிமையாகவே அறையைவிட்டு வெளியே சென்ற அபராஜிதன், கோட்டையின் ஒவ்வொரு பாகமாகச் சுற்றிப் பார்த்துக் கொண்டு அதன் பக்கத்திலிருந்த ஒரு சிறு நந்தவனத்தை அணுகினான். அந்த நந்தவனத்தில் புஷ்பச் செடிகளோடு குட்டையான மாமரங்களும் தங்கள் நீண்ட கிளைகளைத் தரையில் படுக்க விட்டிருந்தபடியால் நந்தவனம் மிக அடர்த்தியாயிருந்தது. அதைத் தாண்டித்தான் தென்புறக் கோட்டைச் சுவருக்குப் போக வேண்டும். அந்தச் சோலைக்குள் சில அடிகளே நடந்திருப்பான். அபராஜிதன் தன்னைத் தவிர வேறு சிலரும் அச்சோலைக்குள் நடமாடுவதை அறிந்து சட்டென நின்றான். வெகு அருகில் இருவர் ரகசியம் பேசுவது அவன் காதில் பட்டது. இடையே மாமரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த சம்பங்கிக் கொடி அபராஜிதனுக்கும் மாமரத்துக்கும் அப்புறமிருந்தவர்களுக்கும் திரை போட்டிருந்ததால் அவர்கள் பேசுவதை மிக அருகாமையிலிருந்தே உற்றுக் கேட்க முடிந்தது பாண்டிய சேனாதிபதிக்கு அவர்கள் பேசிய பேச்சிலிருந்து என்னென்ன விபரீதங்கள் கார்குழலியை எதிர்நோக்கியிருக்கின்றன வென்பதைப் புரிந்து கொண்டான் அபராஜிதன்.

கிருஷ்ணபக்ஷம் கடந்து சுக்லபக்ஷம் தலை நீட்டியிருந்தாலும், அன்று அமாவாசைக்கு மறுதினமே யாகையால் மையிருட்டே எங்கும் மண்டிக்கிடந்தது. பந்தங்கள் செருகப்பட்டிருந்த கோட்டைச் சுவர்களின் ஓரிரண்டு இடங்கள் நீங்கலாக, கன்னிமாடம் முழுவதையும் ஒன்றாக வளைத்துக் கொண்ட காரிருள் நந்தவனப் பிரதேசத்தில் தன் ஆட்சியை பரிபூரணமாகச் செலுத்திக் கொண்டிருந்தது. நந்தவனத்தைச் சுற்றி வளைத்து அமைப்பாக அரணிட்டுக்கொண்ட பெரிய ராக்ஷஸிகளைப்போலப் பயங்கரமாகத் தரையில் படுத்துக்கொண்டிருந்த நீண்ட ஒட்டு மாமரக்கிளைகள் ஒன்றுக்கொன்று நன்றாகப் பின்னிக் கொண்டிருந்தபடியாலும் அவற்றில் முல்லை, மல்லிகை,காக்கரட்டைக் கொடிகள் தாவி யேறிப் படர்ந்து பந்தலிட்டிருந்த படியாலும் கோட்டைச் சுவர்களில் பிரகாசித்துக் கொண்டிருந்த பந்தங்களின் வெளிச்சம் சிறிதுகூட நந்தவனத்துக்குள் புகமுடியாமல் நந்தவனப் பிரதேசம் முழுவதிலும் இருளின் கடுமை இணையற்று நிறைந்திருந்தது.

இத்தகைய இருட்டுக்குத் துணை செய்யவும் அங்கு கவிந்திருந்த கோரத்தை அதிகப்படுத்தவும் நிலவிக்கிடந்த நிசப்தத்தை அவ்வப்போது கிழித்த சுவர்க் கோழிகளின் சப்தம், உன்ன பயங்கர நிலையை உச்சஸ்தாயிக்குக் கொண்டுபோய்க் கொண்டிருந்தது. கன்னி மாடக் கிரீடங்களின் பொந்துகளிலிருந்த புறாக்கள் உறங்கி விட்டாலும் மாடச் சுவரின் ஓரங்களில் பகலெல்லாம் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்த வெளவால்கள் அடிக்கடி சிறகடித்துப் பறந்து மாமரக்கிளைகளில் தட்தட் என்ற சப்தத்துடன் உட்கார முயன்றன. என்ன இருட்டாயிருந்தாலும் லட்சியம் செய்யாத ஒரிரு குளவிகள் மாமரத்திலிருந்து கிளம்பி ரீங்காரம் செய்ய எந்த நிமிஷத்திலும் எதிர்ப்படும் யாரையும் கொட்டி விடும் முறையில் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தன. உலகத்தில் எப்பேர்ப்பட்ட கஷ்டத்திலும் பயங்கரத்திலும் நல்லதும் கலந்திருக்கிறது என்பதை அறிவுறுத்தத்தானோ என்னவோ, அத்தனை இருட்டினால் விளைந்த கோரத்திலும் அபராஜிதன் நின்றிருந்த இடத்தைத் திரையிட்டுக் கிடந்த சம்பங்கிக் கொடி தன் மஞ்சள் நிறப் புஷ்பங்களிலிருந்து சுகந்தத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது.

ஆனால், இருட்டின் கோரமோ சம்பங்கியின் சுகந்தமோ பற்பல எண்ண அலைகளால் பீடிக்கப்பட்டு மன அமைதியை அறவே இழந்து நின்ற அபராஜிதனைச் சிறிதும் பாதிக்கவே இல்லை. சம்பங்கித் திரையை அடுத்து நின்ற இருவர் பேசுவதில் தன் காதுகளை மாத்திரமின்றி உணர்ச்சிகளையும் லயிக்கவிட்டிருந்த அபராஜிதன், தான் இருந்த சூழ்நிலையை அறவே மறந்து, 'பேசும் இருவர் யார்? என்ன பேசுகிறார்கள்?' என்பதை அறிவதிலேயே நாட்டமுடையவனாய்ச் சிறிதும் அசையாமல் மூச்சைக் கூடப் பலமாக விடாமல் நின்றான். முதலில் பேச்சைத் துவங்கியவன் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொண்டு குரலை மிக அடக்கியே பேசினாலும் அவன் வாயிலிருந்து இரண்டொரு சொற்கள் உதிர்ந்தவுடனேயே அவன் யாரென்பதை அபராஜிதன் தெரிந்து கொண்டான். தான் சென்றவுடனேயே படுக்கச் சென்ற விக்ரமபாண்டியன் அந்த இரவில் அங்கு எதற்காக வந்தான்? அவனுடன் கூட இருப்பவன் யார் என்பதை ஆராயுமுன்பாக விக்ரம பாண்டியன் விஷயத்தை உடைக்க ஆரம்பித்தான்.

“நீ ஜாதியில் கள்ளன். அதுவும் குடியால் அடிக்கடி நிதானத்தை இழப்பவன்...” என்று பேச்சைத் துவங்கிய விக்ரமபாண்டியனை இடையிலேயே தடுத்த கள்ளன், “ஆமாம் மகாராஜா! அப்படித் தெரிந்திருந்தும் என்னை எதற்காக ரகசியம் பேச அழைத்தீர்கள்?” என்று முரட்டுத்தனமாக வினவினான்.

கள்ளன் வார்த்தை தடிப்பதைக் கண்ட விக்ரம பாண்டியன் தன்னைச் சிறிது அடக்கிக் கொண்டு வார்த்

தையை வேறு பாணியில் திருப்பி, ''தெரிந்திருந்தும் ஏன் அழைத்தேனென்று கேட்கிறாயா? உங்களைக் கள்ளர்களென்று தெரிந்திருந்தும் உங்களை என்படையில்சேர்க்க ஏன்ஒப்புக் கொண்டேன்?'' என்று பதில் கேள்வி போட்டான்.

''ஏன்?'' என்று மீண்டும் கேட்டான் கள்ளன்.

''கள்ளர்கள் குடிப்பார்கள். அவசியமானால்கொள்ளையும் அடிப்பார்கள். ஆனால் அவர்கள்பரம்பரைச் சரித்திரத்தை அறிந்தவர்களுக்கு மற்றோர் உண்மையும் தெரியும். கள்ளர்களிடம் ஒருவன் நம்பிக்கை மாத்திரம் வைத்துவிட்டால் அந்த நம்பிக்கை குலையும்படியாக ஒரு நாளும் நடந்து கொள்ள மாட்டார்கள்'' என்று விளக்கினான் விக்ரமபாண்டியன்.

விக்ரமபாண்டியன் கள்ளர்களை மதிப்பிட்டதில் எந்தத் தவறுமில்லையென்பதை அபராஜிதனும் அறிந்தே இருந்தான். ஆனால் விக்ரமபாண்டியன் கள்ளர்குலத்தை திடீரெனக் காரணமில்லாமல் ஸ்தோத்திரம் செய்ய மாட்டானென்பதையும் ஏதோ ஆழ்ந்த கருத்துடனேயே அந்தப் பாராட்டுப் பத்திரம் வழங்கப்படுகிறதென்பதையும உணர்ந்த அபராஜிதன் மேற்கொண்டு சம்பாஷணையைக் கவனிக்கலானான்.

விக்ரமபாண்டியன் கள்ளன் மீது தன் வலையை மிகச் சாமர்த்தியமாக வீசத் தொடங்கி மேலும் சொன்னான். ''நம்பிக்கைத் துரோகம் செய்யாத ஒரு கள்ளன் நம்பிக்கை மோசம் செய்யக்கூடிய ஆயிரம் வீரர்களைவிட எத்தனையோ மேலானவன். பாண்டியநாட்டுக் கள்ளர்களிடம் எத்தனைஎத்தனையோ நற்குணங்களிருக்கின்றன. தெய்வ பக்தியில் அவர்களுக்கு நிகர் யாரைச் சொல்ல முடியும்? தேவி மீனாட்சியின் திருக்கோயிலிலும், கள்ளழகப் பெருமான் திருச்சந்நிதியிலும், அவர்கள்கொண்டுகுவிக்கும் தானியங்கள் கணக்கிடப்படுமா? கள்ளர்கள் வீரர்கள் தெய்வ பக்திநிரம்பியவர்கள், நம்பிக்கை மோசம்செய்யாத கண்ணிய புருஷர்கள். இப்படிப்பட்டவர்களின் தொழில்

கொள்ளை. குடிப்பது கள் என்பதற்காக அவர்களைத் தமிழ்நாட்டில் யார் புறக்கணிக்க முடியும்?''

சாதுர்யமாகவும் உண்மை போலவும் மிக ரகசியமான குரலில் அந்தரங்கமாகவும் விக்ரம பாண்டியன் வாயிலிருந்து உதிர்ந்த அம்மொழிகளால் இரவு அதிகமாக ஏறிய காரணத்தால் குடிபோதை நீங்கியிருந்த கள்ளன், மீண்டும் கள்ளைக் குடித்த ஸ்திதிக்கு வந்தான். அவன் மனோநிலையை விக்ரமனும் புரிந்து கொண்டுதானிருக்க வேண்டும். ஆகவே கள்ளனைப் பூராவாகத் தன் கையாளாக்கிக் கொள்ள இச்சித்து ''கள்ளர்களை வீணாக நான் புகழ்வதாக நினைக்காதே, நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் நிரூபிக்க முடியும்' என்றான்.

''எதை நிரூபிக்கப் போகிறீர்கள்?'' என்று கள்ளன் கேட்டான்.

''கள்ளர்களிடம் நம்பிக்கை வைக்கலாம் என்பதை.''

''எப்படி நிரூபிப்பீர்கள் மகாராஜா?''

''என் பிற்கால வாழ்க்கையையே உன் கையில் ஒப்படைக்கிறேன் என்று வைத்துக்கொள்...''

கள்ளன் பயந்தே போனான், ''வேண்டாம் மகாராஜா! அத்தனை பெரிய பொறுப்பு எனக்கு வேண்டாம்'' என்று குழறினான்.

''பயப்படாதே! உனக்கு ஓர் ஆபத்தும் வராமல் நான் காப்பாற்றுகிறேன்! நான் சொல்கிறபடி மட்டும் செய்.''

''என்ன செய்யச் சொல்கிறீர்கள் என்னை?''

''முதலில் செய்வதாக உன் தெய்வத்தின்மேல் ஆணையிடு. பிறகு சொல்கிறேன்.''

ஆணை என்றதும் கள்ளன் சிறிது கலகலத்துப் போனான். விஷயம் ஏதோ விபரீதம் என்று அவனுக்கு உள்ளூரத் தெரிந்தாலும் விக்ரம பாண்டியனை எதிர்த்து ஏதும் சொல்லத் தைரியமில்லாதவனாய், ' சரி மகாராஜா! கள்ளழகர் ஆணை! நீங்கள் சொல்கிறபடி செய்கிறேன், ஆனால் கொலை மட்டும் முடியாது. கள்ளன் எதிரிக்கு

எதிரே நின்று வெட்டுவான், மறைந்திருந்து வெட்ட மாத்திரம் துணிய மாட்டான்'' என்றான்.

விக்ரமபாண்டியன் லேசாகச் சிரித்துவிட்டு, ''உன்னை யாரையும் கொலை செய்யச் சொல்லவில்லை, சுபமான காரியத்துக்குத்தான் ஏவப் போகிறேன். அதுவும் தமிழ் நாட்டுக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடியது'' என்று மெள்ள விஷயத்துக்கு வந்தான்.

''சொல்லுங்கள்'' என்றான் கள்ளன்.

''ஜாக்கிரதையாகக் கேள். இன்னும் இரண்டு மூன்று நாட்களில் வீரபாண்டியன் பெரும் படையுடன் இந்தக் கோட்டையை முற்றுகையிடப் போகிறான்.''

''யார் சொன்னது?''

''இன்றிரவு ஒரு பிரபு வந்தான் பார், அவன்தான் அரசகுமாரியிடம் தெரிவித்தான். அப்படி வீரபாண்டியன இந்தக் கன்னி மாடத்தை முற்றுகையிட்டால்....''

''இதைக் காவல் புரிய ஆள் இல்லையே!''

''ஆளும் இல்லை, ஆயுதங்களும் கிடையாது.''

''அப்படியானால்?''

''நாலே நாட்களில் வீரபாண்டியன் கோட்டைக் கதவை உடைத்து உள்ளே புகுந்து உங்கள் அனைவரையும் வெட்டிப் போடுவான். அத்துடன் உங்களுக்கெல்லாம் சம்பளம் கொடுக்கும் அரசகுமாரியையும் தூக்கிச் செல்வான்.''

''அட கடவுளே!''

''கடவுளை அழைத்துப் பயனில்லை. அதைத் தடுக்க வழி செய்யவேண்டும்.''

''வழி இருக்கிறதா?'' என்று கேட்ட கள்ளன் குரல் பயத்தால் சற்று ஆடியதை அபராஜிதன் கவனித்தான்.

விக்ரமபாண்டியன் கள்ளன் பயத்தைத் தனக்கு அனுகூலமாகக் கொண்டு மேலே தொடர்ந்தான். ''வழி இருக்கிறது. வழி செய்யவே உன்னை ரகசியத்தில் இங்கு அழைத்தேன்.''

''என்ன வழி? அதற்குநான் என்ன செய்ய வேண்டும்?''

''நான் கொடுக்கும் ஓலையை நீ எடுத்துச் செல்ல வேண்டும்.''

''எங்கே?''

''இங்கிருந்து இரண்டு காத தூரத்திலுள்ள ஊருக்கு' ஊர் பொன்னமராவதிக்கு வெகு அருகிலிருக்கிறது.''

''யாருக்குக் கடிதம்?''

''என் தந்தைக்கு.''

''யார், குலசேகர மன்னனுக்கா?''

''ஆம்.''

''அவர் என்ன செய்ய முடியும்?''

''நீ துரிதமாக ஓலையை அவரிடம் கொடுத்தால் அவர் தமது வீரர்களுடன் உடனே புறப்பட்டுக் கன்னி மாடம் வருவார். எந்த நிமிஷத்திலும் அவருக்குத் துணை நிற்கும் வீரர்கள் நூறு பேர் இருக்கிறார்கள். அவர்கள் இங்கு வந்தவுடன் தகுந்த பாதுகாப்புடன் நாம் கார் குழலியை இங்கிருந்து கொண்டுபோய் விடலாம். அப்புறம் வீரபாண்டியன் இங்கு வந்தால் வெறும் கோட்டைதான் இருக்கும்.''

கள்ளன் சிறிது நேரம் ஏதோ யோசித்தான். பிறகு கேட்டான், ''இந்த நல்ல யோசனையை அரச குமாரியிடமே சொன்னாலென்ன?'' என்று.

கள்ளன் கேள்வி பாண்டியனுக்கு உள்ளூர ஆத்திரத்தை மூட்டிவிட்டாலும் அவன் மேலுக்குச் சாந்தமாகவே பதில் சொன்னான்: ''சொல்லலாம் ஆனால் இது அவர்கள் காதில் தற்சமயம் ஏறாது.''

''ஏன்?''

''அரசகுமாரிக்குத் துன்மந்திரிகள் இருவர் இருக்கிறார்கள். அவள் இஷ்டப்பட்டாலும் அந்த இருவரும் அரசகுமாரியை இங்கிருந்து நகர விடமாட்டார்கள். ஆகையால் அரசகுமாரியின் இஷ்டத்தையும் மீறித்தான் இந்தக் காரியத்தை நாம் சாதிக்கவேண்டும். நீசம்மதித்தால்

என் தந்தை இங்கு வந்ததும் உனக்கு நூறு பொற்காசுகள் இனாம் தருகிறேன். நாளையே என் தந்தை மதுரை சிம்மாசனத்தில் உட்காரலாம். அப்பொழுது உன் அந்தஸ்து எத்தனை உயரும் பார்'' என்று ஆசை காட்டினான் விக்கிரமபாண்டியன்.

சிறிது நேரம் சம்பங்கித் திரைக்கு அப்புறத்திலிருந்து சம்பாஷணை ஏதும் காதில் கேட்கவில்லை. கள்ளன் நீண்ட நேரம் யோசித்துவிட்டு இறுதியில் சொன்னான்; ''மகாராஜா! நீங்கள் சொல்லும் பணியைச் செய்கிறேன். நீங்கள் கொடுக்கப்போகும் பொற்காசுகளுக்காக அல்ல, பின்னால் எனக்குக் கிடைக்கூடிய அந்தஸ்துக்காகவும் அல்ல; ஆனால், இந்தக் கோட்டையிலுள்ள அத்தனை பேரையும், முக்கியமாக எங்கள் அரசகுமாரியையும் வீர பாண்டியன் சினத்திலிருந்து காக்கத்தான். ஓலையைக் கொடுங்கள்.''

''ஓலையை இன்னும் எழுதவில்லை. முதலில் உன்னுடைய சம்மதத்தைத் தெரிந்துகொண்ட பிறகு எழுதலாமென்றிருந்தேன். காலையில் ஓலையை எழுதி முடித்துவிடுகிறேன். அடையாளத்துக்கு என் முத்திரை மோதிரத்தையும் தருகிறேன்'' என்றான் விக்கிரம பாண்டியன்.

''நான் எப்பொழுது புறப்படவேண்டும்?'' என்று வினவினான் கள்ளன்.

''நாளை இரவு எல்லோரும் உறங்கியபின் கோட்டை வாசற்கதவுகளைத் திறக்க நான் ஏற்பாடு செய்கிறேன்' என்றான் விக்கிரம பாண்டியன்.

''உங்களை எங்கு சந்தித்து ஓலையைப் பெறுவது! தங்கள் அறைக்கு வரட்டுமா?''

''வேண்டாம். நானே சந்திக்கிறேன். உன்னைச் சந்திப்பது, ஓலையைக் கொடுத்தனுப்புவது எல்லாம் என் பொறுப்பு. இடையில் நாமிருவரும் சந்தித்தால்கூட ஒருவ... அவசியமில்லை. புரிகிறதா?'

கள்ளனுக்கு நன்றாகப் புரிந்துவிட்டபடியால் ''சரிதான்'' என்று ஒரே வார்த்தையிலேயே பதிலை முடித்துக் கொண்டான்.

''சரி நீ போய்ப் படுத்துக்கொள்'' என்று அவனை அனுப்பிவிட்ட விக்ரம பாண்டியனும் பூனைபோல் அடிமேலடி வைத்து நடந்து கட்டிடங்களின் முன்புறத் துக்காகச் சென்றான்.

அவர்கள் சென்ற வெகுநேரம் வரை சம்பங்கிக் கொடிக்கு அருகிலேயே நின்றிருந்த பாண்டிய சேனாதிபதியும் முடிவில் நகர ஆரம்பித்து, மனதில் ஏதேதோ எண்ணங்கள் அலைபாயக் கட்டிடங்களின் பக்கமாகச் செல்லாமல் கோட்டையின் தென்புறச் சுவரை நோக்கி மெல்ல நடந்தான். விக்ரம பாண்டியன் எண்ணம் சந்தேகத்துக்குச் சிறிதும் இடமின்றி விளங்கிவிட்டது அபராஜிதனுக்கு.

அங்கிருந்து கார்குழலியை மெல்லத் தூக்கிச் சென்றுவிட்டால் வீரபாண்டியன் அவளைத் தொடர இஷ்டப்பட மாட்டானென்று விக்ரமபாண்டியன் மனப்பால் குடித்திருக்கிறானென்பதையும், அவ்வெண்ணம் காரணமாகவே வீரபாண்டியன் கோட்டையை வளைக்கு முன்பு தகப்பன் உதவி கொண்டு பெண்ணைத் தட்டிக்கொண்டு போய்விட உத்தேசிக்கிறானென்பதையும் அபராஜிதன் திட்டமாகப் புரிந்துகொண்ட போதிலும் இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பதென்பதை அறியாமல் திண்டாடினான்.

"நெல்லைப் பாண்டியனான குலசேகரனுக்குச் சோழர்கள் ஆதரவிருக்கிறது. அவன் சோழநாட்டு வீரர்கள் நூறு பேர்களுடன் வந்தால் கோட்டைக்குள் அவனை விட முடியாதென்று யார் சொல்ல முடியும்? அவன் வரும் சமயம் மறிந்து விக்ரமபாண்டியன் கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட்டால் யார் மறுக்கமுடியும்? வீரபாண்டியன் படையெடுப்பு சீக்கிரமே ஏற்படக் கூடிய ஸ்திதி இருக்கும் போது அதனின்று தப்ப மார்க்கம் கிடைத்தால் கார்குழலி அதை ஏற்கமாட்டாளென்பது என்ன நிச்சயம்? அவளைத் தப்புவிப்பதுபோல் பாசாங்கு செய்து அப்பனும் பிள்ளையும் அவளைச் சோழநாடு கடத்திச் சென்று, அதோட்சத

விவாகத்தை விக்ரமபாண்டியன் செய்து முடித்தால்
கார்குழலியின் கதி என்ன?''

''ஏதும் தெரியாத சிறுபிள்ளைபோல் இருக்கும் இந்த
விக்ரமபாண்டியன் கல்லுக்கடியில் மறைந்துறையும் கரு
நாகம்போல், ஏதுமறியாத கார்குழலியை ஒழிக்கத்
திட்டம் போட்டு உள்ளூறத் தன் விஷ ஜ்வாலையைக் கக்க
ஆரம்பித்துவிட்டானே. இந்த விஷப் பாம்பை எப்படிச்
சமாளிப்பது?'' என்று இப்படிப்பலவாறாக யோசனை
செய்த அபராஜித பல்லவன் இந்தச் சிக்கலுக்கு ஏதும்
விடை கிடைக்காதவனாய்க் கோட்டையைச் சுற்றி நடந்து
கடைசியாகத் தன் அறைக்குச் சென்று மஞ்சத்தில் வீழ்ந்து
அதிகக் கவலையால் நித்திரை வராமல் புரண்டுகொண்டி
ருந்தான். நேரம் ஏறிக்கொண்டே போனதுகூடத்
தெரியாமல் மஞ்சத்தில் புரண்டுகொண்டிருந்த சேனாதிபதி
திடீரெனத் துள்ளி எழுந்து, ''சொக்கா! டேய் சொக்கா!''
என்று அவசரமாகச் சொக்கப்பெருமாளை எழுப்பினான்.

சொக்கப்பெருமான் ஏதோ சாட்டையால் அடிக்கப்
பட்டவன்போல், குத்துக்கல்போல் சட்டென்று எழுந்து
உட்கார்ந்து, ''என்ன எசமான்?'' என்று வினவினான்.

''பொழுதுவிடிந்ததும் நீ இந்தக் கோட்டையை
விட்டுப்போய்விடவேண்டும்'' என்றான் சேனாதிபதி.

சொக்கப்பெருமாள் ஏதும் புரியாமல், ''எங்கே
எசமான்?'' என்று வினவினான்.

இருவரும் அந்தச் சமயத்தில் தனியே இருந்தபோதி
லும் அபராஜிதன் சொக்கப்பெருமாளைத் தனியே
அழைத்து, அவன் காதில் கிசுகிசுவென்று சில வார்த்தை
களைச் சொன்னான். அவற்றைக் கேட்கக் கேட்க சொக்கப்
பெருமான் முகத்திலும் மகிழ்ச்சி ஏறிக்கொண்டிருந்தது.
சேனாதிபதி விஷயத்தைக் கூறி முடித்ததும் அதை ஆமோ
திப்பவன்போல், ''உத்தரவு எசமான்'' என்றான்
சொக்கப்பெருமான்.

''அதோ அந்த மூலையிலிருககும் விளக்கின் திரியைத்
தூண்டிவிட்டு விளக்கை இப்படி எடுத்து வா, ஓலையை

யும் எழுத்தாணியையும் எடு'' என்று உத்தரவிட்ட
அபராஜிதன் சற்று நேரத்திற்கெல்லாம் சொக்கப்
பெருமாள் விளக்குக் காட்ட ஓர் ஓலையில் ஏதோ அவசர
அவசரமாக எழுதி முடித்து ஓலையைச் சொக்கப்பெருமா
ளிடம் கொடுத்துவிட்டு மஞ்சத்தில் சாய்ந்து மனநிம்
மதியுடன் உறங்கிவிட்டான்.

மனநிம்மதியுடன் படுத்ததால் சேனாதிபதி நீண்ட
நேரம் தூங்கிவிட்டான். கன்னிமாடக் கோட்டையில்
பொழுது புலர்ந்ததையோ, தாரைகள் ஊதப்பட்ட
தையோ அறியாமலே சூரியன் உதயமான வெகுநேரம்
மட்டும் தூங்கிக்கொண்டேயிருந்த சேனாதிபதியைச்
சொக்கப்பெருமாள் ''எசமான் எழுந்திருங்கள். அரச
குமாரி தங்களை அழைத்து வரச் சொல்லி ஆள் அனுப்பி
யிருக்கிறார்கள்'' என்று எழுப்பினான். தூக்கம் கலைந்து
நேரமாகிவிட்டதை உணர்ந்து மஞ்சத்திலிருந்து துள்ளி
எழுந்த சேனாதிபதியும், ''இன்னும் சிறிது நேரத்திற்குள்
வருவதாகச் சொல்'' என்று வந்த வீரனுக்குப் பதில்
சொல்லியனுப்பிவிட்டு ஸ்நானபானங்களை முடித்துக்
கொண்டு புதுஉடை அணிந்து கோட்டை வாசலுக்கு
எதிரிலிருந்த மாடிப்படிகளில் ஏறிச் சென்றான். மாடி
யறைக்குள் நுழையுமுன்பு, கண்கள் முன்பு தெரிந்த காட்சி
யைக் கண்டு சட்டென்று உள்ளே நுழையாமல் வாயிற்படி
யிலேயே சிறிது தாமதித்தான். அவனுக்கு நேர் எதிரில்
பின்பக்கமாகப் பலமாக இறுக்கிக் கட்டப்பட்ட கைகளு
டன் மார்க்கியன் வேல் தாங்கிய இரு வீரர்களுக்கிடையே
நின்று கொண்டிருந்தான். பக்கவாட்டில் இரண்டு ஆசனங்
களில் கார்குழலியும் விக்ரமபாண்டியனும் அமர்ந்திருந்
தார்கள். கார்குழலிக்கு ஒருபுறத்தில் சற்றுத் தள்ளி
நின்ற அடிகளார், உள்ள நிலையை அரைப் புன்முறுவ
லுடன் கவனித்துக்கொண்டிருந்தார். மார்க்கியனைப்
பற்றிய விசாரணை துவங்கிவிட்டதென்பதை அறிந்த
சேனாதிபதிதான் உள்ளே போவதா அல்லவாவென்று
தயங்கிக் கொண்டிருந்த சமயத்தில், ''வாருங்கள்! உங்களுக்

காகத்தான் காத்திருக்கிறோம்'' என்று கிள்ளையினுமினிய குரலில் கார்குழலி அழைத்ததும் மந்திர உச்சாடனத்துக்குக் கட்டுப்பட்டுச் செல்லும் சிம்மம்போல் மெள்ள நடந்து அவளுடைய ஆசனத்தில் வலது புறத்தில் போய் நின்று கொண்டான். ஒருபுறம் அபராஜிதனும் மற்றொரு புறம் அடிகளாரும் நிற்கவே ஏதோ பெரிய படைபலத்தைப் பெற்றுவிட்ட தைரியத்தோடு கார்குழலி தன் விசாரணையைத் தொடங்கினாள்.

37. அல்லிப் பூம்பொழிலும் அன்னப் பேடையும்

மூன் கட்டிடத்து மாடியறை. மேலே வளைந்தோடிய கமான்களுடனும் இடையே இருந்த இரண்டுபிரம்மாண்டமான தூண்களுடனும் கிட்டத்தட்ட பெரிய மண்டபம் போலவே காட்சியளித்தது. எதிரிகளைத் தடுப்பதற்காகக் கோட்டைச் சுவர்களைப் பலப்படுத்திய மழவராயன், உள்ளிருந்த கட்டிடங்களில் அதிகக் கவனம் செலுத்திப் பழுது பார்க்காததால், தூண்களில் செதுக்கப்பட்டிருந்த சில பிம்பங்கள் மூக்கை இழந்தும், ஒற்றைக் கண்களில் குழி விழுந்தும், வாயில் காரை உதிர்ந்து பொக்கையாகவும், பல விபரீத தோற்றங்களுடன் நின்றுகொண்டிருந்தன. எதிரேயிருந்த பெரிய சாளரங்களில்கூட மரம் சற்றுச் சக்கை பெயர்ந்திருந்தது. இத்தனை விவகாரங்களிலும் சிற்பியின் கைத்திறமை காரணமாக மாடியறை மிகக்கம்பீரமாகவே விளங்கியது. விசாரணை தொடங்கிய சமயம் காலைநேரமாதலால் கதிரவனும் விசாரணையைப் பார்க்கும் ஆவலுடன் எழுந்து வானத்திலேறத் தொடங்கிவிட்டபடியாலும் சாளரங்களில் ஒன்று கிழக்குப் பக்கமாக அமைந்து கதவுகளும் நன்றாகத்திறந்துவிடப்பட்டிருந்தமையாலும் கார்குழலியின் அந்த விசாரணை

மண்டபத்துக்குள் வெயில் பட்டை பட்டையாகத் தரையில் விழுந்து தூரத்தே உட்கார்ந்திருந்த அரசகுமாரியின் மலர்ப்பாதங்களையும் லேசாகத் தழுவலாயிற்று. சூரியன் கிளம்பியதும் கன்னிமாட உறைவிடங்களிலிருந்து சிறகடித்துக் கிளம்பிய புறாக்களின் சப்தம் வெளியே கேட்டதோடு, அப்புறாக்களிலொன்று சாளரத்திலும் வந்து அமர்ந்து விசாரணையை உற்றுக் கவனிக்கத் தொடங்கியது.

இடையே இருந்த ஆசனத்தில் உட்கார்ந்து விசாரணையைத் தொடங்கிய கார்குழலிமீது கண்களை ஓட்டிய அபராஜிதன் அவள் நாட்டை ஆளப் பிறந்த ராணியென்பதில் சிறிதும் சந்தேகமில்லையென்பதைத் தீர்மானித்துக்கொண்டான். அவள் உட்கார்ந்திருந்த தோரணையிலேயே அரச குடும்பத்தாருக்கு இருக்க வேண்டிய கம்பீரம் நன்றாகத் தெரிந்தது. கருணை வழிந்தோடிய அவள் மயிலை பாய்ந்த கருவிழிகளில் ஓரளவு உறுதியும் நிலைத்திருக்கக் கண்டான் அபராஜிதன். அன்று இத்தனைக்கும் கார்குழலி பிரமாதமாக அலங்காரம் எதுவும் செய்து கொள்ளவில்லை. பாண்டிய நாட்டு நெசவாளர் கைத்திறனை விளக்கும் லேசான சரிகை வேலைப்பாடமைந்த பட்டுச் சேலையொன்றைத் தான் அணிந்திருந்தாள். கழுத்திலிருந்த ஒரு வைர ஆபரணம் கூட சங்கிலும் வெண்மையான அவள் கழுத்தழகுடன் போட்டி போடச் சக்தியற்றுத் தவித்து வெட்கி வளைந்து கிடந்தது... வாரிக்கட்டிய ஜடையில் திருகுப்பூ கூட இல்லாமல் இரண்டு செங்கழுநீர்ப் புஷ்பங்களை மட்டுமே அணிந்திருந்தாள். இவ்வளவு சொல்பமான அலங்காரத்தை அவள் இயற்கையழகு பெரிதும் ஈடு செய்திருந்தமையால் சர்வாபரண பூஷிதையாய்க் கொலுவீற்றிருக்கும் ஒரு ராணியைப்போல் விளங்கினாள் கார்குழலி. அவள் கரியகுழலிலும் பக்கவாட்டிலிருந்த சிவந்த கன்னத்திலும் வெண்கழுத்திலும் மைவிழிகளிலும் கண்களை ஓட விட்டிருந்த பாண்டிய சேனாதிபதி கன்

கனோடு இதயத்தையும் உணர்ச்சிகளையும் ஓடவிட்டிருந்த படியால் கார்குழலி விசாரணையைத் துவக்கி மார்க்கியனைக் கேட்ட முதல் கேள்வியைச் சரியாகக் கவனிக்கவில்லை. இரண்டாம் முறை அவள் கேள்வியைத் திருப்பிய பிறகு தான் சற்றுச் சுரணை வந்து விசாரணையில் கருத்தைச் செலுத்தலானான்.

கார்குழலி தன் கரிய விழிகளை இலேசாக உயர்த்தி எதிரே நின்ற யவன வீரனைப் பார்த்துக் கேட்டாள்: "மார்க்கியோ! கோட்டையைப் பாதுகாக்க உன்னை அமர்த்தினோம். கோட்டைக்குள் ரகளை விளைவிப்பதற்காக அல்ல. நேற்று நடந்து கொண்ட முறைக்கு என்ன சமாதானம் சொல்லுகிறாய்?"

மார்க்கியன் பதிலேதும் சொல்லாமல் மரம் போல் நின்றான். கார்குழலி கேள்வியைத் திருப்பி, 'என்ன மார்க்கியோ! கேட்டதற்குப் பதில் ஏதும் இல்லையே. மௌனத்தால் குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா?' என்று வினவினான்.

மார்க்கியன் பதில் சொல்லும் முன்பு விக்ரம பாண்டியன் தன் சாமர்த்தியத்தைக் காட்டத் தொடங்கி, "இதில் சந்தேகமென்ன? மௌனமாயிருந்தால் குற்றத்தை ஒப்புக் கொண்டதாகத்தான் அர்த்தம். தவிர இதில் விசாரணை என்ன இருக்கிறது? இவன் செய்த காரியங்களைத் தான் நாம் கண்கூடாகக் கண்டோமே!" என்றான்.

இதைக் கேட்ட அடிகளார் லேசாகச் சிரித்து விக்ரம பாண்டியனை நோக்கி, "விக்ரமா! நீ பாண்டிய நாட்டு மன்னனானால் விசாரணை எப்படி நடக்குமோ தெரியாது. ஆனால் குற்றவாளியை விசாரித்தபிறகே தண்டிப்பதென்ற ஒரு வழக்கம் தமிழ்நாட்டில் நீண்ட நாளாக இருந்து வருகிறது. அத்துடன் வழக்கு என்று வந்தால் எது வழக்கில் சம்பந்தப்பட்ட இருவர் தம் சொல்லையும் தரம் கேட்டுத்தான் தீர்ப்புச் சொல்ல வேண்டியதென்ற

மிகவும் இருக்கிறது. அத்தனை தூரம் சிரமப்படுவது உன்னைப்போன்ற அரச குமாரர்களுக்குக் கஷ்டமாயிருக்கலாம். ஆனால், மழவ நாட்டுப் பரம்பரையில் அது சர்வ சகஜம்" என்று சுட்டிக் காட்டினார்.

"நாம் நேற்றுக் கண்ணால் கண்டதைவிடப் பிரமாதமாக எதை இந்த விசாரணையில் கண்டுபிடித்துவிடப் போகிறீர்கள்?" என்று அடிகளாரை நோக்கிச் சீறினான் விக்ரம பாண்டியன்.

"தி ப சிலே! கண்ணால் காண்பது பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர விசாரிப்பதே மெய்' என்ற அறிவுரை ஒன்றைச் சொல்லிவிட்டு விக்ரம பாண்டியனை அர்த்த புஷ்டி நிரம்பிய விழிகளால் அடிகளார் பார்த்தார்.

கார்குழலி இருவர்மீதும் கனல் கக்கும் விழிகளைப் பாய்ச்சினாள். "அடிகளாரே! விசாரணை மண்டபம் நினைவிருக்கட்டும்" என்றாள்.

அடிகளார் மிகப் பணிவுடன், "அரசகுமாரி! அதைத் தாங்கள் அந்தப் பக்கத்திலிருக்கும் பிற்காலப் பாண்டிய மன்னருக்குத் தெளிவுபடுத்துவதுதான் அவசியம்" என்று கூறிவிட்டார். அத்தனை பணிவிலும் அவர் விக்ரம பாண்டியனைப் பார்த்த பார்வையில் பணிவோ, மதிப்போ இருப்பதாகப் புலப்படவில்லை.

அத்துடன் இந்த விவாதம் அடங்கவே கார்குழலி மார்க்கியனைப் பார்த்து மேலும் சொல்லலானாள்: "மார்க்கியா! உன்னை இந்தக் கோட்டையைப் பாதுகாக்க வீரர்களை அழைத்துவர அமர்த்தினோம். நீயோ கள்ளர்களை அழைத்து வந்திருக்கிறாய் போதாதற்கு அவர்களைக் குடிக்கவைத்துப் போதையையும் நன்றாக ஏற்றியிருக்கிறாய்...." என்று சொல்லிக்கொண்டேபோன அரசகுமாரியை—இடையே தடுத்த மார்க்கியன், "அரசகுமாரி! விக்ரம பாண்டியன் அழைத்துவர முடியுமா அல்லது பாண்டியப் படை வீரர்களைத்தான் திரட்டிக் கொண்டு வரமுடியுமா?" என்று வினவினான்.

கார்குழலி மார்க்கியனைப்பார்த்து விக்ரம பாண்டியனையும் பார்த்தாள். விக்ரம பாண்டியன் முகத்தில் கோபம் ஏறிக்கொண்டிருந்தது. "அவன் ஏதோ உளறுகிறான். அவன் செய்த குற்றத்திற்கு மரண தண்டனை தான் விதிக்கவேண்டும். இரண்டு கள்ளர்களைக் கூப்பிட்டு இவனை வெட்டிப் போடச் சொல்லுங்கள்" என்று ஒரு வழியாக முடிவு கட்டினான்.

மரணம் கண்முன்னால் தோன்றிய அந்த வினாடியிலும் யவன வீரனான மார்க்கியன் சிறிதும் கலங்காமலே கார்குழலியை நோக்கிச் சொன்னான்: "ராசகுமாரி, தங்களைத் தூக்கிக்கொண்டு போக இருபது இருபத்து ஐந்து வீரர்கள் தேவை என்றுதான் அவர் சொன்னார்; அதற்காக இரண்டு முத்து வளையல்களையும் கொடுத்தார். ஒரு பெண்ணை, அதுவும் ராஜகுமாரியைத் தூக்கிச் சென்று அகப்பட்டுக் கொண்டால் தண்டனை என்னவென்பது தங்களுக்குத் தெரியாததல்ல. இத்தகைய வேலையைச் செய்ய மழவப் படையையோ வேறு எந்தப் படையையோ சேர்ந்த நாணயமான வீரன் எவனாவது வருவானா? இது கொள்ளைக்காரன் செய்ய வேண்டிய வேலை, கொள்ளைக்காரர்களை அமர்த்தினேன். தவிர இன்னொரு விஷயம்..."

"என்ன?" என்று கேட்டாள் கார்குழலி.

"தங்களைத் தூக்கிக்கொண்டு வரவேண்டும் என்று அந்த மகாப் பிரபு சொன்னாரே தவிர, இந்த மாதிரி கோட்டையைக் காக்க வேண்டியிருக்கும், முற்றுகையைச் சமாளிக்க வேண்டியிருக்கும் என்ற தகவல் எதையும் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் இந்தக் கள்ளர்களும் வந்திருக்க மாட்டார்கள்" என்றான் மார்க்கியன்.

கார்குழலிபக்கவாட்டில் திரும்பி விக்ரம பாண்டியனை நோக்கி, "இது உண்மைதானா?" என்று வினவினாள்.

"ஆமாம். அதையெல்லாம் இவனிடம் சொல்ல வேண்டிய அவசியமென்ன?" என்றான் விக்ரம பாண்டியன் வெகு அலட்சியமாக.

"அவசியமென்னவா! நாம் கன்னிமாடத்தில் சரண் புகுவதென்றால் அதைக் காக்கக்கூடிய வீரர்களைப் பொறுக்காமல் கள்ளர்களைப் பொறுக்குவதால் லாபமென்ன?" என்று வினவினாள் கார்குழலி.

விக்ரம பாண்டியன் பதிலேதும் சொல்லவில்லை. அடிகளாரின் கூரிய புத்தி மட்டும் விஷயத்தை ஓரளவு ஊகித்துக் கொண்டது. 'பயங்கொள்ளியான விக்ரம பாண்டியன் யுத்தத்தையும் எதிர்பார்க்கவில்லை, தான் கார்குழலியை அழைத்துக் கொண்டு போய்விட்டதைக் கேட்டதும் வீர பாண்டியன் மானத்துக்கு அஞ்சி மழவராயன் பெண்ணைத் தொடரமாட்டான். தானே அவளை மணந்து கொண்டு மழவராயனைத் தன் பக்கம் சேர்த்துக் கொள்ளலாம் என்ற குருட்டு யோசனையாலேயே விக்ரம பாண்டியன் இந்தக் கள்ளர்கள் போதும் என்றிருந்திருக்கிறான்' எனப் புரிந்து கொண்ட அடிகளார், "விக்ரம பாண்டிய மகாராஜா, வீரபாண்டிய மகாராஜாவுடன் யுத்தத்தை எதிர்பார்க்கவில்லை போலிருக்கிறது" என்று பகிரங்கமாகவும், சொன்னார்.

கார்குழலி ஆச்சரியம் ததும்பும் கண்களை விக்ரம பாண்டியன் மீது லயிக்கவிட்டாள். விக்ரம பாண்டியனுக்கு உள்ளூற இருந்த ஆத்திரத்திற்கு அந்தப் பார்வை தூபம் போட்டது போலிருந்தது. ஆத்திரம் ததும்பும் கண்களால் அடிகளாரைப் பார்த்து, "ஏன் எதிர்பார்க்கவில்லை?" என்று எரிந்து விழுந்தான்.

அடுத்த கேள்வி மார்க்கியனிடமிருந்து எழுந்தது. "எதிர்பார்த்திருந்தால் இந்த இரண்டு மூன்று நாட்களில் நீங்கள் ஏன் ஆயுதங்களைச் சேகரிக்க முயலவில்லை? வீர பாண்டியன் முற்றுகையிட்டால் கோட்டைக்குள் உணவுப் பொருள்கள் தேவையிருக்குமே, அவற்றை ஏன் சேகரிக்கவில்லை?" என்று கேட்டான் மார்க்கியன்.

விக்ரமபாண்டியன் ஏதும் பதில் சொல்லமாட்டாமல் நின்றான். மார்க்கியனாலும் அடிகளாராலும் தன் சாயம் மெள்ள வெளுப்பதை உணர்ந்த விக்ரமபாண்டி

ன், 'எல்லாம் இன்னும் இரண்டு நாட்களுக்குத்தானே அதுவரையில் இவர்கள் ஆடுகிறபடி ஆடட்டும்' என்று உள்ளூறத் தீர்மானித்துக் கொண்டு எதற்கும் மூர்க்கனான மார்க்கியனை முதலில் ஒழித்துவிட முடிவு செய்து, "அரசகுமாரி! என் ஏற்பாடுகளைப் பற்றியும் அதன் காரணங்களைப் பற்றியும் பிறகு சமாதானம் சொல்லுகிறேன். முதலில் இவன் விசாரணை முடியட்டும். இவன் கோட்டைக்குள் இருக்கும் படைத்தலைவன் ஒருவன் செய்யத்தகாத காரியத்தைச் செய்திருக்கிறான். உங்கள் நட்புக்குப் பாத்திரமான இந்தப் பாண்டிய நாட்டுப் பிரபுவைத் தாக்கியிருக்கிறான். பிறகு அவன் ஆட்கள் அவர் பணியாளனை ஒழித்துக்கட்டப் பார்த்திருக்கிறார்கள். பிறகு இவனைக் கைது செய்ய உத்தரவிட்டோம். அதற்கு இவனும் இவன் தூண்டுதலின் மேல் இவன் வீரர்களும் கீழ்ப்படியவில்லை. முதலில் பாண்டியப் பிரபுவைத் தாக்கிய குற்றம், பிறகு கைதாக உத்தரவிட்ட பின்பு அதை எதிர்த்து நின்ற குற்றம், கோட்டையில் குழப்பம் விளைவித்த குற்றம்—இம்மூன்று குற்றங்களுக்கும் மரண தண்டனையைத் தவிர வேறு தண்டனை கிடையாது" என்று தன் கட்சியை எடுத்துக் கோவையாகச் சொன்னான் விக்ரமபாண்டியன்.

கார்குழலி மார்க்கியனை ஏறெடுத்துப் பார்த்தாள். குற்றச்சாட்டுகளில் ஒன்றைக்கூட மறக்கமுடியாமல் பிரம்மாண்டமாக, ஆனால் பரிதாபமாக நின்ற மார்க்கியனை என்ன செய்வதென்று புரியாமல் திகைத்த கார்குழலியின் உதவிக்கு வந்த அபராஜிதன், "அரசகுமாரி! விக்கிரமபாண்டியன் குற்றச்சாட்டுகளில் தவறு இருக்கிறது. உத்தரவு கொடுத்தால் சொல்கிறேன்" என்றான். மார்க்கியனும், கார்குழலியும் ஆச்சரியத்துடன் அபராஜிதனை ஏக காலத்தில் பார்த்தார்கள். எந்த பிரபுவைக் கொல்லத் தான் பிரயத்தனம் செய்தானோ அதே பிரபு தன் பக்கத்தில் பேசமுற்பட்டதைக் கண்ட மார்க்கியன் பிரமித்துப் போனான்.

"குற்றச்சாட்டுக்கள் தவறா?" என்று கார்குழலிகூடப் பிரமிப்புடன் வினவினாள். அடிகளார் மட்டும் பிரமிப்படையவில்லை. சேனாதிபதியின் யோசனைகள் எந்த மார்க்கத்தில் சஞ்சரிக்கின்றன என்பதை அவர் பூரணமாகப் புரிந்துகொண்டிருந்தார்.

அபராஜிதன் தன் கட்சியை விளக்கிச் சொல்லத் துவங்கி, "அரசகுமாரி! மார்க்கியன் என்னைக் கொல்ல முயன்றது உண்மை ஆனால் அது குற்றமாகாது. நான் பாண்டிய உடைகளை அணிந்து வந்திருக்கிறேன். பாண்டியர்களிடமிருந்து நீங்கள் எதிர்ப்பை எதிர்பார்க்கிறீர்கள். ஆகையால் என்னை வேவுகாரனென்று நினைத்திருக்கலாம். தவிர உள்ளே வந்ததும் எங்களிருவருக்குள் வார்த்தை தடித்தது. நான் அவனுக்கு மூளையில்லை என்றேன். அதனால் வெகுண்டு என்மீது பாய்ந்து சண்டையிடுவது குற்றமாகாது. மேலும் அவனைக் கைது செய்யக் கோட்டைத் தலைவியான நீங்கள் உத்தரவிடவில்லை. உத்தரவிட்டது நான். உத்தரவிட எனக்கு இங்கு என்ன அதிகாரம்? என் உத்தரவுக்கு அவன் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை. ஆகையால் குற்றமும் ஏதுமில்லை."

"உங்கள் பணியாளைத் தாக்கியதும் குற்றமில்லையோ?" உக்கிரமாக எழுந்தது விக்ரமபாண்டியன் கேள்வி.

"பணியாளைத் தாக்கியது கள்ளர்கள். அதுவும் கலவர நிலையில் இல்லாத சமயத்தில். ஆகவே! அது மன்னித்து விடக்கூடிய குற்றமே" என்றான் அபராஜிதன்.

கார்குழலி சற்று நேரம் யோசித்துவிட்டு "பிரபு! இவன் கட்சியை நீங்கள் எடுத்துப் பேசியதால் என்னையே குழப்பிவிட்டீர்கள். இவனுக்கு என்ன தண்டனை விதிக்கலாம்? அதையும் நீங்களே சொல்லிவிடுங்கள்" என்றாள்.

"குற்றமில்லாதபோது தண்டனை ஏது? இவனை மன்னித்துவிடுங்கள்."

மரணத்தின் வாயிலிலிருந்து வெகு சாமர்த்தியமாகத் தன்னை மீட்டுவிட்ட பிரபுவின்மீது நன்றி ததும்பும்

கண்களைச் செலுத்தினான் மார்க்கியன். அபராஜிதன் அவனை நோக்கிக் கூறினான் "நீ வீரன். ஆனால் வீரனுக்குத்தகாத முறையில் நடந்துகொண்டிருக்கிறாய். உன் வீரர்களை அளவுக்குமீறி குடிக்க அனுமதித்திருக்கிறாய். உன் உத்தரவுக்கும் கீழ்ப்படியாத முறையில் அவர்கள் நடந்து கொள்ளும் அளவுக்கு அவர்களுடன் உறவாடுகிறாய். சரியான படைத்தலைவனுக்கு இது லட்சணமல்ல. படைத் தலைவனாயிருப்பவன் தன் வீரர்களிடமிருந்து அதிகம் கலக்காமல் ஒதுங்கி நிற்கவேண்டும். அவசியமானபோது அவர்களைத் தண்டித்தும், இதர சமயங்களில் அவர்களை உற்சாகப்படுத்தியும் அவர்கள் பயத்துக்கும், மதிப்புக்கும் பாத்திரமாக வேண்டும். கள்ளர்கள் திறமை மிக்க வீரர்கள். சரியான தலைவனிருந்தால் நன்றாகக் கட்டுப்பாட்டுடன் போரிடக்கூடியவர்கள். அத்தகைய ஒரு தலைவனாக நீ மாறவேண்டும். கோட்டைப் பாதுகாப்பில் யவனர்கள் இணையற்றவர்களென்று பெயர் வாங்கியவர்கள். அந்தப் பெயரைக் காப்பாற்றிக் கொள். இன்னும் சில நாட்களில் வீரபாண்டியன் வந்தால் அவனுக்குப் பதில் சொல்லக் கூடிய வகையில் உன் படை வீரர்களைப் பழக்கிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வா."

இந்த உபதேசத்தை அபராஜிதன் செய்து முடித்ததும் மார்க்கியன் கார்குழலியை நோக்கி, "அரசகுமாரி! ஒரு வேண்டுகோள்" என்றான்.

"என்ன?"

;என் வீரர்களை நான் அடக்கிவிடுவேன். கோட்டைப் பாதுகாப்புக்கு அது மாத்திரம் போதாது".

"வேறென்ன வேண்டும்?"

"மழவப் படை வீரர்களையும் என் வீரர்களையும் இணைத்து ஒரே படையாக வகுக்கவேண்டும்! இரண்டு நாட்களில் ஆகாரங்களைச் சேர்க்கவும் ஆயுதங்களைச் சேகரிக்கவும், இருக்கும் ஆயுதங்களைச் செப்பனிடவும் முயற்சியெடுக்க வேண்டும். அதற்கெல்லாம் போர்த்திற

மும் வீரர் பணியக்கூடிய போர்த்திறனும் வாய்ந்த சிறந்த கோட்டைத் தலைவன் தேவை."

"அதற்குத்தான் விக்ரமபாண்டியர் இருக்கிறாரே?"

அதைக் கேட்டதும் கட்டிடமே அதிரும்படியாக நகைத்தான் மார்க்கியன். "விக்ரம பாண்டியனால் இது முடியாது ராஜகுமாரி. அவருக்கு எதிரில் என் வீரர்கள் நடந்து கொண்ட மாதிரியைத்தான் நீங்களே கவனித்தீர்களே. இங்குள்ளவர்களில் அந்தப் பதவியை வகிக்க இந்தப் பாண்டியநாட்டுப் பிரபுவால்தான் முடியும்" என்றான்.

கார்குழலி சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சற்றுத் தயக்கத்துடன், "நம்மை எச்சரிக்க வந்திருக்கும் அவரை அந்த அபாயத்தில் சிக்கவைப்பது—" என்ற அவள் வார்த்தைகளை இடையிலேயே வெட்டிய அபராஜிதன், "பெரிய மகிழ்ச்சி தரும். அரசகுமாரிக்குச் சேவை புரிவதைவிடப் பெரியவேலை எதுவும் எனக்குத் தற்சமயம் இல்லை" என்றான். நன்றி நிலவும் பார்வையொன்றை அபராஜிதன் மீது வீசிய கார்குழலி அத்துடன் விசாரணை முடிந்துவிட்டதென்ற காரணத்தால் இருப்பிடம் செல்ல ஆசனத்தை விட்டு எழுந்தாள்.

இப்படித் திடீரென கோட்டைக் காவலனாக நியமிக்கப்பட்ட அபராஜிதன் அன்று மாலைக்குள்ளாகவே கோட்டையைப் பரபரப்படையச் செய்துவிட்டான். மழவர் படையையும் கள்ளர் படையையும் கோட்டையின் இரண்டு பக்கங்களில் நிறுத்தினான். உணவுப் பொருள்களைச் சேகரிக்கவும், கொல்லர்களை அழைத்து வரவும் அக்கம்பக்கத்துக் கிராமங்களுக்கு ஆட்கள் அனுப்பப்பட்டார்கள். மாலைக்குள் வியாபாரம் கோட்டை வாசலில் துரிதமாக நடக்கலாயிற்று. கோட்டைக்குள் கொல்லர்கள் பட்டறை போட்டு இரும்பைக் காய்ச்சி வேல் முனைகளுக்கு அலகு அடித்துக் கொண்டிருந்தார்கள். கோட்டை பூராவிலும் இரும்படிக்கும் சத்தமும் வியாபார பேரக்கூச்சலும் வீரர்கள் கோஷமுமாக ஒரே அமர்க்களமாக இருந்தது. மாலையில்

வியாபாரிகளை அனுப்பிவிட்டுத் தொல்லர்களை மட்டு(ம்) இரவு பூராவும் வேலை தொடரச்சொல்லி அபராஜிதன் அந்தத் தொல்லைகளிலிருந்து சற்று விடுதலைபெ(ற்று) சாவத்திரம் ஒருமுறை ஸ்நானத்தை முடித்துக்கொண்(டு) மெல்லிய மேலங்கியொன்றைத் தரித்து நந்தவனத்துக்கு(ள்) நுழைந்தான். நுழைந்தவன் நேராக அல்லி(ப்) பூம்பொழிலின் கரைக்குச் சென்று சிந்தனை அலைகளை எங்கெங்கோ ஓடவிட்டுக் கொண்டே மெய்மறந்(து) உட்கார்ந்திருந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சிந்தனையை சிதற அடிக்(க) எழுந்தது ஒரு குரல். "தனிமையே ஒரு சுவர்க்கம் போ(லி)ருக்கிறது" என்ற வார்த்தைகளால் கனவு கலைந்து அபராஜிதன் பின்னுக்குத் திரும்பினான். எண்ணங்களை யெல்லாம் ஒரே அன்னாக அன்றும் கன்னிறும் மயக்கம் தரும் பேரெழிலுடன் அவனுக்கு வெகு அருகில் மோகன சிரிப்புடன் வெண்பட்டு அணிந்து அன்னப் பேடைபோல நின்றிருந்தாள் கார்குழலி.

38. புஷ்ப பாணம்

மாலை மங்கும் நேரமாதலால் கன்னி மாடப் புழ(க்)கடைத் தோட்டத்து வாவியுள்ளிருந்த ஒரு செங்கழுநீ(ர்ப்) புஷ்பங்களை மூடிக்கொண்டு மொட்டுகளாகித் தண்ணீ(ர்) மட்டத்தில் சாய்ந்து நின்றன. அன்றை வீட்டுக்காரனி(ன்) அவதியால் உற்சாகப்படும் அயோக்கியனைப் போல பக்கத்திலிருந்த ஆம்பல்கள் கூம்பிய வாய் திறந்(து) சிரித்துக் காற்றில் அலைந்து அலைந்து குதூகலித்தன. இந்த அநியாயத்தைப் பார்க்கச் சகியாததைப்போல பறவைகள் தங்கள் இருப்பிடம் தேடிக் கூட்டம் கூட்(ட)மாக ஆகாயத்தில் பறந்து சென்றன.

அந்திப் பொழுதின் அழகு எங்கும் பரவிப் பரிமளி(த்)துக் கிடந்தது. இருள் சூழ்ந்து காதலனை அடைய(ப்) போகிறோம் என்ற நினைப்பினால் அந்தப்பெண் த(ன்) ஆகாயமுகத்தில் வெட்கச் சிவப்பைக் காட்டினாள். அவ(ள்)

(வி)ருப்ப நீதத்துக்குச் சுருதி சேர்ப்பதைப்போல், ஓட்டு மாந்தளிர்க்கிளைகளில் உட்கார்ந்திருந்த குயில்கள் 'கூகூ' வென்று இசைக்கத் தொடங்கின. அந்தப் பெண்ணின் முகசிவப்பு மட்டுமல்லாமல் ஸப்த வர்ணங்களும் தன் மேனியில் அடங்கியிருக்கும் கர்வத்தால் ஆண் மயிலொன்று தோகை விரித்து உல்லாசமாகத் தோட்டத்துப் புல்வெளி யில் கம்பீரமாகத் தலையை உயர்த்தி நடந்து சென்றது. இந்த வேடிக்கையையெல்லாம் பார்ப்பதற்காகக் கன்னி மாடக் கோபுரப் பொந்துகளின் பக்கத்திலிருந்து விளிம்பு கம்பீரமாகத் தலையை உயர்த்தி நடந்து சென்றது. இந்த வேடிக்கையையெல்லாம் பார்ப்பதற்காகக் கன்னிமாடக் கோபுரப்பொந்துகளின் பக்கத்திலிருந்து விளிம்புகளில் புறாக்கள் அழகு நடை போட்டுக்கொண்டிருந்தன.

கார்குழலியைப் பற்றிய கவலைகள் கருத்தில் அலை மோதிக் கொண்டிருந்ததால் இயற்கையின் இத்தனை சித்திரங்களையும் சற்றும் கவனிக்காதவனாய் உட்கார்ந்திருந்த அபராஜிதன், தனக்குப் பின்னால் கார்குழலி நிற்பதைக் கண்டதும் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்திருக்க முயன்றான். "வேண்டாம். எழுந்திருக்க வேண்டாம். உங்கள் சுவர்க்கத்தை நான் கலைக்க வரவில்லை" என்று சொல்லிக்கொண்டே கார்குழலி அவன் பக்கத்திலமர்ந்தாள்.

அவள் மிகச் சமீபத்தில் உட்கார்ந்ததால் எத்தனை எத்தனையோ உணர்ச்சிகள் உடலை உருவிப்போடத் திண்டாடிய அபராஜிதன் அவள் கேட்ட முதல் கேள்விக்கோ அடுத்தபடியாக சொன்ன வார்த்தைகளுக்கோ பதிலேதும் சொல்ல வகையற்றவனாய்ப் பக்கவாட்டில் கண்களைச் செலுத்தி அவளை ஒரு முறை பார்த்தான். அவள் கட்டியிருந்த பாண்டிய நாட்டு வெண்பட்டின் தலைப்பில் பூ வேலைப்பாடு இரண்டுசாண் அகலத்துக்குச் செய்யப்பட்டிருந்ததால் அவள்மார்பகத்தை மறைத்தோடிய இடங்களில் சேலை ஒரே சித்திரமயமாகக் கிடந்ததன் காரணமாக கை தேர்ந்த சிற்பியால் செதுக்கப்

பட்ட பதுமைபோலக் காட்சியளித்தாள். இரு மயிர்ச்சுருள்கள் அவள் நெற்றித்தலத்தில் கார்குழல் விளையாடின. இயற்கையாகவே மையிலை பாய்ந்த காந்தக் கருவிழிகளில் தீட்டப்பட்டிருந்த மை, அவற்றின் கருமையுடன் போட்டிபோட முடியாத காரணத்தால் இமைகளின் கண்களிலிருந்து சற்றுக் கசிந்து கன்னங்களுக்கு அடியிலிருந்த பிறப்புப் பிரதேசத்தில் பட்டு, தனக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தது. செயற்கைக் கறுப்பான மையின் நிலையைப் பார்த்து அவள் அஞ்சன விழிகள் இமைகளுக்கு அடியிலிருந்து சிரித்தன. அவற்றைவிட அதிகமாக வெண்பற்களைக் காட்டி நகைத்த அவள் கழுத்திலிருந்து விலை உயர்ந்த முத்து மாலை அந்தச் சமயத்தில் கார்குழலியின் அந்தரங்கத்தில் என்ன எண்ணங்கள் ஓடுகின்றன என்பதை அறியும் நோக்கத்துடன் அவள் இதயத்தின்மேல் காதை வைத்துப் படுத்துக் கிடந்தது. மனத்தை அள்ள இத்தனை வாயில்களோ, போதுமே! அப்படியிருக்க, கார்குழலி எதற்காகத் தலையில் அத்தனை ஜாதி மல்லிகைகளையும் அவற்றுக்கிடையே ஒரு மனோரஞ்சித மலரையும் சூடவேண்டும்?

இப்படி அவள் அழகின் ஒவ்வோர் அம்சத்தையும் கண்களால் விழுங்கிக்கொண்டு, வெளிந்தானத்தின் வெப்பத்தைத் தாங்காமல் மாலை நீராடியதன் விளைவாக இயற்கையாக அவள் உடலிலிருந்து வீசிக்கொண்டிருந்த சந்தனப்பொடிகளின் நறுமணத்தாலும் தலையிலிருந்த ஜாதிப் புஷ்பத்தின் சுகந்தத்தாலும் அறிவை அறவே இழந்த அபராஜிதன் கார்குழலிக்குப் பதிலேதும் சொல்லாமலே அவள்மீது திரும்பிய கண்களை மீண்டும் அல்லிப் பொழிலுக்காக ஓட்டிவிட்டான். அவன் நிலையைப் பார்த்த கார்குழலி மெல்லச் சிரித்தாள். குளத்திலிருந்த அல்லி மலர்களும் அவன் திண்டாட்டத்தைப் புரிந்துகொண்டன போல அலைவும் சிரித்தன.

கார்குழலியின் சிரிப்பினால் சற்றே சிந்தனையும் வெட்கமும் சங்கடமும் கலைந்த அபராஜிதன் வாயிலிருந்தும் மெல்ல

வார்த்தைகள் உதிர்ந்தன. "என்ன சிரிக்கிறீர்கள் ராஜகுமாரி?" என்று கேட்டான் அபராஜிதன்.

"திடீரென்று மௌனியாகி விட்டீர்களே என்று சிரித்தேன்" என்றாள் கார்குழலி மெதுவாக, அவனை நன்றாக ஏறெடுத்துப் பார்த்து.

அத்தனைக்கும் அவள் பக்கம் திரும்ப தைரியமில்லாத அபராஜிதன் அல்லிகள் மீது கண்களை ஓட்டியவண்ணமே சொன்னான்: "நான் எப்படி மௌனியாக முடியும் ராஜகுமாரி?"

"ஏன் ஆக முடியாது?" என்று 'நிரம்பாமென்சொல்' என்று தமிழ்க் கவிகள் வருணித்த தழுதழுத்த குரலில் கேட்டாள் கார்குழலி.

"யோகிகள் தான் மௌனிகளாக முடியும்."

"நீங்கள் யோகியாக முடியாதோ?" விளையாட்டாகக் கேட்டாள் கார்குழலி.

அபராஜிதன் இதழ்களில் புன்முறுவல் சற்றே தவழ்ந்தது. "முடியாமலென்ன ராஜகுமாரி? இப்பொழுது யோகியாகத்தான் ஆகிவிட்டேன்" என்றான்.

"சொல்வதை விளக்கித்தான் சொல்லுங்களேன்" என்று கார்குழலி வினவினாள்.

"எனக்கு இப்பொழுது யோகம் அடிக்கிறது. ஆகையால் நான் யோகிதானே?"

"யோகமடிக்கிறதா?"

"சந்தேகமென்ன? இரண்டு பாண்டிய மன்னர்கள் மணத்துக்குப் போட்டியிடும் மழவராயன் மகள் சோழப் பேரரசின் அபிலாஷைக்கும் பாண்டிய நாட்டின் பிற்கால நிலைக்கும் இடையே தராசின் முள்ளைப்போல் நிற்கும் வேலை மங்கலத்தின் அரசகுமாரி, இந்த ஏழையின் தனிமையைத் தவிர்க்கத் தானாக முன்வரும்போது, அதை யோகம் என்று அழைக்காமல் வேறு எதைப் பெயரிட்டு அழைப்பது?"

இதைக் கேட்ட கார்குழலியின் மலர்முகம் இன்னும் அதிகமாக மலர்ந்து அவள் இதழ்களில் இன்பப் புன்முறுவல

லொன்றும் படரவே, விஷமமாகக் கேட்டாள் அவள்; "தாங்கள் யோகியாகிவிட்டால் நான் யோகத்தைக் கலைப்பது சரியாகுமா?"

"ஏன் சரியாகாது?" என்று அபராஜிதனும் பதிலுக்கு ஒரு கேள்வியை வீசினான்.

"யோகத்தைப் பெண்கள் கலைப்பதைப் புராணங்களில் கண்டித்திருக்கிறார்களே."

"இது புராண யோகமல்லவே?"

"நீங்கள் சொல்வது...."

"புரியாவிட்டால் கேளுங்கள் சொல்கிறேன். புராணங்களில் ரிஷிகள் தாங்களாக யோகியானார்கள். அதைக் கலைக்கப் பெண்கள் வந்தார்கள். என் விஷயம் அப்படியில்லையே?"

"ஏன் இல்லை?"

"என்னை யோகியாக்கியது நீங்கள். நீங்கள் உண்டாக்கியதை நீங்களே கலைத்தால் அது எப்படிக் குற்றமாகும்?"

மகிழ்ச்சி நிரம்பியதால் இதயம் விட்டுச் சிரித்தான் மழவராயன் மகன். அப்படிச் சிரித்தபோது மெல்லப் பக்கவாட்டில் சாய்ந்த அவன் தேகம் லேசாகத் தன்மேல் படவே விவரிக்க இயலாத இன்ப வேதனையை அடைந்தாள் பாண்டிய சேனாதிபதி. அவன் வேதனையை அதிகமாக்கச் சாய்ந்த உடலை அகற்றாமலே மேலும், பேச்சுக் கொடுத்த கார்குழலி, "உங்களோடு நான் எப்படிப் பேசமுடியும்?" என்றாள்.

"ஏன் பேச முடியாது?"

"நீங்கள் பேச்சில் வல்லவர்கள்."

"யார் சொன்னது?"

"இன்னொருவர் சொல்வானேன்! நான்தான்காதாரக் கேட்டேனே."

"எப்பொழுது கேட்டீர்கள்?"

"காலை விசாரணையின் போது, குற்றம் செய்தவனைக் குற்றமற்றவனாக்கி விட்டீர்கள்."

"குற்றம் செய்தவன் யார்?"

"மார்க்கேயன்."

"உங்கள் விஷயத்தில் என்ன குற்றத்தைச்செய்தான்?"

"உங்களிடம் குற்றமிழைத்தால் அது எனக்குச் செய்த குற்றமாகாதோ?" என்று துவங்கிய கார்குழலி அளவுக்கு மீறி அந்தரங்கத்தைத் தெரிவித்துவிட்டோமே என்ற நினைப்பால் சட்டென்று பேச்சை நிறுத்தினாள். அவள் சொற்களின் அர்த்தத்தை உணர்ந்துகொண்ட அபராஜிதனும் அல்லிக் குளத்திலிருந்து சரேலெனத் திரும்பி அவளை ஏறெடுத்துப் பார்த்தான். வாயியுள்ளிருந்த செங்கழுநீர்ப் புஷ்பத்துடன் போட்டி போடுவதைப்போல் அவள் முகம் தரையை நோக்கிச் சாய்ந்தது. ஆனால் விகசித்த அந்த மலர்த்தாமரை மட்டும் மூடவில்லை. மலர்ந்தபடியே இருந்தது.

இருள் மெள்ள மெள்ளச் சூழத் தொடங்கிவிட்டதால் சாதாரணமாகவே கருத்தை அள்ளிச் செல்லும் கார்குழலியின் சோபித்த முகம் மிக மங்கலான வெளிச்சத்தில் அதிக மயக்கத்தைத் தரும்படியாக இருந்ததை அபராஜிதன் கவனித்தான். கூர்மையான அவள் கருவிழிகளில் புஷ்பத்திலிருந்து புஷ்பத்துக்குத் தாவும் நிலையற்ற வண்டுகளைப் போல் அவள் உடலின் பலவிடங்களில் நிமிர்ந்தும் மலர்ந்தும் அடங்கியும் சாய்ந்தும் கிடந்து மலர்களில் தாவித் தாவிச் செல்லத் தொடங்கி இறுதியாக முகத் தாமரையிலும் தாமரையில் பதிந்துகிடந்த இரு நீலோற்பலங்களிலும் செம்பருத்தியிலும் அழகான பட்டுக்கன்னங்களிலும் சஞ்சரிக்கத் தொடங்கின.

இந்த ஆண்மகனின் கண்களின் ஓட்டத்தைக் கடைக்கண்ணால் கண்ட கார்குழலியின் தேகம் பூராவும் சொல்லவொண்ணாத நாணம் பரவியதால் ரத்தம் குபீரென்று பாய்ந்து முகத்திலும் கன்னங்களிலும் கடும் சிவப்பு ஏறியது. சேலை இறுகியிருந்ததால், ஏற்கனவே கன்றிக் கிடந்த இடை இன்னும் அதிகமாகக் கன்றி குங்குமச் சிவப் பாகி வெண்பட்டுச் சேலையிலும் ரத்த வர்ணத்தைச்

சற்றே பாய்ச்சியது. லலிய அவனுடன் பேசிய தாமரைத்
தளங்களைப் போன்ற இதழ்கள் லேசாகத் துடிக்க,
விம்மிக் கிடந்த கவர்ச்சிப் பிரதேசங்கள் இன்னும் அதி
மாக உறுதிப்பட ஆரம்பித்ததால் இன்பவேதனையைத்
தாளாமல் அசைந்தாள் கார்குழலி. அவள் உடலிலிருந்த
மலர்களே அபராஜிதனை அவஸ்தைப்படுத்தப் போதும்.
அப்படியிருக்க மன்மதன் எதற்காகத் தன் புஷ்ப பாணங்
களை அவன் மீது சொரியவேண்டும்?

இரண்டு பாண்டியர்கள் அடையப் போட்டி போடும்
பைங்கிளியாள் தன் பக்கத்தே அமர்ந்திருந்ததாலும், அவள்
உடல் தன்மீது அப்பொழுதும் உராசிக்கொண்டிருந்
ததாலும், வளைந்து வளைந்து நெளிந்து நெளிந்து ஓடிய
அவள் உடலின் இன்பப் பிரதேசங்கள் கண்களைத்
தாக்கிய காரணத்தாலும் உன்மத்த நிலைமை அடைந்த
அபராஜிதன் அவன் மடியில் செயலற்றுக் கிடந்த அவள்
பூங்கரத்தை எடுத்துத் தன் இரண்டு கைகளிலும் பத்திரப்
படுத்திக் கொண்டு, "ராஜகுமாரி..." என்று தயக்கத்துட
னும் அவள் காதுக்கு மட்டும் கேட்கும் குரலிலும் மெல்ல
அழைத்தான்.

"உம்..." என்றாள் அவள் பதிலுக்கு. ஒரே தந்தியைச்
சுண்டி விட்டால் சப்திக்கும் வீணை நாதத்தைப்போன்ற
அந்த ஹூங்காரத்தைக் கேட்டு ஒருமுறை மென்று விழு
ங்கிய அபராஜிதன், "ராஜகுமாரி! கனவு நிலைப்பதில்லை"
என்று முணுமுணுத்தான்.

"ஆமாம்."

"ஆமாம் என்றால்?"

"தாங்கள்தானே சொல்கிறீர்கள்."

"அப்படியிருக்க கனவு காண்பதில் பயனென்ன?"

கார்குழலி பதில் சொல்லவுமில்லை, கைகளில் சிறைப்
பட்டுக் கிடந்த கரத்தை விடுவித்துக்கொள்ளவுமில்லை.
அவள் பூங்கரம் ஒருமுறை அவன் கைக்குள்ளேயே 'இது
கனவல்ல' என்று சுட்டிக்காட்டச் சுழன்றது. அவள் விரல்
கள் அவன் விரல்களில் இரண்டை உடைத்துப் பாய்ந்

வற்றுடன் பின்னிக்கொண்டு கரம் சுட்டிக் காட்டிய
உண்மையை உறுதிப்படுத்த முயன்றன. எதற்கும் அஞ்
சாத அபராஜிதன் இதயம் அந்தச்சமயத்தில் கலவரமாக
அடித்துக்கொண்டாலும், உணர்ச்சிகள் உச்ச முனையில்
நின்றதால், அவன் விரல்கள் முரட்டுத்தனமாக அவள்
விரல்களைப் பிடித்து அழுத்தின. அந்த முரட்டுத்தனம்
அவளுக்கு வேண்டியிருந்தது. அவள் அவனைப் பார்த்து
மோகனச் சிரிப்பு ஒன்றை வீசினாள். மெல்லிய பூங்கொடி
தொத்தியேற முட்டுக்கட்டை தேவையாயிருக்கத்தான்
செய்கிறது. முட்கள் மேல் விகசிப்பதையே ரோஜாப்
புஷ்பம் விரும்புகிறது. முரட்டுத்தனமும், மென்மையும்
இயற்கையில் கலந்தே நிற்கின்றன. மென்மைக்கு முரட்டுத்
தனமும், முரட்டுத்தனத்திற்கு மென்மையும் இன்பமூட்டும்
சக்திகளாக வாய்க்கின்றன.

அவன் அப்படித் தன் கைவிரல்களை முறித்ததில்
இன்பமே கண்ட கார்குழலி அவனைப்பார்க்கச் சக்தியற்ற
வளாய் தன் முதுகை அவனுக்காகத் திருப்பிக்கொண்டு
கையை விடுவித்துக் கொண்டாள். கை விடப்பட்டாலும்
அவள் திரும்பியதால் தனக்கு வெகு அருகில் வந்துவிட்ட
அவள் முதுகுப் பிரதேசத்தாலும், அதிலே நெகிழ்ந்து
கிடந்த சேலையின் காரணமாகச் செவேலென்று தெரிந்த
கழுத்துப் பிரதேசத்தாலும், அதற்கு மேல்பின்னி எடுத்து
கட்டப்பட்டிருந்த கேசங்களில் செருகிக்கிடந்த மல்லிகைச்
சரங்களாலும் சுய உணர்வை அறவே கைவிட்ட அபராஜி
தன் 'எங்கு வந்திருக்கிறோம், எதற்காக வந்திருக்கிறோம்
என்ற யோசனைகளையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு
அவள் தலையிலிருந்து தொங்கிய ஜாதிச் சரத்தை மீண்டும்
சரியாக எடுத்து அவள் தலையில் செருகினான். முதுகுச்
சேலையைச் சரிப்படுத்திவிடும் பாவனையில் அவள் இரு
தோள்களின் வழவழப்பையும் கைகளின் ஸ்பரிசத்தால்
அறிந்து கொண்டான். கழுத்தைச் சுற்றியிருந்த அந்த
முத்துமாலை ஏன் அவ்வளவு சிக்கிக் கிடக்கிறதென்று
அதனையும் பிரித்தெடுத்தான். அவன் எண்ணங்கள் எங்

செங்கோ கழன்றன. இந்த நிலையில் வீரபாண்டியன் அரண்மனையின் அந்தரங்க அறையிலிருந்த சமயத்தில் இப்பொழுதும் பைங்கிளியின் கழுத்தைத்தொடவும் வெறுத்த மலர் கார்குழலியின் கழுத்திலே எதற்காகப் பதிந்து கிடக்கிறது என்று நினைத்தான். அதைப்பற்றி அவனையே கேட்போமென்று அவன் காதுக்கருகில் இதழ்களைக் கொண்டு போனான். இதழ்களுக்குத் துணிவில்லாததாலோ என்னவோ அவை காதுக்கருகில் போகக் கூசி கன்னத்தில் ஆழப்பதித்து கிடந்தன. சற்று நேரம் கழித்து கழுத்தில் பதிந்தன. கழுத்தில் பதிந்ததால் உயர இருந்த கன்னத்தில் கார்குழலியின் பட்டுக்கன்னம் திருப்பி தட்டியது.

கார்குழலி லேசாகத் துவண்டாள். துவண்ட அவள் பூவுடல் அவன்மேல் பலமாகச் சாய்ந்தது. பயத்தால் பதுங்கும் குழந்தை போலவும் மரத்தின் பலமான கிளைகளில் உறையும் சின்னஞ்சிறு பறவை போலவும் அவள் அவன் அடைக்கலத்தை நாடினாள். அடைக்கலம் தர ஆசைப்பட்டுத் துடித்த அவன் கரங்கள் கைதியை உள்ளடைத்துக் கொள்ளும் சிறைக்கம்பிகள்போல் அவளைச்சுற்றி வளைத்துக் கொண்டன. இருட்டு நன்றாகக்கவிழ்ந்துகொண்டது. உலகத்தையே மறந்து கரைமேல்வீற்றிருந்தகாதலர்களைக் கண்டு அல்லி மலர்கள் நகைத்தன. கன்னிமாடப் புறாக்கள் வெட்கப்பட்டு உள்ளடைந்தன. மல்லிகை, முல்லை, காக்கரட்டைப் புஷ்பங்கள் மாந்தளிர்களுக்கு இடை இடையே திருட்டுத் தனமாக எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தன. புஷ்பபாணனும் இரக்கம் சிறிதுமின்றி அவர்கள்மீது தன் மலர்க்கணைகளை இடைவிடாது பொழிந்தான்.

தங்களுக்கெனத் தனிச் சுவர்க்கத்தைச் சிருஷ்டித்துக் கொண்ட அந்த இருவரும் இந்த உலகத்தை அடியோடு மறந்ததால் மாமரத்தில் தொங்கிய மல்லிகைக் கொடியின் மறைவில் ஓர் உருவம் நின்றிருந்ததையோ அது தங்களை உற்று நோக்கிக் கொண்டிருந்ததையோ கவனிக்கவில்லை.

மாரன் மலர்க்கணையால் மதிமயங்கி உள்ளத்தோடு உள்ளம் உறவாட உணர்ச்சிகள் ஊஞ்சலாட, உன்மத்த நிலையிலிருந்த அந்த இருவரில் அபராஜிதனே முதலில் சுய உணர்வு பெற்று தன் கரங்களில் சிக்கிக்கிடந்த அந்த இன்ப மலருக்குச் சற்றே சுதந்திரம் அளித்து லேசாக விலகி உட்கார்ந்தான். ஆனால், அந்த சுதந்திரத்தை அந்த மலர் விரும்பினால்தானே! சுதந்திரம் எல்லாச் சமயங்களிலும் இருக்கிறதா என்ன? எந்த விஷயமும் வேம்பாயிருக்கும் வேளைகள் மனித வாழ்வில் எத்தனையோ உண்டு. காதல் வசப்பட்ட காரிகை தனிமைப்படும்போதும் அவளுக்குக் கற்கண்டு கசப்பதும் குளிர்மதி சுடுவதும்கவிஞர்கள்கண்ட காட்சிகள் அல்லவா!

ஆகவே, அபராஜிதன் அப்படித் தன்னைவிட்டு விலகி உட்கார்ந்ததை விரும்பாத கார்குழலி, "ஏன் விலகி உட்கார்ந்தீர்கள்?" என்று கேட்கத் தைரியமில்லாமலும் மிதமிஞ்சிய நாணத்தால் என்ன செய்வது என்று விளங்காமலும் சேலையைச் சரிப்படுத்திக் கொண்டு, நிமிர்ந்து உட்கார்ந்து விழிகளைத் தரையில் ஓட்டி வெகுநேரம்பேசாமலே இருந்தாள். இவள் மௌனத்தால் பெரிதும் சங்கடப்பட்டான் சேனாதிபதி. சற்று முன்பாகத் தான் தொட்டுப் பிடித்ததை எண்ணி எண்ணி ஏதோ செய்யக்கூடாத குற்றத்தைச் செய்து விட்டவன் போல் மனத்தில் விவரிக்க இயலாத கிலியாலும் வருத்தத்தாலும் பீடிக்கப்பட்டு அப்படியும் இப்படியும் அசைந்தான்: 'பச்சிளங்குழந்தை போன்ற கார்குழலியை வீரபாண்டியன் முற்றுகையினின்று காப்பாற்றவந்த நான் இந்தத் தனிமையில் அவள்பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டது நியாயமா?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டு, மனசாட்சி குத்தியதால் பெரிதும் மனம்கலங்கித் திண்டாடினான். "அரசன் மகளான கார்குழலி எங்கே? நாட்டைவிட்டு விரட்டப்பட்டுப் பரதேசி போலிருக்கும் நானெங்கே? எங்கள் இருவருக்கும், எசமானிக்கும் அடிமைக்கும் இருக்கக்கூடிய

உறவைவிட வேறென்ன உறவு இருக்க முடியும்? அப்படியிருக்க இந்தப் பைத்தியக்கார எண்ணத்தில் என் மனம் ஏன் புகுந்தது?" என்று நினைத்து ஏங்கினாள்.

கார்குழலியின் எண்ணங்கள் அவன் எண்ணங்களுக்கு நேர் விரோதமான திக்கில் பிரவேசித்துக் கொண்டிருந்தன. புயலில் அகப்பட்டுக் கரை காணாது தவித்த கப்பலுக்கு நங்கூரம் பாய்ச்ச துறைமுகம் அகப்பட்டது போன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டிருந்தது. அவள் மனத்தில் ஒரு நிம்மதி கலந்த சூன்ய வேதனையே நிரம்பி நின்றது. வெறிபிடித்த வீரபாண்டியனாலும் கோழையான விக்ரமபாண்டியனாலும் துன்புறுத்தப்பட்ட தனக்கு, உண்மையாகவே ஒருவீரன் கிடைத்தானே என்பதில் கள்ளமற்ற அவள் உள்ளம் களிப்புற்றிருந்தது.

"அந்தப் புருஷரின் பெயர் என்ன? அவர்யார்?" என்ற விவரங்களை அறிந்து கொள்ளவும் அவள் மனம் ஆசையால் துடித்தது. அவன் அந்தஸ்து உயர்ந்தது என்பதிலோ அவன் பல யுத்தங்களைப் பார்த்தவனென்பதிலோ கார்குழலிக்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் அடிகளார் அவனை 'பிரபு' 'பிரபு' என்று அழைத்து வந்ததை அவள் பன்முறை கவனித்து வந்திருக்கிறாள். மகா சூக்ஷ்ம புத்தியுள்ள அடிகளார் அனாவசியமாக ஒருவரை பிரபு என்று மரியாதை கொடுத்து அழைக்க மாட்டாரென்பதையும் ஆனால் எக்காரணம் கொண்டோ அந்தப்பிரபுவின் பெயரையும் உண்மையான உத்தியோகத்தையும் அவர் மறைக்கிறார் என்பதையும் கார்குழலி, உணர்ந்தே இருந்தாள். ஆனால்அடிகளார் எதற்கும் மசியாத பேர்வழியென்பதும் அவருக்கு இஷ்டமில்லாத செய்தியை அவரிடமிருந்து வரவழைப்பது கடினமென்பதும் அவளுக்குத் திட்டமாகத் தெரிந்திருந்தபடியால் அதைப்பற்றி விசாரிக்காமலே விட்டு விட்டாள். ஆனால், தனக்கும் அப்பிரபுவுக்கும் உறவு இதனை தூரத்துக்கு நெருங்கியபிறகு அவரையே மெள்ள கேட்பதில் தவறில்லையென்ற நோக்கத்தால் சம்பாஷணையைத் துவக்கி "பிரபு!" என்றாள்.

கார்குழலியின் வாயிலிருந்து உதிர்ந்த இனிமையான அந்த ஒரு சொல் திடீரென்று மயக்கத்தைக் கலைக்கவே அபராஜிதன் தலை நிமிர்ந்து, "ஏன் ராஜகுமாரி?" என்று திரும்பினான் மெதுவாக.

கார்குழலி அவன் பக்கம் திரும்பாமல், திரும்பிய முதுகைத் திரும்பியபடியே இருக்கவிட்டு, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே "இன்னும் ராஜகுமாரி தானா?" என்று கேட்டாள்.

"இன்னும் என்ன, எப்பொழுதும் நீங்கள் ராஜகுமாரி தான்."

"மற்றவர்களுக்குச் சரிதான். உங்களுக்கு?"

"மற்றவர்களும் எனக்கும் என்ன வித்தியாசம்?" என்று பதில் சொன்ன அபராஜிதன் லேசாக நகைக்கவும் செய்தான்.

அவன் சிரிப்பை லட்சியம் செய்யாமல் கார்குழலி "மற்றவர்கள் எனக்கு..." ஏதோ தொடங்கிப் பாதியிலேயே வெட்டியதை, "அடிமைகள்!" என்று பூர்த்தி செய்தான் சேனாதிபதி.

"அப்படியே இருக்கட்டும். நீங்கள்"

"ஏன் நானும் தான் உங்களுக்கு அடிமை. இதில் உங்களுக்கு இன்னும் சந்தேகமிருக்கிறதா ராஜகுமாரி?"

அவன் தனக்கு அடிமை என்று சொன்னதால் பெரிதும் பூரிப்படைந்தாலும், அவன் காட்டிய மரியாதையால் வெறுப்படைந்த கார்குழலி வெகுண்டு, "உங்களுக்கு! ராஜகுமாரி! வார்த்தைகளில் வர வர மரியாதை ஏறுகிறதே தவிர குறையக் காணோம்" என்றாள்.

அபராஜிதன் உதடுகளில் புன்முறுவலொன்று தவழ்ந்தது. அவன் கேட்டான்: "ஏன ராஜகுமாரி! அடிமைக்கு எசமானியிடம் மரியாதை யிருக்க வேண்டாமா?"

"இருக்கவேண்டியதுதான். சில அடிமைகள், சில சமயங்களில் மரியாதையையும் சில சமயங்களில் உரிமையும் காட்டுவதுதான் விந்தையாயிருக்கிறது" என்றாள் அவள்.

அவள் 'சில' என்று சுட்டிக் காட்டியது தன்னைத் தான் என்று அபராஜிதன் புரிந்துகொண்டாலும், அதை வெளியில் காட்டாமலே சற்று நேரம் மௌனமாயிருந்து விட்டு மெள்ள அவள் தோளை ஒரு முறை தொட்டு, "குழலி!" என்று அழைத்தான்.

அப்படி அவன் சொந்தமாக அழைத்ததால் அக[illegible] குனிந்த கார்குழலி தலையை உயர்த்தி முதுகைப் பக்க வாட்டில் வளைத்து தன் மலர் முகத்தை அவனுக்காகத் திரும்பிப் புன்முறுவல் செய்து, "பிரபு! இப்பொழுதுதான் புரிந்ததா!" என்றாள்.

அத்தனை இருட்டிலும் சுட்டிகள்போல் ஜொலித்த அபராஜிதன் கண்கள் அவளை விழுங்கிவிடுவன போல் பார்த்தன. அவன் உதடுகள், "எப்பொழுதோ புரிந்து விட்டது குழலி!" என்று முணுமுணுத்தன.

"ஏன் புரியாததுபோல் நடித்தீர்கள்?"

"என் நிலைமை அப்படி."

"என்ன உங்கள் நிலைமை! நீங்கள் யார்? உங்கள் பெயரென்ன? சொல்ல மாட்டீர்களா?"

"இப்பொழுது என்னைக் கேட்காதே குழலி. காலம் வரும் சொல்கிறேன்."

"ஏன், என்னிடம் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?"

"நம்பிக்கையிருக்கிறது. ஆனால், நான் யாரென்பது தவறி உன்னிடமிருந்து வெளிப்பட்டால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. பல விஷப் பூச்சிகளுக்கிடையில் இன்று நீ சிக்கிக் கொண்டிருக்கிறாய். அவற்றை நசுக்கி எறிந்த பின், நான் யாரென்பதை நீயே புரிந்துகொள்வாய்."

அபராஜிதன் உள்ள நிலைமையை எடுத்துச் சொல்லச் சொல்ல அவனைப்பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் கார்குழலிக்கு அதிகமாகவே, அவள் வருத்தம் கலந்த பெருமூச்சொன்றை விட்டாள். அவள் பெருமூச்சையும், அதைத் தொடர்ந்து

வெளிப்பட்ட 'ஹூம்' என்ற ஆயாசத்தையும் கேட்ட அபராஜிதன் பெரிதும் மனம் புழுங்கினாலும், உண்மையைச் சொல்ல வகையில்லாதவனாய்த் தத்தளித்தான். தான் நாடு கடத்தப்பட்ட பாண்டிய சேனாதிபதி என்பதை விக்கிரம பாண்டியன் அறிந்தால் திடீரென்று எச்சரிக்கப்பட்டு விடுவானென்பதையும், தான் கன்னி மாடத்திலிருக்கும் தகவல் வீரபாண்டியனுக்குத் தெரிந்தால் அவன் கன்னி மாடத்தைப் பிடிப்பதற்கு முயற்சிகளைச் சற்றுக் கடுமையாகவே எடுப்பானென்பதையும் அறிந்த அபராஜிதன், தான் யாரென்பதைச் சிலகாலம் மறைத்து வைப்பதே கார்குழலியின் நன்மைக்கு ஏற்றது என்று தீர்மானித்தான். இருந்தாலும் அவள் மனத்தே எழுந்த துக்கத்தைத் துடைக்கத் தீர்மானித்து, அவளைத் தன் இரு கைகளாலும் அருகில் இழுத்து, "கார்குழலி! என்னை நீ நம்புகிறாயா, இல்லையா?" என்று அவள் கன்னத்தோடு தன் கன்னத்தை ஒட்டிக்கொண்டு கேட்டான்.

அவன் கன்னத்தில் அவள் கன்னம் இழைந்தது. பதிலுக்கு அவள் சொன்னாள், "நான் நம்புகிறேன். நீங்கள் தான் நம்பவில்லை" என்று.

"நம்பாமலில்லை குழலி! காரணமாகத் தான் கொஞ்சம் பொறுக்கச் சொல்கிறேன், நான் சொல்வதைக் கேட்க மாட்டாயா?"

"கேட்கமாட்டேனென்று எப்படிச் சொல்லமுடியும்?"

"கோபிக்காதே. இன்னும் சில நாட்கள் பொறுத்திரு. வீரபாண்டியன் விவகாரம் முடியுமட்டும் காத்திரு. என்னிடம் பூரண நம்பிக்கை வை."!

நம்பிக்கை அப்பொழுதே பூரணமாக இருக்கிறதென்பதற்கு அடையாளமாகச் சற்று அவன்மேல் அதிகமாகவே சாய்ந்தாள் மழவராயன் மகள். ஆனால் இரவு ஏறுகிறதென்ற காரணத்தாலும், இன்னும் தான் கவனிக்க வேண்டிய வேலைகள் இருக்கிறதென்ற நினைப்பாலும் அவளைத் தன்னிடமிருந்து விலக்கிய அபராஜிதன், "கார்குழலி எழுந்திரு. நேரமாகிறது" என்றான்.

கார்குழலியும் அதற்குமேல் எதும் பேசாமல் மெல்ல எழுந்திருந்து தலைமயிரைக் கோதிவிட்டுக் கொண்டு புடவையையும் சரிப்படுத்திக் கொண்டாள். அபராஜிதன் அவள் கைகளிரண்டையும் பிடித்துக்கொண்டு, "குழலி, வீரபாண்டியனைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாதே. அவன் கண்ணில் மண்ணைத் தூவ எனக்கு வழி தெரியும். வழியும் ஓரளவு செய்திருக்கிறேன். தைரியமாக அறைக்குப் போய் படுத்துத் தூங்கு" என்றான்.

"ஏன் நீங்கள் வரவில்லையா?" என்றாள் அவள்.

"நான் போய்க் கொல்லர்கள் வேலை எத்தனை தூரம் நடந்திருக்கிறது என்பதைப் பார்த்துவிட்டு, கோட்டைக் காவலையும் சோதித்துவிட்டு வருகிறேன்" என்றான் அபராஜிதன்.

மேற்கொண்டு பதில் பேசாமல் மெள்ள கன்னிமாடத்தை நோக்கி நடந்தாள் கார்குழலி. அபராஜிதன் மட்டும் அல்லிப் பூம்பொழிலின் கரையிலேயே நின்று அசைந்து செல்லும் அப் பூங்கொடியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அல்லிப்பூம்பொழிற் கரையிலே அந்த மையிருட்டிலே நடந்த நாடகத்தை அத்தனை நேரம் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு மல்லிகைச் செடிக் கருகில் மறைந்து நின்ற உருவம், மறைவிடத்தைவிட்டு வெளிவந்து தனிமையில் நின்றிருந்த பாண்டிய தளபதியின் தோளில் மெல்லக் கையை வைத்தது. அதனால் யோசனைகள் சிதறப் பின்பக்கம் திரும்பிய அபராஜிதன் தனக்குப் பின்னால் அடிகளார் நிற்பதையும் அவர் கண்கள் தன்னைத் துழாவிக் கவனிப்பதையும் பார்த்தான்.

சாதாரணமாக விஷமம் ததும்பும் அடிகளார் முகத்தில் அன்று சுவடேயில்லை. இருந்தாலும் அவர் பேசிய வார்த்தைகளில் இடக்கு நன்றாகத் தொனிக்கத்தான் செய்தது. அபராஜிதனை ஏற இறங்கப் பார்த்தார் அடிகளார்.

"இந்த அடியார் அருகாமையில் வந்தது சேனாதிபதியவர்களுக்குப் பிடிக்கவில்லையோ?" என்றார்.

"பிடிக்காமலென்ன?" என்றான் அபராஜிதன், ஏதோ பதில் சொல்லவேண்டும் என்பதற்காக.

"எப்படிப் பிடிக்கும்?" என்று இழுத்த அடிகளார், "பிரபு! கார்குழலி குழந்தை. உலக விவரங்களை அதிகமாக அறியாதவள்...." என்று ஆரம்பித்தார்.

"ஆமாம்."

"ஆகையால் அவள் பலவீனப்பட்டாலும் நீங்கள்தான் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும்."

"நீங்கள் சொல்வது புரியவில்லையே!" என்றான் அபராஜிதன்.

அடிகளார் தமது அடிஉதட்டைக் கடித்துக்கொண்டு சற்று கடுமையாகச் சொன்னார். "புரியும்படியாகச் சொல்கிறேன், கேளுங்கள், முதன் முதலாக, இந்தக் கன்னிமாடத்துக்கு எதிரிலுள்ள காட்டில் சந்தித்த நாளாகக் கார்குழலி உங்களை விரும்புகிறாளென எனக்குத் தெரியும். அதை நானே வீரபாண்டியனிடம் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது அவன் இங்கு வந்து கோட்டையில் அடைபட்டுக் கிடப்பதற்கு நான் வீரபாண்டியனிடம் கூறிய தகவல்களே முக்கிய காரணம். வீரபாண்டியன் எப்படியும் வெகு சீக்கிரம் கன்னிமாடத்தை முற்றுகையிடுவான். அதன் விளைவு என்ன ஆகும் என்று யாருக்கும் தெரியாது. ஒருவேளை வீரபாண்டியன் வெற்றி கொண்டு, கார்குழலி பாண்டிய நாட்டு ராணியாக நேர்ந்தால்..."

"நேர்ந்தால்?"

"பாண்டிய நாட்டு ராணி பரிசுத்தமானவளாயிருக்க வேண்டும். மக்களைப் பரிபாலிப்பவள் மாசற்றவளாயிருக்கவேண்டும்."

"அவள் ராணியாக வேண்டுமென்பது தங்கள் ஆசையா?"

"ஒரு காலத்தில் இருந்தது. இப்பொழுது இல்லை."

"ஏன்?"

"கார்குழலி உங்களிடம் மனத்தைப் பறிகொடுத்திருப்பதால், அரியணையைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய வீரபாண்டியன் கயவனாயிருப்பதால்."

அடிகளார் சொன்ன விஷயங்களை மனத்தில் நன்றாக வாங்கிக் கொண்ட அபராஜிதன் சொன்னான், "அடிகளாரே! உங்கள் இஷ்டப்படியே போர் முடியும் வரை கார்குழலியை நான் தனிமையில் சந்திக்காதிருக்கிறேன், அதற்குப் பிறகு?..."

"அவன் விட்ட வழிப்படி நடக்கட்டும் பிரபு! உங்கள் எண்ணம் ஈடேற ஈசன் அருள்புரியட்டும்" என்று ஆசீர்வதித்து விட்டுத் திரும்பிச்சென்ற அடிகளாரை "அடிகளாரே! ஒரு வார்த்தை" என்று கூப்பிட்டு நிறுத்தினான் சேனாதிபதி.

"என்ன பிரபு?"

"போகும்போது கோட்டைக் காவலர்களிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போவீர்களா?"

"ஆகா!"

"இன்று நள்ளிரவில் விக்ரம பாண்டியன் கோட்டைக் கதவுகளைத் திறக்கச் சொல்லுவான்..."

"ஓகோ!"

"திறந்துவிடச் சொல்லுங்கள்."

"சரி."

"ஒரு கள்ளன் குதிரைமீது வெளியே செல்வான்."

"அப்படியா!"

"ஆமாம், அவனைச் செல்ல அனுமதிக்கலாம்."

அடிகளார் முகத்தில் வியப்புக்குறி பலமாகத் தென்பட்டது. "இதன் மர்மத்தை நான் அறியலாமோ?" என்று வினவினார்.

"பின்பு சொல்கிறேன்" என்று முடிவு கட்டிய சேனாதிபதி தன் அறையை நாடிச் சென்றான்.

நள்ளிரவும் மெள்ள வந்தது. முன்னேற்பாட்டின்படியே விக்கிரமபாண்டியன் கோட்டைக் கதவுக்கருகில்

கள்ளனைச் சந்தித்து அவனிடம் ஒரு பணமுடிப்பையும் ஓலையையும் கொடுத்தான். "ஜாக்கிரதை. சொன்னபடி வேலையை முடித்துவிடு. இந்தப் பணத்தை உன் வழிச் செலவுக்கு வைத்துக்கொள்" என்று கூறிவிட்டு, "யாரங்கே, கதவுகளைத் திற" என்று உரக்கக் கூவினான். அவன் உத்தரவுப்படி கோட்டைக் கதவுகள் திறந்தன. கள்ளன் குதிரை மீதேறி வெளிச் சென்றான். ஏதோ பெரிய காரியத்தை நிறைவேற்றிவிட்ட பெருமிதத்துடனும் மகிழ்ச்சி பொங்கும் மனத்துடனும் தன் அறைக்குச் சென்று மஞ்சத்தில் மல்லாந்து விழுந்த விக்ரம பாண்டியன், "இன்னும் இரண்டு நாளில் அந்த அடிகளுக்கும் அந்தப் பாண்டிய நாட்டுப் பிரபுவுக்கும் சரியான பாடம் கற்பிக்கிறேன்" என்று கறுவிக் கொண்டான்.

இரண்டு நாட்கள் கழிந்தன மூன்றாவது நாள் காலையில் நூறு குதிரைகள் தடதடவெனக் கோட்டைக்குள் பாய்ந்துவந்தன. மிகக் குதூகலத்துடன் தந்தையைச் சந்திக்க மாடிப்படிகளில் இறங்கி ஓடிவந்த விக்ரமபாண்டியன், குதிரையிலிருந்து அப்பொழுதுதான் கீழே குதித்த அந்தப்படையின் தலைவனைக் கண்டதும், மிதமிஞ்சிய திகிலாலும் ஏமாற்றத்தாலும் முகம் சவம்போல் வெளுக்க மேற்கொண்டு நகரக்கூட முடியாதவனாய்க் கல்லெனச் சமைந்து நின்றான்.

40. முற்றுகை

தந்தைதான் வந்துவிட்டார் என்ற திடநம்பிக்கையுடன் திடுதிடுவென்று மாடிப்படிகளில் இறங்கி வந்து, வந்த மனிதனைக் கண்டதும், நகரக்கூட வகையற்றவனாய் நட்ட கல்லைப்போல நின்றுவிட்ட விக்ரமபாண்டியனைத் தவிர, மற்ற அத்தனை பேருக்கும் அந்தக் காலைநேரம் ஒரே இன்பமயமாகக் காட்சியளித்தது. காலைக் கதிரவனின் இளங்கதிர்கள் கன்னிமாடக்கோட்டைச் சுவர்கள் மீதும் இதரக் கட்டிடச் சுவர்கள் மீதும் முந்திய நாள் இரவு பெய்து உறைந்து கிடந்த பனி முத்துக்களை

ஊடுருவிச் சென்று வானவில்லின் வர்ணஜாலங்களையெல்லாம் ஆங்காங்கு லேசாக எழுப்பிக் கொண்டிருந்தன. இரவு முழுவதும் நனைந்ததால் உண்டான குளிரைப் போக்கிக் கொள்ளவும் தங்கள் மேனியிலுள்ள ஈரத்தை உலர்த்திக் கொள்ளவும் கன்னிமாடத்தின் கிழக்குத் திக்கில் வளர்ந்திருந்த செடிகளிலிருந்த புஷ்பங்கள் நன்றாக விரிந்து கிரணங்களைத் தங்கள்மீது கிரகித்துக் கொண்டன. விடியும்வரை வெளிக்கிளம்பாதிருந்த சிட்டுக்குருவிகள் வெயிலடித்த சாளரங்களில் உட்கார்ந்தும் மீண்டும் வெளியே பறந்தும், சற்று நேரம் தத்தித் தத்தி நடந்தும், பரஸ்பரம் கொத்தியும் விளையாடி வட்டமிட்டுக்கொண்டிருந்தன. பொந்துகளில் அடைந்த புறாக்கள் கலகலவென்று ஏகக்கூச்சல் போட்டுக் கொண்டு சில ஆகாயத்தில் சற்றுநேரம் பறந்தும், சில உப்பரிகைகளில் நடந்தும் மற்றும் சில கோட்டைச் சுவருக்கும் மாடிப் படிகளுக்கும் இடையே இருந்த வெளிப் பிரதேசத்தில் சர்ரென்று இறங்கி வந்தும், இன்னும் சில மாடிப் படிகளுக்கு இருபுறங்களிலுமிருந்த கைப்பிடிகளில் தங்கித் தலைகளைச் சாய்த்து அப்புறமும் இப்புறமும் பார்த்ததும் பார்ப்பதற்கு மிக ரம்மியமான காட்சியை அளித்துக் கொண்டிருந்தன. இந்தப் புறாக்களின் சத்தத்தோடு போட்டி போடுவனபோல காட்டிலிருந்த பக்ஷி ஜாலங்கள் நானாவிதமான ஸ்வரங்களை எழுப்பி இன்பமாகக் கூவியதன்றி, சில பறந்து வந்து கோட்டைமீதும் உட்கார்ந்து கோட்டையில் தங்களுக்குச் சொந்தம் உண்டு என்பதை நிரூபித்தன. அவற்றிலிருந்த மைனா ஒன்று தன் மஞ்சள் மூக்கைச் சுவரில் வைத்துச் சாணைக் கல்லில் கத்தியைத் தீட்டுவதுபோல் மாற்றி மாற்றித் தீட்டத் தொடங்கியது. வெண்கழுத்துடன் பழுப்புநிற இறக்கைகளுடனும் கூடிய பருந்து ஒன்று ஜிவ்வென்று கிளம்பி ஆகாயத்தில் வட்டமிட்டுத் திடீரெனத் தாழப் பறந்துசென்று தன் நிழலைக் கன்னிமாட முன்வெளிமுற்றத்தில் வெகுவேகமாகப் பாய்ச்சிச் சென்றது. எங்கும் எத்தனை எத்தனையோ வகையில் எத்தனை எத்தனையோ பக்ஷி ஜாலங்கள்! எங்கும் பனித்

துளிகள்! பனி உறைந்த புஷ்ப வகைகள்! பச்சை நிறந்தால் பனி முத்துக்களுக்குத் தனிச் சிறப்பூட்டிய பசும்புற்கள், இலைகள் இயற்கையின் எழில் இப்படி அப்படி என்று வார்த்தையில் வர்ணிக்க முடியாத அளவுக்கு எங்கும் விசிறிக்கிடந்தது.

எந்த இதயத்திலும் இன்பத்தைப் பாய்ச்சக்கூடிய இயற்கையின் அந்தக் காலைநேர இந்திர ஜாலங்கள் அனைத்தும், விக்ரமபாண்டியன் இதயத்தில் மட்டும் இனிமையை அடியோடு வற்றச்செய்து அவன் உள்ளத்தைக் கொந்தளிக்கும் அலைகடலாக மாற்றியிருந்தது. இதோ அருந்தலாம் என்று ஆசையுடன் வைத்திருந்த பாலைச் சரேலென்று பூனை கவிழ்த்து விட்டால் ஏற்படக்கூடிய நிலையை அடைந்திருந்த விக்ரம பாண்டியன் தான் இரண்டு நாட்களாகக் குடித்துக் கொண்டிருந்த பால் இப்படித் திடீரெனத் திரிந்து போய் விஷமாக மாறும் என்பதைச் சொப்பனத்தில் கூட நினைக்காததால் அடியோடு திக்பிரமை பிடித்து நின்றான். தந்தை வருவாரென்ற நினைப்பில் கார்குழலியைப் பற்றித் தான் வகுத்த திட்டங்களெல்லாம் தவிடு பொடியாகி விட்டபடியால் இனி தன் கதியென்னவென்பதை அவன் மனம் தீவிரமாக ஆராயவும் தொடங்கியது. கோழையான விக்ரம பாண்டியன் வீரபாண்டியனோடு யுத்தத்தை அடியோடு எதிர்பார்க்காமையால் ஏற்பட்ட விபரீதங்கள் பல. கார்குழலியைத் தான் தூக்கிச் சென்று விட்டால் வீரபாண்டியன் தன்னைத் தொடரமாட்டான் என்று முதலில் நினைத்தான். அந்த எண்ணத்தில் மண் விழுந்தது. கண்டிப்பாய் கன்னி மாடத்தை முற்றுகையிட்டு முறியடித்துக் கார்குழலியை மீட்பேன் என்று வீர பாண்டியன் முரசு கொட்டி விட்டான். அந்த முடிவை அபராஜிதனிடமிருந்து கேட்ட நாளாகக் கன்னிமாடத்திலிருந்து தப்ப, வழி பார்த்துக் கடைசியாகத் தந்தை உதவி கொண்டு மழவன் மகனுடன் ஓடிவிடச் செய்த ஏற்பாடும் பாழாகி விட்டது. மேற்கொண்டு என்ன செய்வதென்

படை ஆராய்ந்து அதனாலும் எந்தப் பலனும் ஏற்படாது போகவே தன் திட்டங்கள் குலைந்து போனதற்குக் காரணம் யாராயிருக்கும் என்று யோசித்துப் பார்க்கலானான் விக்ரம பாண்டியன். ''நான் அனுப்பிய கள்ளன் என்ன ஆனான்? கையில் பணத்தையும் கொடுத்ததால் ஓடிவிட்டானா? தந்தையிடம் அவன் ஒரு வேளை ஓலையைக் கொடுத்து அவர் வந்து சேரத்தான் வசதியில்லாது போயிற்றா?'' என்று தனக்குத் தானே பல கேள்விகளைப் போட்டுக் கொண்டு எதற்கும் பதில் கிடைக்காமல் குழம்பினான். அப்படி அவன் குழம்பித் திகைத்து நின்ற சமயம், கோட்டைக்குள் நுழைந்த படைத் தலைவன் சரேலெனத் தரையில் குதித்து மாடிப்படிகளுக்காக மிக வேகமாக நடந்து வந்தான்.

வந்தவன் யாராயிருந்தாலும் அவன் ஒரு பெரிய படைத் தலைவனாயிருக்க வேண்டும் என்பதை அவன் நடையிலிருந்தும், கூட வந்த வீரர்கள் அவனிடம் நடந்து கொண்ட பணிவான மாதிரியிலிருந்தும், அவன் குதிரையின் சேணத்தில் பொருத்தப்பட்டிருந்த வெள்ளிப் பிடிகளிலிருந்தும் ஊகித்துக் கொண்ட விக்ரமபாண்டியன் அவன் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் ஒரு வேளை தகப்பனார் தமக்குப் பதில் இவனை அனுப்பியிருக்கலாமோ என்ற சபலத்தால் அவன் அருகில் வரும்மட்டும் காத்திருந்தான். வந்தவன் விக்ரம பாண்டியனை அணுகிப் பேச முற்படும் முன் மற்றொரு குதிரையிலிருந்து இறங்கிய சொக்கப்பெருமான் அவனைத் தடுத்து, 'பிரபு, எசமானர் அங்கில்லை. பின்புறக் சட்டிடத்திலிருக்கிறார்'' என்று எச்சரித்தான்.

சொக்கப்பெருமான் ஆகாயத்திலிருந்து குதித்ததைப் போல் திடீரெனக் குதிரையில் வந்து இறங்கியதையும், வந்த பிரபுவை மிக உரிமையுடன் அழைத்துத் தடுத்ததையும் கண்ட விக்ரம பாண்டியனுக்கு ஓரளவு உண்மை மெள்ள மெள்ள உதயமாகவே தன் திட்டங்கள் எந்தக் காரணத்தாலோ கவடு மாறிவிட்டதென்ற தீர்மானத்

துக்கு வந்தவனாய் மீதி பாரத்தை இறைவன் மீதுபோட்டு மேற்கொண்டு என்னதான் நடக்கிறது பார்ப்போமென்று எதுவும் பேசாமலும் தன்னருகில் வந்தவனை வாவென்று அழையாமலும் செயலற்று நின்று விட்டான். வந்தவனும் விக்ரமபாண்டியனைச் சற்றும் சட்டை செய்யாமல், ''சொக்கா, முதலில் எசமானிடம் அழைத்துப்போ! அவர் கட்டளையைக் கேட்டு வருவோம்'' என்றான்

சொக்கப்பெருமான் அவனுக்கு வழி காட்டிப்பக்கவாட்டில் திரும்புமுன், மற்றொரு பக்கத்திலிருந்து அங்கு வந்து சேர்ந்த அபராஜிதன் ''காரி! நீ இவ்வளவு சீக்கிரம் வந்து விடுவாய் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. சொக்கப் பெருமாளை அனுப்பி இரண்டு நாட்கள் தானே ஆகின்றன?'' என்று மிகுந்த மகிழ்ச்சி ததும்பும் குரலில் பொன்னமராவதியின் படைத்தலைவனான காரிவளவனை முகமன் கூறி வரவேற்றான்.

பாண்டிய சேனாதிபதியைக் கண்டதும் தலைதாழ்த்தி வணங்கிய காரிவளவன், ''என்ன அப்படிச் சொல்கிறீர்கள் பிரபு! தாங்கள் கட்டளையிட்டால் அதற்குப் பின் ஒரு வினாடி தாமதிப்பேனா?'' என்றான்.

''அதற்குச் சொல்லவில்லை காரி! படை திரட்டிக் கொண்டு வரச் சொன்னதால் ஓரிரண்டு நாட்கள் கழிக்கலாம் என்று நினைத்தேன்'' என்றான் அபராஜிதன்.

''படை திரட்டுவதாவது! நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் பாண்டிய நாடே திரண்டு வந்துவிடாதா...'' என்று ஏதோ மேலும் சொல்லப்போன காரி அபராஜிதன் கண்களில் தொனித்த எச்சரிக்கையைக் கண்டு வார்த்தைகளைப் பாதியிலேயே விழுங்கினான்.

காரிவளவன் சாதாரணமாக இரைந்தே பேசும் சுபாவமுள்ளவனாதலால் அவன் பேசிய சொற்கள் ஒவ்வொன்றும் விக்ரமபாண்டியன் காதில் தெளிவாக விழுந்தன. அபராஜிதனிடம் ஏற்கனவே பலமான சந்தேகம் கொண்டிருந்த விக்ரம பாண்டியனுக்குக் காரியின் வார்த்தைகள் இன்னும் அதிக சந்தேகத்தை ஊட்டின. விக்ரமபாண்டியன் மு[illegible]த்

திலிருந்தே அவன் மனம் போகும் போக்கைப் புரிந்து கொண்ட அபராஜிதன் காரியை மேலே பேசவிடாமல் தடுக்க விக்ரமபாண்டியனை அவனுக்கு அறிமுகம் செய்விக்கத் தொடங்கி, "காரி, இவர்தான் விக்ரமபாண்டியன்" என்றான்.

விஷமம் ததும்பும் தன் கண்களால் விக்ரமபாண்டியனை ஏற இறங்கப் பார்த்த காரி, "ஓகோ! இவர் தான் பிற்காலப் பாண்டிய மன்னரா?" என்று வினவினான். அவன் குரலில் ஏளனம் மறைவாயில்லாமல் வெளிப்படையாகவே தொனித்ததால் சற்றே சினக்கவே அவன் உஷ்ணமாகவே பதில் சொன்னான். "நான் குலசேகரபாண்டியன் மகன்! என்று.

"அதாவது மதுரையின் பழைய மன்னர்பிரானைச் சொல்கிறீர்கள்?" என்று கூறிவிட்டு லேசாகப் புன்முறுவலும் செய்தான் காரி.

இதற்கு மேல் சம்பாஷணையை வளர விடுவது அநுசிதம் என்ற முடிவுக்கு வந்த அபராஜிதன், "காரி, விக்ரமபாண்டியன் நமது நண்பர்—" என்று ஆரம்பித்த பேச்சை இடையிலேயே வெட்டிய காரிவளவன், "அதைத்தான் கடிதத்தில் தெளிவுபடுத்தி இருக்கிறீர்களே, பிரபு" என்றான்.

"ஆமாம் காரி! அவர்தான் இவர். இவருடைய உதவியில்லாதிருந்தால் கார்குழலி இந்தக் கன்னி மாடத்துக்கு வந்தேயிருக்க முடியாது' என்றான் அபராஜிதன், காரியின் வார்த்தைகளிலிருந்த ஏளனத்தைஅறியாதவன்போல்.

"வாஸ்தவம்! என்ற காரியின் சொற்களில் மட்டுமன்றிக் குரலிலும் ஹாஸ்யம் ததும்பி நின்றது.

விக்ரம பாண்டியன் கோபத்தின் எல்லையை எட்டிக் கொண்டிருந்தான். மாடிப்படிகளில் அப்பொழுது தான் இறங்கி வந்த அடிகளார்கூட காரியைக்கண்டதும், "எப்பொழுது வந்தீர்கள்? வாருங்கள்! வாருங்கள்!" என்று குதூகலத்துடன் வரவேற்றுத் திடீரென விக்ரம பாண்டியன் முக்காகத் திரும்பியபோது, அவன் பேயறைந்ததைப்

போல நின்றுகொண்டிருந்ததைப் பார்த்து அதன் காரணத்தை அறிய முடியாமல் குழம்பினார். குதிரைகள் கோட்டைக்குள் பிரவேசித்ததால் கன்னி மாட உப்பரிகைக் கைப்பிடியிலிருந்து எட்டிப் பார்த்த கார்குழலிகூட குதிரையிலிருந்து இறங்கிய காரியைக் கண்டதும் உடனே அடையாளம் கண்டுகொண்டு, 'இவர் எப்படி இங்கு வந்து சேர்ந்தார்?' என்று பிரமித்தாள். அதே சமயத்தில் ஆயுதம் தரித்த கள்ளர்களுடன் அந்தப் பக்கமாக வந்த மார்க்கியனும், வந்த படையையும் படைத்தலைவனையும் அபராஜிதனையும் மாறி மாறிப் பார்த்துக் கோட்டைப் பாதுகாப்புப்பற்றி இனி அதிகப் பயமில்லையென்று தீர்மானித்துக்கொண்டான்.

சில விநாடிகளுக்குள் மழவ வீரர்களும் அந்த இடத்தில் வந்து சேரவே, கன்னி மாடத்தின் முன்வெளிப் பிரதேசம் ஏதோ பெரிய போர்ப் பயிற்சிக்கூடம் போலக் காட்சியளிக்கலாயிற்று அபராஜிதன் அதற்குமேல் அங்கு அனாவசியமாக நிற்க இஷ்டப்படாமல், ',மார்க்கியா! இவர்தான் பொன்னமராவதியின் படைத்தலைவரான காரிவளவன். வீரபாண்டியன் இந்தக்கோட்டையை முற்றுகையிடும் பட்சத்தில் நமக்குத் துணைபுரிய நூறு வீரர்களுடன் வந்திருக்கிறார்" என்றான்.

"ஒரு தொல்லை தீர்ந்தது பிரபு!"

"என்ன தொல்லை மார்க்கியா?"

"கோட்டையைப் பாதுகாக்கும் தொல்லை. இனி நூறு வீரபாண்டியர்கள் வந்தாலும் சமாளிக்கலாம்."

"உண்மைதான் மார்க்கியா. முதலில் இவருடைய வீரர்களுக்கு இருப்பிடத்திற்கு வசதி செய்து கொடு. குதிரைகளைக் கொட்டடியில் கட்ட ஏற்பாடு செய். இப்பொழுதுள்ள இடம் போதாதென்றால் நந்தவனத்துக்கு முன்புறத்தில் பெரிய கொட்டகை போடு" என்று உத்தரவிட்டு, 'அடிகளாரே! பிற்பகலில் உங்களைச் சந்திக்கிறேன்" என்று அவரிடமும் விடை பெற்றுக் கொண்டு, "காரி! வா" என்று காரியை அழைத்துக்

கொண்டு கட்டிடத்தின் பின்புறத்திலிருந்த தன் அறையை நோக்கி நடந்தான். சொக்கப்பெருமாளும் அவர்களைத் தொடர்ந்தான். அறைக்குள் வந்ததும் சொக்கப் பெருமான் வெகு ஜாக்கிரதையாகச் சாளரங்களை மூடிவிட்டு அறைக் கதவை ஒருக்களித்து, அறை வாசலில் காவலிருக்க, உள்ளேயிருந்த இருவரும் மனம் விட்டுப் பேசலாயினர்.

அபராஜிதன் உடனே பேசத் தொடங்கவில்லை. நீண்ட நேரம் மௌனமாகவே மஞ்சத்தில் உட்கார்ந்திருந்தான். பாண்டிய சேனாதிபதியிடமிருந்து என்ன வார்த்தைகள் வரும் என்பதை எதிர்பார்த்துக் காரியும் பேசாமல் அவனை உற்றுப்பார்த்தவண்ணம் நின்றிருந்தான் கடைசியாக சேனாதிபதியிடமிருந்து வார்த்தைகள் வெளிவந்த போது அதில் ஓரளவு பரிதாபமும் துக்கமும் கலந்திருப்பதைக் கண்டான் காரி.

"காரி! மழவராயன் மகள் மிகவும் அபாயகரமான சூழ்நிலையில் சிக்கியிருக்கிறாள்" என்று மெள்ள ஆரம்பித்தான் அபராஜிதன்.

"வீரபாண்டியனிடமிருந்துதானே?" என்றான் காரி.

"அதில் ஒருவித அபாயம் பகிரங்கமானது. இன்னொருவித அபாயம் இங்கேயே இருக்கிறது. ரகசியமானது."

"அப்படியா!"

"ஆமாம் காரி! இந்த விக்ரம பாண்டியன் இருக்கிறானே...."

"யார்? படிகளில் நின்றிருந்தானே அந்தக்கோழையா? அவன் என்ன செய்ய முடியும் பிரபு?"

"அவன் எதுவும் செய்யமுடியும் காரி. விஷப் பூச்சிக்குச் சமமானவன். நம் அருகிலேயே ஊர்ந்து தீண்டக் கூடியவன்."

"வீரபாண்டியன் முற்றுகையிட்டால் இவன் செய்யக் கூடியது என்ன இருக்கிறது? இருவரும் தாயாதிகள். இவன் இங்கிருப்பது தெரிந்தால் கார்குழலியை விட்டு

இவனை முதலில் பிடித்துக் கொன்று தன் சிம்மாசனத்துக்கு இருக்கும் போட்டியைத் தீர்த்துக்கொள்வான் பாண்டியன்."

"உண்மைதான் காரி! ஆனால் இவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள என்ன செய்வான், என்ன செய்ய மாட்டான் என்பதைத் திட்டமாகக் கூறமுடியாது வீரபாண்டியன் உயிர்ப்பிச்சை அளிப்பதானால் கோட்டை வாயிலைக்கூடத் திறந்துவிட்டு விடுவான்."

"அதற்கு அவனுக்கு வசதி இருக்கிறதா?"

"இல்லை காரி! தற்சமயம் இல்லை! ஆனால், ஆசை காட்டி ஒரு கள்ளனை மயக்கிய விக்ரமபாண்டியன் மற்ற வீரர்களையும் மயக்க முயலலாம். அது கோட்டைப் பாதுகாப்புக்குப் பலவீனமல்லவா? ஆமாம்; விக்ரம பாண்டியன் அனுப்பிய கள்ளனை என்ன செய்தாய்?"

"சிறையில் அடைத்திருக்கிறேன் பிரபு! சொக்கப் பெருமாள் நீங்கள் சொன்னபடி அணுவளவும் பிசகாமல் காரியத்தை நிறைவேற்றிவிட்டான். நீங்கள், அவனை இவ்விடத்தைவிட்டு விடியற்காலையிலேயே அனுப்பி விட்டீர்களா? அவன் காட்டிற்குள் நள்ளிரவுவரை ஒளிந்திருந்து கள்ளன் காட்டுமார்க்கத்தில் நுழைந்ததும் அவன் மீது பாய்ந்து வீழ்த்தி அவனைக் குதிரையுடன் கட்டி நேராகப் பொன்னமராவதி கொண்டுவந்து சேர்த்து நீங்கள் கொடுத்த ஓலையையும் கொடுத்தான். நான் கள்ளனைச் சிறையில் போட்டுவிட்டு என் வீரர்களில் நூறு பேரை அழைத்துக்கொண்டு கிளம்பினேன். அதிருக்கட்டும், எதற்காக நூறே பேரை அழைத்துக் கொண்டு வரச் சொன்னீர்கள்? உத்தரவிட்டிருந்தால் ஐந்நூறு வீரர்களையாவது கொண்டு வந்திருப்பேன்' என்றான் காரி.

"காரணமாகத்தான் நூறு பேரை அழைத்துவரச் சொன்னேன் காரி. இக்கோட்டை சிறியது. ஏற்கனவே ஐம்பது பேரிருக்கிறார்கள். உன் வீரர்களைச் சேர்த்து நூற்றைம்பது பேராயிற்று. இவர்களுக்குச் சௌகரியங்கள் செய்து கொடுப்பதற்கும் ஆயுதங்களை அளிப்